# மக்கள் சட்டம்

மக்கள் உரிமைச் சட்டங்களை வளர்த்தெடுக்கவும்,
மக்களுக்கு எதிரான சட்டங்களை அழித்தொழிக்கவும்...!

2008



2

http://makkal-sattam.blogspot.com/

# மக்கள் சட்டம் - 2

மக்கள் சட்டம்

mail@makkal-sattam.org

மின்னூல் வெளியீடு : http://FreeTamilEbooks.com

உரிமை - CC-BY-SA-NC கிரியேடிவ் காமென்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

பதிவிறக்கம் செய்ய - http://FreeTamilEbooks.com/ebooks/makkal_sattam_2

அட்டைப்படம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம் - ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

கணியம் அறக்கட்டளை (kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

# மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம்: ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

## Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: Lenin Gurusamy - guruleninn@gmail.com

Ebook Creation: Iswarya Lenin - aishushanmugam09@gmail.com

Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

# பொருளடக்கம்

1. வேளாண்மையில் ஓர் அணுகுண்டு ஒப்பந்தம் (இந்திய - அமெரிக்க வேளாண்மை அறிவு முனைப்பு ஒப்பந்தம்) . . . 7
2. 60% எடு - இல்லை கல்வியை விடு...! . . . 12
3. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்: சிக்கல்களும் தீர்வுகளும் . . . 22
4. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்: சிக்கல்களும் தீர்வுகளும் - 2 . . . 28
5. என்னை உண்மை கண்டறியும் என்னை சோதனைக்கு உட்படுத்துங்கள்! - ஆர்.பி.சிறீகுமார் . . . 35
6. சுற்றுச்சூழல் போராளி நாகர்கோவில் அசுரன் நினைவேந்தல் நிகழ்ச்சி . . . 40
7. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்: சிக்கல்களும் தீர்வுகளும் - 3 . . . 42
8. கோல்ட் குவெஸ்ட் நிறுவனமும், “ஏமாந்த” மக்களும்...! . . . 48
9. கிரெடிட் கார்ட் பில் பிரசினையை தீர்க்க சிறப்பு சட்டம்! . . . 54
10. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்: சிக்கல்களும் தீர்வுகளும் - 5 . . . 58
11. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்: சிக்கல்களும் தீர்வுகளும் - 4 . . . 65
12. “மரபணு மாற்று வேளாண்மையும், இந்திய சட்டங்களும்” - கருத்தரங்கம் : ஊடகங்களின் பார்வையில்... . . . 70
13. “மரபணு மாற்று வேளாண்மையும், இந்திய சட்டங்களும்” -கருத்தரங்கம் . . . 80
14. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் : சிக்கல்களும் தீர்வுகளும் - 6 . . . 82
15. தகவல் உரிமைச் சட்டத்தை கேலிக்கூத்தாக்கும் மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி! . . . 87
16. பளபளா சூப்பர் மார்க்கெட்களும், பல்லிளிக்கும் தொழிலாளர் - நுகர்வோர் நலன்களும்...! . . . 90
17. சுற்றுச்சூழலும் இந்திய அரசியல் சட்டமும்... . . . 99
18. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் : சிக்கல்களும் தீர்வுகளும் - 7 . . . 110
19. இயற்கைக்கு மாறான பாலுறவும், இந்தியச் சட்டங்களும்...! . . . 116
20. ரூ. 23 கோடியும், 26 நீதிபதிகளும்....! . . . 125
21. அறிவுச் சொத்துரிமை - சில தவறான கருத்துகள்...! . . . 130
22. பெரியாரிய பார்வையில் அறிவுச் சொத்துரிமை . . . 136
23. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் அஞ்சல் வழி சித்த மருத்துவ கல்விக்கு நீதிமன்றம் தடை! 152
24. பொருந்தாத திருமண உறவிலிருந்து விலகுவது எப்படி? . . . 155
**TUESDAY, OCTOBER 21, 2008** . . . 162
25. திருமணப்பதிவு ஏன்? எப்படி? . . . 167
26. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் சிக்கல்களும் தீர்வுகளும் - 8 . . . 177
கணியம் அறக்கட்டளை . . . 181

# 1. வேளாண்மையில் ஓர் அணுகுண்டு ஒப்பந்தம் (இந்திய - அமெரிக்க வேளாண்மை அறிவு முனைப்பு ஒப்பந்தம்)

WEDNESDAY, FEBRUARY 13, 2008

சுதந்திர இந்தியாவின் வயது 60-ஐ தாண்டியுள்ளது. இந்திய அரசியலமைப்பு சட்டம் அமலுக்கு வந்து 57 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. சுதந்திரம் மற்றும் குடியரசு தினங்களில் கொடியேற்றி உரையாற்றும் தேசத்தலைவர்கள் வறுமையை ஒழிக்க உறுதி ஏற்கின்றனர்.

தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பலதுறைகளில் இந்தியா பல மடங்கு முன்னேறியுள்ளதாக கூற/நம்பப் படுகிறது.

இத்தகைய பெருமை வாய்ந்த இந்தியாவில்தான், அரை மணிக்கு நேரத்திற்கு ஒரு விவசாயி தற்கொலை செய்துக் கொள்ளும் அவல நிலை நிலவுகிறது. மத்திய அரசு அமைப்பான தேசிய குற்றத்தகவல் ஆவண மையம் (National Crime Record Bureau) அளிக்கும் தகவலின்படி கடந்த 1997 முதல் 2006ம் ஆண்டு வரையான 10 ஆண்டுகளில் 1 லட்சத்து 66 ஆயிரத்து 304 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அரசுத்துறை புள்ளி விவரம் அளிக்கும் தகவல் இது என்றால் உண்மையான புள்ளிவிவரத்தை நாமே அனுமானித்துக்கொள்ள வேண்டியதுதான்.

இந்த நிலையில்தான் புதிய ஒரு அணு குண்டாக, “இந்திய-அமெரிக்க வேளாண்மை அறிவு முனைப்பு ஒப்பந்தம்” அறிமுகம் ஆகியுள்ளது.

இந்திய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், அமெரிக்க அதிபர் புஷ்-உடன் கூட்டாக கடந்த 2005 ஆம் ஆண்டு இந்தியா அமெரிக்கா இடையே மூன்று முக்கிய ஒப்பந்தங்களுக்கான கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அவற்றில் இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை மட்டுமே இடதுசாரிகள் உள்பட பல அரசியல் கட்சிகளும், செய்தி ஊடகங்களும் எதிர்த்தும், ஆதரித்தும் பேசி வந்தன.

ஆனால் அணுசக்தி ஒப்பந்தத்திற்கு சற்றும் குறையாமல் நாட்டின் உணவு இறையாண்மையையும், பல கோடி விவசாயிகளின் வாழ்வையும் கேள்விக்குறி ஆக்கியிருக்கும் “இந்திய -அமெரிக்க வேளாண்மை அறிவு முனைப்பு ஒப்பந்த”த்தை, பற்றி யாரும் சிறு மூச்சுகூட விட்டபாடில்லை.

“இந்திய-அமெரிக்க வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி, சேவை மற்றும் வணிகதொடர்பிற்கான அறிவு முனைப்பு” (INDIA-UNITED STATES KNOWLEDGE INITIATIVE ON AGRICULTURAL EDUCATION, RESEARCH, SERVICE, AND COMMERCIAL LINKAGES) என்கிற இந்த



...

ஒப்பந்தம் முதலாம் “பசுமைப் புரட்சியின்” (GREEN REVOLUTION) வெற்றியை(!?) தொடர்ந்து “என்றென்றும்-பசுமைப் புரட்சியை” (EVERGREEN-REVOLUTION) ஏற்படுத்துவதற்காக வரையப்பட்டுள்ளது.

ஆனால் பழைய பசுமைப் புரட்சி போல முற்றிலும் அரசே ஏற்று நடத்தாமல், இந்தப்புதிய “என்றென்றும்-பசுமைப் புரட்சி”யானது தனியாருக்கும் இடம் கொடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் வால்-மார்ட் (WAL-MART), மான்சான்டோ (MON SANTO) போன்ற அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் முதல், நம்நாட்டு ரிலையன்ஸ் (RELIANCE) நிறுவனம் வரை இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளன.

விவசாயத்தோடு மட்டும் நில்லாமல் மீன் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு போன்றவற்றிலும் தொடரும் இந்த ஒப்பந்தத்தின் முக்கிய கூறுகளாக இரண்டு அம்சங்களைக் கூறலாம்:

- மரபணுமாற்று தொழில்நுட்பத்தின் (GENETIC ENGINEERING) பயன்பாட்டை விவசாயம், மீன் வளர்ப்பு, கால் நடை வளர்ப்பு போன்ற துறைகளில் அதிகப்படுத்துதல்

- வேளாண்மையில் அறிவுசார் சொத்துரிமையை அதிகப்படுத்துததல்.

விதையற்ற பழங்கள், குஞ்சு பொரிக்காத முட்டைகள், மலட்டு விதைகள் மற்றும் விஷமாக பூக்கும் பருத்தி என பல சாதனைகள்(?!) படைத்திருக்கும் மரபணுமாற்று தொழில்நுட்பத்தை மையமாக கொண்டு இந்த ஒப்பந்தம் தீட்டப்பட்டுள்ளது. விவசாயிகளின் தற்கொலைகள், பட்டினிச் சாவுகள் போன்றவற்றை மரபணுமாற்று தொழில்நுட்பத்தினால் தடுத்துவிடலாம் எனவும் இவ்வொப்பந்தம் மறைமுகமாக நமக்கு ஆசை காட்டுகிறது.

இயற்கை வளங்களை கொள்ளைபோக அனுமதித்தல்

உலகில் வேறு எங்கும் காண முடியாத அரிய குணங்கள் படைத்த பல கோடி தாவரங்கள், மூலிகைகள், உயிரினங்கள் இந்தியாவில் உள்ளன. நம்முடைய மூதாதையர்கள்

இக்குணங்களை கண்டறிந்து காலகாலமாக பலவிதங்களில் பயன்படுத்தி வந்து உள்ளனர்..

இதுபோன்ற இயற்கைவளங்கள் “முதலாம் பசுமைப் புரட்சி” காலகட்டங்களில் அமெரிக்காவால் திட்டமிட்டு கொள்ளை அடிக்கப்பட்டன. ஆராய்ச்சி என்ற பெயரில் இந்தியாவின் பாரம்பரிய தாவர வளங்களை எடுத்துச்சென்ற அமெரிக்கா, பின்னர் மஞ்சள், வேம்பு, புளி, பாசுமதி போன்றவற்றுக்கு காப்புரிமை கோரியதை இதற்கு சான்றாக கூறலாம்.

மூன்றாம் உலக நாடுகளிருந்து இயற்கைவளங்கள் கொள்ளை போவதை தடுப்பதற்கும், இயற்கைவளங்கள் மீதான ஆராய்ச்சிகளை முறைப்படுத்தவும் 1992 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அவை (UNITED NATIONS) தலைமையில் மாநாடு ஒன்று நடைபெற்றது. ஒரு நாட்டின் இயற்கைவளங்களை மற்றொரு நாடு ஆராய்கின்ற போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை உள்ளடங்கிய பல்உயிரின ஒப்பந்தம் (CONVENTION FOR BIODIVERSITY) ஒன்று அந்த மாநாட்டில் வரையறுக்கப்பட்டது.

இன்று வரை இந்த ஒப்பந்தத்தை ஏற்காத அமெரிக்காவிடமிருந்து, இந்தியா எப்படி தன்னுடைய வளங்களை காக்க போகிறது என்பதை காலம்தான் கூற வேண்டும்.

பல்உயிரின ஒப்பந்தத்தின் அடிப்படையில் நம் நாட்டின் இயற்கை வளங்களையும் மூதாதையர்களின் அறிவுச்செல்வங்களையும் (TRADITIONAL KNOWLEDGE) பாதுகாத்திட, உயிரினவகை வேறுபாட்டு சட்டம் (BIOLOGICAL DIVERSITY ACT,2002) இயற்றப்பட்டது. இந்த சட்டத்தின் சிறப்பம்சங்களாக இரண்டினை கூறலாம்:

 நம்நாட்டு இயற்கைவளங்களுக்கு அறிவுசார் சொத்துரிமை வழங்குவதை முழுவதுமாக தடைசெய்வது.

 நம் மூதாதையர்களின் அறிவுச்செல்வங்களை ஆராய நினைப்பவர்கள் இந்த சட்டத்தின் கீழ் அமைந்துள்ள கமிட்டியிடம் அனுமதி பெற வேண்டும். இப்படி அனுமதி பெற்று ஆராய்ந்து கண்டுபிடிக்கப்படும் பொருட்கள் மூலம் பெறப்படும் லாபத்தில் குறிப்பட்ட பகுதியை இந்த

செல்வங்களை இதுநாள் வரை பாதுகாத்து வந்த மக்களிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும் (BENEFIT SHARING).

மறைமுகமாக இந்த சட்டம் நம் இயற்கைவளங்கள் கொள்ளை போவதை அனுமதித்தாலும் குறைந்தபட்சம் மக்களுக்கு இழப்பீடு என்ற கருத்தையாவது ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்விரு முக்கிய அம்சங்களையும் கண்டுகொள்ளாத இந்திய-அமெரிக்க வேளாண்மை ஒப்பந்தம் குறைந்தபட்ச இழப்பீடு கூட மக்களுக்கு கொடுக்க மறுக்கிறது.

இந்திய அமெரிக்க வேளாண்மை ஒப்பந்தத்தில் முக்கிய பகுதியாக இரு நாடுகளை சார்ந்த பல்வேறு பல்கலைக்கழகங்கள் கூட்டாக சேர்ந்து இயற்கைவளங்களின் உயிரியல் மரபணு(GENE)வை ஆராய போகின்றன. அமெரிக்காவின் இயற்கை வளங்களை இந்தியப் பல்கலைக்கழகங்கள் ஆராய்வதற்கான வழிகள் எதுவும் ஒப்பந்தத்தில் இல்லாத நிலையில் இந்தியாவின் இயற்கைவளங்களே ஆய்வுகளுக்கு பயன்படுத்தப்படும் என்பதை கூறத் தேவையில்லை.

இந்த ஆராய்ச்சி செய்கின்ற போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை கொண்ட பல்உயிரின ஒப்பந்தத்தைப் பற்றி ஒரு வரி கூட இந்திய அமெரிக்க வேளாண்மை ஒப்பந்தத்தில் இல்லை.

இப்படி நம்நாட்டு சட்டங்கள் மற்றும் பன்னாட்டு ஒப்பந்தகளுக்கு எதிராக இயற்கை வளங்களை எளிதில் ஆராய்ச்சி செய்ய அனுமதி அளிப்பதன் மூலம் காலம்காலமாக இவற்றை பாதுகாத்து வரும் நம் மக்களிடமிருந்து இவற்றை அமெரிக்கா கொள்ளையடிக்க இந்த ஒப்பந்தம் துணைபோகிறது. அது மட்டுமல்லாமல் இப்படி ஆராய்ந்து(!?) கண்டுபிடிக்கப்படும் பொருட்களுக்கு காப்புரிமை வழங்குவதன் மூலம் தற்போது பொதுச்சொத்தாக உள்ள இயற்கை வளங்களை, அமெரிக்க மற்றும் பன்னாட்டு தனியார் நிறுவனங்களின் தனிச்சொத்தாக மாற்றுவதற்கு இந்த ஒப்பந்தம் அனுமதியளிக்கிறது.

நிறுவனமயமாகும் வேளாண்மை

இந்திய-அமெரிக்க வேளாண்மை அறிவு முனைப்பு ஒப்பந்தம் வேளாண்மை துறையை வணிகமயமாக்க, அறிவுசார் சொத்துரிமையின் தேவையை முன்வைக்கிறது. குறிப்பாக வேளாண்மை துறையில் காப்புரிமையின் அவசியத்தை கட்டாயமாக்குகிறது.

இது குறித்த விவரங்களை, “மாறும் சட்டங்களும் விவசாயிகளின் பறிபோகும் உரிமைகளும்” பகுதி 1, 2, 3, 4 ஆகிய பதிவுகளில் தெரிந்து கொள்ளலாம்.

இந்திய-அமெரிக்க வேளாண்மை அறிவு முனைப்பு ஒப்பந்தம் நம் நாட்டு வேளாண்மை விஞ்ஞானிகளுக்கு அமெரிக்கா மரபணுமாற்று தொழில்நுட்பத்தின் அடிப்படையில் விவசாயம் செய்ய மட்டுமல்ல; எப்படி காப்புரிமை பெறுவது என்பதையும் கற்றுக் கொடுக்க போகிறது. காப்புரிமை பெறுவது மட்டுமல்ல அதனை பன்னாட்டு மற்றும் இந்நாட்டு நிறுவனங்களிடம் எப்படி விற்பது என்பதையும் கற்றுக் கொடுக்கப்போகிறது.

இதற்காக அமெரிக்காவில் மட்டுமல்லாமல், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மையம்(INDIAN COUNCIL FOR AGRICULTURAL RESEARCH)கூட அறிவு சொத்துரிமைக்கான மேலாண்மை (INTELLECTUAL PROPERTY MANAGEMENT) என்ற சிறப்புப் பிரிவை ஏற்படுத்தியுள்ளது. மேலும் காப்புரிமை உள்ளிட்ட அறிவு சொத்துரிமைச் சட்டங்கள் மீறப்படாமல் இருப்பதை கண்காணிக்க இந்தியா அமெரிக்கா இடையே ஒரு தனி ஒப்பந்தமும் (MEMORANDUM OF UNDERSTANDING) 2006 ஆம் ஆண்டு கையெழுத்து ஆகியுள்ளது.

ஆக, இந்திய விஞ்ஞானிகள், நம்நாட்டு விதைகளை எடுத்து அதன் மூலக்கூறுகளை ஆராய்ந்து புதிய பொருட்களை கண்டறிந்து, அதற்கு காப்புரிமை பெற்று அமெரிக்க நிறுவனங்களிடம் விற்பதற்கான இந்த ஒப்பந்தத்திற்கு, நம் நாட்டு மக்களிடம் பெற்ற வரிப்பணம் சுமார் 650 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முற்றிலும் தகுதி- திறமையின் அடிப்படையில் பயின்ற இந்த விஞ்ஞானிகளின் தேசப்பற்றை நிச்சயம் நாம் இந்த இடத்தில் நன்றியோடு நினைக்க வேண்டும்.

முடிவுரை

இந்த ஒப்பந்தம், வேளாண்மை நிறுவனமயமாவதற்கு மட்டுமே உதவும். மரபணுமாற்று பயிர்களை பெரு நிறுவனங்கள் சிறப்பு பொருளாதார மண்டலங்களில் பயிரிட்டு ரிலையன்ஸ் பிரஷ், வால்-மார்ட் போன்ற விற்பனை கூடங்களுக்கு விற்பனைக்கு வைக்கபோகின்றன. பல மாதங்கள் ஆனாலும் கெடாமல் இருக்க செயற்கையாக நிறமூட்டப்பட்ட இந்த காய்கறிகளைத்தான் இனி நாம் உண்ணப்போகிறோம். இந்த விவசாய சிறப்பு பொருளாதார மண்டலங்களின் விவசாயம் செய்ய புதிய வகை விவசாய கூலிகளையும் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தபோகிறது.

காப்புரிமை பெற்ற இப்பயிர்களை விவசாயிகள் அதிக விலைகொடுத்து பயிர் செய்யவேண்டும், மேலும் மலட்டுதன்மை மிக்க இந்த பயிர்கள் மீது விவசாயிகளுக்கு எந்த உரிமையும் இருக்க போவதில்லை. ஆக உணவு உற்பத்திக்கே நாம் இனி நிறுவனங்களை தான் நம்பியிருக்க வேண்டும்.

இத்தகைய புரட்சிகரமான இந்திய-அமெரிக்க வேளாண்மை அறிவு முனைப்பு ஒப்பந்தத்தின் இந்திய அரசுத்தரப்பு கவுரவ ஆலோசகர் (Honorary Adviser) எம். எஸ் சுவாமிநாதனுக்கும் ஒரு சிறப்பு நன்றியை கூறிக்கொள்வோம்.

-மு. வெற்றிச்செல்வன்

(vetri@lawyer.com)

# 2. 60% எடு - இல்லை கல்வியை விடு…!

MONDAY, FEBRUARY 18, 2008

இந்திய அரசின் சமூகநீதித் துறை செப்டம்பர் 24, 2007 அன்று - இந்தியா முழுவதும் உள்ள பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டக் கல்லூரிகள் உள்ளிட்ட தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்கும் தலித் மாணவர்கள் (+2) மேல்நிலை இரண்டாம் ஆண்டு வகுப்பின் இறுதித் தேர்வில் 60 சதவிகிதம் மதிப்பெண் எடுத்திருந்தால்தான் – மத்திய அரசின் உயர் கல்விக்கான (போஸ்ட் மெட்ரிக்) கல்வி உதவித் தொகையைப் பெற முடியும் என்று ஓர் அரசாணையை வெளியிட்டுள்ளது.



**MODIFICATIONS OF GOVERNMENT ORDER ISSUED BY GOVT. OF INDIA SCHOLARSHIP TO SCHEDULED CASTE STUDENTS**

F. No. 14012 / 6 / 2006 - SCD – V
Government of India
Ministry of Social Justice & Empowerment
****

Shastri Bhavan, New Delhi-1,
Dated the 24th September 2007

To

All State Government and UT Admns

Subject: Continuation of centrally sponsored scheme of Post Matric Scholarships to students belonging to Scheduled Castes during the 11th Five Year Plan (2007-08 to 2011-12) with some modifications - regarding

I am directed to refer to the subject mentioned above and to say that the Government of India have decided to continue the centrally sponsored scheme of Post Matric Scholarships to students belonging to Scheduled Castes during the 11th Five Year Plan (2007 -08 to 2011 - 12) with some modifications. The modification in the scheme is to the extent that (a) in case of professional courses it is available to only those students who are admitted against 'free seats' Whether in government or private institutions and (b) in case of private institutions where admission is on the basis of 12th standard examination marks, there shall be a bench mark of 60% for availing the scholarship.

2. These modifications may please be brought to the notice of all concerned and the proposals for seeking central assistance as per said modifications may please be furnished at the earliest.

Sd.
(D.K. Singh)
Director
Tel : 23381930

**Copy forwarded for information and necessary action to :**

1. The Adviser, Planning commission (BC Division), Room No. 225, 2nd Floor, Yojana Bhawan, New Delhi.
2. The Adviser, PAMD, Planning Commission Room No. 221, 2nd Floor, Yojana Bhawan, New Delhi.
3. Secretary, Ministry of Finance, Dept. of Expenditure, Plan Finance - 1, North Block New Delhi.
4. Secretary, Ministry of Human Resource Development, Dept of Higher Education Shastri Bhawan, New Delhi.

// True Copy //

…

இந்த அரசாணை முற்றிலும் தலித் விரோதமானது. மேலோட்டமாகப் பார்த்தால் - தலித் மாணவர்கள் நன்கு படிக்கவும், அறுபது சதவிகிதத்திற்கும் கூடுதலாக மதிப்பெண் பெற ஊக்குவிக்கிற, கட்டாயப்படுத்துகிற முயற்சிபோல இது தோற்றமளிக்கும். ஆனால் உண்மை அதுவல்ல. நூறுகோடி மக்களைக் கொண்ட நாட்டில், பல்வேறு சாதி, மத, பொருளாதார, புவியியல், தலைமுறை ஏற்றத்தாழ்வுகள் நிலவுகிற இந்தியாவில்/தமிழகத்தில் படிக்கும் அனைத்து மாணவர்களும் - 60 சதவிகிதம் மதிப்பெண் பெறுவது என்பது எங்கும், எப்போதும் நடைமுறை சாத்தியமற்ற எதிர்பார்ப்பாகும்.

.

ஒருவேளை மிகப்பெரிய எண்ணிக்கையிலான மாணவர்கள், குறைந்த அளவு 60 சதவிகிதத்திலிருந்து உச்சபட்ச அளவான 100 சதவிகிதம் வரை மதிப்பெண் எடுப்பார்களானால், அப்போதும் இந்த அரசு கல்வி உதவித் தொகையை எல்லோருக்கும் வழங்கிவிடாது. இன்று 60 சதவிகிதம் எடுக்க வேண்டும் என்ற நிபந்தனையை, ஒருவேளை 70 சதவிகிதம் அல்லது 80 சதவிகிதம் மதிப்பெண்ணைக் கோரி நிபந்தனையை மாற்றியமைக்கவே செய்யும்.

எல்லோரும் ஒரே மாதிரி மதிப்பெண் எடுக்கும் நிலைமை இருக்குமானால், நமது தேர்வு முறையிலேயே மிகப்பெரிய தவறு இருப்பதாகவே பொருள். 50 சதவிகிதம் முதல் 60 சதவிகிதத்திற்குள் மதிப்பெண் எடுக்கிறவர்கள் தகுதி, திறமை குறைந்த நேர்மையற்றவர்கள் (அயோக்கியர்கள்) என்பதற்கோ, 60 சதவிகிதம் முதல் 100 சதவிகிதம் வரை மதிப்பெண் எடுக்கிறவர்கள் தகுதி, திறமை மிகுந்த நேர்மையாளர்கள் (யோக்கியர்கள்) என்பதற்கோ, நம்மிடம் எந்தவிதமான அளவுகோல்களோ, முன்னுதாரணங்களோ இல்லை.

.

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பிருந்தே உயர் கல்வி படிப்போருக்கான கல்வி உதவித் தொகை அளிக்கும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. தலித் மக்கள் மிகப் பரவலாக படிக்கத் தொடங்கிய 1960களுக்குப் பிறகு, அக்கால இண்டர்மீடியட், புதுமுக வகுப்புகளில் 40 சதவிகிதம் முதல் 60 சதவிகிதத்திற்குள் மதிப்பெண் எடுத்த மாணவர்கள்தான் – கடந்த காலங்களில் பொறியாளர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களாக விளங்கினார்கள். தலித்துகளிலிருந்து உயர் பொறுப்புக்கு வந்த அத்தகைய அறிவுத்துறை, தொழில்நுட்பத் துறையினரிடம் இந்த ஆட்சியாளர்கள் கண்ட நிர்வாகக் குறைபாடு என்று எதையேனும் சுட்டிக் காட்ட முடியுமா?

அன்றைய நிலவரத்தைவிட, இன்றைக்கு தலித்துகளில் உயர் கல்வி படிக்க வந்துள்ளவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருப்பது தேச விரோதச் செயலா? தலித்துகள் இன்றும், இன்னும் இந்திய அளவில் விவசாயக் கூலிகளாகவும், சிறு, குறு விவசாயிகளாகவும், அரசு ஊழியர்களாகவும், தனியார் துறையில் கடைநிலைப் பணியாளர்களாகவும் தானே இருந்து வருகின்றனர். வணிகம், தொழில் துறை, தொழில்நுட்பத் துறைகளின் சொந்த முதலீட்டாளர்களாகவோ, பங்குதாரர்களாகவோ, வளர்ந்திடும் வாய்ப்புகள் உருவாகிவிடவில்லையே!

.

இந்தியாவின் மொத்த மக்கள் தொகையோடு ஒப்பிட்டால், தலித்துகளில் உயர் கல்விக்கு வருவோர் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. ஒரு புள்ளி விவரத்தின்படி, தமிழகத்தில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 70,000 தலித் மாணவர்கள் +2 வகுப்பில் தேர்ச்சி பெறுகிறார்கள்.

இவர்களில் அய்.டி.அய். பாலிடெக்னிக், கலை, அறிவியல், மொழி, பொறியியல், மருத்துவம், சட்டம், வேளாண்மை உள்ளிட்ட எல்லா படிப்புகளிலுமே சேருவோர் எண்ணிக்கை சுமார் 15,000 முதல் 20,000–க்குள் தான் வருகிறது. ஆண்டுதோறும் சுமார் 50,000 தலித் மாணவர்கள் உயர்கல்விக்கான வாய்ப்பை எட்ட முடியாமல் தேங்கிக் கிடக்கின்றனர்.

இது தவிர, 10ஆம் வகுப்பில் தோல்வியடைந்தவர்கள், 10ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றும் +2 வகுப்பில் அல்லது பாலிடெக்னிக் படிப்புக்குச் செல்ல முடியாதவர்கள், 12ஆம் வகுப்பில் தோல்வியடைந்தவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையிலான தலித் இளைஞர்களின் எதிர்காலமே இருண்டுதான் கிடக்கிறது.

.

மனிதவளத்தை மேம்படுத்துவது பற்றியும், மனிதவள ஆற்றலை நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களிக்கச் செய்ய வேண்டும் என்றும் பேசும் அரசியல்வாதிகள், அறிஞர்கள், பல தலைமுறைகளாக வஞ்சிக்கப்பட்டு வரும் தலித் சமூகத்தில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையிலான மாணவப் பருவ இளைஞர்களின் எதிர்காலம் குறித்து எள்ளளவும் கவலைப்படுவதில்லை. அவர்களது கவலையெல்லாம் மலிவான திட்டங்கள் மூலம் வாக்கு வங்கியை எப்படி தக்க வைத்துக் கொள்வது என்பது மட்டுமே! இந்நிலையில் தான் மய்ய அரசின் சமூக நீதித்துறை அமைச்சகம், உயர்கல்வி பயிலும் தலித் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவது தொடர்பாக, மாநில அரசுகளுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தலித் மாணவர்களுக்கு இரண்டு நிபந்தனைகளை விதித்துள்ளது.

.

அதாவது, தொழில் படிப்பில் சேர்ந்து படிக்கும் மாணவர்களில் இனிமேல் அரசு ஒதுக்கீட்டில் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே கல்வி உதவித் தொகையை வழங்க முடியும்; நிர்வாக ஒதுக்கீட்டில் சேர்ந்து படிப்பவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட மாட்டாது. இது மட்டுமின்றி, அரசு ஒதுக்கீட்டில் சேர்ந்து படிக்கிற மாணவர்களும் கூட, அவர்கள் தனியார் கல்லூரிகளில் படிப்பவர்களானால் +2 தேர்வில் 60 சதவிகித மதிப்பெண் பெற்றிருந்தால்தான் கல்வி உதவித் தொகை பெற முடியும் என்று அக்கடிதம் கூறுகிறது : Govt. of India, Ministry Of Social Justice And Empowerment F.No14012/6/2006 SCD - V நாள் 24.09.2007.

இக்கடிதத்தின் மூலம் அரசுக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கும் தலித் மாணவர்கள் 60 சதவிகிதத்திற்கும் குறைவாக மதிப்பெண் பெற்றிருந்தாலும், கல்வி உதவித் தொகை பெறலாம் என்பது போன்ற பொருளேயற்ற ஒரு பொருளும் பொதிந்துள்ளது. தமிழகத்தில் அரசுப் பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை, அய்ந்து முதல் ஏழுக்குள்ளேயே உள்ளது. மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் மதிப்பெண் தர வரிசை :

.

1. தலித்துகளிலேயே மிக அதிக மதிப்பெண் பெறும் தலித் மாணவர்களும், பொதுப்போட்டியில் வரும் தலித் மாணவர்களும் இத்தகைய அரசுக் கல்லூரிகளிலேயே



...

சேர்க்கப்படுகின்றனர்.

.

2. 70 சதவிகிதத்திற்கும் மேல் 80 சதவிகிதத்திற்குள் மதிப்பெண் எடுத்த தலித் மாணவர்கள் – அரசு உதவி பெறும் தனியார் பொறியியல் கல்லூரிகளிலும், அரசு உதவி பெறும் அண்ணாமலை பல்கலைக்கழகம் போன்ற தனியார் பல்கலைக்கழகங்களிலும் சேர்க்கப்படுகின்றனர்.

.

3. 50 சதவிகிதம் முதல் 70 சதவிகிதம் வரை மதிப்பெண் பெற்ற தலித் மாணவர்களே – பெரும்பாலும் தனியார் சுயநிதிக் கல்லூரி களிலும், அரசு உதவி பெறும் அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களிலும் –அரசு ஒதுக்கீட்டின்படியோ, மேலாண்மை நிர்வாக ஒதுக்கீட்டின்படியோ சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்

.

முதல் இருநிலை கல்லூரிகளிலும் சேர்க்கப்படும் மாணவர்களில், 60 சதவிகித மதிப்பெண் எடுத்த மாணவர்களுக்கே கல்வி உதவித் தொகை என்ற நிபந்தனையால் சிக்கல் ஏதும் இல்லை. ஆனால் இவர்களில் பலரது வாழ்க்கைத் தரம், குடும்பப் பின்னணி, பெற்றோர் படித்த தலைமுறையினராகவோ, உயர் வருவாய் ஈட்டக் கூடிய அரசு அலுவலர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் முதலிய பிரிவினரின் பிள்ளைகளே – பெரும்பாலும் தலித்துகளுக்கான இடங்களை கைப்பற்றுகின்றனர். இவர்களுக்காவது கல்வி உதவித் தொகை உண்டா என்றால் அதுதான் இல்லை.


.

பெற்றோரின் ஆண்டு வருமானம், கல்வி உதவித் தொகை பெறுவதற்கான வருமான வரம்பை விட கூடுதலாக இருப்பதால், இத்தகைய வருவாய் குடும்பத்தினரின் உயர் மதிப்பெண் பெற்ற தலித் மாணவர்களுக்கு, கல்வி உதவித் தொகை நீண்ட காலமாகவே மறுக்கப்பட்டு வருகிறது. இவ்வளவு காலமாக, தலித் மாணவர்களின் உயர் கல்விக்கு உதவித் தொகை வழங்கிட வருமான வரம்பை விதித்திருந்த மத்திய அரசு, இப்போது மதிப்பெண் வரம்பையும் கொண்டு வந்து, தலித் சமூகத்தின் உயர் கல்விக்கே வேட்டு வைத்துள்ளது.

கடந்த 2006-07 ஆம் கல்வியாண்டில், தமிழகத்தில் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பித்தவர்களில், தலித்துகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பெற்ற பத்தாயிரம் இடங்கள் காலியாக இருந்தன. இந்த இடங்களில் தலித்துகள் சேராததால், அந்த இடங்கள் பொதுப் போட்டிக்கு மாற்றப்பட்டு, தலித் அல்லாத பிற சமூகத்தினரால் நிரப்பப்பட்டது. இதற்கான அடிப்படைக் காரணம், பத்தாயிரம் தலித் மாணவர்கள் பொறியியல் படிப்பை விரும்பவில்லை என்பதால் அல்ல. இவர்கள் அனைவருமே சுயநிதிக் கல்லூரிகளில் சேர்க்கப்படும் அளவுக்கே மதிப்பெண் பெற்றிருந்தனர்.

.

ஆனால், அரசு ஒதுக்கீட்டின் மூலம் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் சேருவோருக்கென நிர்ணயிக்கப்பட்ட தொகையை கூட கட்ட முடியாமல் தான் – பத்தாயிரம் இடங்களும் காலியாக கிடந்தன. தனியார் சுயநிதிக் கல்லூரிகளின் எண்ணிக்கையில் பாதியளவேனும் மத்திய, மாநில அரசுகளிடம் இருந்திருக்குமேயானால், தலித் மாணவர்களுக்கு இந்த அவலம், ஏமாற்றம் ஏற்பட்டிருக்காது. இன்று உயர்கல்விக்கென கொண்டு வரப்பட்டுள்ள இந்த ஆணை, எதிர்காலத்தில் கலை, அறிவியல் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் ஆபத்து உள்ளது.

.

மய்ய அரசின் சமூகநீதித் துறையின் அரசாணை, இன்னும் கூடுதலாக ஒரு செய்தியை தலித் மக்களுக்கு சொல்கிறது. + 2 வகுப்பில் 60 சதவிகிதத்திற்க்கும் கீழே மதிப்பெண் எடுத்த தலித் மாணவர்கள், எதிர்காலத்தில் உயர்கல்விக்கே விண்ணப்பிக்கக் கூடாது என்பதே அச்செய்தி. இது குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண் குறிக்கோளுக்கே எதிரானது. உலகமயமாதல்

சூழலில் இது ஒரு வகையான தொழில்நுட்பவியலான குலக்கல்வித் திட்டமே.

.

ராஜா கோபாலாச்சாரி, தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகக் குழந்தைகள் அய்ந்தாம் வகுப்பைத் தாண்டிவிடக் கூடாது என்ற அடிப்படையில் குலக் கல்வி முறையைக் கொண்டுவந்தார். அதைத் தோற்கடிக்க, நமக்கு பெரியாரும் காமராசரும் இருந்தார்கள். ஆனால், இன்று காங்கிரஸ் தலைமையிலான அய்க்கிய முற்போக்குக் கூட்டணி அரசோ, தலித்துகள் 10,12 ஆம் வகுப்பை கடந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறது.


.

மதச்சார்பின்மை, ஜனநாயகம், சோசலிசம், சமூகநீதி இவற்றின் கூட்டுக் கலவையிலான கூட்டணி அரசு ஆட்சியிலிருந்தாலும், இவ்வரசை இயக்கும் அதிகார வர்க்கம், பார்ப்பனியமயமாகவே இருக்கும்போது, கோட்பாடுகள் நீரின் மீது எழுதப்பட்ட எழுத்தே.

.

சரி, திடீரென மதிப்பெண் நிபந்தனைகளை கொண்டுவரும் மத்திய அரசின் செயலுக்கு என்ன காரணம்? நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூற்றின்படி, நாட்டில் அந்நிய மூலதன வெள்ளம் கரைபுரண்டு ஓடும் சூழலில் ஏன் இந்த நிபந்தனை? தலித்துகளின் உயர்கல்வி வாய்ப்பைக் கட்டுப்படுத்தும் சாதிய, பார்ப்பனிய, நிலவுடைமை உற்பத்தி உறவின் மனப்பாங்குக்கும், உலகமயமாதல் பொருளாதார சீர்திருத்தக் கொள்கைகளுக்கும் நெருங்கிய உறவு இங்கு இழையோடுவதையே இந்நிபந்தனை நமக்கு உணர்த்துகிறது.

.

பொருளாதார சீர்திருத்தம் என்பது உலக வங்கியின் அகராதியில் தலித்துகள், பழங்குடியினர், ஏழைகள், பெண்கள், விவசாயிகளின் மேம்பாட்டுக்காக, பாதுகாப்புக்காக செலவிடப்படும் செலவினங்களை வெட்டுவதும், நிறுத்துவதுமே ஆகும்.

.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையும், உற்பத்தி உறவும் உருவாக்கிய

பண்ணையடிமைத்தனம், படியாள் உற்பத்தி உறவுகள், தொழில்வழி சாதியமைப்பின் மீது அவை ஏற்படுத்திய தாக்கங்கள், சாதியமும் – வர்க்கமும் பின்னிப் பிணைந்துள்ள, அக்கம்பக்கமாயுள்ள பிற்போக்கான சமூகங்களின் மீது / நாடுகளின் மீது செல்வாக்குச் செலுத்தும் ஏகாதிபத்திய நாடுகள், தங்கள் பொருளாதாரக் கொள்கைகளுக்கு புதுப்புதுப் பெயர்கள் சூட்டி, தங்கள் கொள்ளையை தொடர்ந்திட – மூன்றாம் உலக நாடுகள் மீது தங்கள் அதிகாரத்தின் பிடியை, ஆளுமையைக் கூட்டிக்கொண்டே போவார்கள்.

.

இங்குள்ள மன்மோகன் சிங், ப.சிதம்பரம் போன்ற அவர்களது அரசியல் முகவர்கள் அதற்கு "சீர்திருத்தங்கள்' என்று பெயர் சூட்டிக்கொள்வார்கள். மத்திய அரசின் சமூகநீதித் துறையின் இந்த அரசாணை ஏன் வந்தது? நிதிப் பற்றாக்குறையா? இல்லவே இல்லை!

.

உலக வங்கி இந்திய அரசுக்குப் பல நிபந்தனைகளை விதிக்கிறது. உலக வங்கிக்கு அமெரிக்க, அய்ரோப்பிய முதலீட்டாளர்களும், அரசுகளும் பல நெருக்கடிகளையும் நிபந்தனைகளையும் போடுகிறார்கள். இந்திய ஆட்சியாளர்கள் தமது ஆட்சியின் கீழுள்ள பல்வேறு சமூகத்தினருக்கும் வர்க்கங்களுக்கும் நிபந்தனைகளையும், நெருக்கடிகளையும் கொடுக்கின்றனர். பங்குச் சந்தையில் ஒரு"சென்செக்ஸ்' புள்ளி உயர்ந்தால், அம்பானியின் சொத்து மதிப்பு 1000 கோடி உயர்கிறது. ஆனால் மய்ய அரசின் ஓர் அரசாணை, பல லட்சம் தலித் மாணவர்களின் உயர்கல்விக் கண்ணைப் பறிக்கிறது.

.

பதினோறாவது அய்ந்தாண்டுத் திட்டத்தில் கல்விக்கென 10 சதவிகித நிதி ஒதுக்கீடு கோரி இடதுசாரிகள் போராட்டம் நடத்துகிறார்கள். 1980க்கு முன்னால் கல்விக்கு 6 சதவிகித நிதி ஒதுக்கிய மத்திய அரசு, இன்று 3.2 சதவிகிதத்திற்கும் கீழாகவே நிதி ஒதுக்குகிறது.

.

அண்மையில் பிரதமர் மன்மோகன் சிங் 11ஆவது அய்ந்தாண்டு திட்டத்துக்கான கலந்தாய்வுக் கூட்டமொன்றில் பேசும்போது, ஏழைகளுக்கான மானியங்கள் அவர்களை சென்றடையவில்லை என்று பேசினார். எழைகளின்பால் பிரதமருக்கு எவ்வளவு கருணை பாருங்கள் என்பது போல அவரது பேச்சு அமைந்தது. ஆனால் உண்மை அதுவல்ல! அவரது பேச்சு, ஏழைகளுக்குச் சென்றடையாத மானியங்கள் அவர்களை சென்றடைவதற்கான முயற்சிகளை எடுப்பதற்காக அல்ல: மாறாக, மானியங்களை ரத்து செய்வதற்கான வெள்ளோட்டமே அவரது பேச்சு.

.

அது மட்டுமல்ல, தலித் மாணவர்களின் கல்வி உதவித் தொகை பெறுவோர் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் வகையில், பல்லாயிரக்கணக்கான கிராமப்புற ஏழை தலித் மாணவர்களின் கல்வி உதவித் தொகைக்கு வேட்டு வைக்கும் அரசாணையை சமூக நீதித்துறை கொண்டு வந்திருப்பதன் உள்நோக்கம்.

.



...

எல்லா சமூகத்திலும் போட்டியில் வெல்லும் வசதிபடைத்த பிரிவினரை மட்டுமே, மேலும் மேலும் ஊக்குவிப்பது என்பது உலகமயமாதல் கொள்கையின் தொடர் நடவடிக்கையே. இந்தியாவின் 11ஆவது அய்ந்தாண்டு திட்டங்களுக்கான உலக வங்கியின் நிபுணர் குழுவினர், மானியங்களுக்கான செலவினங்களை வெட்ட வேண்டும் என்று பரிந்துரைத்ததின் அம்சங்களில் ஒன்றுதான், தலித் மாணவர்களுக்கான நிதியை வெட்ட வேண்டும் என்பது. இதன் விளைவு, தலித் மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படுவதில் மய்ய அரசு கொண்டு வந்துள்ள மதிப்பெண் வரம்பு ஆணை.

.

சமூகத்தின் கடைகோடியில் வாழும் தலித்துகள் தான் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி ஆற்றலின் மூலாதாரங்களாக விளங்குகின்றனர். இச்சமூகத்திற்கு உயர்கல்விக்கான கல்வி உதவித் தொகை வழங்குவதால் நாடு கடனில் மூழ்கிவிடுமா? இவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்க நிதி இல்லாமல் போய்விட்டது என்றால், நாடு திவாலாகி விட்டது என்று பொருள்.

.

தமிழகத்தில் அண்மையில் ஹுண்டாய் கார் நிறுவனம் 100 கார்களை காவல் துறைக்கு இலவசமாக அளிக்க இருப்பதாக முதல்வர் கூறினார். அதன்படி, ஹ�ண்டாய் நிறுவனமும் நூறு கார்களை தமிழக அரசுக்கு அளித்தது. அந்தக் கார்களின் விலை 8 கோடி ரூபாய். முதல்வரின் திறமையால், அணுகுமுறையால் இந்தக் கார்கள் பெறப்பட்டதாகவும், அவரது நிர்வாகத் திறனுக்கு இது சான்று என்றும் கூறப்பட்டது. உண்மையில், நூறு கார்களை தமிழக முதல்வரிடம் அளித்த ஹ�ண்டாய் நிறுவனம், அதே முதல்வரிடம் 2006-07 ஆம் நிதியாண்டுக்கு மட்டும் 15 கோடி ரூபாய் வரிவிலக்கு பெற்றுள்ளது.

.

எட்டுக்கோடி ரூபாய் கொடுத்து நூறு கார்களை வாங்கிக்கொண்டு வரியை ஒழுங்காக வசூலித்து இருந்தால், அரசுக்கு இன்னும் கூடுதலாக 7 கோடி ரூபாய் வருமானம் கிடைத்திருக்கும். தமிழ்நாட்டில் உள்ள ஒரு நிறுவனத்திலேயே தமிழக அரசின் நிர்வாக லட்சணம் இப்படி இருக்குமானால், இந்திய அளவில் எவ்வளவு முறையற்ற சலுகைகளைப் பெற்று உள்நாட்டு தரகு முதலாளிகளும், பன்னாட்டு முதலாளிகளும் லாபம் அடைவார்கள்.

.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு அரசு அளிக்கும் வரி விலக்கு மூலம், முதல் அய்ந்தாண்டுகளுக்கு இந்திய அரசு இழக்கும் வரி வருவாய் மட்டும் ஒரு லட்சம் கோடி ரூபாய் ஆகும் என புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இப்படிப் பல வழிகளிலும் ஆட்சியாளர்கள் செல்வந்தர்க்கே செல்வம் தழைக்க சலுகைகளை வாரி வழங்கிவிட்டு, தலித்துகளின் உயர் கல்விக்கான கல்வி உதவித்தொகையில் கை வைப்பது எவ்வளவு பெரிய துரோகம்! ""ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்'' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கேற்ப, ஏழைகள் கூரிய வாளாய் மாறிடும் காலத்தை நோக்கி தலித் அரசியலை முன்னகர்த்துவது மட்டுமே – நமது எல்லா சிக்கல்களுக்கும் இன்னல்களுக்கும் தீர்வாகும். தற்போதைய நிலைமைக்கும் எதிரான நமது போராட்ட முறைகள் கூர்மைப்படுத்தப்பட வேண்டும்.

.

சமூக நீதித்துறை அமைச்சக ஆணை, மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்டவுடன் இது குறித்து தமிழக அரசு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு மாறாக, அந்த ஆணையை அனைத்து சுயநிதி கல்லூரிகளுக்கும், அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகளுக்கும், அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கும் அதை நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தி, தமிழக அரசு தன் பங்குக்கு தலித் மக்கள் விரோத கடமையை ஆற்றியுள்ளது.

.

மண்டல் குழு பரிந்துரை, மிகப்பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு, முஸ்லிம், கிறித்துவர் இடஒதுக்கீடு, கிரீமிலேயர், மொத்த இடஒதுக்கீட்டின் அளவு 50 சதவிகிதத்தை தாண்டக்கூடாது என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்புகள், 93ஆவது அட்டவணை சட்டத்திருத்தங்கள் செல்லாது என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றுக்கெல்லாம் எதிர்ப்புக்குரல் கொடுத்த, பேராட்டக் களம் கண்ட பல சமூகநீதிக்கான இயக்கங்கள் / கட்சிகள், தலித் மாணவர்களின் கல்வி உதவித்தொகைக்கு விதிக்கப்பட்டுள்ள மதிப்பெண் வரம்பைக் கண்டிக்காமல் இருப்பது ஏன்? ஏனெனில், கல்வி உதவித் தொகைக்கான மதிப்பெண் வரம்பு முழுக்க முழுக்க தலித்துகள் தொடர்புடையது.

.

ஒருவேளை, சமூகநீதி இயக்கங்கள் இடஒதுக்கீடு அளவு குறையும்போதோ அல்லது இடஒதுக்கீட்டுக்கே ஆபத்து நேரும்போதோதான்– தங்கள் எதிர்ப்பின் வலிமையை காட்டுமோ என நாம் கருதிக்கொண்டாலும்கூட, இடஒதுக்கீட்டின் நோக்கம் உரிய இடங்களை ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு அளிப்பதால் மட்டுமே வெற்றி பெற்றுவிடாது. அந்நோக்கம்

நிறைவேற இடஒதுக்கீட்டால் பயன்பெற்ற மாணவர்களுக்கு உரிய நிதி ஆதார வசதிகளும், விடுதி வசதிகளும் அளிக்கப்பட்டால் மட்டுமே – இடஒதுக்கீட்டின் நோக்கம் முழு வெற்றி பெறும். எனவே, சமூகநீதி இயக்கங்கள், கல்வி உதவித்தொகைக்கான போராட்டத்திலும் தங்களது கவனத்தை திருப்ப வேண்டிய தேவையை இந்த அரசாணை ஏற்படுத்தியுள்ளது.

.

தலித் மாணவர்களுக்கு எதிரான இந்த அரசாணையை ரத்து செய்வதற்கான போராட்டத்தை, தலித் மாணவர்களின் பிரச்சனையாக மட்டுமே பார்க்க முடியாது. ஒட்டுமொத்த தலித் சமூகத்தின், நாட்டின் மனித வள ஆற்றல் மேம்பாட்டுக்கு எதிரான சதியாகவே பார்க்க வேண்டும். மாணவர்கள் போராட்டத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளட்டும் என்று தலித் இயக்கங்களும் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்துவிட முடியாது.

.

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உதவித்தொகைக்கான பொறுப்பு, தமிழக அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. ஆனால் தலித்துகளுக்கான கல்வி உதவித்தொகை, மத்திய அரசால் மாநில அரசு களுக்கு அளிக்கப்பட்டு, மாநில அரசு கல்லூரிகள் மூலம் அந்நிதியை மாணவர்களுக்கு வழங்குகிறது. தமிழகத்தில் உள்ள ஆட்சியாளர்கள் இந்த ஆணையின் மீது கவனம் செலுத்தாததற்கு, அது தங்கள் சமூகத்தைப் பாதிக்கவில்லை என்பதுகூட காரணமாக இருக்கலாம்.

.

“மக்கள் நல அரசு” என்ற நிலையிலிருந்து மத்திய – மாநில அரசுகள் லாப, நட்ட கணக்கு பார்க்கும் மளிகை மண்டி போல மாறிவிட்ட சூழலில், தலித்துகள் முன்னெப்போதையும்விட போர்க்குணத்தோடு களமிறங்கவேண்டும்.

-அரங்க. குணசேகரன்

(கட்டுரையாளர், தமிழக மனித உரிமைக் கழகத்தின் பொதுச் செயலாளர்.)

# 3. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்: சிக்கல்களும் தீர்வுகளும்

MONDAY, FEBRUARY 18, 2008

நீதி, சுதந்திரம், சமத்துவம் என்ற கொள்கைகளின் அடிப்படையில் இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு 58 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்நிலையில் இந்திய சமூகத்தில் சமத்துவம் நிலவுகிறதா என்று சற்றே ஆய்வோமானால், பெரும் ஏமாற்றமே மிஞ்சும். இந்திய மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினராக உள்ள பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் தொடர்ச்சியாக வஞ்சிக்கப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் வருகின்றனர்.

.

இம்மக்களின் துயர் துடைக்க அரசமைப்புச் சட்டம் தொடங்கி பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ள நிலையிலும் - சமூகத்தில் பெரிய அளவு மாற்றத்தைக் கொண்டுவர முடியவில்லை. மாறாக, புறக்கணிப்பும், வஞ்சகமும் புதுப்புது வழிகளில் மென்மேலும் நுட்பமாகி வருவதையே பார்க்கிறோம்.

.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, துணைப்பிரதமர் பதவி உட்படப் பல்வேறு உயர்பதவிகள் வகித்த தேசியவாதியான பாபுஜெகஜீவன்ராம், பார்ப்பனியத்தின் கூடாரமான வாரணாசி இந்து பல்கலைக்கழகத்தில் ஒரு சிலையைத் திறந்து வைத்தார். அவர் திறந்து வைத்ததாலேயே அச்சிலைக்குத் தீட்டு ஏற்பட்டுவிட்டதாகக்கூறி, அத்தீட்டை நீக்க கங்கையிலிருந்து "புனித நீரை' கொண்டு வந்து அச்சிலை மீது ஊற்றிக் குளிப்பாட்டியது,இந்து சாதியத்தின் முழு உருவமான பார்ப்பனியம்.

.

இந்தியாவில் நாள்தோறும் தலித்துகளுக்கெதிராக அரங்கேறிவரும் எண்ணிலடங்கா வன்கொடுமைகளில், இவற்றின் பனிநுனியளவே வெளிச்சத்திற்கு வந்துள் ளது. நீருக்கடியில் இருக்கும் பனிப்பாறை அளவிலானவை, அச்சு மற்றும் காட்சி ஊடகங்கள் பன்மடங்காக அதிகரித்துள்ள இக்காலகட்டத்தில்கூட வெளிவருவதில்லை. ஊடகத்துறையில் தலித்துகள் கணக்கிலெடுத்துக்கொள்ளக்கூட முடியாத சிறுபான்மையினராக இருப்பதும், அப்படி உள்ளவர்களில் கூட மிகச் சிறுபான்மையினரே சமூக உணர்வுள்ளவர்களாக இருப்பதும்தான் இதற்கு காரணம் எனலாம்.

.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மறுக்கப்பட்ட கல்வி உரிமை, இம்மக்களுக்குத் தற்போது ஓரளவேனும் கிடைத்துவருவது வன்கொடுமை குறித்த விழிப்புணர்வை மீட்டெழுப்பியுள்ளது.

இதன் காரணமாக, 1989 ஆம் ஆண்டின் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் குறித்து பரவலான விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே 1955லிருந்து நடைமுறையில் இருந்துவரும் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் – தீண்டாமைக் குற்றத்தை, மற்ற குற்றங்களைப் போல மற்றுமொரு குற்றமாகவே பார்த்தது. ஆனால், 1989 ஆம் ஆண்டின் சட்டம் மட்டுமே தீண்டாமையின் அடிப்படையில் இழைக்கப்படும் செயல்களை முதன்முறையாக வன்கொடுமைகள் என்ற தீவிரத்தன்மையுடன் அணுகியதால் சிறப்பு பெற்றது.

.

1955 ஆம் ஆண்டின் சட்டம் பொது இடங்களில், பொதுப் பயன்பாடுகளில் அனைவருக்கும் உள்ள உரிமையைப் போன்றே தீண்டத்தகாதவர் என்ற அடிப்படையில் - ஒரு குறிப்பிட்ட நபருக்கு அந்த உரிமை மறுக்கப்படுமேயானால், அதைக் குற்றம் என விளம்பியது. பொதுக் கிணறு, பொதுக்குழாய், பொது இடங்களில் பாகுபாடு என்ற அளவில் மட்டுமே அது இயங்கி வருகிறது.

.

இந்தியா என்பது கிராம சமூக வாழ்க்கை என்பதாலும், ஒவ்வொரு கிராமமும் “ஊர்’ என்றும்”சேரி’ என்றும் தனித்தனி வாழ்விடங்களாக அமைந்திருப்பதாலும், இயல்பாகவே ஒவ்வொரு சமூகப் ”பொது’ வாழ்விலிருந்தும் பட்டியல் சாதியினரும் பழங்குடியினரும் விலகியே இன்றுவரை வாழ்ந்து வருகின்றனர். இச்சூழலில், 1955 ஆம் ஆண்டின் சட்டம் மிகமிக அரிதாகவே பயன்பாட்டில் உள்ளது. இதன்மூலம் தீண்டாமை மறைவதற்குப் பதிலாக, இச்சட்டம் வரையறுக்கும் தீண்டாமைக் குற்றம் நுண்ணிய முறையில் தவிர்க்கப்பட்டு விடுகிறது.

.

இதற்கு முற்றிலும் மாறுபட்டு, 1989 ஆம் ஆண்டின் சட்டம் ஒவ்வொரு பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினரின் ”தனி நபர்’ வாழ்க்கையில் அவர் சந்திக்க நேரிடும் குற்ற நிகழ்வுகளை வன்கொடுமைக் குற்றங்களாகப் பட்டியலிட்டு வரையறுத்துள்ளது. இது, இச்சட்டத்தின் உண்மை நிலையை உணர்த்துவதாக அமைந்துள்ளது. 1989 ஆம் ஆண்டின் பிரிவு 3 இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் உட்பிரிவில் பிரிவு 3(1) பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர், ஒரு தனி நபர் மீது சாதியம் காரணமாக இழைக்கப்படும் பல்வேறு வன்கொடுமைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

.

இவற்றில், பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஒருவர் தேர்தலில் தன் விருப்பப்படி வாக்களிப்பதைத் தடுப்பது உட்பட, நுண்ணிய வன்கொடுமைகளும் முதன்முறையாக குற்றங்களாக்கப்பட்டுள்ளன. இவை தலித்துகளுக்கெதிராக சாதியத்தின் அடிப்படையில் நேரிடையாக இழைக்கப்படும் வன்கொடுமைகளாகும். இரண்டாம் உட்பிரிவு

பிரிவு 3(2), இப்பிரிவினருக்கெதிராக இழைக்கப்படும் பிற சட்டங்களிலுள்ள (இந்திய தண்டனைச் சட்டம் போன்றவை) குற்றங்கள் பாதிக்கப்படும் நபர், பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் என்ற அடிப்படையில் நிகழ்த்தப்படுமானால், அவற்றையும் வன்கொடுமைகளாக வரையறுக்கிறது.

.

எனவேதான், இச்சட்டம் இயற்றப்பட்டதிலிருந்தே ஆதிக்க சாதியினரிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி யுள்ளது. அதன் விளைவாக இச்சட்டமே திரும்பப் பெறப்பட வேண்டும் என்று மாநாடுகளில் இன்றுவரை முழக்கங்கள் எழுப்பப்பட்டு, தீர்மானங்களும் நிறைவேற்றப்படுகின்றன. இவர்கள் எழுப்பும் முழக்கங்களில் இச்சட்டம் நடைமுறைக்கு வந்து சாதியத்தையே புரட்டிப் போட்டுவிட்டது என்பது போன்ற மாயை தொடர்ச்சியாக ஏற்படுத்தப்படுகிறது. மாநாடுகள் தவிர பல்வேறு விதமான போராட்டங்களும் இக்கோரிக்கையை வலியுறுத்தி அவ்வப்போது நிகழ்த்தப் பெறுகின்றன. இவற்றிலெல்லாம் முன்வைக்கப்படும் ஒரே வாதம், இச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது; பதிவு செய்யப்படும் வழக்குகள் அனைத்துமே பொய் வழக்குகள் தாம் என்பதே!

.

இந்த வாதம் முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பானதாகும். இக்கோரிக்கையை முன்வைப்பவர்களும் இதை அறிந்தே இருக்கின்றனர். இருப்பினும், ஏன் இந்தப் பொய்ப்பிரச்சாரம்? இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு ஏற்பட்ட விழிப்புணர்வில் பல்வேறு வன்கொடுமைகள் தொடர்பான புகார்கள் கொடுக்கப்பட்டு வழக்குகள் தொடுக்கப் படுகின்றன. இவற்றில் மிக மிக குறைந்த வழக்குகளிலேயே வன்கொடுமை இழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கப்படுகிறது.

.

மேலவளவு, திண்ணியம் போன்ற ஊடகங்களின் மூலம் பெருமளவு அறியப்பட்ட வழக்குகளில்கூட, நீதிமன்றங்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்ட குற்றங்களை – அவ்வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டோர் நிகழ்த்தவில்லை என்று தீர்ப்பு கூறியிருப்பதைப் பார்க்கும் போது, இச்சட்டத்தையே திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கை எவ்வளவு கேலிக்கூத்தானது என்பது விளங்கும்.

.

பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் வெளியிடும் ஆண்டறிக்கைகளில் நாள்தோறும் வன்கொடுமை விகிதங்கள் அதிகரித்து வருவதையும், அதே சமயம் வன்கொடுமை வழக்குகளின் தண்டனை விகிதம் அதிகளவிற்கு குறைந்து வருவதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

.

அண்ணல் அம்பேத்கரின் நூற்றாண்டிற்குப் பிந்திய தலித் இயக்கங்களின் விழிப்புணர்வு, வளர்ச்சி ஆகியவற்றைக் கொண்டு பார்த்தால் – இது பெரிதும் வியப்பளிப்பதாகவே உள்ளது. இத்தனை ஆயிரம் இயக்கங்கள், அமைப்புகள் இருக்கும் போதும் வன்கொடுமை வழக்குகளைக் கையாள்வதற்கான போதிய திட்டமோ, பயிற்சியோ, செயல்பாடோ இல்லாமலிருப்பது வியப்புக்குரியது.

.

வன்கொடுமைகளைப் பட்டியலிட்டு, அரசியல் அரங்குகளில் கைத்தட்டல்களையும் வாக்குகளையும் பெற்றுக் குவிப்போரும் – இவ்விஷயத்தில் போதிய கவனம் செலுத்தாமலிருப்பது, வன்கொடுமைகளுக்குத் துணைபோவதாகவே அமைந்துள்ளது. ஊடகங்களின் மவுனமும் இந்தக் கூட்டணிக்கு மேலும் வலு சேர்க்கின்றன.

.

மேல்தட்டு வகுப்பினருக்கு இயல்பாக ஏற்படும் பாதிப்புகளைக்கூட பெரிய அளவில் கவனத்தில் கொண்டு, அந்நிகழ்வின் ஒவ்வொரு அசைவையும் உற்றுநோக்கி ஊடகங்களில் விவாதித்து, அவர்களின் மனநிலையைப் பிரதிபலித்து வரும் ஊடகங்கள், திட்டமிட்ட வன்கொடுமை நிகழ்வுகளை மட்டும் – பெரும்பாலும் பதிவு செய்யாமலேயே புறக்கணிப்பதும், ஒரு சில நேர்வுகளில் மேலோட்டமாகப் பதிவு செய்வதோடு நிறுத்திக் கொள்வதும் நாம் கண்கூடாகக் காண்பதே.

.

ஜெசிகா லால் கொலை, டில்லி உப்ஹார் திரையரங்க விபத்து, பிரமோத் மகாஜன் கொலை போன்ற நிகழ்வுகளில் விசாரணை நீதிமன்றங்களின் ஒவ்வொரு அசைவும் ஊடகங்களில் பதிவு செய்யப்பட்டதை நினைவு கூர்ந்தால் இது நன்கு விளங்கும். உள்ளூரில், கோவை குண்டுவெடிப்பு வழக்கு, காஞ்சி சங்கராச்சாரி வழக்கு, குஷ்பு மீதான வழக்கு, ஓட்டல் முதலாளி ராஜகோபால் வழக்கு போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

.

மேற்சொன்ன வழக்குகளில், ஊடகங்கள் பாதிக்கப்பட்டோருக்கு சார்பாகவும், குற்றம் சாட்டப்பட்டவருக்கெதிரான கருத்தாக்கங்களையும் தொடர்ச்சியாக முன்வைத்தன. மேற்கூறியவற்றிலிருந்து, நீதிமன்றங்களின் அணுகுமுறை நபருக்கு நபர் அவரவர்களின் பொருளாதார - ஊடகங்களின் பின்புலம், பலம் ஆகியவற்றை சார்ந்தே அமைகிறது என்பதையும் உணரலாம்.

.

இச்சூழலில் வன்கொடுமை வழக்குகள் பொய் வழக்குகள் என்று கூறப்படுவதாலேயே இச்சட்டம் நீக்கப்படவேண்டியதுதானா என்பதைப் பார்ப்போம். ஒரு பத்தாண்டுகளுக்கு முன் மதுரை நீதிமன்றமொன்றில் பாண்டியம்மாள் என்ற பெண்மணி கொலை செய்யப்பட்டார்

என்றும் - அதற்கு அவர் கணவரும், கணவரின் உறவினர்களுமே காரணம் என்றும் அவர்கள் மீது இந்தியத் தண்டனைச் சட்டப்பிரிவு 302இன் கீழ் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தபோது ”கொலை’ செய்யப்பட்ட பாண்டியம்மாள் நீதிமன்றத்தின் முன் வந்து, தான் கொலை செய்யப்படவில்லை என்றும், தகவல் சரியாகச் சொல்லாமல் வெளியூர் சென்றுவிட்ட தாகவும் கூறி, குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்கக் கோரினார்.

.

முதலில் மறுத்த விசாரணை நீதிமன்றம், உயர்நீதிமன்றத்தின் தலையீட்டின் பேரில் பாண்டியம்மாளின் ஆளடையாளத்தை விசாரித்து உறுதி செய்து கொண்ட பின்னரே குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்தது. இது ஒரு பொய் வழக்கு என்று நிரூபணம் ஆன ஒரே காரணத்திற்காக – கொலையைக் குற்றம் என்று கூறி, அதை செய்தவர்களைத் தண்டிக்கும் இந்திய தண்டனைச் சட்டப்பிரிவான 302அய்யே நீக்க வேண்டுமென்று எவரேனும் கூறினால் அதை ஏற்க முடியுமா? அதே போன்றது தான் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை, பொய் வழக்குகள் வருகின்றன என்று கூறி நீக்கம் செய்யக் கோருவதுமாகும்.

.

இதில் உள்ள முக்கிய அம்சம் என்னவெனில், உண்மையாக நடைபெற்ற வன்கொடுமையையே புகாராகவும் வழக்காகவும் பதிவு செய்து நடத்த முடியாத நடைமுறைச் சூழலில், இது போன்ற கற்பனைக் கோரிக்கைகள் – சாதிய உள்நோக்கம் கொண்டவையே என்பதில் மாற்றுக் கருத்தில்லை. சாதிய மேலாதிக்கம் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள் இத்தகைய கருத்துகளைப்பரப்பி வருகிறார்கள்.

.

இது ஒருபுறமிருக்க, தன்னெழுச்சி பெற்றுள்ளதாகக் கூறிக் கொள்ளும் தலித் அரசியல் அமைப்புகள், இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள், ஆர்வலர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் - வன்கொடுமை வழக்குகளைப் பதிவு செய்யும் அளவிலேயே நின்று விடுகின்றன. பதிவு செய்யப்பட்ட வழக்கை தொடர் நடவடிக்கைகள் மூலம் வலுப்படுத்தி – பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் நிவாரணமும், வன்கொடுமை செய்பவர்களுக்கு தக்க தண்டனையும் பெற்றுத்தர முயற்சிகள் எடுப்பதில்லை என்பதும் வேதனைக்குரியது.

.

அதைவிட வேதனைக்குரிய விஷயம், மேற்சொன்னவர்களுக்கு இதுகுறித்த பார்வையே இல்லை என்பதுதான். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களிடம் வன்கொடுமையாளருக்கு நயந்துபேசி பிரச்சனையை சுமூகமாக முடித்துக் கொள்ளச் சொல்லும் அவலத்தையும் – பல நேர்வுகளில் மேற்சொன்னவர்கள் ஈடுபடுவதும் நடைமுறையில் அரங்கேறியுள்ளன.

.

-காயங்கள் தொடரும்...

-சு. சத்தியச்சந்திரன்

(advsschandran@gmail.com)

# 4. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்: சிக்கல்களும் தீர்வுகளும் - 2

MONDAY, MARCH 17, 2008

ஓர் குற்றவியல் வழக்கின் அடித்தளமே அக்குற்ற நிகழ்வைக் குறித்து அளிக்கப்படும் புகார்தான். வன்கொடுமை நிகழ்வுகளுக்கும் இது பொருந்தும். குற்றம் என்பது, “சட்டம் தடை செய்துள்ள செயலைச் செய்வதோ அல்லது சட்டம் செய்ய வலியுறுத்தும் செயலைச் செய்யாமலிருப்பதோ ஆகும்.”' வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைப் பொருத்தவரை, பிரிவு 3(1)இல் பதினைந்து விதமான வன்கொடுமைகள் குற்றங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றிற்கு 6 மாதங்கள் முதல் 5 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் பிற சட்டங்களில் ஏற்கனவே குற்றம் எனப் பட்டியலிடப்பட்டிருக்கும் ஏழுவிதமான குற்றச் செயல்கள் பட்டியல் சாதியினர் அல்லது பட்டியல் பழங்குடியினருக்கு எதிராக செய்யப்படுமேயானால், அவை பிரிவு 3(2)இல் வன்கொடுமைகளாகக் கருதப்படும். இவற்றிற்கு, வன்கொடுமையின் தீவிரத்தன்மைக்கேற்ப அபராதம் தவிர, 7 ஆண்டுகள் வாழ்நாள் சிறை முதல் மரண தண்டனை வரை தண்டனையாக வரையறுக்கப்பட்டுள்ளன. இவை சட்டம் தடை செய்துள்ள குற்றங்களைச் செய்வதால் வன்கொடுமை எனக் கருதப்பட வேண்டியவை.

**பொது ஊழியர் யார்?**

இச்சட்டப்படி ஒரு பொது ஊழியர் கடை நிலை அரசு ஊழியர் முதல் குடியரசுத் தலைவர் வரையிலான அனைத்து அரசு அலுவலர்களையும் அனைத்துச் சட்டங்களும் இவ்வாறே குறிப்பிடுகின்றன. தன் கடமையை இச்சட்டம் வரையறுத்துள்ளவாறு செய்யாமலிருப்பாரேயானால், அதுவும் வன்கொடுமைக் குற்றம் என்று பிரிவு 4 கூறுகிறது.

**பயன்படுத்தப்படாத சட்டப்பிரிவு :**

இச்சட்டம் 1989இல் இயற்றப்பட்டிருந்தாலும் கூட, இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வழிமுறை சுட்டும் விதிகள் 6 ஆண்டுகளுக்குப் பிறகு, 1995இல்தான் வகுக்கப்பட்டது. எனவே, இச்சட்டமே 1995க்குப் பின்னரே நடைமுறைப்படுத்தப்பட்டது எனலாம். எனினும், இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய காவல் துறையினரும், 1995-விதிகளின் படி வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோருக்கு தீருதவிகள் (Reliefs) வழங்க வேண்டிய வருவாய்த்துறையினரும் பிரிவு 4இல் கூறியுள்ளவாறு இச்சட்டம் வரையறுத்துள்ள கடமையைப் பெரும்பாலான நிகழ்வுகளில் நிறைவேற்றுவதில்லை. தேசிய அளவிலேயே இதுதான் உண்மை நிலை என்ற போதும், இப்பிரிவின்கீழ் வழக்குகள் பதிவு

செய்யப்படுவதில்லை.

தமிழகத்தைப் பொருத்தவரையில், 1995 முதல் 2001 வரையிலான காலகட்டத்தில் இப்பிரிவின் கீழ் ஒரு வழக்கு கூட பதிவு செய்யப்படவில்லை என்பது வியப்பளிக்கும் உண்மை (வன்கொடுமைப் புகார்கள் அதிக அளவிலுள்ள தென்மாவட்டங்களான நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பெற்ற ஆய்வு முடிவுகள் ‘வன்கொடுமைகளும் சட்ட அமலாக்கமும்’ எம்.ஏ.பிரிட்டோ, டாக்டர் அம்பேத்கர் பண்பாட்டு மய்யம், மதுரை, பக். 57 மற்றும் 192). இதே ஆய்வில் குறிப்பிட்டுள்ளபடி, ‘இச்சட்டப்பிரிவு நடைமுறையில் ஓர் அழகு சாதனமே’ என்ற நீதிபதி புண்ணையா ஆணையத்தின் அறிக்கை வாசகமொன்று சுருக்கமாக விளக்குகிறது.

**புகார்கள் சந்திக்கும் தடைகள்:**

ஒரு வன்கொடுமைப் புகார் காவல் நிலையத்தில் கொடுக்கப்படும்போது, அதைப் பதிவு செய்யாமலிருக்க காவல் நிலையத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகளும் முயற்சிகளும் பலவகை:

(1) புகார் தரும் பாதிக்கப்பட்டோரை பலமுறை காவல் நிலையத்திற்கு வரச்சொல்லியும் காத்திருக்கச் செய்தும் அலைக்கழித்தல், உயர் அதிகாரிகளின் ஒப்புதல் பெற்ற பின்னரே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும் என்று இல்லாத சட்ட நுணுக்கத்தைக் காரணம் காட்டி தாமதப்படுத்துதல்.

(2) வன்கொடுமை இழைத்தோர் ஆதிக்க சாதியினராகவும், பொருளாதார ரீதியில் வளமிக்கவர்களாகவும் இருப்பதாலும், பல நேரங்களில் அரசியல் பின்னணி கொண்டவர்களாகவும் உள்ளதால், அவர்களிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு பாதிக்கப்பட்டோரை புகாரை திரும்பப் பெறச் சொல்லியும், ‘சமரசம்’ செய்து கொள்ளச் சொல்லியும் ‘அன்புடன் அறிவுறுத்துதல்’.

(3) அவ்வாறான ‘அறிவுறுத்தலுக்கு’ அடிபணியாமல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கக்கோரி பிடிவாதம் பிடிப்பவர்களை வன்கொடுமை இழைத்தோருக்கு எதிராகக் குற்றம் இழைத்ததாகப் பொய் வழக்குப் போடுவதாக மிரட்டுதல்.

(4) பாதிக்கப்பட்டவர்கள் அப்படியும் ஒத்துழைக்காமல் போகும் நிகழ்வுகளில், வன்கொடுமை இழைத்தவர்களிடம் பாதிக்கப்பட்டவர்கள் மீது பொய்ப் புகார் பெற்று அப்புகாரை முதல் வழக்காகவும், பாதிக்கப்பட்டோர் அளிக்கும் உண்மைப் புகாரை இரண்டாவதாகவும் பதிவு செய்து, வன்கொடுமை வழக்கை வலுவிழக்கச் செய்தல்.

(5) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் சட்ட நடைமுறையின்படி அதை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பாமல் தாமதித்தல்.

(6) இத்தாமதத்தைப் பயன்படுத்தி புகாரின் உண்மைத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்க வாய்ப்பளித்து வன்கொடுமை இழைத்தோருக்குச் சாதகமாகச் செய்தல்.

(7) காவல் துறை உயர் அதிகாரிகளுக்கும் வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் முதல் தகவல் அறிக்கையின் நகலைத் தாமதமாக அனுப்புவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வன்கொடுமைச் சட்டவிதிகளின்படி தீருதவி கிடைப்பதைத் தாமதித்தல் என்பன, இம்மாதிரியான முயற்சிகளுள் முதன்மையானவை. இத்தனைத் தடைகளையும் மீறி முதல் தகவல் அறிக்கை பதிக்கச் செய்வது நீண்ட நெடிய சட்டப் போராட்டத்தின் முதல் படியே!

**புகாரின் உள்ளடக்கம்:**

ஒரு புகார் இத்தடைகளை எல்லாம் மீறி பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை நடத்தப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, வழக்கு விசாரணை நடைபெற்று வன்கொடுமையாளர் சட்டப்படியான தண்டனை பெற ஏதுவான வகையில் சரியான தகவல்களுடன் தரப்பட வேண்டியது கட்டாயம். எனவே ஒரு வன்கொடுமைப் புகார் என்னென்ன தகவல்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

**குற்றங்களின் வகைகள்:**

குற்றங்கள் அனைத்தும் குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 2 (இ)ன்படி இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை, பிடியாணை வேண்டாக் குற்றங்கள் (Cognizable offences) மற்றும் பிடியாணை வேண்டும் குற்றங்கள் (Non- Cognizable offences) என்பன. பிடியாணை வேண்டாக் குற்றங்கள் என்பவை, குற்றம் செய்ததாகக் கருதப்படும் நபர் ஒருவரை நீதித்துறை நடுவர் வழங்கும் பிடியாணை இல்லாமலேயே கைது செய்யக்கூடிய குற்றங்களாகும். பிடியாணை வேண்டும் குற்றங்கள் என்பன நீதித்துறை நடுவர் பிடியாணை வழங்கியதன் அடிப்படையிலேயே, குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் நபரொருவரைக் கைது செய்யக்கூடிய குற்றங்களாகும்.

இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள குற்றங்களில் பிடியாணை வேண்டா / வேண்டும் குற்றங்கள் எவையெவை எனக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் முதலாம் பின்னிணைப்பில் பட்டியலிடப்பட்டுள்ளன. இப்பட்டியலில் குறிப்பிடப்படாத, மற்ற சட்டங்களில் கூறப்பட்டுள்ள குற்றச் செயல்களுக்கு 3 ஆண்டுகள் வரையிலான தண்டனை அல்லது அபராதம் மட்டுமே விதிக்கத்தக்கவை. ‘பிடியாணை வேண்டும் குற்றங்கள்’ என்றும், மற்றவை ‘பிடியாணை வேண்டாக் குற்றங்கள்’ என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

எளிமையாகக் கூறவேண்டுமெனில், கொலை, கொலை முயற்சி, கொள்ளையடித்தல், பாலியல் வன்கொடுமை போன்ற தீவிரத்தன்மை அதிகமாக உள்ள குற்றங்கள் பிடியாணை வேண்டாக் குற்றங்கள் என்றும், சட்டவிரோதமாகக்கூடுதல், வாய்ச்சண்டை, சிறுகாயம் விளைவித்தல் போன்ற தீவிரத்தன்மை குறைவாக உள்ள குற்றங்கள் பிடியாணை வேண்டும் குற்றங்கள் எனலாம்.

**பிணை குற்றங்கள்:**

அனைத்துக் குற்றங்களையும் பிணையில் விடக்கூடிய குற்றம் (Bailable offences), என குற்றவியல் நடைமுறைச்சட்டப் பிரிவு 2(ச்)இல் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகளைப் பொருத்தவரையில் எவையெவை பிணையில் விடக்கூடியவை, பிணையில் விடக்கூடாதவை என்பது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் முதலாம் பின்னிணைப்பில் பட்டியலிடப்பட்டுள்ளன. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் பட்டியலிடப்பட்டவை தவிர, மற்ற சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் செயல்கள் 3 ஆண்டுகள் வரை தண்டனைக்குரியவையும் அபராதம் மட்டுமே விதிக்கக்கூடியவையும் 'பிணையில் விடக்கூடிய குற்றங்கள்' என்றும் அதற்கு மேல் தண்டனைக்குரியவையும், 3 ஆண்டுகளுக்கும் குறைவாக இருந்தாலும் சிறப்புச் சட்டம் ஒரு குற்றத்தைக் குறிப்பாக 'பிணையில் விடக்கூடாத குற்றமாகக்' கருதலாம் என்று குற்றவியல் நடைமுறைச் சட்டம் கூறுகின்றது. பிணையில் விடக்கூடிய குற்றங்கள் என்பவை அக் குற்றத்தைப் புரிந்ததாகக் கருதப்படுபவர்களுக்கும் பிணையை உரிமையாக அளிக்கிறது. பிணையில் விடக்கூடாத குற்றங்களைப் பொருத்தவரையில் அந் நபரை பிணையில் விடலாமா, கூடாதா என்பதை தீர்மானிப்பது நீதித்துறையின் விருப்புரிமை (Discretion) ஆகும்.

**எதிர்பார்ப்பு பிணை கிடையாது:**

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைப் பொருத்தவரை, பிரிவு 3(1)இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ள பதினைந்து வன்கொடுமைகளுக்கு ஆறு மாதங்கள் முதல் அய்ந்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனை என்றிருப்பதால், வன்கொடுமைக் குற்றங்கள் பிடியாணை வேண்டாக் குற்றங்கள் என்பது தெளிவு. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைப் பிரிவுகளுக்கு எதிர்பார்ப்பு பிணை (Anticipatory Bail) வழங்கக்கூடாது என இச்சட்டத்தின் பிரிவு 18 தடை செய்துள்ளதால், வன்கொடுமைத் தடுப்புச் சட்டக் குற்றங்கள் பிணையில் விடக்கூடாத குற்றங்களாகவே இச்சட்டத்தால் கருதப்படுகிறது.

**புகாரில் தெரிவிக்க வேண்டிய தகவல்கள்:**

ஒரு வன்கொடுமைப் புகார் கீழ்க்கண்ட அடிப்படைச் செய்திகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்:

1) வன்கொடுமைக்குள்ளாக்கப்படும் நபர், பட்டியல் சாதியினராகவோ அல்லது பழங்குடியினராகவோ இருப்பது. அதே சமயம் வன்கொடுமை இழைப்பவர் அல்லது இழைப்பவர்களில் ஒருவரேனும் பட்டியல் சாதியினராகவோ அல்லது பட்டியல் பழங்குடியினராகவோ இல்லாமல், வேறு சாதியினராக இருப்பது.
2) சம்பவம் நடைபெற்ற நாள், நேரம், இடம், பங்கு பெற்ற நபர்கள்.
3) வன்கொடுமைச் செயலின் தெளிவான முழுமையான விபரம்.
4) வன்கொடுமையாளர் ஒருவருக்கு மேற்பட்டிருந்தால், ஒவ்வொரு நபரும் அக்குறிப்பிட்ட வன்கொடுமை நிகழ்வில் இழைத்த குறிப்பான குற்றச் செய்கை.

5) வன்கொடுமை நிகழ்த்தப்பெறக் காரணம் அல்லது பின்னணி.
6) வன்கொடுமைக்குச் சாட்சியாக இருந்த நபர்களின் பெயர், மற்ற விபரங்கள்.
7) ஒருவேளை புகார் காலதாமதமாக அளிக்கப்படுமேயானால், அதற்கான காரணம். ஒரு புகாரில் குற்ற நிகழ்வு குறித்த மேற்கூறிய தகவல்களே போதுமானவை.

குறிப்பிட்ட வன்கொடுமை எந்தெந்த சட்டப்பிரிவுகளின்படி குற்றமாகக் கருதப்படவேண்டும் என்பதைப் புகாரில் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. முதல் தகவல் அறிக்கை என்பது அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய ஒரு கலைக் களஞ்சியமாக இருக்க வேண்டியதில்லை (An FIR need not be an encyclopedia) என்று உச்ச, உயர்நீதி மன்றங்கள் பலமுறை தெளிவுபடுத்தியுள்ளன. சம்பவம் குறித்து அனைத்து விபரங்களும் முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டு, புலனாய்வு அதிகாரி வழக்கைப் புலன் விசாரணை செய்யும் போது சாட்சிகளின் வாக்குமூலமாகப் பதிவு செய்யப்பட்டு ஆதாரமாகக் கொள்ளப்படும். மேலும், ஒரு புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச் செய்கைகள் எந்தெந்த சட்டத்தின் எந்தெந்தப் பிரிவுகளின்படி குற்றம் என்பதை முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்ய வேண்டியது காவல் அதிகாரியின் கடமையே.

**யார் புகார் கொடுக்கலாம்?**

ஒரு புகார் காவல் நிலையத்தில் நேரடியாகக் கொடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டோர் உடல் ரீதியாக காயம் போன்ற பாதிப்புக்குள்ளாக்கப்பட்டிருந்தால், உயிருக்கு உடனடியாக ஆபத்து ஏற்படாத நிகழ்வுகளில், அவரை காவல் நிலையம் மூலம் உரிய குறிப்பாணை (Memo) பெற்று சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும். காயம் உயிருக்கு உடனடியான ஆபத்தை விளைவிக்குமெனில், முதலில் அந்நபரை நேரடியாக அருகிலுள்ள அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லலாம். இவ்வாறான சூழலில், மருத்துவமனையிலிருந்து பெறப்படும் தகவலின்படி (Intimation) காவல் துறை புகாரினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டவர் தவிர, அச்சம்பவம் குறித்து அறிந்த எந்த ஒரு நபரும் புகார் தந்து அதை முதல் தகவல் அறிக்கையாகப் (FIR) பதிவு செய்யலாம்.

**புகாரில் குறிப்பிடவேண்டிய அம்சங்கள்:**

இச்சட்டப்பிரிவு 3(1)(இ)–ன் கீழ் நிகழ்ந்த வன்கொடுமை தொடர்பான ஒரு புகாரில் குறிப்பிடப்பட வேண்டிய குறைந்தபட்ச செய்திகளைப் பார்ப்போம். வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவு 3(1)(து) கூறுவதாவது :"பட்டியல் சாதியினராகவோ, பழங்குடியினராகவோ இல்லாத எவரொருவரும், பட்டியல் சாதியினரையோ, பழங்குடியினரையோ சார்ந்த ஒருவரைப் பொதுமக்கள் பார்க்குமாறு உள்ள ஏதேனும் ஓரிடத்தில் அவரைத் தம் மதிப்பை இழக்கும்படி தாழ்வுபடுத்தும் நோக்கத்துடன் வேண்டுமென்றே அவமானப்படுத்தினால் அல்லது மிரட்டி அச்சுறுத்துவாரேயானால், அவர் ஆறு மாதத்திற்குக் குறையாத ஆனால், அய்ந்தாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனையும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவதற்குரியவராவார்’’.

இதன்படி இச்சட்டப்பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றச்செயல் குறித்தான புகாரில் தெரிவிக்கப்படவேண்டிய முக்கியத் தகவல்கள்:

1) பொதுமக்கள் பார்வையில் படும்படியான இடம்
2) பட்டியல் அல்லது பட்டியல் பழங்குடியினரல்லாத நபர்கள்
3) பட்டியல் சாதி அல்லது பட்டியல் பழங்குடியினர்
4) வேண்டுமென்றே அவமதித்தல்/ கேவலப்படுத்துதல் அல்லது அச்சுறுத்துதல். இவை தவிர சம்பவம் நடைபெற்ற நாள், நேரம், இடம் மற்றும் உள்நோக்கம் ஆகியவையும் குறிப்பிடப்பட வேண்டும்.

**சாதிப்பெயரைச் சொல்லாமல் இழிவு படுத்தலாமா?**

தமிழகத்தில் தலித்துகளுக்கெதிரான எந்தக் குற்றம் இழைக்கப்பட்டாலும், காவல் துறையினர் அவ்வன்கொடுமைக்குரிய சட்டப்பிரிவிற்குப் பதிலாக இச்சட்டப்பிரிவையே முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்து வருகின்றனர். பொதுமக்கள் பார்வையில் சாதிப் பெயரைச் சொல்லி எந்த ஒரு பட்டியல் சாதியினரையோ, பட்டியல் பழங்குடியினரையோ இழிவுபடுத்துவது இச்சட்டப்பிரிவின் படி வன்கொடுமைக் குற்றமென்றால் கூட, சாதிப்பெயரை நேரடியாகச் சொல்லாமல், சாதியை இழிவுபடுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் பொதுமக்கள் பார்வையில் இழிவுபடுத்துவது கூட, இப்பிரிவின் படி குற்றமேயாகும்.

**புகார் தரும் முறைகள்:**

முன்னரே கூறியபடி, வன்கொடுமைக் குற்றங்கள் அனைத்தும் பிடியாணை வேண்டாக் குற்றங்கள் என்பதால், வன்கொடுமை நிகழ்வு குறித்த புகார் குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 154(1)இன் படி உடனடியாகப் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்ய தாமதிக்கப்பட்டாலோ அல்லது மறுக்கப்பட்டாலோ, புகாரைப் பதிவு செய்ய மறுத்த / தாமதித்த காவல்நிலையத்தின் உயர் அதிகாரியான மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு / மாநகரங்களில் காவல் துறை ஆணையாளருக்கு அப்புகார் நேரிலோ (அ) பதிவு அஞ்சலிலோ வழங்கப்பட வேண்டும் என்று குற்றவியல் நடைமுறைச் சட்ட பிரிவு 154(2) கூறுகிறது.

அவர் அப்புகாரை தானே விசாரிக்கலாம் அல்லது உரிய காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்து சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப் பணிக்கலாம். அப்படியும் புகார் பதிவு செய்தல் மறுக்கப்படுமேயானால், சம்பந்தப்பட்ட காவல் நிலைய வழக்குகளை விசாரிக்கும் குற்றவியல் நடுவரிடம் தனிப்புகார் கொடுத்து, புகாரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொள்ள குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு156 (3)இன்படி ஆணை பெறலாம். இம்முயற்சியும் பலனளிக்கவில்லையெனில், குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 482இன்படி உயர்நீதிமன்றத்தை அணுகி தக்க ஆணை பெறலாம்.

**புகாரை வீணடிப்பதைத் தவிர்த்தல்:**

பாதிக்கப்பட்டோரின் புகார் உள்ளது உள்ளபடியே பதிவு செய்யப்படவேண்டும். அதில் நீட்டல், குறைத்தல், திருத்துதல் செய்ய காவல் துறையினருக்கு அனுமதி இல்லை. ஆனால், நடைமுறையில் இவ்விதி பெரும்பாலும் மீறப்படுகிறது. இந்நிலையைத் தவிர்க்க வேண்டுமெனில், நேரில் காவல் துறையினரிடம் அளிக்கப்படும் புகாரின் நகல்களைப் பதிவு அஞ்சலில் அதே காவல் நிலையத்திற்கும், உயரதிகாரிகளான காவல் துறை கண்காணிப்பாளர், துணைக் கண்காணிப்பாளர் போன்றோருக்கும் அனுப்பி வைப்பது நல்லது, வாய்ப்புள்ளவர்கள் அதே புகாரை தந்தியாகவோ, தொலைநகல் (Telefax) மூலமாகவோ அனுப்பலாம். புகார் நகலை மின்னஞ்சல் வழியாகவும் (Online) உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்.

**வருவாய்த்துறையினருக்கு மனு அளித்தல்:**

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின்படி, பாதிக்கப்பட்டோர் தீருதவி பெற உரிமை உள்ளதால், புகாரின் நகலை இவ்வாறே வருவாய்த்துறை உயர் அதிகாரிகளான மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர் (RTO), வட்டாட்சியர் போன்றோருக்கும் அனுப்பலாம். பட்டியல் சாதியினர் / பழங்குடியினர் குடியிருப்புகள் தாக்கப்படுவது, சூரையாடப்படுவது, தீக்கிரையாக்கப்படுவது போன்ற பெரிய அளவிலான வன்கொடுமை நிகழ்வுகளில் உடனடி தீருதவி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பெற இவை பெரிதும் உதவும். அதேபோல், வன்கொடுமை நிகழ்வுகளைப் பதிவு செய்யாமல் அதை மூடிமறைத்து சமரச முயற்சி என்ற பெயரில் காவல் துறை, உள்ளூர் தாதாக்கள், செல்வாக்கு பெற்ற அரசியல்வாதிகள் போன்றோர் பாதிக்கப்பட்டோரை நிர்பந்திப்பதையும் மாவட்ட ஆட்சியர் போன்றோருக்கு புகார் நகல் அனுப்பப்படும் நேர்வுகளில் பெரும்பாலும் தவிர்த்து விட முடியும்.

**ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்துதல்:**

அச்சு மற்றும் காட்சி ஊடகங்கள் பெருமளவில் வந்துவிட்ட இன்றைய சூழலில், மிகக் கொடூரமான வன்கொடுமைகள் குறித்து ஊடகங்களுக்குத் தகவல் தந்து வெளியிடச் செய்வதன் மூலம் வன்கொடுமை நிகழ்வுகள் பதிவு செய்யப்படுவதையும் இத்தகைய ‘சமரச’ முயற்சிகளை முறியடிக்கவும் முடியும். அப்போதுதான் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. இந்த உத்தியை திண்ணியம் வன்கொடுமை வழக்கில் வழக்குரைஞர் ரத்தினமும், கண்ணகி முருகேசன் படுகொலை வழக்கில் தோழர் தொல். திருமாவளவனும் கையாண்டுள்ளனர்.

-காயங்கள் தொடரும்

-சு. சத்தியச்சந்திரன்

(advsschandran@gmail.com)

# 5. என்னை உண்மை கண்டறியும் என்னை சோதனைக்கு உட்படுத்துங்கள்! -ஆர்.பி.சிறீகுமார்

MONDAY, MARCH 17, 2008

*ஆர்.பி. சிறீகுமார், குஜராத் இனப்படுகொலைகள் நிகழ்ந்த போது, காக்கி உடையணிந்து உண்மையை உரத்து அறிவித்த அம்மாநில உளவுப் பிரிவின் தலைவர். குஜராத் உள்துறை செயலர், அரசு வழக்கறிஞர் அரவிந்த் பாண்டியா மற்றும் பலரும் மிரட்டியும் எதற்கும் அஞ்சாதவர். அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். அதிகார வர்க்கம், எவ்வாறு தங்கள் சொந்த நலன்களுக்காக முஸ்லிம் எதிர்ப்பு கதையாடல்களை கட்டவிழ்த்துவிட்டது என்பதை அவர் 'தெகல்கா' ஆங்கில இதழில் ஹரிந்தர் பவேஜாவுக்கு அளித்த பேட்டியில் விவரிக்கிறார்.*



...

**நீங்கள் குஜராத் காவல் துறையின் அங்கமாக இருக்கிறீர்கள். மோடியால் நேரடியாக பாதிக்கப்படுகிறீர்கள். அங்கே நீதி எந்த அளவுக்கு மோசமாகப் போனது, சார்புடன் செயல்பட்டது?**

இன்றும் அங்கு நீதி மிகுந்த சார்புடன் தான் இயங்குகிறது. அது, அதிகார மட்டத்திலிருந்தே அவ்வாறு உள்ளது. குற்றவியல் நீதித்துறையின் தொடக்க புள்ளியான நிலைய அதிகாரியிலிருந்தே அது சீரழிந்துள்ளது. நீங்கள் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யும் போதே தோல்வி தொடங்குகிறது. இதனை நான் பல அறிக்கைகளின் வாயிலாக அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளேன். முதல் அறிக்கையை ஏப்ரல் 24, 2002இல் அளித்தேன். இதனை நானாவதி ஷா கமிஷனுக்கு அளித்த எனது மனுவிலும் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

பாதிக்கப்பட்டவர்கள் காவல் நிலையம் சென்று முதல் தகவல் அறிக்கையை தாக்கல்

செய்ய முற்படும் போதே அலட்சியப்படுத்தப்படுகிறார்கள். அவர்களின் பார்வைகளைப் பதிவு செய்யாமல், அதிகாரிகள் நீங்கள் விட்டு விடுங்கள் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என விஷயங்களை திரிக்கத் தொடங்குகிறார்கள். அடுத்ததாக சம்பவத்தின் மூர்க்கத்தை திரிக்கிறார்கள். 2002இல் கலவரத்தை வழிநடத்திய இந்துத்துவ தலைவர்களின் பெயர்களை பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட முற்படும்போது, அவர்கள் காவல் துறையினரால் மிரட்டப்பட்டார்கள். முதலில் காவல் துறை இந்த திரிபு வேலையை தொடங்குகிறது. அரசு வழக்கறிஞர்கள் அதனை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள்.

இந்த அரசு வழக்கறிஞர்கள் அனைவரும் இந்துத்துவா அமைப்புகளைச் சார்ந்தவர்கள். வி.எச்.பி.யின் பொறுப்பாளர்கள் தான் அரசு வழக்கறிஞர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், இவர்களின் பெயர்களை அப்போதைய மாவட்ட ஆட்சியர்கள் பரிந்துரை செய்துள்ளனர். இது பெரும் வெட்கக்கேடு. 25 - 35 வயதுக்கு உட்பட்ட அய்.ஏ..எஸ்., அய்.பி.எஸ்., அதிகாரிகள் தான் இந்த வி.எச்.பி. பொறுப்பாளர்களைப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். குஜராத் அரசின் சட்டத்துறை இப்படிப்பட்ட நபர்களை தேர்வு செய்துள்ளது.

நாளை ஒருவேளை சட்ட அமைச்சர் அசோக் பட்டை பார்த்து யாராவது கேள்வி எழுப்பினால், அவர் நேரடியாக, தெளிவாக பதிலளிப்பார். மாவட்ட ஆட்சியர்கள் இந்தப் பெயர்களைப் பரிந்துரை செய்யும் பொழுது எங்களால் என்ன செய்ய முடியும்? இந்திய சட்டத்துறை வரலாற்றில் முதன் முறையாக, உச்சநீதிமன்றம் தலையிட்டு சட்ட நடைமுறையின் குளறுபடிகளின் காரணமாக 2000 வழக்குகளை மறு விசாரணை செய்ய உத்தரவிட்டுள்ளது.

**அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ்., அதிகாரிகள் அரசாங்கத்தின் தாள லயத்திற்கு ஏற்ப நடனமாடுகிறார்கள் என்பதை எப்படி விளக்குகிறீர்கள்? அவர்கள் கடமை உணர்வின் நிலை என்ன?**

இது பதிலளிக்க முடியாத ஒரு பெரிய கேள்வி. பிப்ரவரி 27, 2002 அன்று மாலை (சபர்மதி ரயில் எரிப்பு கோத்ராவில் நிகழ்ந்த அன்று) மோடி ஒரு கூட்டத்தை நடத்தினார். அதில் டி.ஜி.பி.யும் அகமதாபாத் காவல் துறை ஆணையரும் பங்கேற்றனர். அங்கு மோடி இவ்வாறு கூறினார், “இந்துக்களின் கோபம் மூன்று நாட்களுக்கு தணியட்டும்.” கமிஷனுக்கு அளித்த எனது மூன்றாவது மனுவில் இதனை குறிப்பிட்டுள்ளேன். குறுக்கு விசாரணையின் போது நானாவதி கமிஷனுக்கு நான் தகவல்கள் அளிப்பதை அவர்கள் தடுத்தார்கள். தொடக்கத்திலிருந்தே நான் ஒட்டுமொத்த சம்பவங்களின் பதிவேட்டை பராமரித்து வந்தேன். அந்தப் பதிவேட்டின் எழுத்துகளை தடயவியல் சோதனைக்கு உட்படுத்தி, அவை எழுதப்பட்ட தேதியை கண்டுபிடிக்குமாறு நானே கேட்டுக் கொண்டேன்.

என்னையும் உண்மை கண்டறியும் சோதனைகளுக்கு உட்படுத்துமாறு (Narco Analysis & Brain Mapping Test) அவர்களிடம் சவால் விடுத்தேன். கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்களின் மீது தான் இது போன்ற சோதனைகள் நிகழ்த்தப்படும். இங்கே நாம்

ஓர் இனப்படுகொலையைப் பற்றி பேசுகிறோம். 2000 பேர் அழித்தொழிக்கப்பட்ட ஒரு மாபெரும் இனப்படுகொலை. ஏன் குற்றம் சாட்டப்பட்டவர்களின் மீது இத்தகைய உண்மை அறியும் சோதனைகள் நிகழ்த்தப்படவில்லை? எனது பதிவேட்டில் இடம் பெறுகிறவர்கள், மோடி மற்றும் இந்த 'களங்க நடவடிக்கை'யில் வாக்குமூலம் அளித்தவர்கள் என இவர்கள் அனைவரும் தங்களை இந்த சோதனைக்கு உட்படுத்த ஏன் முன்வரக்கூடாது? ஆனால் ஒரு எம்.பி.யோ அல்லது ஒரு மக்கள் தலைவரோ கூட இதனைக் கோரவில்லை.

**சோதனையை செய்யும்படி யாரிடம் கோரினீர்கள்? அதனை எழுத்துப் பூர்வமாக அளித்துள்ளீர்களா?**

கமிஷனுக்கு அளித்த மூன்றாம்/நான்காம் மனுக்களில் அது உள்ளது. அரசாங்கத்தின் நலன்களுக்கு எதிராக இத்தகு செயல்களில் ஈடுபடக்கூடாது என எனக்கு மூன்று மணி நேர அறிவுரையும் மிரட்டலும் விடுத்தார் உள்துறை செயலர். இதற்கு மேல் எத்தகைய வீழ்ச்சி உங்களுக்கு வேண்டும்? அனைத்து அரசு ஊழியர்களும் நானாவதி - ஷா கமிஷனுக்கு அனுசரணையால் ஒத்துழைக்க வேண்டும் என துணை விதிகளை அரசாங்கமே விதித்த போதும், அதனை எதிர்த்து தகவல்களை தாக்கல் செய்த ஒரே நபர் நான் தான். அதிகார வர்க்கத்திற்கும் அரசியல் தலைமைக்கும் பாலமாய் விளங்குகிற கேபினட் செயலர், இதுவரை ஒரு மனுவைக்கூட தாக்கல் செய்யவில்லை.

அவர் வெளியே வந்து ஒரு முறை சொல்லட்டும், இந்த இனப்படுகொலைக்கும் முதல்வருக்கும் தொடர்பே இல்லை என்று! அவர் அவ்வாறு செய்யமாட்டார், அவர் பயப்படுகிறார். காவல் துறையினரில் என்னைத் தவிர வேறு யாரும் இவ்வாறு அறிக்கைகளைத் தாக்கல் செய்யவில்லை. உங்கள் அதிகாரிகளை அறிக்கைகள் தாக்கல் செய்யவிடாமல் தடுக்கிறீர்கள் என்றால், இது எத்தகைய செயல், இது நமக்கு எதைத் தெரிவிக்கிறது?

**கமிஷனுக்கான அரசு வழக்கறிஞர் அரவிந்த் பாண்டியா 'தெகல்கா' பதிவுகளில் உள்ளார். அவர் இப்பொழுதுதான் எழுதப்பட்ட பிரதியை வாசித்ததாக கூறுகிறார். அவர் உங்களை பலவந்தப்படுத்த முயன்றாரா?**

மிகச்சரியாக சொன்னீர்கள். அவர் எனக்கு விளக்கமளித்த போது சில தருணங்களில் என்னை மிரட்டவும் செய்தார். அவர் சொன்னார், "இங்கே பாருங்கள் சிறீகுமார், நீங்கள் அரசு தரப்பு சாட்சியம். இந்த கமிஷனின் விசாரணையைப் பொருத்தவரை அப்படி ஒரு அரசு தரப்பு சாட்சியமே கிடையாது. இது கிரிமினல் வழக்கு நடைமுறை அல்ல."' என்னைப் போல் காவல் துறையில் 34 ஆண்டுகள் பணி புரிந்த ஒருவருக்கு கிரிமினல் வழக்கின் அடிப்படை நடைமுறைகள் தெரியும் என்பதை அவர் உணர்ந்திருக்கவில்லை.

எனக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும், நான் பெரும் பிரச்சனைகளை சந்திக்க வேண்டியிருக்கும் என அவர் மிரட்டினார். நான் கமிஷனுக்கு சென்று அறிக்கை அளித்தால் பெரும் பிரச்சனைகள் உருவெடுக்கும் என்றார்கள். நான் மிரட்டப்பட்டபோதும் கமிஷனுக்கு

நான்கு அறிக்கைகள் அளித்தேன். காவல்துறை எப்படி சார்புடன் இயங்கியது மற்றும் எப்படி நிவாரண முகாம்கள் பலவந்தமாக மூடப்பட்டு, அமைதியான சூழல் திரும்பியது போல் எவ்வாறு பொய் தோற்றம் உருவாக்கப்பட்டது என்பது போன்று ஏராளமான விவரணைகளுடனான தகவல்கள் என் அறிக்கைகளில் உள்ளது.

இது, ஆகஸ்ட் 2002இல் தேர்தல் ஆணையம் லிங்டோவின் தலைமையில் குஜராத் வந்த நேரம். சூழ்நிலைமைகள் பற்றிய முற்றிலும் பொய்யாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையுடன் அரசாங்கம் தயாராக இருந்தது. அந்த நேரம் நான் ஓர் அறிக்கை தயார் செய்து, அதில் 154 தொகுதிகளில் பாதிப்பு உள்ளது என்பதை எடுத்துரைத்தேன். தலைமைச் செயலர், எவ்வாறு நான் அரசாங்கத்தின் பார்வையிலிருந்து இவ்வாறு மாற்றுக் கருத்து கொள்ள இயலும் என கேள்வி எழுப்பினார். நான் மாவட்ட அதிகாரிகளிடமிருந்து பெற்ற அறிக்கைகளை தொகுத்தளித்துள்ளேன் என்று தெரிவித்தேன். பின்னர் ஆகஸ்ட் 16, 2002 அன்று வெளியிடப்பட்ட ஆணையில் தேர்தல் ஆணையம் என் அறிக்கையின் மூன்று பகுதிகளை சுட்டிக்காட்டி, இது அரசாங்கம் அளித்த அறிக்கை பொய்யென நிரூபிப்பதாகக் கூறி தேர்தலை தள்ளி வைத்தது.

**எப்படி உள்துறை செயலர், தலைமைச் செயலர் போன்ற பெரிய பதவிகளில் உள்ள அதிகாரிகள் அரசியல்வாதிகளுக்கு அடிபணிகிறார்கள்?**

நாம் காணும் இன்றைய அதிகார வர்க்கத்தின் போக்கு மிகவும் மோசமானது. அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த இவர்கள் அரசியல்வாதிகளை எதிர்பார்க்கும் தன்மையுடைய கொத்தடிமைகளாக மாற்றுவதன் மூலம் காரியங்களை சாதிக்கிறார்கள். உங்களுக்கு இட்லி பிடிக்கும் என்றால் நான் இட்லி அவித்து தருகிறேன், தோசை அல்ல. இப்போது நீங்கள் என்னையும், இட்லி அவித்து தர மறுக்கும் எனது நண்பரையும் எப்படி மதிப்பிடுவீர்கள்? ஏற்கனவே தங்களின் பணி உயர்வு நிமித்தமாக இங்கு முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பை வளர்ப்பது கச்சிதமாக நடைபெற்று வருகிறது.

இது தவிர, அதிகார வர்க்கம் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கிடையே காக்காய் பிடித்தல் நடக்கிறது. இவை எல்லாம் நேரடி பலன் தரக்கூடியவை. உங்களுக்கு வெளிநாட்டுப் பணி, நல்ல துறையில் பொறுப்பு, அதுவும் செல்வாக்கு மிகுந்த துறையில், அங்கு தான் அதிக பணம் ஈட்ட இயலும். பணி இட மாற்றம், பணி நியமனம், தற்காலிக வேலை நீக்கம், வெளிநாட்டுப் பொறுப்பு, பணி உயர்வு, பணி ஓய்வுக்குப் பின் பொறுப்பு என இதுபோன்ற வசதிகளின் மூலம் அரசியல்வாதிகள் அதிகார வர்க்கத்திற்கு அழுத்தமான சமிக்ஞைகளை வழங்குகிறார்கள்.

**இதனை எவ்வாறு சீர்படுத்துவது?**

அதிகார வர்க்கத்தின் மீதான எனது நம்பிக்கைகள் பொய்த்து விட்டன. மக்கள் தான் முன் வந்து இது போன்ற அரசியல்வாதிகளுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும். அதிகாரிகளை அப்புறப்படுத்த வேண்டும். இங்கு நடைபெறுவது மிகவும் கொடிய கிரிமினல்

செயல். இதனை ஜெர்மனியின் நாஜிக்களுடன் தான் ஒப்பிட்டாக வேண்டும். இத்தனை பெரிய கிரிமினல் நடவடிக்கையில் ஓர் அதிகாரியாவது தண்டிக்கப்பட்டாரா? இல்லை, அனைவருமே கவுரவிக்கப்பட்டுள்ளனர்! முன்னாள் தலைமைச் செயலர் ஜி.அப்பாராவ் அரசியல் பாவைகூத்து பொம்மையாகவே உருமாறிப்போனார். அவருக்கு தலைமைச் செயலரின் சம்பளத்துடனான ஆறு ஆண்டு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அதிகப்படியான சம்பளம், அதிகப்படியான பலன்கள். அவர்தான் தற்போது மின் வாரியம் சார்ந்த வழக்குகளை விசாரிக்கும் நீதி ஆணையர். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால்கூட அவரது பணி தொடரும்.

**காவல் துறை சீர்த்திருத்தங்கள் உதவுமா?**

காவல் துறை சீர்திருத்தங்கள் சில பயன்களைத் தரும். இருப்பினும் நாம் கோருவது எண்ணங்களின் சீர்திருத்தமே. உளவுத் துறையில் நியமிக்கப்படும் அய்.பி.எஸ். அதிகாரிகள் கட்டாயமாக இரண்டு ஆண்டுகள் பதவியில் இருக்க வேண்டும் என்பது அரசாங்க விதிமுறை. ஆனால் நான் அய்ந்து மாதங்களில் பணி மாற்றம் செய்யப்பட்டேன். முதல்வர் அவர்களின் வன்மம் நிறைந்த மதவாத உரையைப் பற்றி நான் அரசாங்கத்திற்கு அறிக்கை அளித்தேன். வேறு வழியின்றி அரசு அதனை சிறுபான்மையினர் ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியிருந்தது. அந்தப் பேச்சுக்காக அல்க்யு பதம்சே (Alyque Padamse) உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். எந்தப் பலனும் கிட்டவில்லை. மக்களிடமிருந்து மாற்றம் வர வேண்டும். அவர்களிடம்தான் அதிகாரத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கு உள்ளது.

தமிழில் : அ. முத்துக்கிருஷ்ணன்

# 6. சுற்றுச்சூழல் போராளி நாகர்கோவில் அசுரன் நினைவேந்தல் நிகழ்ச்சி

FRIDAY, APRIL 25, 2008

சுற்றுச்சூழல் ஆர்வலரும், புதிய தென்றல் இதழ் இணை ஆசிரியரும், மனித உரிமைப் போராளியுமான தி. ஆனந்தராம்குமார் (எ) அசுரன் அவர்கள் அண்மையில் அவரது 38ஆம் வயதில் மறைந்தது அறிந்திருப்பீர்கள்.



...

தன்னுடைய இறுதி மூச்சு வரை மக்களுடைய அடிப்படைப் பிரச்னைகளை முன்வைத்து எழுதியும், போராடியும் வந்தார்.

கடந்த சில ஆண்டுகளாக சிறுநீரகங்கள் செயலிழந்த நிலையில், நாகர்கோவில் ராஜேந்திரா சித்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார்.

உடல் நோயால் அவதியுற்ற நிலையிலும் திண்ணை இணைய இதழ், புதிய தென்றல் இதழ்களில் எழுதி வந்தார். மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறும் பொழுதே புதிய தென்றல் இதழில் இணையாசிரியராக மும்முரமாகப் பணியாற்றினார். பின்பு நோய் முற்றிய நிலையில் திருவனந்தபுரத்தில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது நினைவைப்போற்றும் நிகழ்ச்சி 2008 மே தினத்தன்று *காலை 10 மணியளவில்*, சென்னை தியாகராயநகர், வேங்கடநாராயணா சாலை, (திருப்பதி வெங்கடாஜலபதி ஆலயம் எதிரே உள்ள) செ. தெ. நாயகம் தியாகராயர் மேனிலைப்பள்ளியில் நடைபெறுகிறது.

அசுரனின் மனிதநேய கருத்துகளுக்கு செயல்வடிவம் கொடுக்க விரும்பும் அறிவியலாளர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், சுற்றுச்சூழல் மற்றும் மனித

உரிமைப்போராளிகள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், மாணவர்கள், கவிஞர்கள், இயக்குனர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்கின்றனர்.

தங்களையும் உளமாற வரவேற்கிறோம்.




...

# 7. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்: சிக்கல்களும் தீர்வுகளும் - 3

MONDAY, MAY 26, 2008

காவல் துறையினரும் மாஜிஸ்ட்ரேட்டும் சில நேரங்களில் லஞ்சப் பேர்வழிகளாக உள்ளனர். லஞ்சம் வாங்குவோராக மட்டும் இருந்தால் நிலைமை ஒருவேளை இவ்வளவு மோசமாக இல்லாமலிருக்கக்கூடும். ஏனென்றால், இரு தரப்பினரில் யார் வேண்டுமானாலும் அவரை விலைக்கு வாங்கிவிட முடியும். ஆனால் கெடு வாய்ப்பு என்னவென்றால், காவல் துறையினரும் மாஜிஸ்ட்ரேட்டுகளும் லஞ்சப் பேர்வழிகள் என்பதைவிட, அதிகமாக பாரபட்சக்காரர்களாக உள்ளனர். அவர்கள் இவ்வாறு இந்துக்களிடம் பாரபட்சமாகவும் தீண்டத்தகாதவர்களிடம் பகைமை உணர்வுடனும் நடப்பதால்தான் - தீண்டத்தகாதவர்களுக்குப் பாதுகாப்பும் நீதியும் மறுக்கப்படுகின்றன''

**- டாக்டர் அம்பேத்கர், "நிர்வாகத்தின் எதிர்ப்பு நிலை' என்ற கட்டுரையில்**

.

ரஞ்சித், விழுப்புரம் மாவட்டம் கஞ்சனூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வி.நல்லாம் கிராமத்தைச் சேர்ந்த பட்டியல் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர். அவரும் அவருடைய தமக்கை லட்சுமியும் 20.1.1996 அன்று மாலை பிடாரிப்பட்டு கிராமத்து வயல்வெளியில் முயல் வேட்டைக்குச் செல்கின்றனர். அங்கு முயல் பிடிப்பதற்கான வலையை விரித்துவிட்டு முயல்களின் வருகைக்கு காத்திருக்கின்றனர். அப்போது அங்கு வந்த கோடக்கவுண்டர், ரங்கநாதன், முத்துக்கிருஷ்ணன் ஆகிய வன்னியர் சாதியைச் சேர்ந்த நபர்கள் லட்சுமியை காம இச்சையுடன் பார்க்கின்றனர். இவர்களிருவரும் வலைக்கு அருகேயுள்ள களத்தில் படுத்திருக்கின்றனர்.

.

இரவு 10 மணியளவில் லட்சுமியை ஒருவர் பின்புறமிருந்து குச்சியால் தட்ட அவர் விழித்தெழுகிறார். கண்விழித்துப் பார்த்தால் தலைப்பக்கமாக ஒருவரும், காலருகே ஒருவரும் நின்று கொண்டிருக்கின்றனர். மூன்றாவது நபர் லட்சுமியின் வலது பக்கம் நிற்கிறார். தலைமாட்டருகே நின்றிருக்கும் நபர் "எங்களுடன் வந்து சந்தோஷமாக இரு'' என்று லட்சுமியை நோக்கிச் சொல்ல, லட்சுமி கூச்சலிடுகிறார். அவர் எழுந்து கொள்ள முயலும்போது ஒருவர் லட்சுமியின் கைகளைப் பிடித்துக் கொண்டும், இன்னொருவர் கால்களைப் பிடித்துக் கொண்டும், மற்றுமொருவர் லட்சுமியின் முதுகைப் பிடித்தும் தூக்கிச் செல்கின்றனர்.

.

லட்சுமியின் அலறல் கேட்டு ரஞ்சித் எழுந்து அந்நபர்களைத் தடுக்கிறார். லட்சுமியின் கையையும் முதுகையும் பிடித்துத் தூக்கிக் கொண்டிருந்த இருவரும் தங்கள் பிடியைத் தளர்த்தி லட்சுமியை கீழிறக்கிவிட்டு, ரஞ்சித் தங்களைத் தடுக்கக் கூடாது என்று கூறி ரஞ்சித்தை கழிகளால் தாக்குகின்றனர். இதற்கிடையில், லட்சுமியின் வயிற்றின்மீது அமர்ந்திருந்த நபரின் கண்களில் லட்சுமி மண்ணை அள்ளி வீசுகிறார். அந்நபர் இத்தாக்குதலிலிருந்து மீள்வதற்குமுன் லட்சுமி தப்பித்து ஒரு புதருக்குப் பின்னே ஒளிந்து கொள்கிறார். ரஞ்சித் தான் இறக்கப் போவதாகவும் தன்னைக் காப்பாற்றும்படியும் கூச்சலிடுகிறார். சிறிது நேரத்தில் ரஞ்சித்தின் குரல் அடங்கிவிடுகிறது.

.

இரவு முழுவதும் லட்சுமி புதருக்குப்பின்னே மறைந்து கொண்டிருக்கிறார். விடிந்ததும் தேடிப் பார்த்தால், ரஞ்சித்தை காணவில்லை. முயல் பிடிப்பதற்காக அவர்கள் விரித்திருந்த வலையும், அவர்களுடைய உணவுப் பாத்திரமும் கூட காணவில்லை. அருகில் தேடிப் பார்த்துவிட்டு லட்சுமி ஊருக்குத் திரும்பி கண்ணம்மாள், பச்சையம்மாள், காசியம்மாள் ஆகியோரிடம் நடந்ததைக் கூறுகிறார். ஆண்கள் யாரும் அப்போது இல்லாததால் மேற்கொண்டு என்ன செய்வதென அவர்கள் குழப்பமடைகின்றனர்.

.

மறுநாள் 21.1.1996 மாலை 4 மணியளவில் பிடாரிப்பட்டியிலிருந்து வந்த ஒருவர் கிராமத் தலைவரின் நிலத்திலுள்ள கிணற்றில் ரஞ்சித்தின் பிணம் கிடப்பதாகச் சொல்கிறார். பிணத்தைப் பார்த்தபின், லட்சுமி கஞ்சனூர் காவல் நிலையத்தில் கொடுக்கும் புகாரின் பேரில் லட்சுமியிடம் கண்ணியக்குறைவாக நடந்து கொண்டது (இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 354), சொற்ப காயம் விளைவித்தது (இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 302) ஆகியவற்றிற்காக மேற்கூறிய மூவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

.

இவ்வழக்கில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவுகள் பயன்படுத்தப்படவில்லை என்பதோடு, வழக்கை காவல் ஆய்வாளரே புலன்விசாரணை செய்து வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் எந்தக் குற்றமும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை என்று காவல் ஆய்வாளர் வழக்கமான ஒரு கொலை வழக்காகவே கையாண்டார். இச்சூழலில்தான் பாதிக்கப்பட்டோருக்கு சட்ட உதவி வழங்கிவந்த திண்டிவனம் பேராசிரியர் கல்யாணி இது குறித்து தக்க சட்ட நடவடிக்கை தேவை என்று கருதி, வழக்குரைஞர் பொ. ரத்தினத்தை அணுகினார். அவருடன் இக்கட்டுரையாளரும் ஆலோசித்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் ரஞ்சித்தின் மனைவி மாரியம்மாள் சார்பில் ஒரு குற்றவியல் மனுவை தாக்கல் செய்தனர்.

.

ரஞ்சித்தின் குடும்பத்தினருக்கு 1.5 லட்சம் தீருதவித் தொகையை (Relief Amount) வன்கொடுமைத் தடுப்புச் சட்ட விதிகளின் படி வழங்கிட உத்தரவிட வேண்டுமென்றும், அதே விதிகளின்படி துணைக்காவல் கண்காணிப்பாளர் பதவிக்கு குறையாத அலுவலரை வழக்கின் புலன்விசாரணையை மேற்கொள்ளவும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவுகளை வழக்கில் சேர்த்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அம்மனுவில் கோரப்பட்டது. அம்மனுவை இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி எஸ்.எம்.சித்திக் 19.2.1998 அன்று வழங்கிய தீர்ப்பில், மனுவில் வைக்கப்பட்டிருந்த மேற்படி கோரிக்கைகளை ஏற்று அதன்படியே உத்தரவிட்டார் (Mariammal, Vs. State of Tamil Nadu etc & Others 1998 I-LW (Cr) Ms. 285). குறிப்பாக, புலன்விசாரணை அதிகாரியாக துணைக் காவல் கண்காணிப்பாளர் செயல்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து விரிவாக வழங்கப்பட்ட முதல் தீர்ப்பு இது.

.

வன்கொடுமை வழக்குகளில் தலித்துகளுக்கெதிரான நிர்வாகத்தின் எதிர்நிலையை பிரதிபலிக்கும் எண்ணற்ற வழக்குகளில் ரஞ்சித் கொலை வழக்கும் ஒன்று. பொதுவாகவே, வன்கெடுமை வழக்குகளில் தொடக்கம் முதலே வன்கொடுமை இழைத்தோரைக் காப்பாற்றும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ரஞ்சித் கொலை வழக்கில் புலன்விசாரணை அதிகாரியாக துணைக் காவல் கண்காணிப்பாளருக்குப் பதிலாக, காவல் ஆய்வாளரே வழக்கை புலன்விசாரணை செய்திருந்தால், நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின்போது இந்த ஒரு சட்டக் குறைபாட்டின் அடிப்படையிலேயே வன்கொடுமையாளர்கள் விடுவிக்கப்பட்டிருப்பார்கள். வன்கொடுமை வழக்குகளில் புலன்விசாரணை அதிகாரி வன்கொடுமைத் தடுப்புச் சட்டவிதிகளின்படி நியமிக்கப்பட வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய விரிவான முதல் தீர்ப்பு இது.

.

**புலன் விசாரணையும் அதன் முக்கியத்துவமும்**

.

புலன்விசாரணை என்பதை ‘ஒரு காவல் அதிகாரியோ அல்லது குற்றவியல் நடுவரின் உத்தரவுப்படி அதிகாரம் பெற்ற எந்த நபரோ குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி, குற்ற நிகழ்வைப் பற்றிய சாட்சியத்தை திரட்டுவதற்காக எடுக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் உள்ளடக்கியதாகும்’ என குற்றவியல் நடைமுறைச்சட்டப் பிரிவு 2(h) பொருள் தருகிறது.

.

இச்சட்டப்பிரிவை ஆய்ந்த உச்ச நீதிமன்றம், ஒரு குற்றம் குறித்த புலன் விசாரணை என்பது 1(1) குற்ற நிகழ்விடம் சென்றடைவது (2) வழக்கின் பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும் உறுதி செய்து கொள்வது (3) குற்றமிழைத்ததாகக் கருதப்படும் நபரைக் கண்டுபிடித்தல், கைது செய்தல் (4) குற்றச் சம்பவம் தொடர்பான தகவல்கள்

அறிந்த நபர்களை விசாரித்து அவர்களிடம் வாக்குமூலங்கள் பெறுவது (5) குற்றம் நிகழ்ந்த இடத்தையும், அது தொடர்பான மற்ற இடங்களையும் பார்வையிட்டு தொடர்புடைய பொருட்களைக் கைப்பற்றுதல் (6) சேகரிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு நிகழ்ந்தது நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டிய குற்றமா என்று முடிவெடுப்பது எனில், அதற்குரிய குற்றப்பத்திரிகை உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்வது போன்றவற்றை உள்ளடக்கியதாக பல தீர்ப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

.

மேற்கூறியவற்றை புலன் விசாரணை அதிகாரி செய்யத் தவறும்போது, அது குற்றமிழைத்தவருக்குச் சாதகமாக அமைகிறது. எனவே, ஒரு குற்றவியல் வழக்கில் புலன் விசாரணை என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வழக்கமான குற்றங்களுக்கே இவ்வாறெனில், வன்கொடுமை போன்ற மனிதத்தன்மையற்ற சமூகக் குற்றங்கள் இழைக்கப்படும் வழக்குகளில் புலன்விசாரணை அதிகாரியின் பங்களிப்பு மிகமிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

.

வன்கொடுமை வழக்குகளும் புலன் விசாரணை அதிகாரியும் வன்கொடுமை நிகழ்வுகளை வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் தனித்தன்மையான சமூகக் குற்றமாகக் கருதுவதாலும், இவ்வன்கொடுமைகள் நுணுக்கமான வகைகளில் நிகழ்த்தப்படுவதாலும், இவ்வழக்குகள் துணைக்காவல் கண்காணிப்பாளருக்கு குறையாத பதவிநிலை வகிக்கும் அதிகாரியால் புலன்விசாரணை செய்யப்படவேண்டும் என்று வன்கொடுமைத் தடுப்புச் சட்டவிதி 7(1) கூறுகிறது. மேலும், புலன்விசாரணை செய்யும் அதிகாரிக்கு சில தகுதிகளையும் இவ்விதி வரையறுத்துள்ளது. இதன்படி, வன்கொடுமை வழக்கை விசாரிக்கும் புலன்விசாரணை அதிகாரி, அவருடைய முன்அனுபவம், வழக்கின் தன்மை குறித்து முன்கூட்டியே உணரும் தன்மை, நீதிச்சார்பு, சரியான திசையில் புலன்விசாரணை மேற்கொண்டு விரைந்து முடிக்கும் திறமை ஆகியவை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

.

விதி 7(2)இன்படி, புலன் விசாரணை விரைந்து 30 நாட்களுக்குள் முடிக்கப்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட வேண்டும். அவர் அதை காவல் துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். புலன் விசாரணை அதிகாரி நியமனமும், குளறுபடிகளும் பொதுவாக, வன்கொடுமை வழக்குகளில் சில ஆண்டுகளுக்கு முன்புவரை, வன்கொடுமை வழக்குகளை காவல் ஆய்வாளர் மட்டத்திலான அதிகாரிகளே மேற்கொண்டனர். தற்போது, இவ்விதி குறித்த விழிப்புணர்வு பரவலாக ஏற்பட்டபிறகு, இவ்வாறான குளறுபடிக்குப்பதில், புதுப்புது குளறுபடிகள் வன்கொடுமை வழக்குகளை வீணடிக்கும் நோக்கத்துடன் செய்யப்படுகின்றன.

.

இப்போது துணைக் காவல் கண்காணிப்பாளருக்கு தக்க நியமன ஆணை வழங்காமல் விடுவது அல்லது அவ்வாணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே விட்டுவிடுவது என வன்கொடுமையாளர்களுக்கு சாதகமான செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல், வன்கொடுமைப்புகாரைப் பதிவு செய்தவுடன் துணைக்காவல் கண்காணிப்பாளர் மட்டத்திலான அதிகாரி சம்பவ இடம் சென்று புலன் விசாரணையை மேற்கொண்டு, வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்படி குற்றம் ஏதும் நிகழ்ந்ததாக விசாரணையில் தெரியவில்லை என்று கூறி வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவுகளை வழக்கிலிருந்து நீக்கி புலன்விசாரணையின் தொடர்ச்சியை காவல் ஆய்வாளர் போன்றோருக்கு மாற்றி உத்தரவிட்டு தன் பணியை முடித்துக் கொள்கிறார். இதுவும் சட்டப்படி தவறே. மேற்குறிப்பிட்ட ‘மாரியம்மாள்’ (ரஞ்சித் கொலை) வழக்கு தீர்ப்பில் சென்னை உயர் நீதிமன்றம் இக்கருத்தைத் தெரிவித்துள்ளது.

.

தவிரவும், ஒரு குறிப்பிட்ட வன்கொடுமை வழக்கை புலன் விசாரணை அதிகாரியாக துணைக் காவல் கண்காணிப்பாளர் தவிர காவல் ஆய்வாளர் போன்றோர் புலன்விசாரணை மேற்கொண்ட காரணத்திற்காகவே வன்கொடுமையாளர்களை குற்றச்சாட்டிலிருந்து விடுவித்து உச்ச நீதிமன்றங்கள் தீர்ப்புகள் வழங்கியுள்ளன. இந்த அணுகுமுறை சட்ட அடிப்படையில் முழுக்க முழுக்கத் தவறானதாகும்.

.

எவ்வாறெனில், ஒரு வன்கொடுமை வழக்கின் புலன்விசாரணை காவல் ஆய்வாளர் செய்வதாலோ, துணைக் காவல் கண்காணிப்பாளர் மேற்கொள்வதாலோ எவ்விதத்திலும் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு பாதகமாக (Prejudice) இருப்பதில்லை. இந்த ஏற்பாடு வன்கொடுமை வழக்குகளின் புலன்விசாரணை உரிய கவனத்துடன் கையாளப்பட வேண்டும் என்பதுதான். அச்சூழலில், புலன்விசாரணையை காவல் ஆய்வாளர் மேற்கொண்ட ஒரே காரணத்திற்காக வன்கொடுமையாளர்களை விடுவிப்பது எவ்விதத்திலும் ஏற்கத்தக்கதல்ல.

.

**தகவல் பயன்பாடு**

.

தற்போது தகவல் உரிமைச் சட்டம் - 2005 நடைமுறைக்கு வந்து ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு நாம் அறிந்ததே. இச்சட்டத்தின் கீழ் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ‘பொதுத் தகவல் அதிகாரி’ நியமிக்கப்பட்டுள்ளார். தகவல் கேட்டு விண்ணப்பம் செய்த 30 நாட்களுக்குள் கோரப்படும் தகவல்கள் அவ்வதிகாரியால் தரப்பட வேண்டும். 30 நாட்களுக்குள் மேல் தகவல் தராமல் தாமதிக்கும் ஒவ்வொரு நாளுக்கும் 250 ரூபாய் அதிகபட்சமாக 25,000 ரூபாய் வரை அபராதமாக, தகவல் அளிக்காத பொதுத் தகவல் அதிகாரி செலுத்த நேரிடும் என்றும், தகவல் உரிமைச்சட்டம் வழிவகுத்திருக்கிறது. இந்த அடிப்படையில், முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்தது தொடர்பான தகவல்களை, இச்சட்டத்தின் அடிப்படையில் கோருவதன் மூலம் புகார் / முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை வீணடிக்க எடுக்கப்படும் முயற்சிகளைத் தடுக்கலாம்.

.

**தடுப்பு நடவடிக்கைகள்**

.

ஒரு வன்கொடுமைப் புகார் வழக்காகப் பதிவு செய்யப்பட்டவுடன் அவ்வழக்கை புலன்விசாரணை செய்யும் அதிகாரி வன்கொடுமைத் தடுப்புச் சட்டவிதிகளின்படி முறையாக நியமிக்கப்பட்டவர்தானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள, தகவல் உரிமைச் சட்டப்படி தொடர்புடைய காவல் நிலையத்திலேயே மனு செய்து தகவல் பெறலாம். இதன் மூலம் புலன்விசாரணை அதிகாரியின் நியமனத்தை சட்டப்படி செய்ய வைக்கலாம். ஒருவேளை நியமனம் முறையாகச் செய்யப்படாமலிருந்தால், அதற்குரிய வகையில், நடைமுறைப்படுத்த காவல் துறையின் உயர் அதிகாரிகளை அணுகலாம். தேவைப்படின், நீதிமன்றத்தை அணுகியும் தக்க ஆணையைப் பெற முடியும்.

- காயங்கள் தொடரும்

-சு. சத்தியச்சந்திரன்

(advsschandran@gmail.com)

# 8. கோல்ட் குவெஸ்ட் நிறுவனமும், ``ஏமாந்த" மக்களும்…!

TUESDAY, MAY 20, 2008

குற்றங்களைப் பற்றியும் குற்ற நிகழ்வுகளில் பங்கேற்பவர்களைப் பற்றியும் பொதுமக்களிடம் பல்வேறு கருத்துகள் உள்ளன. பங்கேற்பவர்கள் என்பது குற்றத்தை செய்பவர்களை மட்டுமல்ல; அதனால் பாதிக்கப்படுபவர்களையும் சேர்த்ததே.

அரசு மற்றும் ஆதிக்க வர்க்கத்தினரிடம் உள்ள பொதுவாக கருத்தியல், ஏழை மற்றும் படிப்பறிவற்ற மக்கள் குற்றம் செய்யக்கூடியவர்கள் என்பதே. இதன்படி குற்றத்தில் தொடர்புள்ளவரின் சாதியும், தோல் நிறமும் கூட மிகமுக்கியமானவை. இந்த கருத்தியலின்படியே பொதுவாக காவல்துறையும், பல நேரங்களில் நீதித்துறையும் செயல்படுகின்றன.

அதேபோல ஏழை மக்களைப் பொறுத்தவரை, அதை வெளிப்படையாக சொல்லும் துணிச்சல் இல்லாவிட்டாலும்கூட, பணக்காரர்கள் செய்வதே குற்றமாக கருதப்படுகிறது. எனவேதான் சாலை விபத்து போன்ற சந்தர்ப்பங்களில் நடந்தோ, சைக்கிளிலோ செல்பவரின் தவறால் விபத்து ஏற்பட்டால்கூட அதற்கு மோட்டார் வாகனத்தில் செல்பவரே பொறுப்பேற்க வேண்டும் என்ற எண்ணம் நிலவுகிறது.

இந்த அடிப்படை மனோபாவம் பலநேரங்களில் செய்தித்தாள்கள், தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் மூலமாகவும் பரப்பப்படுகிறது.




…

ஊடகங்களில் பணிபுரிவது என்பது மிகவும் சுவாரசியமானது. உண்மையான உண்மைகள் நமக்கு தெரிந்தாலும், மக்களுக்கு தேவையான உண்மைகளை மட்டுமே

வழங்கும் பணி சில நேரங்களில் சவாலானதும்கூட. ஏனென்றால் உண்மையான உண்மைகளை வெளிப்படுத்தினால் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்.

சில ஆண்டுகளுக்கு முன், திருச்சியில் “போலி கள்ள நோட்டு” மாற்ற முயன்ற சிலர் பிடிபட்டதாக கூறப்பட்டது. இந்த சம்பவத்திற்காக நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில், செய்தியாளராக பங்கேற்கும் வாய்ப்பும் கிடைத்தது.

பிடிபட்ட குற்றவாளிகள் கட்டுக்கட்டாக கருப்பு வண்ண காகிதங்களை வைத்திருந்தனர். அவர்களின் அருகே ஒரு பாத்திரத்தில் திரவமொன்றும் இருந்தது. செய்தியாளர்கள் அனைவரும் வந்தவுடன், காவல்துறை அதிகாரியின் அறிமுகவுரை முடிந்தவுடன் குற்றச்சம்வத்தின் செயல்முறை விளக்கம் நடத்திக்காட்டப் பட்டது.

“குற்றவாளிகள்” கட்டுக்கட்டாக இருந்த கருப்பு வண்ணக் காகிதங்களில் சிலவற்றை எடுத்து அந்த திரவத்தில் கரைத்தனர். அது ரூபாய் நோட்டாக மாறியது. இந்த செயல்முறை விளக்கத்தை பாதிக்கப் பட்டவர்களிடம் அவர்களது வீட்டில் குற்றவாளிகள் செய்துகாட்டி அவர்களை ஏமாற்றிவிட்டதாக கூறப்பட்டது.




...

“ஏமாந்தவர்கள்” அனைவரும் சுமார் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை பணம் கொடுத்து அதற்கு இரட்டிப்பு மடங்கில் கள்ளநோட்டு வாங்க முயற்சி செய்திருந்தனர். ஆனால் கள்ள நோட்டை கொடுத்த குற்றவாளிகள் சென்றபின்னர், அவர்கள் கொடுத்த கருப்பு வண்ண காகிதத்தை எந்த திரவத்தில் போட்டாலும் அது ரூபாய் நோட்டாக மாற மறுத்துவிட்டது.

இந்த “நூதன மோசடி”யால் **“பாதிக்கப்பட்டவர்கள்”** அனைவரும் பொங்கி எழுந்து காவல்துறையினரிடம் புகார் அளித்ததைத் தொடர்ந்து, காவல்துறையினர் மேற்கொண்ட தீவிர புலனாய்வில் குற்றவாளிகள் பிடிபட்டனர்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களின் வழக்கறிஞர்களும் இருந்தனர். அப்போது காவல்துறை அதிகாரியிடம், “இந்த கருப்பு வண்ண காகிதங்கள் கள்ளநோட்டாக மாறாததால் இவர்கள் பாதிக்கப்பட்டதாக கூறுகிறார்கள். அவை அனைத்தும் கள்ள நோட்டாக மாறியிருந்தால் அப்போது யார் குற்றவாளி?” எனக் கேட்டோம்.

அதற்கு மழுப்பலான சிரிப்புடன் பதிலளித்த அந்த அதிகாரி, "இருதரப்பும்தான்" என்று கூறினார். பாதிக்கப்பட்டதாகக்கூறி புகாருடன் வந்தவர்களையும் நமது கேள்வி குற்றவாளிகள்தானே என்று சுட்டிகாட்ட - "பாதிக்கப்பட்டவர்"களும், அவர்களின் வழக்கறிஞர்களும் இந்த எதிர்பாராத கேள்வியினால் திகைக்க இயல்பு நிலை திரும்ப சற்று நேரமானது.




...

குற்றவியல் தத்துவங்கள் அனைத்தும் குற்றச்செயலைவிட குற்ற மனப்பாங்கை(Mens Rea)யே பெரும் தீங்காகப் பார்க்கின்றன. இந்த அடிப்படையில் கள்ளநோட்டு மாற்ற ஆசைப்பட்டு அதற்கான முயற்சியில் ஈடுபட்ட அனைவருமே குற்றவாளிகள்தான். அவர்களின் முயற்சி நிறைவேறவில்லை என்பதால் அவர்களை அப்பாவிகளாகவும், பாதிக்கப்பட்டவர்களாகவும் பார்க்கக்கூடாது.

சன்டே இந்தியன் வாரஇதழின் செய்தியாளர் திரு.சந்திரன் என்னை தொடர்பு கொண்டு, 'கோல்ட் குவெஸ்ட் நிறுவனத்தில் முதலீடு செய்து பாதிக்கப்பட்டவர்கள்" குறித்து கேட்டபோது இந்த சம்பவத்தைக் கூறி, கோல்ட் குவெஸ்ட் நிறுவனத்தால் பாதிக்கப்பட்டதாக கூறிக்கொள்பவர்களையும் இந்தப்பார்வையிலேயே பார்ப்பதாகவும் கூறினேன். இது அப்படியே அச்சாகவும், பல நண்பர்கள் என்னை தொடர்பு கொண்டு கோல்ட் குவெஸ்ட் நிறுவனத்திற்கு ஆதரவாகவும், பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு எதிராகவும் நான் பேசுவதாக அதிர்ச்சியை தெரிவித்தனர். அதற்கு பதிலாக இந்த பதிவெழுத நேர்ந்தது.



…

இந்த "அப்பாவிகள்" குறித்து முதலில் சில விஷயங்களை தெளிவு செய்து கொள்வது நல்லது.

இவர்கள் கோல்ட் குவெஸ்ட் நிறுவனத்தில் இந்த அப்பாவிகள் யாரும் முதலீடு செய்யவில்லை. அந்த நிறுவனம் அறிவித்த ஒரு திட்டத்தில் உறுப்பினராகதான் சேர்ந்தனர். அந்த திட்டத்திற்கான விதிமுறைகளை புரிந்து கொள்ளாதது உறுப்பினர்களின் தவறே. உறுப்பினர்கள் அதைக் கேட்டும் நிறுவனம் சொல்லாவிட்டால் அதுவும் தவறே.



…

சுமார் 30 ஆயிரம் ரூபாய் தொகையைப் பெற்றுக் கொண்ட அந்த நிறுவனம், வெறும் 3 கிராம் தங்கத்தை மட்டுமே கொடுத்தது என்பதையும் புலம்புவதில் அர்த்தமில்லை. ஏனெனில் அந்த அளவு தங்கத்தை மட்டுமே தருவதாக அந்த நிறுவனம் தெளிவாகவே தெரிவித்திருந்தது. அது உலகிலேயே மிகக்குறைவான அளவில் தயாரிக்கப்பட்ட அரிய வகை நாணயம் என்பது மிகச்சிறந்த நகைச்சுவை. அதை நம்பியது அதைவிட நகைச்சுவை.



…

ஆக இந்த கோல்ட் குவெஸ்ட் விவகாரத்தில் உறுப்பினரானவர்கள்

யாரும் தெரியாமல் மாட்டிக் கொண்டதாக தெரியவில்லை. தெரிந்தே

உறுப்பினராகியுள்ளனர்.

அவர்களுக்கு சந்தேகங்கள் தோன்றியபோதெல்லாம் நிதியமைச்சரின் மனைவி மூத்த வழக்கறிஞர் நளினி சிதம்பரம் வழங்கிய சட்ட சான்றிதழ், உறுப்பினர்களுக்கு தெம்பூட்டியுள்ளது. மக்கள் ஏமாந்ததாக கூறப்படுவதற்கு இதுவே முழுமையான காரணம் அல்லவென்றாலும், இதுவும் முக்கியமான காரணம் என்பதை மறுக்க முடியாது.

இந்த வலைப்பின்னல் வணிகத்தொழிலில் காவல்துறையினர், வழக்கறிஞர்கள், செய்தியாளர்கள் உட்பட சமூகத்தில் படித்தவர்கள் எனக்கருதப்படும் பலரும் இணைந்துள்ளனர்.

இந்த வலைப்பின்னல் எங்கோ ஒரு இடத்தில் அறுந்துபோகும் என்பது யாருக்குமே தெரியாதா? அவ்வாறு அந்த இழை அறுந்து போவதற்குள் நாம் சம்பாதித்து விடுவோம்! மற்றவர்களைப்பற்றி நமக்கென்ன கவலை என்ற குறுகிய எண்ணத்தில்தானே இந்த திட்டத்தில் ஏராளமானோர் சேர்ந்துள்ளனர்?

உழைக்காமல், குறுகிய காலத்தில் பணம் சேர்க்கும் எண்ணமே இதுபோன்ற நிறுவனங்களுக்கான தொழில் வாய்ப்பாக அமைகிறது.

சமூகத்தின் பொதுக்கருத்தில் ஒருவர் செல்வந்தரா? என்பது மட்டுமே கேள்விக்குள்ளாகிறது. அவர் எந்த தவறான வழியில் பணம் சேர்த்தாலும் அது குற்றமாக பார்க்கப்படுவதில்லை. மாட்டிக்கொள்ளாமல் தவறு செய்யும் கலை, சாமர்த்தியம் என்று போற்றப்படுகிறது.

உலகமயமாதல் பொருளாதார சூழ்நிலையில், வாழ்க்கை அறங்கள் அனைத்தும் பொருளற்று கொள்ளை லாபம் ஒன்றே வாழ்வின்/வணிகத்தின் லட்சியமாக மாறிவிட்ட நிலையில் மக்களின் அறம் சார்ந்த கோட்பாடுகளும் பொருள் இழந்து வருவதையே இது காட்டுகிறது.

அரசியல்வாதிகள், வணிகக்கழகங்கள், அரசு அதிகாரிகள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், செய்தித்துறையினர் உள்ளிட்ட அனைத்து துறையினருமே இந்தப்போக்கில்தான் செயல்படுகின்றனர். இதிலிருந்து விலகிநிற்க முனையும் சிலர் கோமாளிகளாகவும், பிழைக்கும் சாமர்த்தியம் இல்லாதவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர்.



...

இவ்வாறு ஏமாளிகளாகவும், கோமாளிகளாகவும் இருக்க முடியாமல், என்ன செய்தாவது பொருளீட்டும் ஆர்வத்தில் கோல்ட் குவெஸ்ட் நிறுவனத்தில் இணைந்தவர்கள்தான் இன்று பாதிக்கப்பட்டவர்களாக சித்தரிக்கப்படுகின்றனர்.

ஒரு வாதத்திற்காக அவர்கள் பாதிக்கப்பட்டவர்கள்தான் என்பதை ஏற்றுக்கொண்டாலும், அவர்களை ஏமாற்றியது கோல்ட் குவெஸ்ட் நிறுவனம் மட்டும்தானா? என்பதே நம் கேள்வி.

-பி. சுந்தரராஜன்

(sundar@LawyerSundar.net)

# 9. கிரெடிட் கார்ட் பில் பிரசினையை தீர்க்க சிறப்பு சட்டம்!

TUESDAY, MAY 20, 2008

கிரெடிட் கார்டு பில்லில் பிரசினையா? நீங்கள் வாங்காத பொருட்கள் பில்லில் இடம் பெற்றுள்ளனவா? தவறான தேதியோ, தொகையோ இடம் பெற்றுள்ளதா?
அநியாயமான வட்டியோ, கட்டணங்களோ கணக்கிடப்பட்டுள்ளதா? கூட்டல்-கழித்தலில் தவறா? நீங்கள் கட்டிய தொகை வரவு வைக்கப்படவில்லையா?

உங்கள் பிரசினைகளைத் தீர்க்க நியாய கடன் பில் சட்டம் (Fair Credit Billing Act) என்ற சிறப்பு சட்டமே உள்ளது.

கிரெடிட் கார்டு மற்றும் ரிவால்விங் கிரெடிட் முறையில் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கான இந்த சிறப்பு சட்டம் 1986ம் ஆண்டிலேயே மத்தியஅரசால் இயற்றப் பட்டுள்ளது.




...

மேற்கூறிய பிரசினைகள் குறித்து உங்களுக்கு ஏதும் புகார்கள் இருந்தால், குறிப்பிட்ட வங்கிக்கு இது குறித்து எழுத்து மூலமாக புகார் அளிக்க வேண்டும். இந்த புகாரை பெற்றுக்கொண்டது குறித்து உங்களுக்கு 30 நாட்களில் ஒப்புதல் வரும். புகாரை பெற்றுக்

கொண்டதிலிருந்து 90 நாட்களுக்குள் உங்கள் புகாரை விசாரித்து பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்.

இந்த நாட்களில் பிரசினைக்குரியத் தொகைக்கு வட்டி கணக்கிடப்பட மாட்டாது. நீங்கள் கடனை கட்டவில்லை என்று கடன் தகவல் மையங்களுக்கு அறிக்கை அனுப்பப்பட மாட்டாது.

விசாரணையில் நீங்கள் குறிப்பிட்ட புகார் உண்மை எனத் தெரியவந்தால் அதை நிவர்த்தி செய்வது குறித்து, குறிப்பிட்ட வங்கி எழுத்து மூலமாக உறுதி அளிக்க வேண்டும். உங்கள் புகாரில் நீங்கள் சந்தேகப்பட்ட விஷயம் சரியல்ல எனத் தெரியவந்தால் நீங்கள் கட்ட வேண்டிய தொகையை மொத்தமாகவோ, உரிய வட்டியுடன் தவணையாகவோ கட்ட வேண்டும்.

நுகர்வோர் அனுப்பும் புகார்களை உரிய முறையில் விசாரிக்க மறுக்கும் வங்கிகளுக்கு அபராதம் விதிக்கப்படும். புகாரில் உள்ள விஷயங்கள் தவறு என பின்னர் விசாரணையில் தெரியவந்தாலும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காத வங்கிக்கு அபராதம் உத்தரவாதம்.

நியாய கடன் பில் சட்டம் (Fair Credit Billing Act)-ன் படி நடந்து கொள்ளாத வங்கிகளுக்கு எதிராக வாடிக்கையாளர்கள் வழக்கு தொடர முடியும். வழக்கு நிரூபிக்கப் பட்டால் தவறிழைத்த வங்கிக்கு 5 ஆயிரம் ரூபாய் முதல் 50 ஆயிரம் ரூபாய் முதல் இழப்பீடும் பெறலாம். இது குறித்த முழுமையான விவரங்கள் http://www.ftc.gov/bcp/conline/pubs/credit/fcb.shtm என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

கிரெடிட் கார்டு நிறுவனங்களிடம் இருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளும் இந்த சட்டத்தை பயன்படுத்த முக்கியத் தகுதி: நீங்கள் அமெரிக்க குடிமகனாக இருக்க வேண்டும்!

ஆம்! இந்த சட்டம் இந்தியாவில் அல்ல! அமெரிக்காவில்தான் இந்த சட்டம் அமலில் உள்ளது!

இந்தியர்கள் இதுபோன்ற மக்கள் நலம் காக்கும் சட்டங்களுக்கு ஆசைப்படக்கூடாது.

ஏனெனில் மத்திய நிதி அமைச்சர் சிதம்பரம், 03-12-2007 அன்று நாடாளுமன்றத்தில் பேசும்போது, **வெளிநாட்டு – தனியார் வங்கி நிறுவனங்கள் இந்திய அரசின் கட்டுப்பாட்டில் இல்லை** என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்திய ரிசர்வ் வங்கி, ஆண்டுதோறும் சடங்குத்தனமாக, பெயரளவில் வெளியிடும் “**வங்கிகளின் கிரெடிட் கார்டு செயல்பாடுகள் குறித்த முதன்மை சுற்றறிக்கை**” வங்கிகள் அனைத்தும் பின்பற்றுகிறதா என்பதைக்கூட கண்காணிக்க நேரமில்லாமல் இருக்கிறது.

நியாய கடன் பில் சட்டம் (Fair Credit Billing Act) என்ற இந்த சட்டம் குறித்து மத்திய நிதி அமைச்சர் சிதம்பரத்துக்கோ, இந்திய ரிசர்வ் வங்கிக்கோ தெரியாதா? பல தேவையில்லாத விவகாரங்களில் அமெரிக்காவை காப்பியடிக்கும் இவர்கள் இதுபோன்ற மக்கள் நலச்சட்டங்களை காப்பியடித்து இந்தியாவில் அமல்படுத்த மாட்டார்களா? என்றெல்லாம் கேள்விகள் எழலாம்.



...


CASH

...

பதில் சொல்லத்தான் ஆளில்லை!

பி. சுந்தரராஜன்

(sundararajan@lawyer.com)

# 10. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்: சிக்கல்களும் தீர்வுகளும் - 5

SATURDAY, JUNE 28, 2008

வன்கொடுமை நிகழ்வுகள் குறித்த தகவல் கிடைக்கப் பெற்றவுடன் புலன் விசாரணை அதிகாரியான துணைக் காவல் கண்காணிப்பாளர், தனக்குப் பதில் தனக்குக் கீழே பணிபுரியும் அதிகாரியைக் கொண்டு புலன் விசாரணை மேற்கொள்வது பல நேர்வுகளில் நடைபெறுகின்றன. கிராமப்புறம் சார்ந்த இடங்களில் இதுபோன்ற சட்டமீறல்கள் நடைபெறுவதாகப் பதிவுகள் உள்ளன. இதைத் தவிர்க்க வேண்டுமெனில், குறிப்பிட்ட நாட்களுக்குள் புலன்விசாரணை அதிகாரி சம்பவ இடத்தைப் பார்வையிடவில்லை என்ற தகவலை மேலதிகாரியான காவல் துறை கண்காணிப்பாளர், அதற்கும் மேலுள்ள அதிகாரியான மண்டலக் காவல் இயக்குநர் ஆகியோருக்கு மனு அளித்து, புலன் விசாரணையை உடனடியாக மேற்கொள்ள ஆணையிடச் சொல்லி கேட்கலாம். அதேபோல, துணைக் காவல் கண்காணிப்பாளர் பதவிக்கும் குறைந்த அளவிலான பதவி வகிக்கும் அதிகாரி செய்யும் புலன் விசாரணை வழக்கின் விசாரணையின் போது சிக்கல்கள் ஏற்படுமாதலால், இக்குறைபாட்டையும் உயர் காவல் அதிகாரிகளுக்கு மனு அளித்து தீர்வு நடவடிக்கைகள் கோரலாம்.

புலன் விசாரணை அதிகாரிகளின் தலித் விரோதப் போக்கின் வெளிப்பாடாக, வன்கொடுமை நிகழ்வின் முக்கிய சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யாமல் விடுவது, வன்கொடுமையாளர்களுக்குச் சாதகமாகச் செயல்படுவதாகும். இதுபோன்ற சூழலில், குறிப்பிட்ட முக்கிய கண்ணுற்ற சாட்சிகளின் வாக்குமூலத்தை ஓர் ஆணையுறுதி ஆணை (affidavit form) வடிவில் தொடர்புடைய சாட்சியே தயாரித்து தக்கவாறு நோட்டரி வழக்குரைஞரிடம் மேலொப்பம் (attestation) பெற்று புலன்விசாரணை அதிகாரிக்கு அனுப்பலாம். இதன் மூலம் புலன் விசாரணை அதிகாரி, குறிப்பிட்ட சாட்சியின் சாட்சியத்தை ஒதுக்கித் தள்ளுவதிலிருந்து தவிர்க்கலாம். அதன் நகலை மேலதிகாரிகளுக்கு அனுப்புவதும் கூட பயன் தரும்.

சில வகை வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படாத போது புகார்தாரரையோ, அவரது சுற்றத்தினரையோ மிரட்டி மேல்நடவடிக்கை தொடரக் கூடாது என இடையூறு செய்ய வாய்ப்பு அதிகம். சாதி மேலாதிக்கம், நிலவுடைமை, பணபலம், அரசியல் செல்வாக்கு போன்றவையும் இதில் முக்கியப் பங்கு வகிக்கும். இவற்றைத் தவிர்க்கவே கைது நடவடிக்கை அவசியம். ஆனால், கொடிய வன்கொடுமை வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குச் சாதகமாகச் செயல்படும் வகையில், குற்றம் சாட்டப்பட்டவர்களை புலன் விசாரணை அதிகாரி கைது செய்யாமல்

விடுவதும், அவர்கள் உயர் நீதிமன்றத்தில் சாதகமான ஆணை பெறவும் வழிவகை செய்யப்படுகிறது. வன்கொடுமை நிகழ்ந்த குறிப்பிட்ட நியாயமான காலகட்டத்திற்குள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்படவில்லையெனில், உயர் காவல் அதிகாரிகளுக்கு மனு அளித்து முறையிடலாம். கடமை தவறியதற்காக தொடர்புடைய புலன் விசாரணை அதிகாரி மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளச் சொல்லி கேட்கலாம்.

அவ்வாறு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையெனில், தக்க ஆதாரங்களுடன் உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை (ரிட்) மனு தாக்கல் செய்து நடவடிக்கைக்கு உத்தரவிடக் கோரலாம். வன்கொடுமையின் தீவிரத்தைப் பொறுத்து, வன்கொடுமையாளரை புலன் விசாரணை அதிகாரி கைது செய்யாமல் விடுவது வழக்கை கடுமையாக பாதிக்கும் அம்சம் என்பதால், புலன் விசாரணை அதிகாரியின் உள்நோக்கம் கேள்விக்குரியதாகிவிடும். அந்நிலையில், புலன் விசாரணை சரியான திசையில் மேற்கொள்ளப்படவில்லை எனவும், வழக்கை வலுப்படுத்த புலன் விசாரணையை வேறொரு அதிகாரிக்கோ, அமைப்புக்கோ மாற்றம் செய்து உத்தரவிடக் கோரி உயர்நீதி மன்றத்தை அணுகலாம். பல வழக்குகளில் இதுபோல் புலன் விசாரணை அதிகாரி / அமைப்பு மாற்றல் உத்தரவிடப்பட்டுள்ளது.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து இருபதாண்டுகள் நோக்கி நகர்ந்து வரும் நிலையில், இச்சட்டத்தைப் பயன்படுத்தப்படக் கூடாது எனப் பல்வேறு தரப்பினரும் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர். இவர்களில் காவல் துறையினர் முதலிடம் வகிக்கின்றனர். இதற்கான காரணம் சாதியம் என்பது வெளிப்படையானதே. இதன் தொடர்ச்சியாகவே, வன்கொடுமைப் புகார் வரப்பெறும் சமயத்திலிருந்து அவர்கள் முட்டுக்கட்டை போடத் தொடங்கிவிடுகின்றனர். மீறி பதிவு செய்யப்படும் வழக்குகளையும் எவ்விதத்திலாவது வீணடிக்கும் மனப்பான்மை பரவிக்கிடக்கிறது. அவற்றில் ஒன்றுதான், வன்கொடுமைப்புகாரைப் பொய் என்று புலன் விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்வதாகும்.

இத்தகைய சூழலில், காவல் துறையும் நீதித்துறையும் முதல் தகவல் அளித்த நபருக்கு அறிவிப்பு அனுப்பி, புலன் விசாரணையின் முடிவை ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று காரணம் கேட்க வேண்டும். அவ்வாறு வழங்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்டவர் நீதித்துறை நடுவரிடம் ஆட்சேபனை மனு (Protest petition) அளித்து, வழக்கின் புலன் விசாரணை எவ்விதத்தில் முறைப்படி மேற்கொள்ளப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டி மறுபுலன் விசாரணை நடத்த உத்தரவிடக் கோரலாம். புலன் விசாரணை முடித்தபின் வன்கொடுமைச் சட்டப்பிரிவுகள் ஈர்க்கப்படவில்லை எனவும், இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகள் மட்டுமே ஈர்க்கப்படுவதாகவும் கூட குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது. அது போன்ற சூழலில், வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவுகளின் கீழும் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யவும் மனு செய்யலாம்.

இதுபோன்ற வழக்கொன்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். மதுரை

மேலவளவு கிராமத்திற்கு அருகிலுள்ள ஊர் சென்னகரம்பட்டி. பல ஆண்டுகளாக கோயில் நிலத்தை ஆதிக்க சாதியினரான அம்பலத்தார் குத்தகைக்கு எடுத்து வருகின்றனர். பல போராட்டங்களுக்குப் பிறகு தலித்துகள் கோயில் நிலத்தை குத்தகை எடுத்துவிட கோபமுற்ற அம்பலத்தார், தலித்துகள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். இந்த சம்பவம் குறித்து அமைக்கப்பட்ட வட்டாட்சியர் தலைமையிலான அமைதிக்குழு கூட்டம் 5.7.1992 அன்று நடைபெறுகிறது. தலித்துகள் அமைதிக்குழு கூட்டத்திற்கு வந்து காத்திருக்க, அம்பலத்தார் எவரும் வரவில்லை. காத்திருந்த தலித்துகளை வீட்டிற்கு செல்லச் சொல்ல, அவர்கள் மேலூரிலிருந்து ஊர் திரும்ப பேருந்தில் ஏறுகின்றனர். பேருந்தை வழிமறித்த அம்பலத்தாரின் ஆயுதக் கும்பல், இரு தலித்துகளை பேருந்துக்குள் வைத்து படுகொலை செய்கின்றனர். முதல் நாள் நடந்த தாக்குதலுக்கு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்த மேலூர் காவல் நிலையத்தினர், படுகொலை தொடர்பான புகார் மீது இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகளின் கீழ் மட்டுமே வழக்குப் பதிவு செய்கின்றனர்.

வழக்கு அமர்வு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், சம்பவத்திற்கு அடிப்படைக் காரணம் சாதி பாகுபாடே என்பதால், வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவுகள் வழக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. அம்மனுவை விசாரணை நீதிமன்றம் காலதாமதம் என்ற காரணத்திற்காக தள்ளுபடி செய்தது. அதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் சீராய்வு மனுவில் (Ctrl RC 768/2000 நாள் 17.4.2002) தீர்ப்பு வழங்கிய நீதிபதி கற்பக விநாயகம், பாதிக்கப்பட்டோர் தரப்பு வாதத்தை ஏற்று வழக்கை மறுபுலன் விசாரணை செய்ய வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவுகள் வழக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டார். வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் குறித்த பொருள் விளக்கத் தீர்ப்புகளில் இத்தீர்ப்பு முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது.

**காவல்படுத்துதலும் பிணை மறுக்கச் செய்தலும்:**

இனியன் கொலை வழக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் திருவாரூர் மாவட்ட அமைப்பாளர் இனியன். குடவாசல் ராசேந்திரன் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவரது குற்ற நடவடிக்கைகளில் தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமைகள் பெரும்பான்மையானவை. சில ஆண்டுகளுக்கு முன்பு, திருவாரூர் குமாரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த தர்மையன் என்னும் தலித், கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த பொன் சுந்தரம் என்பவரால் சாதி வெறியுடன் இழிவுபடுத்தப்படுகிறார். இதைத் தட்டிக் கேட்ட மற்ற தலித் மக்கள், கள்ளர் சமூகத்தினரால் கடுமையாகத் தாக்கப்படுகிறார்கள். இது தொடர்பான தலித் மக்களின் புகார் மீது காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், அவர்கள் மீது பொய் வழக்கு போடப்படுகிறது. இது தொடர்பாக கள்ளர் சமூகத்தினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, தலித் மக்கள் சாலை மறியல் போராட்டம் ஒன்றை இனியன் ஒருங்கிணைப்பில் மேற்கொள்கின்றனர்.

அப்போது குடவாசல் ராசேந்திரன் தலைமையில் கள்ளர் சமூகத்தினர் 75 பேர் கடும் தாக்குதல் தொடுக்க, 15 தலித் பெண்களும் 25 தலித் ஆண்களும் மோசமாக காயமடைகின்றனர். அதைத் தொடர்ந்து இனியன் மீது குடவாசல் ராசேந்திரன் கடுமையான முன் விரோதத்துடன் இருக்கிறார். குடவாசல் ராசேந்திரனால் தன் உயிருக்கு ஆபத்து உள்ளதாக இனியன், தமிழக அரசின் உள் துறைச் செயலர் உட்பட பலருக்கு மனுச் செய்கிறார். இந்நிலையில் 18.1.2006 அன்று குடவாசல் நகர கடைவீதியில் இனியன் தன் மனைவி அமுதாவுடன் காலை 11 மணியளவில் சென்று கொண்டிருக்கும்போது, குடவாசல் ராசேந்திரன், அவரது மகன்கள் அரசன்கோவன், தென்கோவன் உள்ளிட்ட 7 பேர் கொண்ட ஒரு கும்பலால் 'ஒரு பறையன் என்னை எதிர்க்கப்போயிற்றா' என்று கூறிக் கொண்டு, கொலைவெறியுடன் இனியன் கொடூரமான முறையில் சரமாரியாக அரிவாளால் உடல் முழுக்க வெட்டப்பட்டு கொலை செய்யப்படுகிறார்.

சம்பவம் நடைபெற்ற அரை மணிக்குள்ளாகவே அருகிலுள்ள காவல் நிலையத்தில் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான அவரது மனைவி அமுதா, சம்பவம் குறித்து புகார் தருகிறார். கொலை குறித்த சட்டப்பிரிவுடன் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவின் கீழும் புகார் பதிவு செய்யப்படுகிறது. அப்புகாரில் தான் நேரடியாகக் கண்ட சம்பவத்தைக் குறிப்பிட்டதுடன் கொலை வெறிச் செயலில் ஈடுபட்ட நபர்களின் பெயர்களுடன் விவரத்தைத் தருகிறார். இருப்பினும் அக்குறிப்பிட்ட நபர்கள் சாதி ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பலம் பொருந்தியவர்களாகவும் இருந்த காரணத்தால், அப்பெயர் குறிப்பிட்ட நபர்களில் ஒருவர் கூட கைது செய்யப்படவில்லை. மாறாக, முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்ட நபர்களில் இருந்தவர்கள் தவிர, மற்றவர்கள் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறி கைது செய்தது காவல் துறை ஆனால், உண்மைக் குற்றவாளிகளுக்கெதிராக ஒரு துரும்பும் அசையவில்லை.

**உயர் நீதிமன்றத் தலையீடும் உத்தரவும்**

இச்சூழலில் இவ்வழக்கின் புலன்விசாரணை, சட்டமுறைப்படி நடைபெறவில்லை; காவல் துறை குற்றவாளிகளைக் காப்பாற்றுகிறது என்று கூறி அமுதா சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகினார். அம்மனுவின் மீதான விசாரணையின்போதும் புகாரில் தெரிவிக்கப்பட்டிருந்த குற்றவாளிகளுக்குச் சாதகமாகவே செயல்பட்டது காவல் துறை. சம்பவம் குறித்து 27 நபர்களிடம் விசாரணை செய்யப்பட்டதாகவும் அவர்களில் பெரும்பான்மையினர் முதல் தகவல் அறிக்கையில், பெயர் சுட்டப்பட்ட குற்றவாளிகள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பதாகவும், ஒரு சிலர் மட்டுமே அவர்கள் கொலையில் ஈடுபட்டதாகச் சொன்னதாகக் கூறி, காவல் துறை முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயன்றது.

எனினும் குற்றச்செயலைக் கண்ணுற்ற சாட்சி குற்றச்செயலை புரிந்தவர்கள் பற்றி தெளிவாகக் குறிப்பிட்டிருந்தும் அவர்களில் ஒருவரைக்கூட கைது செய்யாமல் அவர்களைக் காப்பாற்றும் நோக்கில் காவல் துறை செயல்பட்டது மிகப்பெரும் தவறு. எனவே, இப்படிப்பட்ட

காவல் துறையினர் இவ்வழக்கை மேற்கொண்டு புலனாய்வு செய்ய அனுமதிப்பது நியாயத்திற்கு உகந்ததல்ல என்று கூறி இவ்வழக்கின் புலன் விசாரணையை குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றி சென்னை உயர்நீதிமன்றம் 21.3.2006 அன்று உத்தரவிட்டது. இவ்வகையில், ஒரு குற்றவியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர் கைது செய்யப்பட வேண்டியது எவ்வளவு முக்கியமானது என்பது புலனாகும்.

**காவல்படுத்துதலின் வகைகள்**

ஒரு குற்றவியல் வழக்கில் குற்றம் சாட்டப்படும் நபர் காவல் துறையினரால் சட்டப்படி காவலுக்குட்படுத்தப்படும் போது, அந்நபர் நீதித்துறை நடுவர் முன்பு அவர் அவ்வாறு கைது செய்யப்பட 24 மணி நேரத்திற்குள் முன்னிலைப்படுத்தப்படவேண்டும். இது, காவல் துறையினரின் அரசமைப்புச் சட்டக் கடமையாகும்.அப்போது நீதித்துறை நடுவர், அந்நபரை நீதிமன்றக் காவலுக்குட்படுத்துவார். புலன் விசாரணை அதிகாரி தனது புலன் விசாரணை தேவைப்படின், அந்நபரை காவல் துறைக் காவலுக்கு உட்படுத்த வேண்டுமெனில், அதற்குரிய காரணத்தை மனுசெய்து நீதித்துறை நடுவரிடம் உத்தரவு பெறலாம்.

இவ்வாறு நீதிமன்றக் காவலில் உள்ள நபர் நீதி மன்றத்தை அணுகி தன்னைப் பிணையில் விடுவிக்கக் கோரி மனு செய்யலாம். குற்றம் சாட்டப்படும் நபர் மீதான குற்றம் அரசுத் தரப்பில் அய்யந்திரிபுற நிரூபிக்கப்படும் வரையில், அந்நபர் குற்றமற்றவராகக் கருதப்படுவேண்டும் என்று சட்டம் கருதுவதால், குற்றம் சாட்டப்படும் நபருக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு பிணை வழங்க வேண்டும் என்பது விதியாகவும், குற்றத்தின் தன்மை கொடியதாகவும் குற்றம் சாட்டப்பட்டவரின் முன் குற்ற வரலாற்றைக் கவனத்தில் கொண்டும் பிணை மறுக்கப்படுவது விதிவிலக்காகவும் இருக்க வேண்டும் என்பது, உச்ச நீதிமன்றம் வகுத்துள்ள சட்டக் கோட்பாடாகும்.

**எதிர்பார்ப்புப் பிணையும் தடையும்**

இந்நாட்டுக் காவல் துறையினரின் செயல்பாடு குறித்து உள்ள நியாயமான நம்பிக்கையின்மை சட்டத்தில் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதால், எதிர்பார்ப்புப் பிணை என்ற ஒரு தீர்வழியை சட்டம் வழங்கியுள்ளது. இது பிடியாணையின்றி கைது செய்யக்கூடிய குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள நபருக்குரிய சட்ட உரிமையாகும்.

ஆனால் வன்கொடுமை வழக்குகளைப் பொருத்தவரையில், இச்சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்துக் குற்றங்களும் பிடியாணையின்றி கைது செய்யக்கூடிய குற்றங்களாதலால் (வன்கொடுமைக் குற்றங்கள் அனைத்தும் ஆறு மாதங்கள் முதல் அய்ந்து ஆண்டுகள் வரையிலான தண்டனைக்குரியவை என்பதால், இதில் எதிர்பார்ப்புப் பிணை என்ற ஒரு தீர்வழி வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 18இன்படி சந்தேகத்திற்கிடமளிக்காதவகையில் வெளிப்படையாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இச்சட்டப்பிரிவு அளித்துள்ள பாதுகாப்பை பலவீனப்படுத்தும் விதத்தில் உயர் நீதிமன்றங்களில் எதிர்பார்ப்புப் பிணையைவிட பல மடங்கு சாதகமான உத்தரவுகள்

வழங்கப்படுகின்றன. இது, முழுக்க முழுக்க சட்டவிரோதமானதாகும். இச்சட்டவிரோத உத்தரவுகள் குறித்த விரிவான ஒரு கட்டுரை 'தலித் முரசு' 2007 இதழில் ('வன்கொடுமை வழக்குகள் சந்திக்கும் வன்கொடுமை') வெளிவந்துள்ளது.

**காவல் படுத்துதலின் அவசியம்**

ஒரு வன்கொடுமை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவரை புலன்விசாரணை அதிகாரி உடனடியாகக் கைது செய்ய வேண்டிய மிக மிக அவசியமானதாகும். ஆனால், பெரும்பான்மையான வன்கொடுமை வழக்குகளில் கைது என்ற ஒரு அத்தியாவசிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் பின்னணியில் உள்ளன. சாதியம் இதில் முதன்மைப் பங்கு வகிக்கிறது. அதேபோல் குற்றம் சாட்டப்பட்ட நபரின் அரசியல் மற்றும் பொருளாதார பலம் காரணமாகவும் கைது நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படுவதில்லை. மாறாக, வன்கொடுமையாளர்களுக்கு அனைத்து விதத்திலும் சட்டத்தை மீறி ஒத்துழைப்பு அளிப்பதே நடைபெறுகிறது.

**காவல் துறையின் மெத்தனம்**

குற்றம் சாட்டப்பட்டவர் பிணை அல்லது எதிர்பார்ப்புப் பிணை மனு தாக்கல் செய்யும்போது, காவல் துறையினர் குறிப்பிட்ட வன்கொடுமை தொடர்பான குறிப்பான விபரங்களை நீதிமன்றத்தில் தெரிவித்து அல்லது எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்து, அம்மனுவை ஆட்சேபணை செய்வதற்குப் பதிலாக, இந்நிலையிலும் ஒத்துழைப்பு தரப்படுவது குற்றம் சாட்டப்பட்டவர் பிணை அல்லது எதிர்பார்ப்புப் பிணை மிக எளிதில் பெற ஏதுவாகிறது. இதில் கவனிக்கப்பட வேண்டிய அம்சம் ஒன்றுள்ளது. ஒரு குற்றவியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபரை கைது செய்வது அவசியமா, கைது செய்யலாமா, கூடாதா என்பது அக்குற்றத்தைப் புலன்விசாரணை செய்யும் அதிகாரியின் உளத் தேர்விற்குட்பட்டதாகும். அதில், நீதிமன்றம் தலையிடக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் பல்வேறு சூழ்நிலைகளில் கூறியுள்ளது.

இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, புலன்விசாரணை அதிகாரிகள் வன்கொடுமையாளர்களைக் கைது செய்வதைத் தவிர்த்து வருகின்றனர். இச்சூழல் வன்கொடுமையினால் பாதிக்கப்படுவோரை மிகவும் வேதனைக்குள்ளாக்குகிறது. எனவே, வன்கொடுமையினால் பாதிக்கப்படுவோர் குற்றம் சாட்டப்பட்ட நபரை கைது செய்யக்கோரி எந்த நீதிமன்றத்தையும் அணுக முடியாத அவலநிலை உள்ளது.

**காவல்படுத்தச் செய்தல்**

எனினும் பாதிக்கப்பட்டோரும், அவர்களுக்கு துணை நிற்போரும் சோர்ந்துவிட வேண்டியதில்லை. காவல் துறை உயர் அதிகாரிகளையும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் மாவட்ட ஆட்சியர் போன்ற வருவாய்த் துறை அதிகாரிகளையும் எழுத்துப்பூர்வமான முறையில் அணுகி, காவல் துறையைச் சேர்ந்த புலன்விசாரணை அதிகாரிக்கு அழுத்தம் தருவதன் மூலமே வன்கொடுமையாளர்களைக்

கைது செய்ய வைக்க முடியும். இது தனிநபர் நடவடிக்கையாக இல்லாமல், ஒரு கூட்டு நடவடிக்கையாகச் செய்தல் வேண்டும். இதனைத் தொடர்ந்து அப்போதும் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், சம்பந்தப்பட்ட வன்கொடுமை தொடர்பான செய்திகளைத் திரட்டி ஒரு தெளிவான துண்டறிக்கையோ, சிறுவெளியீடோ வெளிக்கொணர்ந்து காவல் துறை மற்றும் வருவாய்த் துறை ஆகியோரின் அலட்சிய மனப்போக்கை வெளிப்படுத்தும் விதமாக பொது மக்களின் கவனத்துக்கு கொண்டு செல்வதன் மூலம் போதிய அழுத்தம் தர முடியும். இதன்மூலம் குற்றம் சாட்டப்பட்ட நபரைக் கைது செய்து சிறை செய்ய வைக்க இயலும்.

வன்கொடுமையின் தீவிரம் மற்றும் பாதிப்பின் தன்மையைப் பொருத்து இந்நடவடிக்கையை வலியுறுத்திப் பொதுக்கூட்டம், பேரணி, ஆர்ப்பாட்டம் போன்றவற்றையும் சமூகச் செயல்பாட்டாளர்கள் நடத்தலாம்.

**பிணையை எதிர்த்தல்**

அடுத்தகட்டமாக, வன்கொடுமையாளர்கள் நீதிமன்றத்தை அணுகி பிணை மனு தாக்கல் செய்யும்போது, பாதிக்கப்பட்டவர் சார்பாக தகுதி வாய்ந்த வழக்குரைஞரை நியமித்து அப்பிணை மனுவில் ஓர் இடையீட்டு மனு தாக்கல் செய்து வன்கொடுமையாளரின் பிணை மனுவை ஆட்சேபணை செய்ய வேண்டும். எந்தளவிற்கு ஆட்சேபணை வழக்குத் தகுதியின் அடிப்படையில் செய்யப்படுகிறதோ, அந்தளவிற்கு வன்கொடுமையாளரின் பிணை மனு தள்ளுபடி செய்யப்பட வாய்ப்புள்ளது. இதன்மூலம் வன்கொடுமை நிகழ்வுகள் மீண்டும் நிகழ்த்தப்படாத வண்ணம் தவிர்க்க முடியும்.

காயங்கள் தொடரும்

-சு. சத்தியச்சந்திரன்

(advsschandran@gmail.com)

# 11. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்: சிக்கல்களும் தீர்வுகளும் - 4

WEDNESDAY, JUNE 18, 2008

அண்மையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய தீர்ப்பு (மார்ச் 2008 முதல் வாரத்தில்) தொடர்பாக வெளியான ஒரு செய்தி, பலரது புருவங்களை உயர்த்தியது. செய்தியின் சாரம் இதுதான் : திருநெல்வேலி மாவட்டம் முனீர்பாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மேலவாசல் கிராமத்தில், 28 வயது பெண்ணை நான்கு பேர் கொண்ட கும்பல் ஒன்று, அவரது கணவரைக் கொன்று அருகிலுள்ள குளத்தில் வீசிவிட்டு, வாழைத் தோப்பில் வைத்து பாலியல் வன்கொடுமை புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது நால்வரில் ஒருவர் இறக்க, மற்றொரு நபர் அப்போது 15 வயதே நிரம்பியவராக இருந்ததால், இளஞ்சிறார் நீதிமன்றத்தால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். மற்ற இருவர் மீதும் பாலியல் வன்கொடுமை புரிந்த குற்றத்திற்காகவும் (பிரிவு 376 இந்திய தண்டனைச் சட்டத்தின் படி) வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட நபர் தலித்தாக இருந்ததால், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு 3 (2) (v) இன்படியும் 17.04.2007 அன்று விசாரணை நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டது.

.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவு 3(2)(v) என்பது, வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படும் நபர் பட்டியல் சாதியையோ, பழங்குடி இனத்தையோ சேர்ந்தவர் என்ற காரணத்திற்காக அவருக்கெதிராக பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட சிறைத் தண்டனை விதிக்கத்தக்க இந்திய தண்டனைச் சட்டக் குற்றம் புரிந்தால், அவ்வன்கொடுமையாளருக்கு வாழ்நாள் தண்டனை வழங்க வழிவகுக்கிறது. இத்தண்டனையை எதிர்த்து மேற்படி இரு குற்றவாளிகளும் தாக்கல் செய்த மேல் முறையீட்டில், சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை அவர்களிருவரையும் விடுதலை செய்து வழங்கிய தீர்ப்புதான் அது.

.

குற்றவாளிகளை விடுவிக்க உயர் நீதிமன்றம் சொல்லியிருக்கும் காரணம், பாதிக்கப்பட்ட பெண் தலித் என்ற செய்தியை, குற்றமிழைத்தவர்கள் அறிந்திருந்தனர் என்பதற்கான சாட்சியம் ஏதும் இல்லை என்பதால், வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவின் கீழான குற்றச்சாட்டிலிருந்து முதலில் விடுவிக்கப்பட்ட அக்குற்றவாளிகள், அவர்களின் வயது 23-க்கு கீழ் உள்ளதால் தமிழ் நாடு இளங்குற்றவாளிகள் சட்டப்பிரிவுகளின்படி தண்டனைக்குட்படுத்தப்பட முடியாது என்பதால் விடுவிக்கப்பட்டதாகவும் இத்தீர்ப்பு கூறுகிறது.

.

இதுபோன்ற தீர்ப்புகள் அரிதானவை அல்ல; வழக்கமான ஒன்றுதான். இத்தீர்ப்புக்குள் காணப்படும் சட்ட விவாதங்களை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், புலன்விசாரணை அதிகாரியின் தவறு காரணமாகவே இதுபோன்ற தீர்ப்புகள் வெளிவர வாய்ப்பாகின்றன. எனவே, புலன்விசாரணை என்பது வழக்கை நிலைநிறுத்த மேற்கொள்ளப்படும் முயற்சி என்பதும், அது எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்..ஒரு குற்ற நிகழ்வு குறித்த தகவல் கிடைத்தவுடன் காவல்துறை அது குறித்த முதல் தகவல் அறிக்கையை எவ்வித காலதாமதமுமின்றி பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன், அவ்வழக்கைப் புலன் விசாரணை செய்யும் அதிகாரி தனது பணியை மேற்கொள்ள வேண்டும். உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைவது, அங்குள்ள சாட்சியங்களைக் கைப்பற்றுவது, குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் நபர்களைக் கைது செய்வது, சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்வது போன்றவை புலன்விசாரணை அதிகாரி செய்ய வேண்டிய முக்கியக் கடமைகள்.

.

இவ்வாறு புலன்விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்குச் சென்று செயல்பட்டார் என்பதற்கான ஆவணங்கள் சிலவற்றை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையுடன் தாக்கல் செய்ய வேண்டும். அந்த ஆவணங்கள் மூலமே குற்ற நிகழ்வு நடைபெற்ற விதம் இன்னது என்பதை நீதிமன்றம் பரிசீலிக்க முடியும். இதைப் பொருத்தே ஒரு குற்ற நிகழ்வு உண்மையிலேயே நடைபெற்றதா என்பதை உறுதி செய்து அதில் பங்கேற்ற குற்றமிழைத்த நபர்களை நீதிமன்றம் தண்டிக்க முடியும்.

.

புலன் விசாரணை அதிகாரி தயாரிக்க வேண்டிய ஆவணங்களும், அவற்றின் முக்கியத்துவமும் :

.

**சம்பவ இடத்தின் வரைபடம் :**

.

குற்ற நிகழ்விடம் அமைந்திருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள புவியியல் பின்னணியைத் தெரிவிக்கும் ஆவணம் இது. பார்வை மகஜரில் விவரிக்கப்படும் சம்பவ இடம் குறித்த அனைத்துக் குறிப்புகளும் அவற்றிற்கும் கூடுதலான விவரங்களும் இவ்வரைபடத்தில் இருக்கும். சம்பவ இடம் அமைந்திருக்கும் திசை, அமைப்பு, சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சிகளிடமிருந்து பெறப்படும் வாக்குமூலங்கள், சம்பவம் நிகழ்ந்த விதத்தை விளக்கும் வகையில் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து சாட்சிகள் சம்பவத்தைக் கண்ணுற்றிருக்கக் கூடும் என்று நீதிமன்றம் ஏற்குமளவிற்கு அமைதல் வேண்டும்.

.

இதற்கு சம்பவ இடத்தின் வரைபடத்தில் குறிப்பிடப்படும் புவியியல் குறிப்புகளில் அவற்றின் நீளம், அகலம், தூரம் ஆகியவை குறிப்பிடப்படுதல் மிக அவசியம். பார்வை மகஜரும் வரைபடமும் ஒன்றையொன்று ஒத்திருத்தல் மிக மிக அவசியம். இவ்விரு

ஆவணங்களுக்கிடையே முரண்பாடு ஏற்படுமானால், சம்பவம் நடைபெற்றதை நிரூபித்தல் மிகக் கடினமாகிவிடும் ('மகஜர்' என்ற உருதுச் சொல்லை 'குறிப்பு' எனத் தமிழ்ப்படுத்தலாம். எனினும் குற்றவியல் வழக்குகளில் இன்றளவும் மகஜர் என்றே குறிப்பிடப்பட்டும் வழங்கப்பட்டும் வருவதால், புரிதல் முரண்பாடு ஏற்படாமலிருக்க இங்கும் அவ்வாறே குறிப்பிடப்படுகிறது).

.

**பார்வை மகஜர் :** இது குற்ற நிகழ்விடம் எங்கு அமைந்துள்ளது என்பதைக் குறிக்கும் வரைபடம் குறித்த விளக்க ஆவணமாகும். குற்ற நிகழ்விடம் குறித்த துல்லியமான தகவல்கள் இதில் பதிவு செய்யப்பட வேண்டும். சாட்சிகளின் வாக்குமூலங்களுக்கும் சம்பவ இடத்தின் விபரங்களுக்குமிடையே முரண்பாடு இருக்குமேயானால், குற்றம் நடந்ததாக நீதிமன்றம் நம்பும் வாய்ப்பு குறைந்து குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்படுவார்.

.

ஒரு குற்ற நிகழ்வு இரவு நேரத்தில் நடைபெற்றதாக இருக்கும் போது, அந்த நிகழ்வைக் கண்ணுற்ற சாட்சிகள் அவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தான் குற்றம் புரிந்தனர் என்று கூறும்போது, அந்நிகழ்வை குறிப்பிட்ட சாட்சி பார்த்திருக்க முடியுமா என்பதை உறுதி செய்து கொள்ள அந்நேரத்தில் சம்பவ இடத்தில் வெளிச்சம் இருந்ததா? அது குற்றம் இழைத்தவர்களை அடையாளம் காணுமளவிற்கு வாய்ப்பிருக்குமா? என்பது போன்றவற்றை நீதிமன்றம் கணக்கிலெடுக்க வேண்டும்.

.

இதற்கு சம்பவ இடத்தில் வெளிச்சம் இருந்தது என்பதை நிலைநிறுத்த, அங்கிருக்கக்கூடிய மின்விளக்கு இருந்த இடம் பார்வை மகஜர் எனப்படும் இந்த ஆவணத்தில் தெளிவாகவும் தவறாமலும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். இல்லையெனில், சம்பவ இடத்தில் இரவு நேரத்தில் குற்றமிழைத்தவர்களை அடையாளம் காண சாட்சிகளுக்கு வாய்ப்பில்லை என நீதிமன்றம் கருதி விடுவிக்கக்கூடும். இரவில் நிகழ்ந்த பெரும்பாலான கொலை வழக்குகளில் இந்த ஒரு சிறு பிழை விடுபடுதல் காரணமாகவே குற்றமிழைத்தவர்களை நீதிமன்றங்கள் விடுதலை செய்துள்ளன என்பதை கவனத்தில் கொண்டால், பார்வை மகஜரின் முக்கியத்துவத்தை உணரலாம். புலன்விசாரணை அதிகாரி பார்வை மகஜரை இரண்டு சாட்சிகள் முன்னிலையில் தயாரித்ததாக அவர்களின் கையொப்பம் பெற வேண்டுமாதலால், அச்சாட்சிகள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும்போது தெளிவாக சாட்சியம் அளிக்க வேண்டும்.

.

**கைப்பற்றுதல் மகஜர் :** ஒரு குற்ற நிகழ்வு நடைபெற்றதாகத் தகவல் கிடைத்தவுடன் புலன் விசாரணை அதிகாரி குற்றநிகழ்விடம் நோக்கி உடனடியாக விரைந்தடைய வேண்டும் என்று சட்டம் கூறுவதன் காரணம், சம்பவ இடத்தில் சம்பவம் நடைபெற்ற விதம் குறித்து குறிப்புணர்த்தக் கிடைக்கக் கூடிய ஆதாரங்கள்தான். தடயம் எனப்படுவது குற்ற நிகழ்விடத்தில் குற்ற நிகழ்வின் தொடர்புடைய சான்றுப் பொருளாகும். ஒரு தற்கொலைச்

சம்பவத்தில் தூக்கு மாட்டிக் கொண்ட கயிறோ, துணியோ, விஷபாட்டிலோ ஒரு முக்கிய சான்றுப் பொருள். ஒரு கொலை நிகழ்வில் கொலைக்குப் பயன்படுத்திய பொருள் அருவாள், கம்பு போன்ற எதுவும் கூட சான்றுப் பொருள்தான்.

.

அதேபோல், அச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபரின் உடை போன்ற உடைமைகளும் கூட சான்றுப் பொருளாகலாம். இவற்றை உடனடியாகக் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்து நடைபெற்ற சம்பவத்துடன் அச்சான்றுப் பொருளின் தொடர்பை உறுதி செய்து நீதிமன்றத்தில் அளிக்க வேண்டியது, புலன் விசாரணை அதிகாரியின் முக்கிய கடமையாகும். இதில் கவனக்குறைவு ஏதும் ஏற்படுமானால், அதுவும் வழக்கை நிரூபிப்பதில் சிக்கலை ஏற்படுத்தும். கைப்பற்றுதல் மகஜரும் இரு சாட்சிகள் முன்னிலையில் புலன் விசாரணை அதிகாரியால் சான்றுப் பொருள் கைப்பற்றப்படும் இடத்திலேயே தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்படுதல் வேண்டும். சாட்சிக் கையொப்பமிடுவோர் நீதிமன்றத்தில் சாட்சியத்தின் போதுகவனக்குறைவாக இருந்தாலும், வழக்கின் உறுதி குலைந்து விடும்.

.

**புகைப்படங்கள் :** தற்கொலை, கொலை சந்தேக மரணம் போன்ற குற்ற நிகழ்வுகளில் இறந்தவர் காணப்படும் நிலை சம்பவம் குறித்த மிக முக்கிய சான்றாகும். எனவே, இது போன்ற நிகழ்வுகளில் சம்பவ இடத்தைப் புகைப்படம் எடுத்தல் என்பது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் இறந்தவரின் உடலில் சம்பவத்தின் போது ஏற்பட்ட காயங்கள், அவற்றின் தன்மை குறித்து நீதிமன்றம் மதிப்பிட முடியும். இறந்தவரின் சடலக் கூறாய்வின்போது சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரி சடலத்தின் மீது காணப்படும் காயங்கள் மற்றும் அவற்றின் தன்மை குறித்து தனது அறிக்கையில் குறிப்பிடுவார். எனவே, இத்தகைய புகைப்படங்களும் வழக்கில் சான்றாவணமாகக் கொள்ளப்படும்.

.

**பஞ்சநாமா :** அதேபோல, தற்கொலை, கொலை, சந்தேக மரணம் போன்ற நிகழ்வுகளில் சம்பந்தப்பட்ட நபர் இறந்ததற்கான காரணம் இதுதான் என்று கண்ணியமிக்க நபர்களிடம் பெறப்படும் கருத்து அடங்கிய விபரங்கள்தான், பஞ்சநாமா எனப்படுவதாகும். இது சம்பவ இடத்திலிருந்து சடலத்தை அகற்றுவதற்கு முன்பு புலன்விசாரணை அதிகாரி தயாரிக்க வேண்டிய மிக முக்கியமான ஆவணமாகும். இந்த ஆவணதில் மேற்கூறிய 5 நபர்களும் கையொப்பமிட வேண்டும். அவர்களின் சாட்சியத்தையும் நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும்.

.

**கைது மகஜர் :** குற்ற சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்படும் நபரை சம்பவ இடத்திலோ, அல்லது வேறு எங்குமோ காவலுக்குட்படுத்தும் போது புலன் விசாரணை அதிகாரி தயாரிக்க வேண்டிய மற்றுமொரு ஆவணம் கைது மகஜராகும். இதுவும் இரு சாட்சிகள் முன்னிலையில் தயாரிக்கப்பட வேண்டும். கைது செய்யப்படும் நாள், நேரம், இடம், கைது செய்யப்படுபவரின் அடையாளம், தொடர்புடைய வழக்கு / குற்ற எண் போன்ற விபரங்கள் இதில் கண்டிருக்க

வேண்டும். மகஜரில் குறிப்பிட்டுள்ள நாள், நேரம், இடம் போன்றவை தவறானவை என குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு நிரூபித்தால், மொத்த வழக்கையே அது பாதிக்கும்.

.

**ஒப்புதல் வாக்குமூலம் :** குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் நபர் எவ்விதத் தூண்டுதலும், அச்சுறுத்தலுமின்றி தானாகவே முன் வைத்த குற்றத்தை தான் புரிந்ததாக ஒப்புக் கொண்டு வழங்கும் வாக்குமூலமே ஒப்புதல் வாக்குமூலம். காவல் துறையினரிடம் வழங்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை இந்திய சாட்சியம் சட்டம் சான்றுப் பொருட்கள் கைப்பற்றிய பொருண்மை குறித்த விஷயங்கள் தவிர ஏற்பதில்லை. ஒப்புதல் வாக்குமூலம் நீதித்துறை நடவர் முன்னிலையில் பெறப்பட்டால் மட்டுமே ஏற்கத்தக்கதாகிறது.

.

**சாட்சிகளின் வாக்குமூலங்கள் :** ஒரு குற்ற நிகழ்வின் கண்ணுற்ற சாட்சியங்களையும் மற்றவர்களையும் புலன் விசாரணை அதிகாரி விசாரித்து பெறும் வாக்குமூலங்களே இவை. இத்தகைய வாக்குமூலங்கள் பெறப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட நீதித்துறை நடுவருக்கு அனுப்பப்படவேண்டும். இதன் மூலம் வாக்கு மூலங்களில் இடைச் செருகல்கள், அடித்தல் திருத்தங்கள் போன்றவை மேற்கொள்ளப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு எனினும், புலன் விசாரணை அதிகாரி பெரும்பாலான வழக்குகளில் இதை கடைப்பிடிப்பதில்லை. இதனால் பல வழக்குகள் வலுவிழந்து குற்றமிழைத்தவர்கள் விடுவிக்கப்பட்ட நேர்வுகளும் பல உண்டு. சாட்சிகளின் வாக்குமூலம் நீதிமன்றத்தில் கூறப்படும்போது தான் அது சாட்சியம் என்ற தகுதியைப் பெறுகிறது. அதனடிப்படையில்தான் வழக்கு தீர்மானிக்கப்படும்.

.

இவ்வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய புலன்விசாரணை முறைப்படி நடைபெறாதபோது, அந்நிலை குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குச் சாதகமாக அமைகிறது. சாதாரண குற்றவியல் வழக்குகளைவிட வன்கொடுமை வழக்குகளில் இப்புலன்விசாரணை முறையாக மேற்கொள்ளப்படவில்லை எனில், அது வன்கொடுமையாளர்களுக்குச் சாதகமாக முடிவதுடன் தொடர் வன்கொடுமைகள் புரிய ஊக்குவிப்பதாகவும் அமைகிறது. எனவே, வன்கொடுமை வழக்குகளில் புலன்விசாரணை அதிகாரி செய்யக்கூடிய குளறுபடிகள், அவற்றைக் களையும் முறைகள் ஆகியவற்றைப்பார்ப்போம்.

.

-காயங்கள் தொடரும்

-சு. சத்தியச்சந்திரன்

(advsschandran@gmail.com)

# 12. ``மரபணு மாற்று வேளாண்மையும், இந்திய சட்டங்களும்"

## - கருத்தரங்கம் : ஊடகங்களின் பார்வையில்…

MONDAY, JUNE 16, 2008

சன் நியூஸ் தொலைக்காட்சியில் வந்த செய்தி:

https://youtu.be/1FsGkhduevc

**மரபணு மாற்று விவசாயம்: இயற்கைக்கு விரோதமான போக்கு நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லதல்ல - ஐகோர்ட்டு நீதிபதி வி.ராமசுப்பிரமணியன் பேச்சு**

.

சென்னை, ஜூன். 16.

மரபணு மாற்று விவசாயம், இயற்கைக்கு விரோதமாக செயல்பட்டால் நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லதல்ல என்று சென்னை ஐகோர்ட்டு நீதிபதி வி.ராமசுப்பிரமணியன் பேசினார்.




…

மனித உரிமை மற்றும் சுற்றுச்சூழல் நீதிக்கான வக்கீல்கள் மையம் சார்பில் 'மரபணு மாற்று வேளாண்மையும், இந்திய சட்டங்களும்' என்ற தலைப்பில் சென்னையில் நேற்று கருத்தரங்கம் நடந்தது. இதில், சென்னை ஐகோர்ட்டு நீதிபதி வி.ராமசுப்பிரமணியன் சிறப்பு

விருந்தினராக கலந்து கொண்டு தொடக்க உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:.

**உணவே மருந்து**

.

உணவே மருந்து, மருந்தே உணவு என்பதே இந்தியர்களின் வாழ்க்கை முறையாக இருந்தது. உணவால் உடல் மட்டுமில்லாமல் உள்ளம், எண்ணம், ஆன்மா ஆகியவையும் உருவாகிறது என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். ஒருவர், உணவு கொடுக்கும்போது அவரது குணம் சாப்பிடுபவருக்கும் வந்துவிடும் என்றும் நம்பப்படுகிறது. அந்தக் காலத்தில் உணவுக்கும், மனித உறவுகளுக்கும் அப்படியொரு முக்கியத்துவம் இருந்தது.

.

“மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்-ஊறுபாடு இல்லை உயிர்க்கு’’ என்ற திருக்குறளில், உடம்போடு மாறுபடுதல் இல்லாத உணவினை அளவோடு உண்பாராயின், அவரது உயிருக்கு நோயினால் துன்பம் உண்டாகாது என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். இந்த திருக்குறளும் தற்போதைய சூழ்நிலைக்கும் பொருந்துவதாக உள்ளது. மரபணு மாற்று வேளாண்மையால் ஏற்படும் பாதிப்பையும் எடுத்துரைப்பது போல இந்த திருக்குறள் அமைந்துள்ளது.

.

**நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லதல்ல**

.

ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகிய ஐம்பூதங்களை அடிப்படையாகக் கொண்டே எல்லா விஞ்ஞானமும் உள்ளது. மனித உடலில் இந்த ஐம்பூதங்களும் உள்ளன. தசை, நரம்பு நிலமாகவும், பசி நெருப்பாகவும் இருக்கிறது. உடலில் நீர் ஓடுகிறது. மனிதன் இறக்கும்போது நிலத்தில் புதைக்கின்றனர். எரித்து சாம்பலை கரைக்க வேண்டுமானால் அதற்கு நெருப்பும், நீரும் தேவைப்படுகிறது. எல்லாமே மறுசுழற்சி முறையில்தான் அமைந்துள்ளன. எனவே, மரபணு மாற்று விவசாயம், இயற்கைக்கு விரோதமாகப் போனால் அது நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லதல்ல.

.

மரபணு மாற்று விதை வெளிநாட்டில் இருந்து வர வேண்டுமானால் ஜெனடிக் என்ஜினீயரிங் அப்ரூவல் கமிட்டியிடம் ஒப்புதல் பெற வேண்டும் என்ற விதிமுறைகளும் உள்ளன. மரபணு மாற்றுப் பயிர்களால் மக்களுக்கும், உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

.

இவ்வாறு நீதிபதி வி.ராமசுப்பிரமணியன் கூறினார்.

.

**தமிழ்நாடு இயற்கை விவசாயிகம் இயக்கத்தின் தலைவர் கே.நம்மாழ்வார் பேசியதாவது:.**

**உணவுத் தட்டுப்பாடு**

.

உலகம் முழுவதும் உணவுத் தட்டுப்பாடு உள்ளது. 300 கோடி பேருக்கு உணவுக்கு உத்தரவாதம் இல்லை. 85 கோடி பேர் பட்டினி கிடக்கின்றனர். 33 நாடுகளில் உணவுக்காக கலவரம் நடக்கிறது. ரேஷன் கடைகளுக்கு செல்லும் வாகனங்களை வழிமறித்து திருடும் போக்கு உள்ளது. சத்துக் குறைவான உணவு சாப்பிடுவதால் தினமும் 18 ஆயிரம் குழந்தைகள் இறக்கின்றனர். தற்போதைய உணவு உற்பத்தியைவிட 50 சதவீதம் கூடுதலாக உற்பத்தி செய்தால்தான் 2030-ம் ஆண்டு உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

.

நம் நாட்டில், 1980-ம் ஆண்டு ஒரு ஏக்கருக்கு 5 டன் (5 ஆயிரம் கிலோ) நெல் உற்பத்தி செய்தனர். தற்போது ஒரு ஏக்கருக்கு 2 டன்னுக்கும் குறைவாக (800 கிலோ) உற்பத்தி செய்யப்படுகிறது. நம்நாட்டில் இருந்த 1 லட்சத்து 40 ஆயிரம் நெல் ரகங்களும் காணாமல் போய்விட்டன. உணவுப் பழக்க மாற்றத்தால் 40 சதவீதம் பேருக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளது. மரபணு மாற்று பயிருக்காக மருந்து தெளிப்பதால் புழு, பூச்சிகளை தின்னும் 200 வகையான பறவைகளும் வருவதில்லை.

.

**சமுதாய விவாதம்**

எனவே, மரபணு மாற்றம் என்ற பெயரில் உணவை நஞ்சாக்கும் போக்கை தடுத்தாக வேண்டும். இதற்காக நாடு முழுவதும் கோர்ட்டுகளில் வழக்கு தொடர வேண்டும். அறிவியலில் எத்தகைய கண்டுபிடிப்பானாலும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பாக அதனை சமுதாயத்தின் விவாதத்திற்கு உட்படுத்த வேண்டும்.

.

இவ்வாறு இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார்.

.

இந்த கருத்தரங்கில் பூவலகின் நண்பர்கம் அமைப்பைச் சேர்ந்த டாக்டர் கு.சிவராமன், டெக்கான் மேம்பாட்டு சங்க பொதுச் செயலாளர் பி.வி.சதீஷ், கிரேன் அமைப்பின் மண்டல திட்ட அதிகாரி ஷாலினி புட்டானி, வக்கீல் எம்.வெற்றிச்செல்வன் ஆகியோர் பேசினர். முன்னதாக, சென்னை ஐகோர்ட்டு வக்கீல்கள் சங்க செயலாளர் ஜி.மோகனகிருஷ்ணன் வரவேற்றார். மனித உரிமை மற்றும் சுற்றுச்சூழல் நீதிக்கான வக்கீல்கள் மையத்தின் பிரதிநிதி வக்கீல் பி.சுந்தர்ராஜன் நன்றி கூறினார்.

.

**நன்றி: தினத்தந்தி**

.

**மரபணு மாற்றத்துக்கு எதிர்ப்பு: இயற்கைக்கு மாறாக போவது நல்லதல்ல**

.

சென்னை, ஜூன் 16: இயற்கைக்கு மாறாக போவது நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லதல்ல என்று மரபணு மாற்றத்திற்கு எதிரான கருத்தரங்கில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ராமசுப்பிரமணியன் பேசினார்.




...

மனித உரிமை மற்றும் சுற்றுச்சூழல் நீதிக்கான வழக்கறிஞர்கள் மையம் சார்பில் சென்னையில் நேற்று ”மரபணு மாற்று வேளாண்மையும், இந்தியச் சட்டங்களும்: என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது. சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் மோகன கிருஷ்ணன் வரவேற்றார். டெக்கான் டெவலப்மெண்ட் சொசைட்டி செயலாளர் சத்தீஷ், வெற்றிச்செல்வன், க்ரெய்ன் பிராந்திய திட்ட அலுவலர் ஷாலினி புட்டானி ஆகியோர் பேசினர்.

.

விழாவில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வி.ராமசுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். அவர் பேசியதாவது:

பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உருவானவன் மனிதன். இறுதியில் பஞ்சபூதத்திடமே சென்று சேர்கிறோம். இதற்கு எதிராக இருப்பதுதான் மரபணு மாற்றம். இயற்கைக்கு மாறாக போவது நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லது இல்லை. உலகநாடுகள் மாநாட்டுத் தீர்மானத்தின்படி, எந்தவித அறிவியல் கண்டுபிடிப்பும் பாதிப்பை ஏற்படுத்தாது என்று உறுதிசெய்யப்படும் வரை அனுமதிக்கக் கூடாது. இவ்வாறு நீதிபதி ராமசுப்பிரமணியன் பேசினார்.

.

தமிழக இயற்கை உழவர் இயக்கத் தலைவர் நம்மாழ்வார் பேசியது:

உலகில் உணவுத் தட்டுப்பாடு மிகப்பெரிய பிரச்னையாக உள்ளது. 88 கோடி பேர் பட்டினியால் வாடுகின்றனர். இந்த எண்ணிக்கை மேலும் 10 கோடியாக உயரும் அபாயம் உள்ளது. உணவு உற்பத்தியை மேலும் 50 சதவீதம் உயர்த்தினால் மட்டுமே 2030ல் உலகின் உணவுப் பொருள் தேவையை பூர்த்தி செய்ய முடியும். பசுமைப் புரட்சி என்ற பெயரால் மேலைநாட்டு தொழில்நுட்பம் இந்தியாவில் புகுந்ததால் இந்தியாவில் விவசாயம் பாழ்பட்டுள்ளது. 1980ல் ஒரு ஏக்கரில் 5 டன் உற்பத்தி இருந்தது. ஆனால் அது தற்போது 800 கிலோவாக

குறைந்துள்ளது. உரமும், பூச்சிக் கொல்லி மருந்தும் நம் உடலை நஞ்சாக மாற்றிவருகின்றன.

.

எந்த அறிவியல் கண்டுபிடிப்பாக இருந்தாலும் அதை சமுதாயத்தில் விவாதத்திற்கு உட்படுத்த வேண்டும். மரபணு மாற்றத்தால் புழு, பூச்சிகளை தின்னும் 200 வகையான பறவைகளை இழந்துள்ளோம். நிலம், விவசாயி, மக்கள் என அனைத்துத் தரப்பையும் பாதிக்கும் மரபணு மாற்றத்தால் கிடைக்கும் எதையும் ஏற்கக் கூடாது. இவ்வாறு நம்மாழ்வார் பேசினார்.

.

மனித உரிமை சுற்றுச்சூழல் நீதிக்கான வக்கீல்கள் சங்கத்தைச் சேர்ந்த பி. சுந்தரராஜன் நன்றி கூறினார்.

.

**நன்றி: தினகரன்**

**”கம்பெனி’ ஆதிக்கம் ஒழியவில்லை: உயர் நீதிமன்ற நீதிபதி**

.

சென்னை, ஜூன் 15 : இந்தியாவில் இன்னும் கம்பெனி ஆதிக்கம் ஒழியவில்லை. சுதந்திரத்துக்கு முன் கிழக்கிந்திய கம்பெனி ஆதிக்கம் இருந்தது. சுதந்திரத்துக்குப் பின் மரபணு மாற்று தொழில்நுட்பக் கம்பெனிகள் ஆதிக்கம் உள்ளது. இது நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லதல்ல என உயர் நீதிமன்ற நீதிபதி வி.ராமசுப்பிரமணியன் கூறினார்.



…

மனித உரிமை சுற்றுச்சூழல் நீதிக்கான வழக்கறிஞர்கள் மையம் சார்பில் சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற “மரபணு மாற்று வேளாண்மையும், இந்தியச் சட்டங்களும்” கருத்தரங்கில் நீதிபதி ராமசுப்பிரமணியன் பேசியதாவது:

.

நகரில் உள்ளவர்களிடம் அரிசி என்றால், அது எந்த டிபார்ட்மென்டல் ஸ்டோரில் கிடைக்கிறது என்பார்கள். என் குழந்தைகளிடம் நெல் எங்கு விளைகிறது என்றால், முருகன் டிபார்ட்மென்டல் ஸ்டோரில் என்கிறார்கள். அந்த அளவுக்கு உணவு முறைகள் மாறிவிட்டன.

.

இந்தியர்களின் வாழ்க்கை முறை “உணவே மருந்து, மருந்தே உணவு” என இருந்தது. உணவைக் கடவுளாக போற்றினார்கள். உடல் மட்டும் உணவால் அமைந்தது அல்ல. எண்ணங்களும் உணவால் உருவாகின்றன.

.

திருவள்ளுவர் உழவு பற்றி அதிகாரம் வகுத்தார். பயிருக்கு அதிகாரம் கொடுத்தார். ஆனால் உணவு என்பதற்கு அதிகாரம் கொடுக்கவில்லை. அதற்குப் பதிலாக மருந்து என அதிகாரம் கொடுத்தார்.

.

மரபணு மாற்றம் பற்றி இப்போது பேசுகிறோம். ஆனால் அன்றைக்கே வள்ளுவர் கூறிவிட்டார். மாறுபாடு இல்லாத உண்டி, ஊறுபாடு இல்லை உயிருக்கு என்றார். மாறுபாடு இல்லாத உண்டி என்றால் உடலுக்கு ஒத்துக்கொள்ளாத உணவு, மரபணு மாற்று இல்லாத உணவு எனப் பொருள்படும்.

.

உலகம் தோன்றியற்கு சுழற்சி முறைதான் அடிப்படை உண்மை. எந்தப் பொருளை எடுத்தாலும் அவை நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் போன்ற பஞ்ச பூதங்களுக்குள்தான் வருகிறது. இதில் நமது உடலுக்கும் தொடர்பு உள்ளது. பஞ்ச பூதங்கள் சேர்க்கையால் உருவான உடலை இறந்த பின்னர் நிலத்தில் புதைக்கிறோம் அல்லது நெருப்பில் எரித்து சாம்பலைத் தண்ணீரில் கரைக்கிறோம்.

.

இந்த சுழற்சி முறைக்கு எதிரானதுதான் மரபணு முறை. இதனுடைய போக்கு நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லதல்ல. மரபணு மாற்று முறையில் பன்னாட்டு கம்பெனிகளின் ஆதிக்கம் பற்றி குறிப்பிட்டார்கள். 1948க்கு முன் கிழக்கிந்திய கம்பெனி ஆதிக்கம் இருந்தது. இப்போது வேறு கம்பெனிகளின் ஆதிக்கம் வந்துள்ளது. கம்பெனி ஆதிக்கம் என்பது பழகிவிட்ட ஒன்றாகிவிட்டது என்றார் நீதிபதி ராமசுப்பிரமணியன்.

.

உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கச் செயலாளர் ஜி.மோகனகிருஷ்ணன், தமிழக இயற்கை உழவர் இயக்க தலைவர் கோ.நம்மாழ்வார், கு.சிவராமன், பி.பி.சதீஷ்வெற்றிச்செல்வன், ஷாலினி புட்டானி, பி.சுந்தர்ராஜன் உள்ளிட்டோர் பேசினர்.

.

**“மரபணு மாற்றம்: 200 வகை பறவை இனம் அழிவு”**

.

சென்னை, ஜூன் 15 : மரபணு மாற்ற முறையால் 200 வகையான பூச்சி தின்னும் பறவை

இனங்கள் அழிந்து விட்டன என தமிழக இயற்கை உழவர் இயக்கத் தலைவர் கோ.நம்மாழ்வார் கூறினார்.

சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடந்த கருத்தரங்கில் நம்மாழ்வார் பேசியதாவது: உலகம் முழுவதும் உணவுத் தட்டுப்பாடு பெரிய பிரச்னையாக உள்ளது. 300 கோடி பேருக்கு உண வுக்கு உத்தரவாதம் இல்லை. 88 கோடி பேர் பட்டினி கிடக்கிறார்கள். இந்த எண்ணிக்கை மேலும் 10 கோடி அதிகரிக்கும்.

33 நாடுகளில் உணவுக்காக கலவரம் நடக்கிறது. தற்போதைய உணவு உற்பத்தியில் மேலும் 50 சதவீதம் அதிகரித்தால்தான் 2030ல் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என ஆய்வு கூறுகிறது.

.

”பசுமைப் புரட்சி’ என்ற பெயரால் மேலை நாட்டுத் தொழில்நுட்பத்தை இந்தியாவில் புகுத்துவதால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நிலத்தின் வளம் கெட்டு விட்டது. 5 ஆயிரம் ஆண்டுகளாக இருந்த நில வளம் 60 ஆண்டுகளில் கெட்டு விட்டது.

.

அடி காட்டுக்கு, நடு மாட்டுக்கு, நுனி வீட்டுக்கு. இதுதான் வாழ்க்கை தத்துவமாக இருந்தது. நெல்லின் அடிப்பகுதியை நிலத்துக்கும், நடுப்பகுதியான வைக் கோல் மாட்டுக்கும், நெல்மணிகளை வீட்டுக்கும் கொண்டு சென்றோம். இதைப் பின்பற்ற தவறியதால் உற்பத்தி அளவு குறைந்து விட்டது. உணவுப் பழக்க வழக்க மாற்றத்தால் 40 சதவீதம் பேர் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

.

உரம் பூச்சிக்கொல்லி மருந்துகள் உணவை நஞ்சாக்கி வருகின்றன. சில கம்பெனிகளின் சுய லாபத்துக்காக உணவை நஞ்சாக்கும் போக்கைத் தடுக்க வேண்டும். இதற்கு நாடு முழுவதும் நீதிமன்றங்களில் வழக்கு தொடுக்க வேண்டும்.

.

மரபணு மாற்றத்தால் 200 வகையான பூச்சி தின்னும் பறவைகள் இனத்தை இழந்துள்ளோம். நிலம், விவசா யிகள், மக்கள் என அனைத்துத் தரப்பினரையும் பாதிக்கும் மரபணு மாற்றத்தின் மூலம் கிடைக்கும் எதையும் ஏற்கக் கூடாது என்றார் நம்மாழ்வார்.

.

**நன்றி: தினமணி**

### மரபணு மாற்று விவசாயம் நல்லதல்ல: நீதிபதி வி. ராமசுப்பிரமணியன் பேச்சு

.

சென்னை, ஜூன் 16

.

மரபணு மாற்று விவசாயம், இயற்கைக்கு விரோதமாக செயல்பட்டால் நாட்டுக்கும்,

வீட்டுக்கும் நல்லதல்ல என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வி. ராமசுப்பிரமணியன் பேசினார்.

.

மனித உரிமை மற்றும் சுற்றுச் சூழல் நீதிக்கான வழக்கறிஞர்கள் மையம் சார்பில் ‘மரபணு மாற்று வேளாண்மையும், இந்திய சட்டங்களும்’ என்ற தலைப்பில் சென்னையில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வி. ராமசுப்பிரமணியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தொடக்க உரையாற்றினார்.

.

அப்போது அவர் கூறியதாவது:

உணவே மருந்து, மருந்தே உணவு என்பதே இந்தியர்களின் வாழ்க்கை முறையாக இருந்தது. உணவால் உடல் மட்டுமில்லாமல் உள்ளம், எண்ணம், ஆன்மா ஆகியவையும் உருவாகிறது என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

.

உடம்போடு மாறுபடுதல் இல்லாத உணவினை அளவோடு உண்பாராயின்,அவரது உயிர்க்கு நோயினால் துன்பம் உண்டாகாது என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். இந்த திருக்குறள் தற்போதைய சூழ்நிலைக்கும் பொருந்துவதாக உள்ளது. மரபணு மாற்று வேளாண்மையால் ஏற்படும் பாதிப்பையும் எடுத்துரைப்பது போல் இந்த திருக்குறள் அமைந்துள்ளது.

.

மரபணு மாற்று விவசாயம், இயற்கைக்கு விரோதமாகப் போனால் அது நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லதல்ல.

.

மரபணு மாற்று விதை வெளிநாட்டில் இருந்து வர வேண்டுமானால் ஜெனடிக் என்ஜினீயரிங் அப்ரூவல் கமிட்டியிடம் ஒப்புதல் பெறவேண்டும் என்ற விதிமுறைகள் உள்ளன. மரபணு மாற்றுப் பயிர்களால் மக்களுக்கும், உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

.

இவ்வாறு நீதிபதி வி. ராமசுப்பிரமணியன் கூறினார்.

.

**தமிழ்நாடு இயற்கை விவசாயிகள் இயக்கத்தின் தலைவர் கே.நம்மாழ்வார் பேசியதாவது:**

.

உலகம் முழுவதும் உணவுத் தட்டுப்பாடு உள்ளது. 300 கோடி பேருக்கு உணவுக்கு உத்தரவாதம் இல்லை. 85 கோடி பேர் பட்டினி கிடக்கின்றனர். 33 நாடுகளில் உணவுக்காக கலவரம் நடக்கிறது. ரேசன் கடைகளுக்கு செல்லும் வாகனங்களை வழி மறித்து திருடும் போக்கு உள்ளது. சத்துக்குறைவான உணவு சாப்பிடுவதால் தினமும் 18 ஆயிரம் குழந்தைகள் இறக்கின்றனர். தற்போதைய உணவு உற்பத்தியைவிட 50 சதவீதம் கூடுதலாக உற்பத்தி செய்தால்தான் 2030ம் ஆண்டில் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

.

நம் நாட்டில் 1980ம் ஆண்டு ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் கிலோ நெல் உற்பத்தி செய்தனர். தற்போது ஒரு ஏக்கருக்கு 2 டன்னுக்கும் குறைவாக (800 கிலோ) உற்பத்தி செய்யப்படுகிறது. நம் நாட்டில் இருந்த 1 லட்சத்து 40 ஆயிரம் நெல் ரகங்கள் காணாமல் போய்விட்டன. உணவுப் பழக்க மாற்றத்தால் 40 சதவீதம் பேருக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளது. மரபணு மாற்றுப் பயிருக்காக மருந்து தெளிப்பதால் புழு, பூச்சிகளை தின்னும் 200 வகையான பறவைகள் வருவதில்லை.சமுதாய விவாதம்எனவே, மரபணு மாற்றம் என்ற பெயரில் உணவை நஞ்சாக்கும் போக்கை தடுத்தாக வேண்டும். இதற்காக நாடு முழுவதும் நீதிமன்றங்களில் வழக்கு தொடர வேண்டும். அறிவியலில் எத்தகைய கண்டுபிடிப்பானாலும் அதை நடை முறைப்படுத்துவதற்கு முன்பாக அதனை சமுதாயத்தின் விவாதத்திற்கு உட்படுத்த வேண்டும்.

.

இவ்வாறு இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார்.

.

**நன்றி: தீக்கதிர்**

“மரபணு மாற்று வேளாண்மையும், இந்தியச் சட்டங்களும் என்ற தலைப்பில் சென்னையில் கருத்தரங்கு நடந்தது. அதில் பேசுகிறார் இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார். அதை வீடியோவில் பதிவு செய்கிறார் ஒரு பெண்”

**நன்றி: தமிழ்முரசு**

இந்த கருத்தரங்கில் தமிழ் வலைபதிவர்கள் சார்பில் தோழி லிவிங்ஸ்மைல் வித்யா கலந்து கொண்டார். அவருக்கு எங்கள் நன்றி.

.

-மக்கள் சட்டம் குழு



...

# 13. ``மரபணு மாற்று வேளாண்மையும், இந்திய சட்டங்களும்"

## -கருத்தரங்கம்

THURSDAY, JUNE 12, 2008

நாம் உட்கொள்ளும் இயற்கையான உணவுகளில் இப்போது ஏற்படும் மாற்றங்கள் என்ன?

நாட்டுத்தக்காளி என்ற வகையே காணாமல்போய் பெங்களூர் தக்காளி என்ற பெயரில் “பளபளா” தக்காளி மட்டுமே சந்தையில் கிடைக்கிறது. இதில் என்ன பிரசினை?

நாட்டுவாழை, பூவன், ரஸ்தாளி, பச்சை வாழை, கற்பூரவள்ளி போன்ற பாரம்பரிய வாழை இனங்கள் குறைந்துபோய் பெங்களூர் வாழை என்ற பெயரில் “பளபளா” வாழை மட்டுமே கிடைக்கிறது. என்ன காரணம்? இந்த தக்காளியோ, வாழையோ தோல் கருப்பதும், அழுகுவதும் நம் கண்களில் படுவதில்லையே! என்ன மர்மம்?

ரிலையன்ஸ் பிரஷ், மோர், சுபிக்ஷா, நீல்கிரிஸ் போன்ற நவீன அங்காடிகளில் பார்வைக்கு கவர்ச்சியாக விற்பனை செய்யப்படும் காய்கனிகள் எங்கிருந்து வருகின்றன? அவை எவ்வாறு விளைவிக்கப்படுகின்றன?

பாட்டிலிலும், டப்பாவிலும் அடைக்கப்பட்டு விற்கப்படும் ஜாம் வகைகளும், பழரச பானங்களும் பாதுகாப்பானவைதானா?

பருத்தி, கத்தரிக்காய், காலிஃபிளவர், சோயா மொச்சை, கடுகு, கோதுமை, அரிசி என்று பல்வேறு உணவுப்பொருட்களிலும் Bt என்ற புதிய வகை அறிமுகமாவதாக செய்திகள் வருகின்றன. இது நல்லதா? இல்லையா?

இவை தாவரங்களில், அதை உட்கொள்ளும் விலங்குகளுக்கு, மனிதர்களுக்கு என்னவிதமான பாதிப்புகளை ஏற்படுத்தும்?

மனிதர்களும், விலங்குகளும் உட்கொள்ளும் உணவுகளில் இத்தகைய மரபணு மாற்றங்கள் செய்வதைப்பற்றி பன்னாட்டு மற்றும் இந்தியச் சட்டம் என்ன சொல்கிறது? அந்த சட்டங்களை இயற்றுவது யார்? இந்த சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நீதிமன்றங்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் எந்த அளவுக்கு பங்கு உள்ளது?

இந்த சட்டங்களை செயல்படுத்துவதும் அதை கண்காணிப்பதும் யார்? மரபணு மாற்றப்பட்ட உணவுப்பொருட்களை உட்கொள்வோருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் யார் பொறுப்பு? இழப்பீடுகளுக்கு வழி உண்டா?

இது போன்ற கேள்விகளுக்கு விடைகாண இதோ ஒரு வாய்ப்பு....

இடம்: YMCA அரங்கம், (உயர்நீதிமன்றம் எதிரில்) NSC போஸ் சாலை, சென்னை.




…

நாள்: 15-06-2008 ஞாயிறு காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை.

(இந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் சென்னை பதிவர் சந்திப்புக்கு செல்லலாம்)

சட்டம் குறித்த இந்த கருத்தரங்கம் வழக்கறிஞர்களுக்கு மட்டுமே அல்ல. சட்டம் குறித்தும், சமூகம் குறித்தும் ஆர்வம் கொண்ட அனைவரும் வரலாம்.

தமிழறிந்த பேச்சாளர்கள் அனைவரும் தமிழிலேயே பேசுவர்.

அனைவரும் வருக!

# 14. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் : சிக்கல்களும் தீர்வுகளும் - 6

MONDAY, JULY 28, 2008

வன்கொடுமைத் தடுப்புச்சட்ட வழக்குகளில் மிகவும் கொடூரமானதும் துணிகரமானதுமான வன்கொடுமை, மேலவளவு பஞ்சாயத்துத் தலைவர் முருகேசன் உட்பட ஆறு தலித்துகள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வாகும். 30.6.1997 அன்று நடைபெற்ற சம்பவம் தொடங்கி இன்றுவரை அவ்வழக்கு சந்தித்துள்ள / சந்தித்து வரும் திருப்பங்கள் திடுக்கிடச் செய்பவை. அவை குறித்து தனிப் புத்தகம் எழுதுமளவிற்கு தகவல் களஞ்சியம் கொண்டது அது. இவ்வழக்கில் குற்றவாளிகள் சார்ந்துள்ள ஆதிக்க சாதியினர், காவல் துறையின் பல்வேறு தகுதி நிலையிலான அதிகாரிகள், நீதித்துறையில் உள்ள பல்வேறு நீதிபதிகள், தலித் இயக்கங்கள் ஆகியோரின் பங்கேற்பு வன்கொடுமை வழக்குகளுக்கு என்னென்ன விதமான இடையூறுகள் வரக்கூடும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

.

மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்திலுள்ளது மேலவளவு ஊராட்சி மன்றம். 1996ஆம் ஆண்டிற்கு முன் இதன் தலைவர் பதவியை அங்குள்ள பெரும்பான்மை ஆதிக்க சமூகத்தினரான கள்ளரில் ஒரு பிரிவினரான அம்பலக்காரர்கள் வகித்து வந்துள்ளனர். இவ்வகையில் கடைசியாக மேலவளவு ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தவர் அழகர்சாமி. 1992ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தால் கொண்டு வரப்பட்ட 73ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி, அரசு நிர்வாகம் அடித்தட்டு மக்களைச் சென்றடைய பஞ்சாயத்துகள் அமைக்கப்பட்டு, அவற்றிற்கு அதிகாரப் பகிர்வு செய்யப்பட வேண்டுமெனக் கூறியது. அதனடிப்படையில் தமிழக அரசு 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டத்தை இயற்றியது. அப்போது பொதுத் தொகுதியாக இருந்த மேலவளவு ஊராட்சித் தலைவர் பதவி, 1996ஆம் ஆண்டு முதல் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான தனித்தொகுதிப் பதவியாக மாற்றம் செய்யப்பட்டது.

.

இதுநாள் வரை தங்களுக்கு கீழே இருந்த தலித்துகள் தங்களுக்கு மேலே வந்துவிடுவார்களோ என்று, ஒரு தலித்தை தலைவராக ஏற்றுக் கொள்ளாத மனநிலையிலிருந்த ஆதிக்க சாதியினர், இது குறித்து தங்கள் வெறுப்பை வெளிக்காட்டினர். இருப்பினும், தங்களுக்கு அரசியலமைப்புச் சட்டப்படி கிடைத்த புதிய உரிமையை கைக்கொள்ள தலித் மக்கள் ஆர்வம் காட்டினர். தி.மு.க.வைச் சேர்ந்த முருகேசனும் மற்றும்

சிலரும் 10.9.1996 அன்று வேட்புமனு தாக்கல் செய்தனர். ஆனால், ஆதிக்க சாதியினர் அவர்களை மிரட்டவே, அவர்கள் வேட்புமனுக்களை திரும்பப் பெற்றுக் கொண்டனர்.

.

மேலூர் வட்டாட்சியர் நடத்திய சமாதானக் கூட்டத்தில், ஆதிக்க சாதியினர் அரசு ஆணைக்குக் கட்டுப்படுவதாக உறுதி அளித்தனர். அச்சத்தால் தலித் மக்கள் தேர்தலில் பங்கேற்கவில்லை. எனவே, 9.10.1996 அன்று நடைபெறுவதாக அறிவித்திருந்த தேர்தல் நடத்தப்படவில்லை. மீண்டும் 28.12.96 அன்று நடைபெற்ற தேர்தலில் முருகேசன் உட்பட சிலர் போட்டியிட்டனர். தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது ஆதிக்க சாதியினர் வாக்குச்சாவடிக்குள் புகுந்து, மக்களைத் தாக்கிவிட்டு வாக்குப்பெட்டிகளை தூக்கிச் சென்று தேர்தலை தடுத்துவிட்டனர். காவல் துறையின் பலத்த காவலுடன் மீண்டும் 31.12.1996 அன்று தேர்தல் நடத்தப்பட்டது. ஆதிக்க சாதியினர் இத்தேர்தலைப் புறக்கணிக்க, தலித் மக்கள் மட்டுமே வாக்களித்து, இறுதியில் முருகேசன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

.

தேர்தலில் வெற்றிபெற்ற பிறகு ஆதிக்க சமூகத்தினர் முருகேசனுடன் தந்திரமாகப் பழகி, ஊராட்சி மன்றத்தின் ஒப்பந்தப் பணிகளைப் பெற்றுக் கொண்டனர். எனினும் ஊராட்சி மன்றத் தலைவர் நாற்காலியில் அமர்ந்து பணிபுரிய முடியாத அளவிற்கு முருகேசன் தடுக்கப்பட்டார். முதன்முறையாக 10.9.1996 அன்று முருகேசனும் மற்ற தலித் மக்களும் வேட்புமனு தாக்கல் செய்த அன்று, தங்கள் எதிர்ப்பையும் ஆதிக்கத்தையும் வெளிப்படுத்தும் விதமாக தலித் மக்களின் மூன்று குடிசைகளுக்கு தீ வைத்தனர் ஆதிக்க சாதியினர். முருகேசன் ஊராட்சி மன்றத் தலைவராக வந்தபிறகு தீ வைக்கப்பட்ட குடிசைகளின் உரிமையாளர்களுக்காக இழப்பீடு பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கத் தொடங்கினார்.

.

இது குறித்து நிவாரணம் கோரி 30.6.1997அன்று மனு அளிப்பதற்காக மாவட்ட ஆட்சியரை சந்திக்க, முருகேசன் பாதிக்கப்பட்டவர்களை மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். அன்று மாவட்ட ஆட்சியர் இல்லாததால் அவரது உதவியாளரைப் பார்த்தனர். அங்கு வந்திருந்த மேலவளவு மனோகரன் (செட்டியார் சமூகம்), இவர்கள் எந்தப் பேருந்தில் ஊர் திரும்புவார்கள் எனக் கேட்டு, கே.என்.ஆர். பேருந்தில் முருகேசன் உட்பட மற்றவர்களும் ஊர் திரும்ப உள்ளதைத் தெரிந்து கொண்டார். அவ்வாறே அந்தப் பேருந்தில் புறப்பட்டனர்.

.

மேலூர் வந்ததும் குற்றவாளிகள் சிலரும் தலித் சமூகத்தைச் சார்ந்த சிலரும் பேருந்தில் ஏறிக்கொண்டனர். வண்டி அக்ரகாரம் பழைய கள்ளுக்கடைமேடு என்ற இடத்தின் அருகே வந்ததும், பேருந்தில் வந்த துரைபாண்டி என்பவர், ஓட்டுநரை வண்டியை நிறுத்தும்படி கூச்சல் போட்டார். அதே சமயம், சென்னகரம்பட்டி ராமர் தலைமையில் சுமார் 30 பேர் கொண்ட கும்பல்

ஆயுதங்களுடன் சூழ்ந்து கொண்டது.

.

பேருந்தில் வந்த முருகேசன், ராஜா, செல்லதுரை, சேவகமூர்த்தி, மூக்கன் (ஊராட்சி மன்ற துணைத் தலைவர்) பூபதி ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர். முருகேசன் தலையை உடம்பில் இருந்து தனியாக வெட்டி எடுத்து, அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு கிணற்றில் போட்டனர். கொல்லப்பட்டவர்களில் முருகேசன் மற்றும் ராஜா இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள்.

.

25.9.97 அன்று வழக்குப் பதிவு செய்யப்பட்டு மா. சுப்பிரமணியன் என்ற துணைக் கண்காணிப்பாளர் புலன் விசாரணையை மேற்கொண்டார். அவருக்கு உதவியாக காவல்துறையின் குழுக்கள் செயல்பட்டன. 85ஆவது நாளில் 25.9.97 அன்று குற்றப்பத்திரிகை 41 பேர் மீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது (90 நாட்கள் முடிந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாதிருந்ததால், கைதானவர்களை பிணையில் தவிர்க்க முடியாமல் விடுவித்தாக வேண்டும் என்பது சட்டவிதி). குற்றம் சாட்டப்பட்டவர்களது பட்டியலில் 40 பேர் காட்டப்பட்டனர்.

.

1998 மார்ச் மாதத்தில் சென்னை உயர் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட நபர்களில் பெரும்பான்மையினருக்குப் பிணை வழங்கியது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் சிலருக்கு நிபந்தனையற்ற பிணை வழங்கப்பட்டது. இருப்பினும், பெரும்பாலான குற்றம் சாட்டப்பட்டவர்கள் மேலவளவிற்குத் திரும்பியதால், தலித் மக்களுக்கு சிக்கல் ஏற்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் செல்வாக்குள்ள முக்கியமான ஓரிருவர் சம்பவ சாட்சிகளான தலித் மக்கள் சிலரிடம் மறைமுக மிரட்டலில்ஈடுபட்டனர். பாதிக்கப்பட்ட தலித் மக்களிடையே பீதி ஏற்பட்டது. ஆனால், குற்றம் சாட்டப்பட்டவர்களின் செல்வாக்கு காரணமாக இது குறித்து அவர்களால் நேரடியாக ஒன்றும் செய்ய இயலவில்லை. முருகேசனின் தம்பி கருப்பையா இச்சூழ்நிலையை விளக்கி, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பிணையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கக்கோரி தமிழக முதலமைச்சருக்கு மனு அளித்தார். ஆனால், அதன் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

.

இத்தகவல்களைக் கேள்விப்பட்ட உயர் நீதிமன்ற வழக்குரைஞர்கள் பொ. ரத்தினமும், இக்கட்டுரையாளரும், மற்ற சக வழக்குரைஞர்களும் இச்சூழ்நிலை குறித்துப் பெரும் கவலையடைந்தனர். 1998 ஏப்ரல் மாத இறுதியில் சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக அப்போதிருந்த மன்மோகன் சிங் லிபரான் (பாபர் மசூதி இடிப்பு குறித்த விசாரணை ஆணையத்தின் நீதிபதியாக தற்பொழுது உள்ளார்) அவர்களை சந்தித்து நிலைமையை விளக்கி, இச்சூழலால் வழக்கில் சாட்சிகளாக உள்ள தலித் மக்களுக்கு

பாதுகாப்பான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டுமெனில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பிணையை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தி, 75 வழக்குரைஞர்கள் கையொப்பமிட்ட மனுவை உயர் நீதிமன்றத்தின் தன்னதிகாரப்படி நடவடிக்கை எடுக்க, இரு நீதிபதிகள் கொண்ட ஆயத்தின் விசாரணைக்கு அம்மனுவை அனுப்பி வைத்து உத்தரவிட்டார்.

.

ஆனால், இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஜெயராம் சவுத்தா மற்றும் பி. பக்தவச்சலு ஆகியோர், மனுதாரர்களான வழக்குரைஞர்கள் வழக்கில் தொடர்புடைய பாதிக்கப்பட்ட நபர்களோ, அரசோ அல்லர்; அவர்கள் வழக்கிற்கு மூன்றாம் தரப்பினர். எனவே, அவர்களின் கோரிக்கை மனுவை ஏற்று இவ்வகையில் உயர் நீதிமன்றத்தின் தன்னதிகாரத்தைப் பயன்படுத்த சட்டத்தில் இடமில்லை என்று அதிரடித் தீர்ப்பு வழங்கினர்.

.

இத்தீர்ப்பினை எதிர்த்து வழக்குரைஞர் பொ. ரத்தினம் (முதலாம் மனுதாரர்) உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். சென்னை உயர் நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பை ரத்து செய்த உச்ச நீதிமன்றம், பிணை ரத்து குறித்த குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவை ஆய்ந்து அளித்த தீர்ப்பு, மிகவும் முன்னோடித் தீர்ப்பாக இன்று வரை அறியப்படுகிறது. அதற்கு முன்னர் வழங்கப்பட்ட தீர்ப்புகள், “ஒரு குற்றம் சாட்டப்பட்டவரின் பிணை உத்தரவை ரத்து செய்யக்கோரும் மனுவை குற்றவியல் வழக்கைத் தொடுத்து நடத்தும் அரசோ அல்லது அவ்வழக்கில் குறிப்பாக பாதிக்கப்பட்ட நபரோ அல்லது அவரது உறவினரோதான் தாக்கல் செய்ய முடியும்” என்றிருந்த நிலையை மாற்றி, வழக்கில் நேரிடையாகத் தொடர்பற்ற ஆனால் அக்குறிப்பிட்ட வழக்கின் தன்மையில் உண்மையான, நேர்மையான அக்கறையுள்ள நபர்களும் பிணை ரத்து மனு தாக்கல் செய்யலாம் என்று உச்ச நீதிமன்றம் இத்தீர்ப்பில் (ரத்தினம்-எதிர்-அரசு (2000) 2SCC 391) சட்ட விளக்கமளித்தது.

.

இத்தீர்ப்பின் காரணமாக மேலவளவு படுகொலை வழக்கு, சட்டரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்ததால், இதற்குப் பின்னர் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது நீதிமன்ற வட்டாரத்தில் மிகவும் கவனத்துடன் அணுக வேண்டிய வழக்கு என்ற தனிக்கவனம் பெற்றது. இதன் தொடர்ச்சியாக, இன்னொரு செய்தியையும் இங்கு பதிவு செய்வது, வன்கொடுமைத் தடுப்புச் சட்ட வழக்குகளில் நீதிமன்றத்தை எவ்விதம் அணுகலாம் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமையும்.

.

மேலவளவு வழக்கின் விசாரணை மதுரையிலேயே நடத்தப்பட்டால், மதுரை மற்றும் பிற தென்மாவட்டங்களில் உள்ள குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஆதிக்க சாதியின மக்களே பெரும்பான்மையினராக இருப்பதால், பாதிக்கப்பட்ட தலித் மக்கள் வழக்கு

விசாரணையின்போது சாட்சியளிக்க பல்வேறு விதமான இடையூறுகள், அச்சுறுத்தல்கள் போன்றவை நிகழும் வாய்ப்பு அதிகம் உள்ளது. எனவே, ஏற்கனவே பாதிக்கப்பட்ட தரப்பினரை அச்சுறுத்துதல், சாட்சிகளை விலை பேசுதல் போன்றவை நிகழ்ந்ததாலும் வழக்கு விசாரணையை வேறு வட மாவட்டத்திற்கு மாற்றக்கோரி, பாதிக்கப்பட்டோர் சார்பில் மனு செய்யப்பட்டது. இம்மனு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்த போதுதான் உச்ச நீதிமன்றத்தின் மேற்கூறிய தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன் பின்னரே உயர் நீதிமன்றம் பாதிக்கப்பட்டோர் தரப்பு கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்தது. எனவே, வழக்கு விசாரணை மதுரையிலிருந்து சேலத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டது.

.

வழக்கு விசாரணையை சேலத்தில் நடத்த மூத்த குற்றவியல் வழக்குரைஞர் திருமலைராஜன் அவர்களை அரசுத் தரப்பு சிறப்பு வழக்குரைஞரான நியமனம் செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்டோர் தரப்பில் அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. அதன் மீது அரசு உத்ததரவு ஏதும் பிறப்பிக்காததால், உச்ச நீதிமன்றத்தில் இது குறித்து ஒரு மனுவம் தாக்கல்செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேலவளவு வழக்கை நடத்த அரசுத் தரப்பு சிறப்பு வழக்குரைஞராக நியமிக்கப்பட்டார். அவருடன் மற்றொரு மூத்த குற்றவியல் வழக்குரைஞரான ப.பா. மோகன் அவர்களும் வழக்கு விசாரணையை திறமிக்க வகையில் நடத்தினார். பல்வேறு இடையூறுகளைக் கடந்து நடந்த வழக்கு விசாரணையின் முடிவில் 26.7.2001 அன்று வழங்கப்பட்ட விசாரணை நீதிமன்றத் தீர்ப்பில் குற்றம் சாட்டப்பட்ட 40 நபர்களில் 17 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது; 23 நபர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

.

தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள், சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். மேல்முறையீடு நிலுவையிலிருக்கும் காலத்திற்கு தங்களுக்கு பிணை வழங்க வேண்டும் என்று அவர்கள் தாக்கல் செய்த பிணை மனுக்கள், முதல் சுற்றில் பாதிக்கப்பட்டோர் தரப்பில் செய்யப்பட்ட எதிர் மனு காரணமாகத் தள்ளுபடி செய்யப்பட்டன. இருப்பினும், பின்னர் அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டது. மேலவளவு போன்ற கொடூரமான சாதி வெறி காரணமாக நடந்த கொலை வழக்கில், உயர் நீதிமன்றம் வழக்கமான கொலை வழக்குகளில் பிணை வழங்குவது போல் வழங்கியது, மனித உரிமை மற்றும் தலித் ஆர்வலர்களிடையே பெரும் அதிர்ச்சி அலைகளை எழுப்பியது.

-காயங்கள் தொடரும்

-சு. சத்தியச்சந்திரன்

(advsschandran@gmail.com)

# 15. தகவல் உரிமைச் சட்டத்தை கேலிக்கூத்தாக்கும் மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி!

FRIDAY, JULY 18, 2008

மெட்ராஸ் மருத்துவக் கல்லூரிதான் தமிழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளிலேயே முதன்மையானது. இங்கு மருத்துவத்தில் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட கல்வி கற்பிக்கப்படுகிறது.



...

இந்த மருத்துவக்கல்லூரியின் செயல்பாடுகளில் உள்ள குறைபாடுகள் குறித்து நமக்கு புகார்கள் வரவே, தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களை கேட்பதற்காக மருத்துவக்கல்லூரியின் இணையதளத்தை தேடினோம்.

அவ்வாறு இணையதளம் எதுவும் நமக்கு புலப்படாத நிலையில் நமது முதல் கேள்வியே மெட்ராஸ் மருத்துவக்கல்லூரியின் இணையதளம் குறித்ததாக அமைந்தது. கேள்விகள் 25-06-2008 அன்று அனுப்பப்பட்டது. அதற்கான பதில் 11-07-2008 அன்று கையெழுத்தாகி 18-07-2008 அன்று நம்மை வந்தடைந்தது. இந்த பதில்கள் அடங்கிய கடிதத்தில் மெட்ராஸ் மருத்துவக்கல்லூரியின் துணை முதல்வரும், பொது தகவல் அதிகாரியுமான Dr. S.கீதாலட்சுமி , MD அவர்கள் கையொப்பம் இட்டுள்ளார்.

இனி கேள்வியும், பதில்களும்.

**கேள்வி 1. தங்களது கல்வி நிறுவனத்திற்கு இணையதளம் ஏதேனும் உள்ளதா? இருப்பின் அதன் பெயரை தெரிவிக்கவும். இணையதளம் இல்லையென்றால் அவ்வாறு இணையதளத்தை அண்மையில் ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா?**

பதில் : இணையதளம் உள்ளது! http://www.mmc.org/

**(தவறான தகவல்! இந்த இணைய தளம் இங்கிலாந்திலுள்ள Maine Medical Centre என்ற அமைப்பினுடையது)**

**கேள்வி 2. தங்கள் துறைக்கு பொதுத்தகவல் அதிகாரி மற்றும் மேல்முறையீட்டு அதிகாரிகள் என்று யாரேனும் இருந்தால் அவர்கள் குறித்த விவரங்கள் அந்த இணையதளத்தில் இடம்பெறச் செய்வீர்களா?**

பதில் : இணையதளம் இல்லாததால் இந்த பிரசினை எழவில்லை!

**(முதல் கேள்வியில் இணையதளத்தின் பெயரை எவ்வாறு கொடுத்தார்கள்?**
**அடுத்த கேள்வியிலேயே இணையதளம் இல்லை என்பதை எவ்வாறு உணர்ந்தார்கள்? தலை சுற்றுகிறது!)**

**கேள்வி 3. உங்கள் கல்லூரியில் பட்டமேற் படிப்பில் எத்தனைப்பிரிவுகள் பயிற்றுவிக்கப்படுகின்றன? எந்தெந்த பிரிவுகளில் அவை நடத்தப்படுகின்றன? அவை அனைத்தும் இந்திய மருத்தவுக் கவுன்சில் அங்கீகாரம் பெற்றுள்ளனவா?**

பதில் : பட்டமேற்படிப்பு கல்விகள் இந்திய மருத்துவ கவுன்சில் அங்கீகாரம் பெற்றவை – 34 எண்ணிக்கை. (M.D)

**( M.S. என்ற பெயரில் நடத்தப்படும் படிப்புகள் குறித்து துணை முதல்வருக்கே தெரியாது போலும். அவை எந்தெந்த துறைகளில் நடத்தப்படுகிறது என்ற தகவலை எங்கே, யாரிடம் கேட்க வேண்டும் என்பதும் தெரியவில்லை)**

**கேள்வி 4 . பட்டமேற்படிப்பு பிரிவில் எத்தனை ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்? அவர்களது பெயர், கல்வித்தகுதி, பதவி ஆகியவற்றை வழங்கவும். இவற்றில் எத்தனை நிரப்பப்படாமல் உள்ளன? அந்த காலியிடங்களை நிரப்ப என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன? துறைவாரியான தகவல்களை தரவும்.**

பதில் : 586. பணிமர்த்தும் அதிகாரம் தமிழக அரசுக்கும், கட்டுப்படுத்தும் அதிகாரம் மருத்துவ கல்வித்துறை இயக்குனரிடமும் உள்ளது.

**(கேள்வியை முழுமையாக புரிந்து கொண்டு பதில் சொல்லும் அளவுக்கு துணை முதல்வருக்கு கல்வி அறிவு இல்லை போலுள்ளது!)**

**கேள்வி 5. பட்டமேற்படிப்பு பிரிவில் எத்தனை மாணவர்கள் படிக்கின்றனர்? துறை வாரியான தகவல்களை தரவும்.**

பதில் : 439 தேர்வுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

**(துறை வாரியாக கணக்கெடுக்கும் அளவிற்கு ... என்னத்தை சொல்றது..போங்க!)**

**கேள்வி 6. மருத்துவ பட்ட மேற்படிப்பு எவ்வாறு பயிற்றுவிக்கப்படுகிறது? வகுப்பறை கல்வி, செய்முறை கல்வி, மருத்துவமனை கல்வி வழங்கப்படுவதற்கான கால அட்டவணையை வழங்கவும்.**

பதில் : தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழக விதிமுறைகளின்படி நடத்தப்படுகிறது.

**(அந்த விதியைதாங்க கேட்டோம். அதைச் சொல்லுங்க!)**

**கேள்வி 7 முதல் 18 வரை உள்ள கேள்விகளை முதல்வர், அரசு பொது மருத்துவமனை, சென்னை-3 என்ற முகவரிக்கு அனுப்பவும் என்று பதில் அளிக்கப்பட்டுள்ளது.**

**(தகவல் உரிமைச் சட்டம், பிரிவு 6(3)ன் படி கோரப்படும் தகவல் வேறொரு அதிகார அமைப்பிடம் இருக்கும்போது தகவல் கோரும் விண்ணப்பத்தை , அது எந்த துறைக்கு செல்லவேண்டுமோ அந்தத்துறைக்கு 5 நாட்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். மேலும் இந்த தகவலை மனுதாரருக்கும் தெரிவிக்க வேண்டும். ஆனால் இந்த சட்டவிதிகள் பின்பற்றப் படாததோடு, மனுவைப் பெற்று சுமார் 15 நாட்களுக்கு பிறகு பதில் தயாரிக்கப்பட்டு ,கையெழுத்தாகி அதன்பிறகு ஒரு வாரம் கழித்தே அந்த பதில் நம்மை வந்தடைந்தது)**

மேற்கண்ட விவகாரங்களை விளக்குமாறு மீண்டும் மேல்முறையீட்டு மனு அனுப்பப் பட்டுள்ளது. அதற்கான பதில்களும், தொடர் நடவடிக்கைகளும் இங்கு வெளியிடப்படும்.

-மக்கள் சட்டம் குழு

# 16. பளபளா சூப்பர் மார்க்கெட்களும், பல்லிளிக்கும் தொழிலாளர் - நுகர்வோர் நலன்களும்...!

FRIDAY, JULY 11, 2008

உலகமயமாதல் கொள்கை இந்தியாவிற்கு கொண்டுவந்த புதிய அம்சங்களுள் முக்கியமான ஒன்று நவீனமயமாக்கப்பட்ட சில்லறை விற்பனை நிலையங்கள்! பேருந்து நிலையங்களுக்கு அருகிலும், மற்ற முக்கிய பகுதிகளிலும் விவசாயிகளோ, சிறு வியாபாரிகளோ செய்து வந்த சில்லறை விற்பனையை இன்று ஸ்பென்சர்ஸ் டெய்லி, ரிலையன்ஸ் ப்ரெஷ், மோர் போன்ற வர்த்தக கழகங்கள் கையில் எடுத்து விட்டன.



...

இந்த மாற்றத்தில் நேரடியாக சில்லறை விற்பனை செய்து வந்த விவசாயிகளும், சிறு வியாபாரிகளும் அவர்கள் வாழ்ந்ததற்கான அறிகுறியே இல்லாமல் அழிந்து வருகின்றனர்.

குளிர்பதனம் செய்யப்பட்ட விற்பனை நிலையங்களில் சீருடை அணிந்த பணியாளர்கள் அரைகுறை ஆங்கிலத்தில் பேசி, கணிணியில் பில் வழங்கி, பளபளவென்று மாசுபடாமல் இருக்கும் காய்கனிகளை வாங்கிச்செல்வது நம்மில் பலருக்கும் சுக அனுபவமாக இருக்கிறது.

இந்த மாற்றத்தில் காணாமல் போய்விட்ட மூதாட்டிகளும், வயசாளிகளும் எங்கு போனார்கள் என்ற கேள்வி நம்முள் எழுவதில்லை.



...



...

இதுபோன்ற நவீனமயமான சில்லறை விற்பனை நிலையங்களில் உள்ள காய்கனிகள் ஃப்ரெஷ்ஷாக இருப்பதாக தோன்றினாலும் அங்கு பணியாற்றும் விற்பனையாளர்கள் மிகவும் புழுக்கத்துடனே இருப்பதை நம்மில் பலரும் உணருவதில்லை.




…

ஒரு உதாரணத்திற்காக மோர் ஃபார் யூ (MORE for you) என்ற பெயரில் சில்லறை விற்பனை நிலையங்களை நடத்தும் ஆதித்ய பிர்லா குழும (ADITYA BIRLA GROUP) த்தை பார்ப்போம்.



…

சுமார் 30 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள, பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றான இந்த குழுமத்தில் சுமார் ஒரு லட்சம் பணியாளர்கள் பணி புரிவதாக அந்த நிறுவனத்தின் இணையதளம் பெருமிதம் கொள்கிறது. மேலும் பணியாளர்களை நல்ல முறையில் நிர்வகிப்பதில் ஆசியாவிலேயே முதல் 20 நிறுவனங்களில் ஒன்றாக தேர்வு

செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த இணையதளம் கூறுகிறது.

இந்த நிறுவனத்தின் சில்லறை விற்பனை பிரிவான "மோர்" நவீன விற்பனை நிலையங்களில் அவை இருக்கும் இடத்தைப் பொறுத்து நாளொன்றுக்கு சுமார் 20 ஆயிரம் முதல் 5 லட்ச ரூபாய் வரை விற்பனை நடைபெறுகிறது. அதற்கேற்ப சுமார் 15 லட்சம் முதல் 75 லட்சம் ரூபாய் வரை மதிப்புள்ள சரக்குகள் இருப்பு வைக்கப்படுகின்றன.



...

இங்கு பணியாற்றும் அடிப்படை பணியாளர்கள், வாடிக்கையாளர் சேவை உதவியாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களுக்கு சுமாராக 2,500 முதல் 3,500 ரூபாய் வரையே மாத ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த விற்பனை நிலையங்களோ காலை 7 மணி முதல் இரவு 10 மணிவரை இடைவெளியின்றி இயங்குகின்றன. பணியாளர்கள் ஷிப்ட் முறைப்படி பணியாற்றுவதாக தொழிலாளர் நலத்துறைக்கு கணக்கு காட்டப்பட்டாலும் உண்மை அதுவல்ல.

பல சிறிய கிளைகளில் மேற்பார்வையாளர், மேலாளர் போன்ற பணியிடங்கள் நிரப்பப்படுவதில்லை.

இந்த விற்பனை நிலையங்களுக்கு தேவையான விற்பனைப் பொருட்கள் அந்தந்த நகரின் மைய கிட்டங்கி(Warehouse)யிலிருந்து, தேவைக்கேற்ப அனுப்பி வைக்கப்படுகிறது.



...

இந்தப் பொருட்கள் பட்டியல்படி இருக்கிறதா என்பதை சரி பார்ப்பதற்கான முறையே பல இடங்களில் இருப்பதில்லை என்று கூறப்படுகிறது. அதற்கு தேவையான ஆட்களும் இருப்பதில்லை; நேரமும் இருப்பதில்லை என்று பணியாளர்கள் கூறுகின்றனர். எப்போதும் பணியாளர் பற்றாக்குறையிலேயே இருக்கும் இந்த விற்பனை நிலையங்களில் வேலை பார்ப்பவர்கள், கடை திறக்கும் நேரத்தில் அல்லது மூடும் நேரத்தில் வரும் இந்த சரக்குகள் பட்டியல்படி இருக்கிறதா என்பதை பார்க்காமலேயே அவை அலமாரிகளில் ஏற்றிவிடுகின்றனர்.

எப்போதும் வாடிக்கையாளர்களின் கூட்டத்தில் தத்தளிக்கும் இந்த விற்பனை நிலையங்களில் தேவையான அளவிற்கு பணியாளர்கள் இல்லாததால், நாளின் முடிவின்போது காசாளரிடம் இருக்க வேண்டிய தொகை குறைந்து அதற்கு காசாளர் பொறுப்பேற்கும் நிலை மிகச்சாதாரணமாக ஏற்படுகிறது. சுமார் 5 ஆயிரம் ரூபாய் ஊதியம் பெறும் எந்த ஒரு காசாளரும் முழு சம்பளத்தை வீட்டுக்கு கொண்டு செல்வார்கள் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

அதைபோல கடையில் உள்ள சரக்குகள் அனைத்தையும் மாதம் ஒரு நாளில் கணக்கு சரிபார்க்கும் பணி நடைபெறுகிறது. அன்று மொத்த வரவிலிருந்து, விற்பனை போக மீதியுள்ள மதிப்பிற்கு சரக்கு இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இருப்பதில்லை.

குறைவான ஆட்களே இருப்பதால் பொருட்களை பாதுகாப்பதில் ஏற்படும் சிரமங்கள் குறித்து நிறுவன நிர்வாகம் கவலைப்படுவதில்லை. சரக்கை விற்பனை நிலையத்துக்கு கொண்டுவரும் நிலையில் அதை அந்த கிளையில் பணியாற்றும் விற்பனையாளர்கள் சரிபார்ப்பதில்லை என்ற உண்மை திட்டமிட்டு மறைக்கப்படுகிறது. இவ்வாறு போக்குவரத்தின்போது அந்த சரக்குகளை “வேறுவித”மாக கையாளும் உயர் பதவியினர் தப்பிவிடுகின்றனர். அதற்கு மாறாக குறையும் மதிப்பிற்கு அந்த கிளையில் பணியாற்றும் பணியாளர்களை பொறுப்பாக்குகின்றன.



...

கிளையில் உள்ள விற்பனைப்பொருட்கள் அனைத்தும் கணிணி மூலமாகவே கணக்கிடப்படுகிறது. கணிணிகள் அனைத்தும் நிறுவனத்தின் மையஅலுவலகத்தின் மூலமாகவே கட்டுப்படுத்தப்படுகிறது. விற்பனையாளர்கள் பலருக்கும் கணிணி குறித்து குறைந்த பட்ச அறிவே இருப்பதுடன், நிர்வாகமோ, உயர் அதிகாரிகளோ முறைகேடுகள் செய்தால் அதைக்கண்டுபிடிக்கும் திறன் இருப்பதில்லை. அவ்வாறான பணியாளர்களை நிறுவனமோ, நிர்வாகிகளோ விரும்புவதில்லை.

குறைபடும் மதிப்பு குறைவாக இருக்கும் நிலையில், நிறுவன நிர்வாகமே பணியாளர்களை உடல்ரீதியாக தாக்கியோ, வேறுவிதமாக மிரட்டியோ எழுதி வாங்கிக்கொண்டு ஊதியத்தில் பிடித்தம் செய்கின்றனர்.

குறைபடும் பொருட்களின் மதிப்பு அதிகரிக்கும் நிலையில், அருகிலுள்ள காவல் நிலையத்தில் விற்பனை பணியாளர்கள் மீது புகார் செய்யப்படுகிறது.




...

முதலாளிகள், காரில் வருபவர்கள், வெள்ளைத்தோல் உள்ளவர்கள், ஆங்கிலத்தை கோர்வையாக பேசுபவர்கள் நல்லவர்கள்; தொழிலாளிகள், பஸ்ஸிலோ, சைக்கிளிலிலோ வருபவர்கள், கருப்புத்தோல் உள்ளவர்கள், ஆங்கிலம் தெரியாதவர்கள் கெட்டவர்கள் என்ற பொதுக்கருத்தின் அடிப்படையில் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

எனவே இதுபோன்ற எந்த ஒரு சில்லறை விற்பனை நிலையத்திலும். எந்த ஒரு பணியாளரும் ஒரு வருடத்திற்கு மேல் பணியாற்ற முடிவதில்லை.

இத்தகைய பிரசினைகள் காரணமாகவே சுபிக்ஷா என்ற பெயரில் மிக ஆடம்பரமாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு சங்கிலித்தொடர் விற்பனை நிறுவனம், மிகவும் நலிந்துபோய் இப்போது வேறொரு நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் மீண்டும் துளிர் விட ஆரம்பித்துள்ளது.

இதுபோன்ற நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு எந்த விதமான சட்டரீதியான உரிமைகளும் வழங்கப்படுவதில்லை. எப்போதோ இயற்றப்பட்ட குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்படி அடிப்படை ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு தேவையான அனைத்தும் வழங்கப்பட்டுவிடுவதால் அவர்கள் இந்த நிறுவனங்களின் பக்கம் திரும்பிக்கூட பார்ப்பதில்லை.




...

இந்த அவலம், வாடிக்கையாளர்களின் புலன்களை அடைவதேயில்லை. அப்படியே அவர்கள் உணர்ந்தாலும் எந்த விளைவும் ஏற்படப்போவதில்லை என்பதே உண்மை.

ஆனால் இந்த நிறுவனங்கள் பணியாட்களை மட்டுமல்ல, வாடிக்கையாளரையும் மோசடி செய்கின்றன என்பதை பலரும் உணருவதில்லை.

குறிப்பாக இதுபோன்ற பல நிறுவனங்களும் ஆட்டா மாவு, சர்க்கரை, எண்ணெய் வகைகள், நூடுல்ஸ் போன்றவற்றை சொந்த தயாரிப்பாக விற்பனை செய்து வருகின்றன. மேலும் பல நிறுவனங்கள் டிடர்ஜன்ட் சோப், ஷாம்பூ போன்ற சொந்த தயாரிப்பு பொருட்களையும் விற்பனை செய்து வருகின்றன.

ஆனால் இந்தப்பொருட்களின் கவர்கள் இருக்கும் அளவுக்கு பொருட்கள் தரமாக, சரியான அளவில் இருக்கிறதா என்பதை பலரும் கவனிப்பதில்லை. உணவுப் பொருட்களில் அவற்றின் காலம் காலாவதியான பின்னரும் அவை விற்பனை செய்யப்படுகின்றன. சுட்டிக்காட்டி கேட்பவருக்கு மட்டுமே புதிய பொருட்கள் வழங்கப்படுகின்றன.

ஆக இந்த நிறுவனங்கள் பணியாளர்களை மட்டுமல்ல; வாடிக்கையாளர்களையும் ஏமாற்றியே லாபம் ஈட்டி வருகின்றன.

ஆனால் இந்த நிறுவனங்களின் இத்தகைய அறமற்ற போக்குகள் குறித்து கேள்விகள் எழுப்பப்படாமல், லாபம் ஒன்றே குறி என்ற அடிப்படையில் அதன் பங்குதாரர்களும் இருக்கின்றனர். பங்குச்சந்தையில் இந்த நிறுவனங்களின் மதிப்பே இந்த நிறுவனங்களின் தகுதியாக விளங்குகிறது.

மொத்தத்தில் காணாமல் போனது காய்கறி விற்று பிழைத்துக்கொண்டிருந்த மூதாட்டிகளும், விவசாயிகளும், சிறு வியாபாரிகளும்தான். இனி



...



இவர் களை கீழே உள்ளதுபோன்ற கலைப்படைப்புகளில்தான் பார்க்கமுடியும்

.

இவர்களோடு தொழிலாளர் நலன், நுகர்வோர் நலன் போன்ற அடிப்படை உரிமைகளும் காணாமல் போய்விடுவதை நாம் கவனிக்கத்தவறி விடுகிறோம்.

இவ்வாறு வாழ்க்கையை இழக்கும் மக்கள் சமூகத்தில் எந்த விதமான எதிர்வினை ஆற்றுவார்கள் என்பதை கணிக்க முடியாது. இவர்கள் ஒருவேளை சமூகத்திற்கு அச்சுறுத்தலாக மாறினாலும் மிகப்பெரும் வர்த்தகப்புள்ளிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் எந்த ஆபத்தும் இருக்கப்போவதில்லை.

இந்த சமூக அவலங்களை கண்டும் காணாமல் காலம் கழிக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்குத்தான் உண்மையான அபாயம் காத்திருக்கிறது.

இதுபோன்ற சமூக அவலத்திற்கு எதிராக சாமானியனான நான் என்ன செய்யமுடியும்? என்ற கேள்வி எழலாம். ஏராளமாக செய்ய முடியும்! முதல் கட்டமாக இதுபோன்று சில்லறை விற்பனை மூலம் நுகர்வோர் சந்தையை தனதாக்க முயலும் உள்நாட்டு, பன்னாட்டு பகாசுர நிறுவனங்களை புறக்கணிக்க முடியும். இதை வெற்றிகரமாக செய்துவிட்டால் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை யாரும் சொல்லாமலே புரிந்துவிடும்.

-மக்கள் சட்டம் குழு

# 17. சுற்றுச்சூழலும் இந்திய அரசியல் சட்டமும்…

TUESDAY, JULY 8, 2008

மனித வாழ்வை நெறிப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட சட்டவியல் துறை சுற்றுச்சூழலை பாதுகாப்பதுக் குறித்தும் தேவையான அளவில் சட்டவியல் கோட்பாடுகளை உருவாக்கி வந்துள்ளது.

.

சட்டவியல் கோட்பாடுகள் எழுதி ஆவணப்படுத்தாத காலத்திலும், சுற்றுச்சூழல் குறித்த அக்கறையும், பொறுப்புணர்வும் இருந்ததை பழந்தமிழ் இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன.



…

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்
-என்ற திருக்குறளே பழந்தமிழர், சுற்றுச்சூழல் குறித்து கொண்டிருந்த பரந்த பார்வையை விளக்கும்.

.

சுதந்திரத்திற்கு பிந்தைய சட்டங்களே நாட்டின் இன்றைய நிலையை நிர்ணயிப்பதால், தற்போதைய சட்டங்களை குறித்து பார்ப்போம்.

.

இந்தியாவில் உள்ள சட்டங்களில் முதன்மையானது, இந்திய அரசியலமைப்புச் சட்டமே! இந்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அரசுக்கும் (உறுப்பு 48A) , குடிமக்களுக்குமான (உறுப்பு 51A[g]) சுற்றுச்சூழல் குறித்த கடமைகள் வலியுறுத்தப் பட்டுள்ளன.

சுற்றுச்சூழல் குறித்த அரசுக்கான கடமைகள், அரசியலமைப்புச் சட்டத்தின் நான்காவது பகுதியில் "அரசுக்கு வழி காட்டும் நெறிமுறைகள்" என்ற தலைப்பில் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, "அரசு அமைப்புகள் தேசத்திலுள்ள காடுகளையும், காட்டு விலங்குகளையும் மற்ற



THE CONSTITUTION OF INDIA

WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizens:

JUSTICE, social, economic and political;

LIBERTY of thought, expression, belief, faith and worship;

EQUALITY of status and of opportunity;

and to promote among them all

FRATERNITY assuring the dignity of the individual and the unity of the Nation;

IN OUR CONSTITUENT ASSEMBLY this twenty-sixth day of November, 1949, do HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.

...

உயிரினங்களையும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் அரசு முயற்சி எடுக்க வேண்டும்".

.

சுற்றுச்சூழல் குறித்த குடிமக்களுக்கான கடமைகள், அரசியலமைப்புச் சட்டத்தின் நான்காவது (A) பகுதியில், குடிமக்களுக்கான அடிப்படை கடமைகள் என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இதன்படி, "இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரும், காடுகள், ஏரிகள், ஆறுகள், காட்டு விலங்குகள் மற்ற உயிரினங்கள் உள்பட உள்ள இயற்கைச் சுற்றுச் சார்புகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் மற்றும் உயிரினங்களிடத்தில் பரிவு காட்டவும் ஆவன புரிவதை கடமையாக கொள்ள வேண்டும்".

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சுற்றுச்சூழல் குறித்து மிகத்தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், நடைமுறையில் சுற்றுச்சூழல் குறித்த அரசு மற்றும் குடிமக்களின் கவனம் தேவையான அளவு இல்லாதது ஆச்சரியத்தை ஏற்படுத்தக்கூடும்.

இதைப் புரிந்து கொள்ள இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் தன்மைகள் குறித்து சுருக்கமாக புரிந்து கொள்வது அவசியம். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உள்ள அம்சங்களில் பலவும் செயல்படும் தன்மை வாய்ந்தவை. அந்த அம்சங்கள் செயல்படாது விடப்பட்டால் அது குறித்து வழக்கு தொடரமுடியும். இந்த அம்சங்கள் அடிப்படை உரிமைகள் எனப்படுகின்றன.


Explore the World of
Ecology and Environment

...


LAW
LAW
LAW
LAW
LAW
LAW

...

.

ஆனால் அதே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சில பகுதிகள் செயல்படா தன்மையுடையதாகவும் இருக்கின்றன. அதாவது அரசியலமைப்புச் சட்டத்தின் நான்காம் பகுதியில் உள்ள அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அம்சங்களை செயல்படுத்த வலியுறுத்தி நீதிமன்றங்களை நாடமுடியாது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 37ன் படி, அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் பகுதியில் விதிக்கப்பட்டுள்ள கொள்கைகள் அனைத்தும் நாட்டின் ஆட்சிமுறைக்கு அடிப்படையானவையாகும். சட்டங்களை இயற்றும்போது, இத்தகைய அடிப்படைக் கொள்கைகளைப் பயன்படுத்த வேண்டியது அரசின் கடமையாகும். ஆனால் இந்தப் பகுதியில் விதிக்கப்பட்டவற்றை, எந்த நீதிமன்றத்தின் மூலமாகவும் வலியுறுத்த முடியாது.

.

இவ்வாறு நீதிமன்றங்களின் மூலம் வலியுறுத்த இயலாத பிரிவுகளின் கீழ்தான் மேலேக் கூறப்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு அம்சங்களும் இடம் பெற்றுள்ளன.

.

எனினும் அண்மைக்காலத்தில் உலகம் முழுவதும் சுற்றுச்சூழல் குறித்து ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு, இந்திய நீதித்துறையையும் ஓரளவு நல்லவிதத்தில் பாதிக்கவே செய்துள்ளது. நீதிபதிகள் **வி**. **ஆர்**. **கிருஷ்ணய்யர்**, **ஏ**. **எம்**. **அஹமதி** மற்றும் மூத்த வழக்கறிஞர் **எம்**. **சி**. **மேத்தா** போன்றவர்களின் உழைப்பாலும், ஈடுபாட்டாலும் சுற்றுச்சூழல் குறித்த இந்திய நீதித்துறையின் பார்வை மாற்றி அமைக்கப் பட்டுள்ளது.

.

இந்திய அரசியல் சட்டத்தின் செயல்படும் பிரிவில் அமைந்துள்ள உறுப்பு 21ல் குறிப்பிடப்பட்டுள்ள, சட்டப்படி உருவாக்கப்பட்டுள்ள விசாரணை முறைப்படியன்றி, வேறெந்த விதமாகவும் ஒரு நபரின் தனிப்பட்ட சுதந்திரத்தையும், உயிரையும் பறிக்கக்கூடாது என்ற சட்ட வாசகத்திற்கு மிகவிரிந்த பொருளை நீதிபதிகள் கொடுத்துள்ளனர். சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை என்ற புரிதலில், சுற்றுச்சூழல் மாசுபாடு என்பது அடிப்படை உரிமை மீறலாக பொருள் கொள்ளப்பட்டு பல்வேறு முன்மாதிரி தீர்ப்புகள் வழங்கப் பட்டுள்ளன.

.

இந்த அடிப்படையில் இந்திய அரசியல் சட்டத்தின் உறுப்பு 21ன் கீழ் கீழ்க்கண்ட கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன.

.

1. வாழ்வதற்கான உரிமை என்பது மாசுபடாத சுற்றுச்சூழலுக்கான உரிமையாக பொருள் கொள்ளப்படும். இது அனைவருக்கும் பொதுவானது.

   .

2. அரசுக்கொள்கைகளை செயல்படுத்தும் அதிகாரக்குழுக்கள் சுற்றுச்சூழல் சட்டங்களை கடுமையாக செயல்படுத்தும் பொறுப்பும், கடமையும் கொண்டவை.

.

3. சுற்றுச்சூழல் சட்டத்தின் கீழுள்ள தமது கடமைகளை செய்யத்தவறுவதற்கு நிதி ஆதாரம் இல்லை என்றோ, தேவையான பணியாளர்கள் இல்லை என்றோ அரசு அமைப்புகள் கூறக்கூடாது.

.

4. சுற்றுச்சூழல் சட்டத்தின் ஒரு பகுதியான "மாசுபடுத்துபவரே செலுத்துதல்" (Polluter pays principle) என்ற அடிப்படையில் மாசுக்கேடுக்கு காரணமானவரே அதற்கான இழப்பீட்டை பாதிக்கப்பட்டவருக்கு வழங்க வேண்டும்.

.

5. "முன்னெச்சரிக்கை குறிக்கோள்"(Precautionary principle) –படி அரசு அதிகார அமைப்பு, சுற்றுச்சூழல் மாசுகேட்டிற்கான காரணங்களை முன்கூட்டியே தவிர்க்க வேண்டும். புதிய மேம்பாட்டு பணிகளும், தொழில் அமைப்புகளும் அவற்றின் செயல்பாடுகளும் சுற்றுச்சூழலுக்கு ஆபத்து ஏற்படுத்தாதது என்பதை நிரூபிக்கும் பொறுப்பு அவற்றின் உரிமையாளர்களுக்கே உடையது.

.

6. சுற்றுச்சூழல் குறித்து முடிவு எடுக்கும் அதிகாரம் கொண்ட அமைப்புகள் (அ) மைய மற்றும் மாநில அரசுகளின் சுற்றுச்சூழல் கொள்கை; (ஆ) நின்று நிலைத்து நீடிக்கக்கூடிய வளர்ச்சி மற்றும் இயற்கை வளங்களை பாதுகாத்தல்; மற்றும் (இ) முந்தைய தலைமுறையிடம் பெற்ற சுற்றுச்சூழலை எதிர்கால தலைமுறைக்கு வழங்கும் கடமை போன்ற அம்சங்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

.

7. சுற்றுச்சூழல் சட்டங்களை பொருட்படுத்தாமல், வளர்ச்சி பணிகளை அல்லது தொழில் முயற்சிகளை மேற்கொள்வோரை கடுமையாக தண்டிக்க வேண்டும்.

.

8. சுற்றுச்சூழல் சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தை சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் மட்டுமே பயன்படுத்த வேண்டும்; சுற்றுச்சூழல் நோக்கங்களை முறியடிக்கும் வகையில் பயன்படுத்தக் கூடாது.

.

9. இயற்கை வளங்கள் அனைத்திற்கும், அரசே பொறுப்புரிமையர் (trustee) ஆகும்.

கடற்கரை, ஓடும் தண்ணீர், காற்று, காடுகள், மென்மையான நிலங்கள் ஆகிய அனைத்துக்கும் பொதுமக்களே பயனாளிகள். இந்த இயற்கை வளங்களை தனியார் உரிமையுரிமையாக மாற்றுவதற்கு அரசு அனுமதிக்கக் கூடாது.

மேற்கூறப்பட்ட கொள்கைகள் பல்வேறு வழக்குகளின் தீர்ப்புகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளன.



...

எனினும், நடைமுறையில் பல்வேறு பிரசினைகளிலும் இந்த கொள்கைகளுக்கு எதிரான அரசு உத்தரவுகளும், நீதிமன்ற தீர்ப்புகளும் வருவதை அனைவரும் உணர முடியும்.

சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்று அரசு அமைப்புகள் கொள்கை முடிவுகளை மேற்கொண்டாலும் அதை நடைமுறைப்படுத்த தேவையான சட்டங்கள் போதுமான அளவில் இல்லாமையே இந்தப் பிரச்சினைக்கான அடிப்படை காரணமாகும். மேலும் இருக்கும் சட்டங்களை நடைமுறைப்படுத்த அரசு அமைப்பு சீரிய முயற்சிகள் மேற்கொள்ளாமல் இருப்பதும். அந்த சட்டங்களை செயலிழக்க செய்வதில் அரசு மற்றும் தனியார் தொழில் துறைகளும் முனைப்புடன் நிற்பதும் இந்த பிரச்சினைக்கான மிகமுக்கியமான காரணமாகும்.

(தொடரும்)

.

-சுந்தரராஜன்

தகவல் உரிமைச் சட்டம் – அண்ணா பல்கலைக் கழகத்தின் சடுகுடு ஆட்டம்!

WEDNESDAY, JULY 2, 2008

தமிழகத்தில் உள்ள இளைஞர்களின் தொழிற்கல்வியை மேலாண்மை

செய்யும் உயர்மட்ட அமைப்பு அண்ணா பல்கலைக்கழகம். தமிழ் நாட்டில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் நெறிப்படுத்தும் பொறுப்பும் அண்ணா பல்கலைக்கழகத்திற்கே உள்ளது.




…

அரசு மானியத்துடன் நடத்தப்படும் பல்வேறு படிப்புகளைத் தவிர சுயநிதி அடிப்படையிலும் பல்வேறு தொழில் சார்ந்த படிப்புகள் இந்த பல்கலைக் கழகத்தில் நடத்தப்படுகின்றன.

.

இந்தப் பல்கலை கழகத்தில் பல ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையிலும், மற்ற பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையிலும் பணியாற்றுவதாகவும், பணி உத்தரவாதம் இல்லாத நிலையில் அவர்கள் மிகவும் சிரமத்தில் இருப்பதாகவும் செய்திகள் வந்ததை அடுத்து, தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சில கேள்விகள் எழுப்ப முடிவு செய்யப்பட்டது.

அண்ணா பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் பொதுத்தகவல் அதிகாரி குறித்து எந்த தகவலும் இல்லை.

எனினும், பொதுத்தகவல் அதிகாரி, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை என்ற முகவரிக்கு, 01-04-2008 அன்று கேள்விப் பட்டியல் அனுப்பப்பட்டது.

ஏப்ரல் முதல் தினத்தன்று அனுப்பப்பட்ட கேள்விப்பட்டியலுக்கு, 15-05-2008வரை பதில் வராத நிலையில், அண்ணா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தருக்கு மேல்முறையீட்டு மனு அனுப்பப்பட்டது. இதையடுத்து 26-05-2008 அன்று பதில் அனுப்பினார்கள்.

நமது கேள்விகளும், அண்ணா பல்கலைக்கழகத்தின் பதில்களும்…

**கேள்வி 1: அண்ணா பல்கலைக் கழகத்தில் எத்தனை ஆசிரியர்களும், ஆசிரியரல்லாத**


ANNA UNIVERSITY
PROGRESS THROUGH KNOWLEDGE

…


அண்ணா பல்கலைக்கழகம் சென்னை
ANNA UNIVERSITY CHENNAI
PROGRESS THROUGH KNOWLEDGE

…


right to
information

…

**பணியாளர்களும் பணி புரிகின்றனர்?**

**பதில் :** பேராசிரியர்கள் - 115, துணைப் பேராசிரியர்கள் – 137, விரிவுரையாளர்கள் – 220

அமைச்சுப்பணியாளர்கள் – 297, தினக்கூலி அடிப்படையில் – 260, தொகுப்பூதியம் அடிப்படையில் – 52.

தொழில்நுட்ப பணியாளர்கள் – 661, தினக்கூலி அடிப்படையில் – 4.

(கேள்வியைவிட கூடுதல் தகவல்கள் தரப்பட்டுள்ளன)

**கேள்வி 2: முழு நேரம் மற்றும் பகுதி நேர அடிப்படையில் எத்தனை ஆசிரியர்கள் பணி புரிகின்றனர். அவர்கள் எந்த அடிப்படையில் (நிரந்தரம்/ஒப்பந்தம்/தினக்கூலி) பணியமர்த்தப்பட்டனர்?**

**பதில்:** 1 துணைப் பேராசிரியரும், 100 விரிவுரையாளர்களும் ஒப்பந்த அடிப்படையில் பணி புரிகின்றனர். மேலும் 40 பேர் விசிட்டிங் பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களாக பணி புரிகின்றனர்.

அமைச்சுப் பணியாளர் பணியிடங்களில் 177 நிரப்பப்படாமல் உள்ளது.

தொழில்நுட்ப பணியாளர் பணியிடங்களில் 361 நிரப்பப்படாமல் உள்ளது.

(கேள்விக்கான பதில் தெளிவாக இல்லை. நிரந்தர ஆசிரியர்கள் குறித்த தகவலோ, நிரந்தர ஆசிரியரல்லாத பணியாளர்கள் குறித்த தகவலோ இல்லை)

**கேள்வி 3: அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆசிரியரல்லாத பணியாளர்கள் எத்தனை பேர் பணி புரிகின்றனர்? அவர்கள் பணியமர்த்தப்பட்ட தன்மையை (நிரந்தரம்/ஒப்பந்தம்/தினக்கூலி) கூறவும்?**

**பதில்:** பொருந்தாது.

(கேள்விக்கான பதில் தெளிவாக இல்லை.)

**கேள்வி 4: அண்ணா பல்கலைத்தில் நிரப்பப்படாமல் காலியாக உள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் எவ்வளவு?**

**பதில்:** 128 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன.

( இந்த கேள்விக்கான பதிலின் சில பகுதிகள் 2ம் கேள்விக்கான பதிலில் இடம் பெற்றுள்ளன. அதை நீங்கள்தான் தேடிப்படித்து புரிந்து கொள்ள வேண்டும்)

**கேள்வி 5: இடஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்பட்ட ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் குறித்த விவரங்களை தரவும்?**

**பதில்:** (பதில் அளிக்கப்படவில்லை)

(சமூக நீதிக்கும் அண்ணா பல்கலைக்கழகத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை போலுள்ளது. மாணவர்கள் தேர்வில் சில கேள்விகளை Choice-ல் விடுவது போல பல்கலைக்கழகம் இந்த கேள்வியை தவிர்த்துள்ளது)

**கேள்வி 6: தொழிலாளர் நலத்திட்டங்களான சேமநலநிதி மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதி திட்டங்களின்கீழ் எத்தனை ஆசிரியர் மற்றும் ஆசிரியல்லாத பணியாளர்கள் பயன்பெறுகின்றனர்?**

**பதில்:** 1-4-2003க்கு முன் பணியில் சேர்ந்த ஆசிரியர்கள் பொதுசேமநல நிதி மற்றும் ஓய்வூதியம் பெற தகுதி உடையவர்கள். அந்த தேதிக்கு பின் சேர்ந்தவர்கள் பொதுசேமநலநிதி திட்டத்தில் பயன்பெறும் தகுதி அற்றவர்கள்.

(பல்கலைக் கழகத்தில் உள்ளவர்களுக்கு எண்ணிக்கை தெரியாது போலிருக்கிறது.)

**கேள்வி 7: ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களில் சிலர் பொது சேமநல நிதி, தொழிலாளர் ஈட்டுறுதி போன்ற திட்டங்களில் பயன் பெறுவதிலிருந்து விலக்கப்பட்டிருந்தால் எந்த சட்டங்களின் அடிப்படையில் அவர்கள் விலக்கப்பட்டனர்?**

**பதில்:** 01-04-2003க்கு பிறகு பணிக்கு சேர்ந்தவர்கள் பங்கீட்டு ஒய்வூதிய திட்ட(Contributory Pension Scheme)த்திற்கு மட்டுமே தகுதி பெற்றவர்கள்.

(கேள்வியை படித்து புரிந்து கொள்ளவோ அல்லது உரியமுறையில் பதில் அளிக்கவோ தேவையான கல்வித்தகுதி பொதுத்தகவல் அதிகாரிக்கு இல்லை என்பது புரிகிறது)

**கேள்வி 8: ஆசிரியர்களில் எவருக்கேனும் பல்கலைமானியக்குழு பரிந்துரை அடிப்படையில் ஊதியம் வழங்கப்படவில்லையாயின், அவர்களுக்கு சேமநலநிதி திட்டம் பொருந்துமா?**

**பதில்:** அனைத்து ஆசிரியர்களுக்கும் பல்கலைக்கழக மானியக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறது.

ஆசிரியரல்லாத அமைச்சுப்பணியாளர்களுக்கு மாநில அரசு ஊதிய விகிதங்களின் கீழ் ஊதியம் வழங்கப்படுகிறது.

(நிரந்தர பணியாளர்களுக்கு அரசு விதிகளின்படி ஊதியம் வழங்கப்படலாம். ஆனால் ஒப்பந்த அடிப்படையிலும், தினக்கூலி அடிப்படையிலும் பணியாற்றுவோருக்கு எந்த அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடப்படவில்லை.)

பல்லாயிரம் மாணவர்களின் எதிர்காலத்தையும், அதன்மூலம் நாட்டின் எதிர்காலத்தையும் நிர்ணயிக்கும் ஒரு முக்கிய பல்கலைக்கழகத்தின் செயல்பாடு இந்த அளவில்தான் உள்ளது.

மேலும் விளக்கம் கேட்டு மீண்டும் ஒரு மனு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு வரும் பதில்களும் வெளியிடப்படும்.



…

-சுந்தரராஜன்

# 18. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் : சிக்கல்களும் தீர்வுகளும் - 7

MONDAY, AUGUST 25, 2008

மேலவளவு போன்ற கொடூரமான சாதி வெறி காரணமாக நடந்த கொலை வழக்கில், உயர் நீதிமன்றம் வழக்கமான கொலை வழக்குகளில் பிணை வழங்குவது போல வழங்கியது, பெரும் அதிர்ச்சியை தலித் ஆர்வலர்களிடையே ஏற்படுத்தியது. இதனை எதிர்த்தும், உயர் நீதிமன்றம் வழங்கிய பிணையை ரத்து செய்யக்கோரியும் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொழில் புரியும் மு.பூபால் உள்ளிட்ட 12 இளம் வழக்குரைஞர்கள் உச்ச நீதிமன்றத்தை அணுகினர். அவர்களில் இருவருக்கு குற்றவாளிகள் தரப்பிலிருந்து கொலை மிரட்டல் கடிதங்களும் வந்தன. பின்னர், 11.2.2005 அன்று உச்ச நீதிமன்றம் இவ்வழக்கின் தன்மையைக் கருத்தில் கொள்ளும்போது, உயர்நீதிமன்ற மேல்முறையீடு நிலுவைக் காலத்தில் பிணை வழங்கியிருக்கக் கூடாது என்று கூறி, சென்னை உயர் நீதிமன்றம் வழங்கியிருந்த பிணையை ரத்து செய்தும், அவர்கள் உடனடியாக சரணடைய வேண்டும் எனவும் உத்தரவிட்டது.

.

ஒரு குற்றவியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்படும் பிணையை ரத்து செய்யும் அதிகாரம் பிணை வழங்கிய நீதிமன்றத்திற்கும், உயர் நீதிமன்றத்திற்கும் தான் உண்டு. பிணையில் விடுவிக்கும்போது அந்நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு இடும் நிபந்தனைகள் மீறப்படும்போது, பிணையை வழங்கிய நீதிமன்றமே பிணை உத்தரவை ரத்து செய்யலாம். மற்ற நிகழ்வுகளில் உயர் நீதிமன்றம் குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 482 வழங்கியுள்ள தன்னதிகாரத்தின் கீழும் (Inherent Powers) அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 227இன் படியான கீழமை நீதிமன்றங்களைக் கண்காணிக்கும் அதிகாரத்தின் கீழும் (Supervisory Juisdiction) பிணையை ரத்து செய்யலாம்.

.

ஒரு குற்றவியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பிணையை ரத்து செய்ய வேண்டுமென கீழ்க்கண்ட ஏதாவது ஒரு அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட காரணங்களின் அடிப்படையில் மனுதாக்கல் செய்து கோரலாம். இவை உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்புகளின்படி உள்ள காரணங்களாகும், இவை முழுமையானவை அல்ல. இவை தவிர மற்றெந்த நியாயமான, ஏற்கத்தக்க காரணங்களின் அடிப்படையிலும் பிணையை ரத்து செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரமுண்டு.

.

1. பிணையில் விடுவிக்கப்படும் நபர் பிணையில் இருக்கும்போது எவ்வகையான குற்றத்திற்காக வழக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறாரோ, அதே வகையான குற்றச் செயலில் ஈடுபடும்போது அவர் பிணையில் தொடர்ந்து இருக்கும் தகுதியை இழந்தவராகிறார்.

.

2. புலன்விசாரணையின்போது கிடைக்கும் புதிய தகவலின் அடிப்படையில் அந்நபர் கூடுதல் தண்டனைக்குரிய குற்றம் புரிந்தவராகத் தெரிய வருமாயின், அந்நபரின் பிணை திரும்பப் பெறப்படலாம்.

.

3. பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள குற்றம் சாட்டப்பட்ட நபர் புலன்விசாரணைக்கு எவ்விதத்திலும் இடையூறு ஏற்படுத்துவாரானால் அந்நபரின் பிணை திரும்பப் பெறத்தக்கதாகிறது.

.

4. வழக்கின் சம்பந்தப்பட்ட சாட்சிகளை எவ்வகையிலாவது மிரட்டுவதன் மூலம் சாட்சியத்தைக் கலைக்க முற்படுவாரானால், அச்சூழலில் அவர் பிணையில் இருக்கும் தகுதியை இழக்கிறார்.

.

5. பிணையில் உள்ள நபர் தலைமறைவாக முயற்சித்தாலோ, தப்பித்துச் செல்ல முயற்சித்தாலோ, வெளிநாட்டிற்கு தப்பிச்செல்ல முயற்சித்தாலோ, அல்லது வேறு வகையில் நீதிமன்றப் பார்வையிலிருந்து மறைந்து கொள்வாராயின், அந்நபரின் பிணை ரத்து செய்யப்படலாம்.

.

6. புலன்விசாரணை அதிகாரி மீதோ அல்லது வழக்கு சாட்சிகளின் மீதோ வன்முறை புரிதலும் பிணை திரும்பப் பெறலாகும்.

.

7. நீதிமன்றம் பிணை வழங்கும்போது பிழையான அணுகுமுறையின் அடிப்படையில் பிணை வழங்கப்பட்டிருந்தால் அப்பிணை ரத்து செய்யப்படலாம்.

.

8. குற்றச்சாட்டின் தன்மை மாறுபடும் பட்சத்திலும், வேறு விதமான வழக்குச் சூழ்நிலை மாற்றங்களும்கூட பிணை ரத்து செய்யக் காரணமாக அமையலாம்.

.

9. நீதிமன்ற நிபந்தனைப்படி பிணையிலுள்ள நபர் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறினாலும் பிணை ரத்து செய்யப்படத்தக்கதே.

.

10. பிணையாளர்கள் குற்றம்சாட்டப்பட்ட நபர் பிணையில் வெளியே வர பத்திரம் மூலம் நீதிமன்றத்திற்கு உறுதி வழங்கியவர்கள், தாங்கள் வழங்கிய பிணைப் பத்திரத்தை திரும்பப் பெறக்கோரி நீதிமன்றத்தில் மனு செய்தாலும் பிணை ரத்து செய்யப்படலாம்.

.

11. பிணைப் பத்திரம் தவறுதலாகவோ, மோசடியாகவோ அல்லது வேறு வகையிலோ நிர்ணயிக்கப்பட்டதைவிட குறைபாடாக இருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் பிணை ரத்து செய்யப்படலாம்.

.

12. பிணையப்பத்திரம் வேறு எவ்வகையிலாவது செல்லுபடியாகும் தன்மையை இழக்கும் போதும் பிணை ரத்து செய்யக்கூடியதாகிறது.

.

இவ்வகையில், வன்கொடுமை வழக்குகளில் பிணை திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கையை பாதிக்கப்பட்டோர் தரப்பு வலிமையுடன் எடுக்கும்போது, வழக்கு சிதைக்கப்படாமலும் வலுவிழக்காமலும் நீதிமன்றத்தில் நடத்தப் பெற முடியும். இதை சரியாகப் பயன்படுத்தினால் வன்கொடுமையாளர்கள் – பாதிக்கப்பட்டோரையோ, மற்றவர்களையோ அச்சுறுத்துதல் செய்வதை முழுமையாகத் தடுக்க முடியும்.

.

இதே போல், கடலூர் மாவட்டத்தில் 2003இல் நடைபெற்ற ஒரு வன்கொடுமை பலருக்கு நினைவிருக்கும். தலித் சமூகத்தைச் சேர்ந்த ஒரு படித்த ஆணும், படையாச்சி இனத்தைச் சேர்ந்த பெண்ணும் காதலித்த குற்றத்திற்காக அவர்களிருவரையும் விஷம் குடிக்க வைத்து கொன்ற சம்பவமே அது. கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், குப்பநத்தம் கிராமத்தைச் சேர்ந்தவர் சாமிக்கண்ணு. இவர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர். குப்பநத்தத்தில் ஏற்பட்ட ஒரு பிரச்சனையால் சாமிக்கண்ணுவின் குடும்பம் பக்கத்து கிராமமான புதுக்கூரைப்பேட்டைக்குக் குடிபெயர்ந்தது. சாமிக்கண்ணுவின் மூத்த மகன் முருகேசன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.இ. பட்டப்படிப்பு முடித்துள்ளார். புதுக்கூரைப்பேட்டை ஊராட்சி மன்றத் தலைவர் துரைசாமி. இவர் படையாச்சி சாதியைச் சேர்ந்தவர். இவருடைய இரண்டாவது மகள் கண்ணகி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழியில் பி.காம். படித்து வந்துள்ளார். கண்ணகி தன் அஞ்சல் வழிப்படிப்பிற்காக நேர்முக வகுப்புகளில் கலந்து கொள்ள சிதம்பரம் சென்று வந்திருக்கிறார். இவ்வகையில், முருகேசனும் கண்ணகியும் அறிமுகமாகியுள்ளனர். பின்னர், இந்த அறிமுகம்

காதலாக மாறியிருக்கிறது.



...

.சாதி வேறுபாட்டைப் புறக்கணித்த இவர்கள் தங்கள் மனதொற்றுமையை உறுதிப்படுத்த, கடலூர் திருமணப் பதிவாளர் அலுவலகத்தில் 5.5.2003 அன்று தங்கள் குடும்பத்தினர் அறிந்து கொள்ளாத வகையில் பதிவுத் திருமணம் செய்து கொண்டுள்ளனர். பின்னர் சமயம் வரும்போது தக்க வகையில் முடிவை வெளிப்படுத்திக்கொள்ளலாம் என தற்காலிக முடிவு செய்து இருவரும் தத்தம் குடும்பத்துடனேயே வசித்து வந்துள்ளனர்.

.

இவர்கள் இருவருக்குமிடையேயான காதல் பற்றி சந்தேகம் கொண்ட கண்ணகியின் வீட்டார், சாதி பாகுபாடு காரணமாக கண்ணகியைக் கண்டித்துள்ளனர். இது பற்றி கண்ணகி முருகேசனுக்கு கடிதம் எழுத, தங்கள் முடிவை இதற்கு மேலும் தள்ளிப்போட முடியாத சூழலில் 3.7.2003 அன்று இருவரும் வீட்டை விட்டு வெளியேறினர். இது, கண்ணகியின் குடும்பத்தினருக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவர்கள் தீவிரமாகத் தேடியும் இருவரும் கிடைக்காததால், முருகேசன் தன்னிடம் 8 ஆயிரம் ரூபாய் கடனாக வாங்கியது தொடர்பாக பேச வேண்டுமென்று பொய்யான காரணத்தைச் சொல்லி சாமிக்கண்ணுவை அழைத்து வரச் சொல்லியிருக்கிறார், கண்ணகியின் தந்தை துரைசாமி. அதை நம்பி சென்ற சாமிக்கண்ணுவை, “எங்கேடா உன் மகன்?” என்று கேட்டு துரைசாமி திட்டியதுடன் சாமிக்கண்ணுவை செருப்பால் அடித்துள்ளார். அவமானப்பட்டு பயந்துபோன சாமிக்கண்ணு, தான் தேடிப்பார்த்து தகவல் சொல்லுவதாகச் சொல்லிவிட்டு வந்திருக்கிறார்.

.

தான் பட்ட அவமானத்தை வெளியில் சொல்லக் கூச்சப்பட்டுக் கொண்டு, தன் மனைவியிடம் மட்டுமே இதை சாமிக்கண்ணு சொல்லியிருக்கிறார். பின்னர், தன் தம்பிகளிடம் முருகேசன் இருக்குமிடத்தை கண்டுபிடிக்கச் சொல்லிவிட்டு, தானும் முருகேசன் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டு விட்டார். இதேபோல், சாமிக்கண்ணுவின் தம்பி

அய்யாசாமியிடமும் துரை சாமி நாடகமாட, அதை நம்பிவிட்ட அய்யாசாமி வண்ணாங்குடிகாடு என்ற கிராமத்தில் தங்கியிருந்த முருகேசனை 7.7.2003 அன்று அழைத்து வந்திருக்கிறார்.

.

அவர் மருதுபாண்டியனிடம் முருகேசனை ஒப்படைத்தார். முருகேசனை கட்டிவைத்து துரைசாமியின் மகன் மருதுபாண்டியனும் அவரது நண்பர்களும் அடித்தனர். ஆனாலும் முருகேசன் கண்ணகி பற்றி எதுவும் சொல்ல மறுத்துவிட்டார். எனவே, அவரது காலை நீண்ட கயிற்றால் கட்டி சுமார் 5 அடி அகல 300 மீட்டர் ஆழமுள்ள ஆழ்துளையில் தலைகீழாக உள்ளே விட்டு இழுத்து மிரட்டினர் (இந்த ஆழ்துளையானது நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தால் போடப்பட்டு அப்படியே விடப்பட்டுள்ளது). மிரண்டுபோன முருகேசன், கண்ணகி திருவண்ணாமலை பகுதியில் உள்ள மூங்கில் துறைப்பாடு என்ற கிராமத்தில் தனது சித்தப்பா அய்யாசாமியின் மாமனார் வீட்டில் இருப்பதை தெரிவித்தார்.

.

இரவு புதிய டாடா சுமோ வண்டியை தயார் செய்தனர். அதனை படையாச்சி சாதியை சார்ந்த சாமிக்கண்ணுவின் மகன் சின்னவன் ஓட்டிச் சென்றார். அதில் ராமதேசு, கந்தவேல், ஜோதி, வெங்கடேசன், மணி, கோதண்டபாணி, பாலு, கவுன்சிலர் கலியபெருமாள், மலையான் ஆகியோர் சென்றனர். தனது சித்தப்பா அய்யாசாமியையும் உடன் அழைத்துச் சென்றனர். மூங்கில் துறைப்பட்டு சென்று கண்ணகியை மிரட்டி வண்டியில் ஏற்றிக்கொண்டு ஊர் திரும்பினர். அங்கிருந்து செல்போன் மூலம் மருதுபாண்டிக்கு தகவல் கொடுத்துக் கொண்டே காலை 4.30 மணி அளவில் வந்து சேர்ந்தனர்.

.

மருதுபாண்டியும் அவரது நண்பர்களும் முருகேசனை ஊருக்கு அருகில் உள்ள முந்திரி தோப்பில் வைத்து அடித்தனர். இரவு முழுவதும் அங்கு முருகேசனை துன்புறுத்தினர். ஊரிலுள்ள தலித் மக்கள் சிலரை வைத்து கட்டைகளை சுடுகாட்டில் அடுக்கினர். பொன்னேரிக்கும் புதுக்கூரப்பேட்டைக்கும் நடுவில் உள்ள குட்டையில் சுமோ வண்டியை கொண்டு வந்து நிறுத்தினர். கண்ணகியை வண்டியை விட்டு இறக்கியதும், முருகேசனை முந்திரித் தோப்பிலிருந்து கொண்டு வந்தனர். இருவரையும் அடித்து மிரட்டினர். இரண்டு டம்ளர்களில் விஷத்தை ஊற்றி அவர்களை குடிக்கும்படி மிரட்டினர். அவர்கள் மறுத்ததால் முதலில் கண்ணகியை பிடித்து வாயிலும் காதிலும் விஷத்தை ஊற்றினர். அவர் மூச்சு நின்று விழுந்ததும் முருகேசனைப் பிடித்து அழுத்தி அவர் திமிரதிமிர விஷத்தை ஊற்றிக் கொன்றனர். பின்னர், கண்ணகியின் உடலை சுடுகாட்டில் அடுக்கியிருந்த கட்டைகளுக்கு மத்தியில் வைத்து டீசலை ஊற்றி எரித்தனர். முருகேசனது உடலை அருகிலுள்ள பள்ளத்தில் கட்டைகளை அடுக்கி அதில் வைத்து டீசலை ஊற்றி எரித்தனர். இந்த சூழலில் நூற்றுக்கணக்கான மக்கள் இதனை பார்த்துள்ளனர். 8.7.2003 அன்று காலை 7.00 மணியளவில் இந்தக் கொடுமை நடந்துள்ளது.

-சு. சத்தியச்சந்திரன்

(advsschandran@gmail.com)

# 19. இயற்கைக்கு மாறான பாலுறவும், இந்தியச் சட்டங்களும்...!

SATURDAY, AUGUST 16, 2008

***காமசூத்திரம்*** படைத்த இந்தியாவில், தற்போது காமத்தைப் பற்றிய அறிவு சமூகத்தில் எந்த அளவுக்கு உள்ளது என்பது உடலியலாளர்களும், உளவியலாளர்களும் கருத்து சொல்ல வேண்டிய முக்கிய அம்சமாகும்.

.

மறைந்த மருத்துவர் மாத்ருபூதம், மருத்துவர் நாராயண ரெட்டி போன்றவர்கள் பாலியல் குறித்து வெளிப்படையாகவும், விஞ்ஞான ரீதியாகவும் பேசத்தொடங்கியவுடன் பாலியல் குறித்த விவாதங்கள் பொதுத்தளத்தில் அதிகரிக்கத் தொடங்கின. எனினும் ஓரினச்சேர்க்கை போன்ற சிறுபான்மை பாலுறவு குறித்து பரவலான விவாதங்கள் நடைபெறுவது அரிதாகவே உள்ளது.




...

இத்தகைய தளத்தில் ஈடுபடுவோரும், ஓரினச்சேர்க்கையாளராக அடையாளம்

காணப்படும் வாய்ப்பிருப்பதால், இது குறித்து பரவலான விவாதங்கள் எழுப்பப்படவில்லை என்றே தோன்றுகிறது.

.

**சட்டத்தின் பார்வையில்.....**

பாலியல் குறித்த விவ(கா)ரங்கள் சட்டத்தின் பார்வையில் சற்றும் தெளிவில்லாமலே, சற்றுக் குழப்பமாகவும்கூட உள்ளது என்பதே உண்மை.

இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவு 377, “இயற்கை முறைக்கு மாறாக, ஆடவன் அல்லது பெண் எவருடனேனும், விலங்கு எதனுடனேனும் தன்னிச்சையாக காமவிகார உடலுறவு கொள்கிற எவரொருவரும் ஆயுள் சிறை தண்டனை; அல்லது 10 ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்கு சிறை தண்டனை ஆகிய இவற்றில் இரண்டில் ஒன்றை தண்டனையாக விதிக்க வேண்டும். மற்றும் அவரை அபராதத்திற்கு உள்ளாக்கவும் செய்யலாம்”




...

மேற்கூறிய சட்ட வாசகத்தில் “இயற்கை முறை” என்று கொடுக்கப்பட்டுள்ள சொற்றொடருக்கு விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை. எனவே இயற்கை முறைக்கு மாறாக என்ற வாசகத்திலும் தெளிவில்லை. இந்த குழப்பம் தங்கள் வாழ்வுரிமையை பாதிப்பதாகவும் எனவே இந்த சட்டப்பிரிவை திருத்த வேண்டும் அல்லது நீக்க வேண்டும் என்று குரல்கள் தற்போது வலுத்து வருகின்றன.

குறிப்பாக திருநங்கைகள் (அ) அரவானிகள் மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்கள் ஆகிய இருதரப்பினரே இந்த சட்டப்பிரிவிற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.



...

இதைக்குறித்து பார்க்கும் முன்னர், இயற்கை முறை உடலுறவு என்பதற்கு இதுவரை நீதிமன்றங்கள் கொண்ட பொருளை பார்க்கலாம்.

மனிதனைத்தவிர அனைத்து உயிரினங்களும் உடலுறவை, இனப்பெருக்கத்திற்கான வழிவகையாகவே பயன்படுத்துகின்றன. மனிதன் மட்டுமே உடலுறவை பெரும்பாலான நேரங்களில் இன்ப நுகர்வுக்கான வழியாகவும், மிகச்சில நேரங்களில் கோபத்தை வெளிக்காட்டும் வழியாகவும் (உ-ம்: காவல் நிலையம் உள்ளிட்ட இடங்களில் நிகழும் பாலியல் வன்முறை) பார்க்கிறான். எனவே மனிதத்தன்மையை எடுத்துவிட்டால் இனப்பெருக்கத்திற்கு செய்யப்படும் உடலுறவு மாத்திரமே இயற்கையானதாகும்.

இந்த அளவுகோலின்படி பார்த்தால் அரசு அமைப்புகளே வலியுறுத்தும் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாடு வழிவகைகள் அனைத்துமே இயற்கைக்கு மாறான வகையைச் சேர்ந்ததுதான். இந்த தவறுக்காக மக்களை தண்டிப்பது என்பது நடைமுறையில் இயலாத காரியம். மேலும் இந்த நிலைப்பாட்டை தற்போதைய நிலையில் யாரும் ஏற்க முடியாது.

**திருநங்கைகள்**

இந்நிலையில் திருநங்கைகள் (அ) அரவானிகளின் தரப்பு வாதத்தை புரிந்து கொள்ள முயற்சிப்போம்.

திருநங்கைகளுக்கு ஆண்-பெண்ணுக்குரிய பாலுறுப்புகள் இருப்பதில்லை. இருந்தாலும் அவை பயன்படுவதில்லை. அதற்காக அவர்களுக்கு பாலுணர்வே இல்லாமல்



...

போய்விடுவதில்லை. ஏனெனில் பாலுணர்வு என்பது உடல் மட்டுமே சார்ந்தது அல்ல! மனமும் முக்கிய பங்கு வகிக்கும் பாலுணர்வு வேட்கை திருநங்கைகளுக்கும் இருக்கும் என்பதே மருத்துவ உண்மை.

ஆனால் இந்த திருநங்கைகள் எந்த விதத்தில் பாலுணர்வு வேட்கையை தணிக்க முயற்சித்தாலும் மேற்கூறிய சட்டத்தின் பார்வையில் அது குற்றமாகவே இருக்கிறது.

திருநங்கைகள் யாரும் விரும்பி திருநங்கைகளாக பிறப்பதில்லை. இயற்கையின் போக்கில் காரணம் புரியாத விந்தைகளில் ஒன்றாகவே திருநங்கைகள் உருவாவதும் உள்ளது. அதற்காக திருநங்கைகளுக்கு உயிரின் அடிப்படை வேட்கையான பாலுணர்வு வேட்கை இருக்கக்கூடாது என்றும் எதிர்பார்க்கக் முடியாது.

இயற்கைக்கு மாறான பாலுறவு என்ற பெயரில் திருநங்கைகளின் பாலுணர்வு வேட்கைகளை தடைசெய்யும் சட்டங்களை அமல்படுத்தும் முன்னர், அந்த திருநங்கைகளின் பாலுணர்வு வேட்கையை தணிப்பதற்கான வழியையும் காட்டவேண்டும் என்று எதிர்பார்ப்பதில் நியாயம் உள்ளது.

**ஓரினச்சேர்க்கையாளர்கள்**

அதேபோல ஓரினச்சேர்க்கையாளர்களும் இந்த சட்டத்தால் மிகவும் பாதிக்கப்படுவதாக


TRANS

...



...



...

கூறுகின்றனர். திருநங்கைகளை சகித்துக் கொள்பவர்கள்கூட ஓரினச் சேர்க்கையாளர்களை ஏற்க மறுக்கின்றனர்.

சமூகத்தில் ஓரினச் சேர்க்கையினரை பார்க்கும் விதத்திலேயே பல பிரசினைகள் உள்ளன. தன்பாலின இச்சை என்பது தீய பழக்கம் என்று ஒரு தரப்பினரும், அது ஒரு நோய் என்று ஒரு தரப்பினரும் கருதுகின்றனர். ஆனால் ஓரினச்சேர்க்கை என்பது இயற்கைக்கு மாறானது என்பதில் பெரும்பாலானோர் ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர்.




...

இந்த கருத்தின் அடிப்படையிலேயே இந்திய தண்டனை சட்டம் இயற்றப் பட்டுள்ளது. இங்கிலாந்தின் அடிமை நாடாக இந்தியா இருந்த காலத்தில் “மெக்காலே” என்பவரால்

எழுதப்பட்ட இந்த சட்டம் கிறிஸ்தவ மதக்கொள்கைகளின் அடிப்படையில் எழுதப்பட்டது. இந்தியாவிலும்கூட இத்தகைய இயற்கைக்கு மாறானதாக கூறப்படும் பாலுறவை எதிர்ப்பவர்கள், மதம் சார்ந்த இலக்கியங்களிலேயே இத்தகைய உறவுகள் இருப்பதை வசதியாக மறந்து விடுகின்றனர்.



...

மேலும் இத்தகைய பாலுறவுகளை அங்கீகரிப்பதும், தண்டிக்காமல் விடுவதும் இத்தகைய இயற்கைக்கு மாறான பாலுறவை அதிகரிக்கும் என்ற கருத்தும் முன்வைக்கப் படுகிறது.

ஆனால், “தன்பாலின இச்சை” இல்லாதவர்கள் யாரையும், இத்தகைய பாலுறவுக்கு ஆட்படுத்த முடியாது என்றே, ஓரினச் சேர்க்கையாளர்கள் கூறுகின்றனர். இதனை மருத்துவம் மற்றும் உளவியல் நிபுணர்களும் ஆதரிக்கின்றனர்.

அவ்வாறு தன்பாலின இச்சை இல்லாதவர்களை, இயற்கைக்கு மாறான பாலுறவுக்கு ஆட்படுத்த விழையும் நபர்களை தண்டிக்க பல வழிகள் உள்ளன. இத்தகைய சந்தர்ப்பத்தில் தன்னை தற்காத்துக் கொள்ள விரும்பும் ஒரு நபர், எதிராளிக்கு மரணத்தை ஏற்படுத்திவிட்டால்கூட அது கொலை ஆகாது என்பதே சட்டமாக உள்ளது. (இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு: 100)

இந்த சட்டப்பிரிவின்படி, “இயற்கைக்கு மாறான காம இச்சை”யுடன் தாக்கும் ஒரு நபரால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்ற சூழலில், தம்மை தற்காத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுபவரின் செயற்பாட்டில் எதிரி இறந்து விட்டாலும் அது கொலை ஆகாது. அதற்கு பதிலாக “கொலை ஆகாத மரணம் ஏற்படுத்தும் குற்றம்” என்பதாகவே கருதப்படும்.

எனவே, இயற்கைக்கு மாறான பாலுறவை தடை செய்யாவிட்டால், அத்தகைய இயற்கைக்கு மாறான பாலுறவு அதிகரித்து விடும் என்ற அச்சம் மறைந்து விடுகிறது.

**அடுத்தது என்ன?**



...

இந்த நிலையில் பாலியல் சிறுபான்மையினராகிய திருநங்கைகள் மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்களின் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவு 377-ஐ நீக்க வேண்டும் என்ற கருத்திற்கு பல பிரமுகர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்த கருத்தில் உங்களுக்கு உடன்பாடு இருந்தால் நீங்களும் ஆதரவு தெரிவிக்கலாம்.

அதேபோல, ஓரினச் சேர்க்கையாளர்களையோ, திருநங்கைகளையோ நேரில் அடையாளம் காணும் தருணங்களில் அருவருப்போ, அச்சமோ அடையாமல் அவர்களையும் சாதாரண மனிதர்களே என்று ஏற்றுக் கொள்வது உங்கள் அறிவு விசாலமடைவதை குறிக்கும். அவர்களுடன் இயல்பாக பழக முயற்சிப்பது உங்கள் மனிதாபிமானத்தை காண்பிக்கும்.

-சுந்தரராஜன்


Birthright Unplugged
turning knowledge into action

...

# 20. ரூ. 23 கோடியும், 26 நீதிபதிகளும்....!

THURSDAY, AUGUST 14, 2008

ஒரு சாதாரண இந்தியக் குடிமகனின் கடைசி நம்பிக்கையாகச் சொல்லப்படுவது, நீதித்துறையே! ஆனால், நீதித்துறையின் வரலாற்றைப் பார்த்தோமானால், அதிலும் மேற்சொன்ன நம்பிக்கையை குலைக்குமளவிற்கு செயல்பாடுகள் நடந்து வந்துள்ளன. செய்தி ஊடகங்கள் செய்தித்தாள், தொலைக்காட்சி, வலைத்தளம் எனப் பெருகியுள்ள இப்போதைய நிலையில் நீதிமன்றத்தின் செயல்பாடுகள் இத்தகைய ஊடகங்களில் கவனிக்கத்தக்க அளவில் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்படுகின்றன.

.

சுதந்திர இந்திய வரலாற்றில் முதன்முறையாக இந்திய உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஒரு நீதிபதி (திரு.V.ராமசாமி) மீது, அவருடைய ஊழல் காரணமாக பதவியிருந்து நீக்க பாராளுமன்றத்தில் பதவியிழக்கச் செய்யும் நடவடிக்கை (IMPEACHMENT PROCEEDINGS) 1990ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. அதற்கு முன் நீதிபதிகள் விசாரணைச் சட்டப்படி (THE JUDGES INQUIRY ACT 1968) 108 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு மக்களவைத் தலைவரிடம் விசாரணை நடத்துமாறு கோரிக்கை வைத்தபின் மூன்று நீதிபதிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அந்த விசாரணைக் குழுவின் அறிக்கையும் அக்குறிப்பிட்ட நீதிபதி ஊழலில் ஈடுபட்டார் என்பதை உறுதிசெய்த பின்னரே பதவியிழக்கச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இருந்தபோதிலும், அப்போது வீசிய அரசியல் சார்புக்காற்று காரணமாக இந்த நடவடிக்கை முடக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டது.

.

இதுபோல் பல்வேறு உயர்நீதிமன்றங்களில் பல்வேறு வகையான ஊழல் குற்றச்சாட்டுக்கள் நீதிபதிகள் மீது சொல்லப்படுவதும், அவற்றுள் பெரும்பான்மை உண்மையாக இருந்து விடுவதும் அனைவரும் அறிந்ததே.

.

குறிப்பாக, நீதித்துறையில் மலிந்து வரும் ஊழல் (கையூட்டு) அல்லது நீதி சார்ந்த ஆதாயம் மட்டுமே ஊழல் என்று பொதுப்புத்தியில் பதிந்துள்ளது. ஆனால் தனக்கு வேண்டியவர்களுக்கு (NEPOTISM) வழங்கப்படும் உத்தரவு, தீர்ப்பு போன்றவையும் ஊழல் சார்ந்தவையே அண்மைக்காலங்களில் கவனத்தையும், சமூகத்தில் பெருங்கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

.

இருபதாண்டுகளுக்கு முன், மத்திய சட்ட அமைச்சராகவும் உயர்நீதிமன்றத்

தலைமை நீதிபதியுமாக இருந்த திரு பி.சிவசங்கர் நீதித்துறையின் செயல்பாடுகள் கவலையளிப்பவையாக உள்ளதெனவும், உயர்நீதித் துறையிலும்கூட (higher judiciary) மலிந்துவரும் விரும்பத்தகாத போக்கையும் சுட்டிக்காட்டினார்.

.

பத்தாண்டுகளுக்குமுன் ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு எஸ்.பி.பரூச்சா, நாட்டிலுள்ள நீதிபதிகளில் 20 விழுக்காட்டினர் ஊழல்வாதிகளாக இருக்கும் அதிர்ச்சிச் செய்தியை வெளிப்படுத்தினார். இதன்படி பார்த்தால், நீதிபதிகளில் ஐவரில் ஒருவர் ஊழல்வாதி என்றாகிறது. இந்தப் புள்ளிவிவரம் புதுப்பிக்கப்படுமானால் விகிதம் தலைகீழாக மாறியிலிருந்தாலும் வியப்பதற்கில்லை.

.

2007, ஜனவரியில் பதவியேற்குமுன் “தி இந்து” பத்திரிகைக்கு 03-01-07 அன்று அளித்த பேட்டியில் தற்போதைய இந்தியத் தலைமை நீதிபதி திரு. கே.ஜி.பாலகிருஷ்ணன், நீதித்துறையில் ஊழல் தொடர்பாக குற்றச்சாட்டுகள் மட்டுமே உள்ளன (அவை நிரூபிக்கப்படவில்லை) என்று நெத்தியடியாகச் சொன்னார்.

.

திரு. ஜே.எஸ்.வர்மா, இந்தியத் தலைமை நீதிபதியாக இருந்தபோது 1997ம் ஆண்டில் உயர்நீதித் துறையினர் ஊழல் புகார்களுக்கு இடம்கொடா வகையில் நடந்து கொள்ள வேண்டுமென்று நீதிபதிகளுக்கான நடத்தை நன்னெறிகள் (Code of Conduct for Judges) வகுக்கப்பட்டது. அதன் ஓர் அம்சம் - நீதிபதிகள் தங்கள் சொத்துக்கணக்கை தலைமை நீதிபதியிடம் அளிக்க வேண்டும் என்பது. இவ்வாறு அளிக்கப்படும் விபரங்களும் இரகசியமாக வைத்துக்கொள்ளப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், நீதிபதிகளை சொத்துக்கணக்கு காட்டச் சொல்வது நீதிபதிகளின் சுயமரியாதைக்கு இழுக்கு என்றும், நீதிபதிகளின் செயல்பாடுகள் குறித்த விபரங்களைப் பெற தகவல் அறியும் உரிமைச் சட்டம் பொருந்தாது என்றும் திரு கே.ஜி.பாலகிருஷ்ணன் கூறியதும் கூட இதன் அடிப்படையில்தான் என்று கூறலாம்.

.

இப்படியெல்லாம் கருத்து தெரிவித்த திரு கே.ஜி.பாலகிருஷ்ணன், உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர், உயர்நிதிமன்ற நீதிபதிகள் ஏழு பேர், உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகள் பத்துபேர், மாவட்ட நீதிபதிகள் பத்துபேர், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகள் இருவர் என 26-நீதிபதிகள் ரூ.23 கோடியை சுருட்டிய ஊழல் வழக்கு, தன்னிடமே விசாரணைக்கு வரும் என்று அவர் எதிர்பார்த்திருக்க வாய்ப்பில்லை.

.

இவ்வழக்கின் முழுவிபரம் நம்மிடம் தற்போது இல்லை, எனினும், இவ்வழக்கு விசாரணை குறித்து செய்தித்தாள்களில் வெளியான விபரங்களின் அடிப்படையில் வழக்கின் பின்னணி

தரப்படுகிறது. மேலும் விபரங்கள் பின்னர் தரப்படும்.

.

உத்திரப்பிரதேச மாநிலம் காசியாபாத் நீதிபதிகள் 26 பேரும், மற்ற உயர்பதவி வகிக்கும் அலுவலர்களும் நான்காம் நிலை அரசு ஊழியர்களின் சேமநல நிதியிலிருந்து ரூ.23 கோடி அளவிலான பணத்தை பொய்யான பெயர் விபரங்கள் அளித்து கையாடல் செய்தது அப்பகுதி நீதித்துறையினரிடையே பெருத்த கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இது "காசியாபாத் நீதிபதிகள் ஊழல்" என்று பரவலாக அறியப்படுகிறது. இது தொடர்பாக சி.பி.ஐ விசாரணைக்கு உத்திரவிடவேண்டுமென்று கோரி நஹர்சிங் யாதவ் என்ற வழக்குரைஞர், "அதிவக்த கல்யாண்" என்ற அறக்கட்டளையின் தலைவர் மற்றும் காசியாபாத் வழக்குரைஞர் சங்கம் ஆகியோர் மனுதாரர்களாக இருந்து அலகாபாத் உயர்நீதிமன்றத்தை அணுகினர்.

.

அம்மனுவை அலகாபாத் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்ததையடுத்து நீதித்துறை மீது படிந்துள்ள இந்தக் கறையை போக்க வேண்டுமெனில் இந்த ஊழல் தொடர்பான விசாரணை சி.பி.ஐ-யால் விசாரணை நடத்தப்படவேண்டும் என்பதே வழக்கின் ஒரே முக்கிய கோரிக்கை. வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்கள் உயர்நீதித்துறையில் இருப்பதால், சி.பி.ஐ மூலமான விசாரணையே சரியானதாக இருக்கும் என்பது அம்மனுதாரர்களின் கோரிக்கை.

.

இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டதால், உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. இந்தியத் தலைமை நீதிபதி திரு கே.ஜி.பாலகிருஷ்ணன், நீதிபதி திரு பி.சதாசிவம் மற்றும் நீதிபதி திரு கே.எம்.பஞ்சால் ஆகியோர் அடங்கிய ஆயத்தின்முன் முதன்முதலில் 07.07.2008 அன்று விசாரணைக்கு வந்தபோது, வழக்கின் தனித்தன்மை கருதி தலைமை நீதிபதியின் தனியறையில் (Chambers) அடுத்த கட்ட விசாரணையை நடத்த உத்திரவிடப்பட்டது. 14.07.2008 அன்று நடைபெற்ற தனியறை விசாரணையின் போது மத்திய அரசின் வழக்குரைஞர் (Solicitor General of India) இவ்வழக்கின் விசாரணை வெளிப்படையாக நடத்தினால் அது நீதித்துறைக்கு வலு சேர்க்கும் என்று அவர் விடுத்த வேண்டுகோளை நீதிபதிகள் ஏற்றுக் கொண்டனர். தனியறை விசாரணையின்போதே தங்களையும் வழக்கில் ஒரு தரப்பினராகக் சேர்த்துக் கொள்ள வழக்குரைஞர் திரு பிரசாந்த் பூஷண் வழியாக TRANS-PARENCY INTERNATIONAL என்ற அமைப்பு மனுச் செய்தது.

.

இந்த வழக்கின் புலனாய்வை சி.பி.ஐக்கு மாற்றக் கோரியுள்ள நிலையில் உச்சநீதிமன்ற ஆயம், குற்றச்சாட்டிற்கு ஆளான நீதிபதிகளை சி.பி.ஐ. அதிகாரிகள் வழக்கமான முறையில் நேரடியாக சந்தித்து விசாரிப்பதை விரும்பவில்லை. அதற்கு பதிலாக, குற்றம் சாட்டப்பட்ட நீதிபதிகளிடம் புலன்விசாரணை மேற்கொள்வதற்காக சி.பிஜ அதிகாரிகள் கேட்க விரும்பும்

கேள்விகளை எழுத்து மூலமாக வழங்கி, அந்நீதிபதிகள் எழுத்து மூலம் வழங்கும் பதில்களின் அடிப்படையிலேயே விசாரணை தொடர வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

.

இவ்வழக்கில் எழுப்பப்பட்டுள்ள முக்கிய குற்றச்சாட்டு, கடைநிலை ஊழியர்களின் சேமநல நிதியை பொய்யான பெயர்களைக் குறிப்பிட்டு ரூ.23 கோடி அளவில் இந்த நீதிபதிகள் கையாடல் செய்துள்ளார்கள் என்பதாகும். இந்தச் செய்தி வெளிவரக்காரணமே, இந்த வலைப்பின்னலின் சங்கிலிகளில் ஒருவராக செயல்பட்ட குற்றவாளிகளில் ஒருவர், இந்தக் குற்ற முறையை தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் வெளிப்படுத்தியதுதான். அவருடைய வாக்குமூலத்தின் அடிப்படையில் 82 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் நீதிபதிகள் குற்றம் சாட்டப்பட்டவர்களாக சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

.

குற்றம் சாட்டப்பட்ட நீதிபதிகளிடம் எழுத்துமூலமான கேள்விகள் அளித்து பதில்களை பெற வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தின் தலைமைப்பதிவாளர், காசியாபாத் காவல் நிலையத்திற்கு கடிதம் எழுதினார்.

.

இந்த சலுகை அடிப்படையிலான நடைமுறைக்கு 17.07.2008 அன்று நடைபெற்ற இவ்வழக்கு விசாரணையின்போது, மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் திரு பிரசாந்த் பூஷண் கடும் ஆட்சேபணை தெரிவித்தார். அதை தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன் ஏற்க மறுத்ததுடன், தன்னுடைய நிர்வாக ரீதியான உத்திரவை கேள்விக்குட்படுத்தினால், இவ்வழக்கை விசாரணை செய்யும் ஆயத்தில் தான் பங்கேற்க முடியாது என்று தனது கருத்தை கோபத்தின் உச்சத்தில், உறுதிபட தெரிவித்தார். வழக்கின் விசாரணை வரும் ஆகஸ்டு முதல் தேதியன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

.

ஒரு குற்றவியல் வழக்கின் புலன் விசாரணை என்பது அந்தக் குற்றத்தில் ஈடுபட்ட நபர்களை நேரடியாக விசாரணை செய்து குற்றத்தின் பின்புலம் தொடர்பான அனைத்து தகவல்களையும் திரட்டி, அதில் ஈடுபட்ட அனைத்து நபர்களையும் சட்டத்தின் முன் நிறுத்துவதுதான். இதைத் தான் சட்டம் வலியுறுத்துகிறது. இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர்களாகக்கூட முதல் தகவல் அறிக்கையில் சம்பந்தப்பட்ட நீதிபதிகள் காட்டப்படவில்லை என்பதும், அவர்களிடம்கூட புலன்விசாரணை செய்ய மறைமுகத்தடை என்பதும் மிகவும் வருந்தத்தக்க சூழ்நிலையாகும். இது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நீதிக்கோட்பாட்டை மீறுவதாகவே மக்கள் உணர்வர்.

.

“நீதி வழங்கப்படுவது என்பதும், வழங்கப்படுவது நீதிதான் என்பதும் வெளிப்படையாகத் தெரிய வேண்டியது அவசியம்” என்கிறது சட்டச்சொற்றொடர் (JUSTICE SHOULD NOT ONLY BE DONE BUT ALSO SEEM TO BE DONE). ஆனால், நீதிபதிகள் விஷயத்தில் மட்டும் இச்சொற்றொடர் பலநேரங்களில் பொருந்துவதாக இருப்பதில்லை.

.

கடந்த 2003ம் ஆண்டு கர்நாடக மாநிலம் மைசூரில் நீதிபதிகள் சிலர் தங்கள் தகுதிக்குக் குறைவான விரும்பத்தகாத செயல்களில் ஈடுப்பட்டார்கள் என்று வெளியான செய்திகள் தி இந்து, டைம்ஸ் ஆப் இந்தியா, இந்தியா டுடே உள்ளிட்ட இதழ்கள் மீது கர்நாடக உயர்நீதிமன்றம் தன்னிச்சையாக (SUO-MOTU) நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரக் காரணமானது. இது தொடர்பாக நடைபெற்ற வழக்கு விசாரணையொன்றில் இக்குற்றச்சாட்டை விசாரித்த நீதிபதிகள் குழுவின் அறிக்கை நகலை வழங்கக் கேட்டு மூத்த வழக்குரைஞர் இந்திரா ஜெய்சிங் தாக்கல் செய்த மனு, விசாரணை அறிக்கை இரகசியமானது என்று கூறி உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

.

“வல்லான் வகுத்ததே வாய்க்கால்” என்பதற்கேற்ப நீதித்துறையின் தனித்தன்மையும் சுதந்திரமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறிக்கொண்டே நீதித்துறையின் அனைத்து செயல்பாடுகளிலும் வெளிப்படையற்ற தன்மையை பின்பற்றுவதும் ஊக்குவிப்பதுமாகவே நடைபெற்று வருகிறது. இந்நிலை சிறிதளவேனும் மாற வேண்டும் இல்லையெனில், Howso-ever high you may be; the law is above you என்பது பொய்யாகி விடும் அபாயமுள்ளது.

-சு. சத்தியச்சந்திரன்
(advsschandran@gmail.com)

# 21. அறிவுச் சொத்துரிமை - சில தவறான கருத்துகள்...!

SUNDAY, SEPTEMBER 28, 2008

அறிவு என்பதும், (ஆங்கிலக்) கல்வி என்பதும் பலநேரங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. ஆனால் கல்வி சில நேரங்களில் (மட்டும்) அறிவு வளர்ச்சிக்கு பயன்படுகிறது என்பதே அறிவியல் உண்மை. கல்வி கற்றவர் எல்லாம் அறிவுடையவர்கள் ஆவதில்லை; கல்வி பயிலாதவர்கள் அறிவில்லாமல் இருந்து விடுவதும் இல்லை. **இதற்கான உதாரணம்: தோழர் பெரியார்!**

அறிவு என்பதே உண்மையான சொத்து என்பதில் மாற்றுக்கருத்து இருக்க வாய்ப்பில்லை. ஆனால், இந்த அறிவு எந்த ஒரு மனிதருக்கும் தாமாகவே வந்து விடுவதில்லை. மனிதன் வளரும் சமூகமே அறிவையும் அள்ளித்தருகிறது. கற்கும் திறன் உள்ளவர்கள் விரைவாக கற்கின்றனர்.




...

மற்றவர்கள் சற்று பின்தங்குகின்றனர். எனவே ஒரு மனிதன் பெறும் அறிவு, உண்மையில் அவன் வாழும், வளரும் சமூகம் அவனுக்கு கற்றுக் கொடுத்ததே.

எனவே சமூகத்திலிருந்து பெற்ற அறிவை ஒருவன் தனியுடைமையாக கருதுவானாயின், அவன் பெரியாரின் வார்த்தைகளில், அவன் அறிவு-நாணயம் அற்றவனாவான்.

எந்த ஒரு அறிஞனும் உலகத்தில் இல்லாத ஒரு பொருளை புதிதாக கண்டுபிடித்தில்லை. ஏற்கனவே உள்ள பொருளுக்கு ஒரு புதிய பயன்பாடு மட்டுமே கண்டுபிடிக்கப்படுகிறது. இதில் பலரும் முயற்சி செய்தாலும் சமூக அங்கீகாரம் சிலருக்கே கிடைக்கிறது.



...


GROUP INTELLECT

...

உதாரணமாக கம்ப்யூட்டர் ஒரு நாளில் கண்டுபிடிக்கப்படவில்லை. அது அபாகஸ் எனப்படும் மணிச்சட்டத்திலிருந்து படிப்படியாக மேம்பாடு அடைந்தே அதன் இன்றைய நிலையை அடைந்தது.



...

எனவே அறிவைச் சொத்துரிமை என்ற கருத்தாக்கத்தை ஆதரிப்பதே, பெரியார் கொள்கைகளுக்கு எதிரான திசையில் நின்று பார்ப்பனியத்தை ஆதரிப்பதாகும்.

இயற்றப்பட்ட சட்டம் என்ற நிலையிலும் அறிவுச்சொத்துரிமை சட்டங்களை ஆதரிக்க முடியாது. தடா, பொடா போன்ற கருப்புச்சட்டங்களைப்போல இந்த அறிவுச் சொத்துரிமை சட்டங்களும் விரிவான விவாதங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**அறிவு சொத்துரிமை அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு வழிவகுக்குமா ?**

அறிவு சொத்துரிமையில் முதன்மையான காப்புரிமை சட்டம் 1474ல், வீனிஸ் நாட்டியில் முதல் முறையாக இயற்றப்பட்டது. பின் இங்கிலாந்தில் 1623ல் காப்புரிமை சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. பின் பதிப்புரிமைக்கான சட்டம் 1710ல் இங்கிலாந்தில் இயற்றப்பட்டது. இருந்த போதிலும் சுமார் 150 கடந்து 18 ஆம் நூற்றாண்டில்தான் தொழிற் புரட்சி உண்டானது. ஆக அறிவு சொத்துரிமை மூலம் அறிவியல் வளர்ச்சி அடைந்தது என்பது மிகப்பெரிய மோசடி.

மேலும் எவ்வித அறிவு சொத்துரிமை சட்டங்களும் இல்லாத, அனைத்து

கண்டுப்பிடிப்புகளும் தேசத்திற்கே என்று கூறிய முன்னாள் சோசலிச நாடுகள், கடுமையான அறிவு சொத்துரிமை சட்டங்கள் உடைய பணக்கார நாடுகளுக்கு ஈடாக அறிவியல் தொழில்நுட்பத்தில் வளர்ச்சியடையவே செய்தன. எவ்வித அறிவு சொத்துரிமை சட்டங்களும் இல்லாத முன்னாள் சோவியத் ரசியாதான் விண்வெளியில் அமெரிக்காவை வென்றது.

இன்றைய சீனா கூட போதிய அறிவு சொத்துரிமை சட்டங்கள் இல்லாத நிலையில் (அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி!) அறிவியல் தொழில்நுட்பத்தில் சிறந்தே விளங்கிறது.

இவ்வளவு ஏன்? அரம்ப கால அமெரிக்க காப்புரிமை சட்டம்கூட அதிக அதிகாரம் படைத்ததாக அல்லாமல் எல்லோருக்கும் பயன்படும் வகையிலேதான் இருந்தது.

ஆக அறிவு சொத்துரிமை சட்டங்கள் இல்லாமலே பல நாடுகள் அறிவியல் வளர்ச்சி அடைந்திருப்பதை கண்டபின் அறிவியல் வளர்ச்சிக்கும் அறிவு சொத்துரிமைக்கும் எந்த வகையில் தொடர்பும் இல்லை என்பதை நாம் உறுதியாக கூறலாம்.

**கண்டுபிடிப்பாளர்களுக்கு, படைப்பாளிகளுக்கு அறிவு சொத்துரிமை அவசியமானது ?**

உழைத்தவனுக்கு பலன் வேண்டாமா? என்றும், கண்டுபிடிப்பாளர்களுக்கும் - படைப்பாளிகளுக்கும் அறிவு சொத்துரிமை கொடுப்பது அவசியமானது என்றும் சிலர் வாதிடுகின்றனர்.

உழைத்தவர்களுக்கு பலன் கிடைக்கக் கூடாது என்று நாம் கூறவில்லை. உண்மையிலேயே உழைத்தவர்களுக்குத்தான் அறிவு சொத்துரிமை பயனளித்துள்ளதா? என்று கேட்டால், இல்லை என்று தான் சொல்ல வேண்டும். காரணம், இன்று உலகெங்கும் வழங்கப்பட்டுள்ள அறிவுச்சொத்துரிமையில் 90% பன்னாட்டு நிறுவனங்களி என்பதுதான்.

அறிவு சொத்துரிமையை விற்க முடியும் என்ற அம்சத்தை பயன்படுத்தி கண்டுபிடிப்பாளர்களுக்கும், பை சிறிய தொகையை கொடுத்துவிட்டு பன்னாட்டு நிறுவனங்கள் இத்தகைய உரிமைகளை வாங்கி விடுகின்றன.

மிகச்சிறந்த உதாரணமாக மைக்கேல் ஜாக்சனின் (MICHEAL JACKSON) இன்றைய நிலையை கூறலாம். இன்றளவிலும் உலகெங்கும் ஜாக்சனின் பாடல்கள் கேசட்கள் பல லட்சம் விற்பனையானாலும் அவர் கடனாளியாகதான் உள்ளார்.

காரணம் இவருடைய பாடல்களுக்கான பதிப்புரை பன்னாட்டு நிறுவனங்களிடம் இருப்பதுதான். கொள்ளை லாபத்தில் சிறிய அளவு ராயல்ட்டிதான் படைப்பாளிகளுக்கு பல நாடுகளில் கொடுக்கப்படுகின்றன.

ஹேரி பாட்டர் (HARRY POTTER) கதாசிரியர் ரோலிங்(J.K.ROWLING)தான் இதுவரை கொடுக்கப்பட்ட ராயல்ட்டி தொகையில் அதிகம் பெற்றவர்.


BAD
MICHAEL JACKSON

...


HARRY POTTER
and the Deathly Hallows

...

ஆனால் அவரை போல எல்லா படைப்பாளிக்கும் உரிய பங்கு கிடைப்பதில்லை.

இந்தியாவில் நிலைமை இன்னும் மோசம். சினிமா இசை, பாடல் போன்ற எல்லா கலைகளுக்குமான உரிமைகளும் பதிப்புரிமை சட்டப்படி தயாரிப்பாளருக்கே சொந்தம். இந்தியாவில் புத்தக ஆசிரியர்களுக்கு பதிப்புரிமை என்பது இன்று வரை எட்டாக்கனியாகவே உள்ளது.

அறிவியல் கண்டுபிடிப்புகளை பற்றி கேட்கவே வேண்டாம். இவை அனைத்தும் நிறுவனங்களிடமே உள்ளன.

ஆக கண்டுபிடிப்பாளருக்கு காப்புரிமை இல்லை, கலைஞர்களுக்கு பதிப்புரிமை இல்லை. இதுதான் உழைத்தவர்களுக்கு அறிவு சொத்துரிமை செய்யும் நன்மை.

**அறிவு சொத்துரிமை எதிர்ப்பது அறிவியலை எதிர்ப்பதாகுமா ?**

அறிவியலுக்கு அறிவு சொத்துரிமை யாரும் வாங்க முடியாது, காரணம் அவை எப்பொழுதும் பொதுவானது. அறிவியல் அடிப்படையிலான தொழில் நுட்பங்களுக்குதான் அறிவு சொத்துரிமை வழங்கப்படுகிறது. எல்லா தொழில் நுட்பங்களும் மனிதர்களுக்கு நன்மை அளிக்கும் என்று இல்லை. அறிவியல் அடிப்படையில் அணுஆற்றல் அமைந்தாலும் மக்களின் உயிருக்கு கேடானது என்றவகையில் நாம் அதை எதிர்க்க வேண்டியுள்ளது. மதத்திற்கு எதிராக அறிவியலை முன்வைக்கும் போது, அறிவியலையே மதமாக சிலர் மாற்றிவிடுகின்றனர். இந்த போக்கு இடதுசாரிகள், பெரியாரியவாதிகள் போன்ற முற்போக்கு பிரிவினரிடையேயும் உள்ளது. அறிவியலுக்கும் அரசியல் உண்டு. அந்த அடிப்படையில் இது யாருக்கானது என்பதைப் பொருத்தே நாம் அறிவியல் தொழில் நுட்பங்களை ஆதரிக்க வேண்டும்.

-மு. வெற்றிச்செல்வன்

(vetri@lawyer.com)

# 22. பெரியாரிய பார்வையில் அறிவுச் சொத்துரிமை

SUNDAY, SEPTEMBER 28, 2008

*தோழர்களே! இந்த புத்தக வியாபார நிலையத்தின் துவக்கவிழா உரை ஆற்றுவதில் நான் மிகுதியும் மகிழ்ச்சியடைகிறேன். தோழர் சண்முக வேலாயுதம் அவர்கள் என்னை வேண்டிக் கொள்ளும்போது இப்புத்தக வியாபார நிலையம் சுயநல இலாபத்தை பண வருவாயை உத்தேசித்து துவக்கப் பட்டதல்லவென்றும் நம் இயக்க நூல்களையும், பத்திரிகைகளையும் துண்டுப் பிரசுரங்களையும் மக்களுக்குப் பரப்ப வேண்டும் என்ற பொது நல நோக்கத்தையே முக்கியமாகக் கருதி துவக்குவதாகவும் சொன்னார்.*



...

*இதைக் கேட்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். இந்தப் பணியாற்றுகிறவர்கள் நமது நாட்டில் இதுவரை எங்கும் துணிந்து இம்மாதிரி முன் வந்தததில்லை; முன் வந்தாலும் இலாபத்துக்காக அதாவது, ஏதாவது ஒரு இயக்கத்துக்காகவாவது ஏதாவது ஒரு கொள்கைக்காவது, ஏதாவது ஒரு மனிதனுக்காவது செல்வாக்கு ஏற்பட்டால் அந்தப் பெயரைச் சொல்லிக் கொண்டு, அந்தக் கொள்கையைச் சொல்லிக் கொண்டு, அந்த மனிதனைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொண்டு அவன் பெயரைச் சொல்லிக் கொண்டு வயிறு வளர்க்க முன் வருபவர்களும், தன் வாழ்வை அமைத்துக் கொள்பவர்களும் அந்த இயக்கத்தை, கொள்கையை, மனிதனை வைவதில் செல்வாக்கு ஏற்பட்டால் உடனே வயிற்றுப் பிழைப்புக்கும் வாழ்க்கை நலத்துக்குமாக அவைகளை வைத்துக் கொண்டு வயிறு பிழைப்பவர்களும் அல்லது இந்தக் காரியங்களுக்குக் கூலி பெற்றுக் கொண்டு தொண்டர்களாக இருப்பவர்களும் எங்குமுண்டு என்றாலும்*

*நம்நாட்டில் அதிகம். ஏனெனில், இங்கு மனிதத் தன்மையை உணர்ந்த மனிதத் தன்மையில் கவலைகொண்ட மக்கள் அரிது. அதாவது தங்களுடைய சுய இலாப நஷ்டம், பெருமை, சிறுமையே இலட்சியமென்பதில்லாமல் பொதுநலக் கொள்கைகளுக்காக என்று வெளிவந்து தொண்டாற்றும் மக்கள் மிக மிக அரிதாகும்.*

-ஈரோட்டில் 22.1.1947 ல் நடந்த புத்தக வியாபார நிலையத்தின் துவக்க விழாவில் தந்தை பெரியார் அவர்களின் சொற்பொழிவு

உலகமயமாக்கல் என்னும் வர்த்தக கருத்தாக்கம் இந்தியாவில் WTO எனப்படும் உலக வர்த்தக நிறுவனத்தால் (WORLD TRADE ORGANISATION) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் பல துறைகளை சார்ந்த ஒப்பந்தங்களை கொண்டுள்ளது. உலக வர்த்தக நிறுவனத்தில் உறுப்பினராக உள்ள இந்தியா இத்தகைய ஒப்பந்தங்கள் அடிப்படையில் பல சட்டங்களை இயற்றியும், மாற்றியும் தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் போன்ற கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இவ்வாறு தொடர்ச்சியாக பல புதிய சட்டங்கள் இந்தியாவில் இயற்றபட்டு வருகின்றன. அவற்றில் பலவகையில் மாற்றப்பட்டும், புதிதாக உருவாக்கபட்டும் வந்துள்ள சட்டங்கள் என அறிவுச் சொத்துரிமை சட்டங்களை (INTELLECTUAL PROPERTY LAWS) குறிப்பிடலாம். உலக நாடுகளிடையே வர்த்தகம் பெருகவும், இந்தியா போன்ற நாடுகள் அமெரிக்காவுடனான வர்த்தகத்தை அதிகரிக்கவும், அறிவு சொத்துரிமை சட்டங்கள் அவசியமானது என்று கூறப்படுகிறது. மேலும், ஏழை நாடுகளில் தொழில் நுட்பம் பெருகவும், சமூக-பொருளாதார தளங்களில் முன்னேற்றம் அடையவும், மற்றும் போலி பொருட்களின் உற்பத்தியை தடுக்கவும் அறிவு சொத்துரிமை அவசியம் என்று உலக வர்த்தக நிறுவனம் கூறுகிறது.

அதே நேரத்தில் அறிவு சொத்துரிமை சட்டங்களால் இந்தியா போன்ற ஏழை நாடுகள் கடுமையாக பாதிப்புக்குள்ளாகும் என்ற அபாயமும் நிலவுகிறது. குறிப்பாக இச்சட்டங்களால் மருந்து மற்றும் உணவு பண்டங்களின் விலை ஏற்றம், பாரம்பரிய செல்வங்களான விதைகள், தாவரங்கள் போன்ற இயற்கை வளங்கள் பன்னாட்டு நிறுவனங்களால் கொள்ளையிடப்படுதல், பன்னாட்டு நிறுவனங்களின் சந்தை ஆதிக்கம் போன்றவை நேரலாம்.

இந்நிலையில் “**ஒரு முக்கிய அறிவிப்பு**” என்ற தலைப்பில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, ‘விடுதலை’ ஏட்டில் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளிட்டுள்ளார்.

***"தந்தை பெரியார் அவர்கள் ஏடுகளில் எழுதிய எழுத்துகள், பேச்சுகள், பேட்டிகள், வெளியீடுகள் அத்தனையும் அவரால் 1935-ல் உருவாக்கப்பட்டு, 1952-ல் பதிவு செய்யப்பட்ட பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனத்துக்கு மட்டுமே சொந்தமான அறிவுசார் உடைமைகளாகும் - சொத்துகளாகும். இவற்றை அச்சில் வெளியிட்டு விளம்பரமும் வருவாயும் தேடத் தனிப்பட்ட சிலரும் சில இயக்கங்களும் பதிப்பகங்களும் முயலுவதாகத் தெரியவருகிறது! அப்படிச் செய்வது சட்ட விரோதமாகும். மீறி அச்சிட்டு நூலாகவோ, மற்ற***


DEMOCRACY
WTO

...



...

***ஒலிநாடா குறுந்தகடுகளாகவோ வெளிவந்தால், அவர்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்."***

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து பெரியார் திராவிடர் கழகம் மீது திராவிடர் கழகம் தொடர்ந்துள்ள அறிவு சொத்துரிமை மீறல் வழக்கு தமிழகத்தில் பெரியார் பற்றாளர்களிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. கல்வியை சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு மட்டுமே உரிமையானது என்ற பார்ப்பனீய கருத்துகளை எதிர்கொண்டு அழித்த பெரியாரின் கருத்துகளுக்கு பார்ப்பனீய தொனியிலேயே சிலர் உரிமை கோருவதும், பிறர் அதை வெளியிடக்கூடாது என்று தடுப்பதும் தமிழ் உணர்வு கொண்டோரிடம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சமூக பொருளாதார ஏற்ற தாழ்வற்ற சமதர்ம சமூகம் படைக்க தடையாக உள்ள சாதியம், மதவாதம் போன்றவற்றை உடைத்தெறிய வேண்டும் என்பதையே பெரியாரிய பார்வையாக கொள்ளலாம். உலகமயமாக்கலில் சமூக பொருளாதார ஏற்ற தாழ்வு அபாயகரமான நிலையை எட்டியுள்ள சூழலில் பெரியாரிய பார்வையில் இத்தகைய சட்டங்களை பற்றி ஆராய வேண்டியுள்ளது.

ஏனென்றால் சமூக பொருளாதார ஏற்ற தாழ்வுகளை நியாயப்படுத்தும் மதரீதியான தத்துவங்களை மட்டுமல்ல; சமதர்மத்திற்கு வழிவகுக்காத இந்திய அரசியலமைப்பு சட்டத்தையும்கூட பெரியார் தீவிரமாக விமர்சிக்கவே




செய்தார்.

அதனால்தான் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் முதல் திருத்தமே ஏற்பட்டது. எனவே சட்டத்தில் இருக்கிறது என்பதற்காக எதையும் ஏற்காமல், அது மக்களின் நலனுக்கு ஏற்புடையதா என்ற பெரியாரிய பார்வையின் அடிப்படையில்தான் இந்த அம்சங்களை பரிசீலிக்க வேண்டும்.

**அறிவு சொத்துரிமை என்றால் என்ன ?**

மனித மூளையில் இருந்து தோன்றும் எண்ணங்களை சொத்தாக கருதலாம் எனவும், அவ்வாறு எண்ணங்கள் கண்டுப்பிடிப்புகளாக, கலை படைப்புகளாக செயல்வடிவம் பெறுகின்ற போது அவற்றை சட்டத்தின் மூலம் பாதுகாக்கலாம் எனவும் அறிவு சொத்துரிமை சட்டங்கள் கூறுகின்றன. அறிவு சொத்துரிமை சட்டங்களை மூன்று முக்கிய கூறுகளாக பிரிக்கலாம்:

- கண்டுபிடுப்புகளுக்கு கொடுக்கப்படும் காப்புரிமை (PATENT RIGHT)
- கலைப்படைப்புகளுக்கு கொடுக்கப்படும் பதிப்புரிமை (COPYRIGHT)
- நிறுவனங்களின் வணிக குறீயீட்டுக்கான உரிமை (TRADE MARK)

அறிவு சொத்துரிமை என்பது ஒருவகையான எதிர்மறை உரிமையாகும் (NEGATIVE RIGHT), அதாவது இவை உரிமை பெற்றவரை தவிர்த்து மற்ற அனைவரையும் சில/பல செயல்களை செய்ய தடைவிதிக்கிறது. அறிவு சொத்துரிமை என்பது அறிவியல் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்ற வாதத்தின் மூலம் அறிவு சொத்துரிமை வழங்கப்படுவது நியாயப்படுத்தப் படுகிறது.




...

அதாவது, ஒரு பொருளுக்கு அறிவு சொத்துரிமை பெற்ற ஒருவர், பிறர் அந்த

பொருளை உற்பத்தி/விற்பனை செய்வதை தடுக்கும் உரிமையை பெறுகிறார். இதன் மூலம் மக்களிடையே போட்டி உருவாகும் என்றும், அதன் மூலம் புதிய பொருட்களை கண்டுபிடிக்க மக்கள் போட்டியிடுவர் என்றும், அதன் பயனாக அறிவியல் தொழில்நுட்பம் வளர்ச்சியடையும் என்றும், இதற்கு அறிவு சொத்துரிமை வழி செய்யும் என்றும் வாதிடப்படுகிறது. இவ்வாறு அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அறிவு சொத்துரிமை வழிவகுத்ததாக எந்தவித நடைமுறை ஆதாரமோ புள்ளி விவரமோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவு சொத்துரிமை என்கிற கருத்தாக்கம் உருவாவதற்கு முன்பாக காப்புரிமை மற்றும் வணிக குறியீடு ஆகியவை தொழில்வள சொத்துகள் (INDUSTRIAL PROPERTY) என்று அழைக்கப்பட்டு வந்தன. பின்பு பதிப்புரிமையும் அவற்றோடு சேர்த்து அறிவு சொத்துரிமை என்று வழங்கப்படலானது.

அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கபட்டதன் பயனாக புத்தக தொழில் விரிவு அடையவே பதிப்பாளர்களின் உரிமையை காக்க பதிப்புரிமை (COPYRIGHT) சட்டங்கள் ஐரோப்பிய நாடுகளில் இயற்றப்பட்டன.பின்பு



...

தொழில் புரட்சியின் காரணமாக உருவான தொழிற்சாலை முதலாளிகளின் உரிமையை காக்க காப்புரிமை (PATENT RIGHT) சட்டங்கள் தொடர்ச்சியாக பல நாடுகளில் இயற்றப்பட்டன.

18 ஆம் நூற்றாண்டிலேயே காப்புரிமைக்காவும் பதிப்புரிமைக்காகவும் தனிதனி மாநாடுகளை மேலை நாடுகள் நடத்தியுள்ளதை வைத்து அறிவு சொத்துரிமையின் வளர்ச்சியை நாம் கணக்கிட்டுக் கொள்ளலாம்.




...

இப்படி நமக்கு முற்றிலும் அந்நியமான அறிவு சொத்துரிமை சட்டங்களின் வரலாறு இந்தியாவில் 1856-ம் ஆண்டில் தொடங்குகிறது. இந்தியாவில் அன்றைய ஆட்சியாளர்களான ஆங்கிலேயர்கள், தங்கள் வர்த்தக நலன்களை பாதுகாக்க காப்புரிமை சட்டத்தை அறிமுகப்படுத்தினர். பின்பு இந்த சட்டம் 1859, 1872, 1883 ஆண்டுகளில் பல மாற்றங்களை சந்தித்தது. இந்த மாற்றங்களை உள்ளடக்கிய ஒரு சட்டம் 1911-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்து சுமார் 22 ஆண்டுகளுக்கு பிறகு தற்போதைய காப்புரிமை சட்டம் 1970ல் அறிமுகமானது. அதே போல பதிப்புரிமைக்கான சட்டம் இந்தியாவிற்கு ஆங்கிலேயர்களால் 1914ல் கொண்டுவரப்பட்டது பின்பு பலமாற்றங்களுடன் தற்போதைய பதிப்புரிமை சட்டம் 1957ல் இயற்றப்பட்டது.

**பெரியார் பணியும், பதிப்புரிமையும்**

கதை, கவிதை, நாடகம், ஓவியம், பாடல் போன்ற கலை தொடர்பான படைப்பாளிகளுக்கு கொடுக்கப்படுவதே பதிப்புரிமை (COPYRIGHT) எனப்படுகிறது. அவ்வாறு பதிப்புரிமை பெறத்தக்க படைப்புகள் என்று கீழ்கண்டவற்றை பதிப்புரிமை சட்டம் 1957 கூறுகிறது.

- உண்மையான இலக்கிய, நாடக, இசை மற்றும் கலை படைப்புகள்
- திரைப்படங்கள்
- இசை பதிவுகள்

புகைப்படங்கள், தொலைகாட்சி ஒலி/ஒளி பரப்பு, SOFTWARE PROGRAMME போன்றவை

கூட பதிப்புரிமை பெறத்தக்கவை.

ஒரு நபர் பதிப்புரிமை பெறுவதற்கு காப்புரிமை போல பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தன்னுடைய படைப்புகளை பொதுமக்கள் தொடர்புக்கு கொண்டுச் சென்றாலே போதும் அந்த நபர் அப்படைப்புக்கு பதிப்புரிமை பெற்றவராவர். இப்படி பதிப்புரிமை பெற்ற படைப்பை உரியவர் அனுமதியின்றி வெளியிடவோ, மொழிமாற்றம் செய்யவோ இச்சட்டம் தடை செய்கிறது.

உதாரணத்திற்கு ஒரு கதாசிரியர் கதை ஒன்றை வெளியிடுகிறார் என்று வைத்துக் கொள்வோம், அவரே அக்கதைக்கு பதிப்புரிமை பெற்றவர் ஆவார். அக்கதையை அவர் அனுமதியின்றி வேறுயாரும் வெளியிடவோ மொழிமாற்றம் செய்யவோ அல்லது அக்கதையை தழுவி திரைப்படம் தயாரிப்பதையோ இச்சட்டம் தடை செய்கிறது. இவ்வாறு பதிப்புரிமை மீறுவோர் இச்சட்டத்தின் மூலம் நஷ்ட ஈடு கோரலாம், அனுமதியின்றி தயாரிக்கப்பட்ட பொருட்களை கைப்பற்ற நடவடிக்கை எடுக்கலாம்.

இத்தகைய பதிப்புரிமை மேலே கூறிய எல்லா கலைப்படைப்புகளுக்குமே பொருந்தும். மேலும் இந்த பதிப்புரிமையை பதிப்புரிமை பெற்ற நபர் தன் வாழ்நாள் முழுக்கவும் அவர் இறந்த பின் அவருடைய வாரிசுகளுக்கு 60 ஆண்டுகளும் பயன்படுத்திக் கொள்ள இச்சட்டம் அனுமதியளிக்கிறது.

பெரியார் தன்னுடைய அரசியல் நுழைவு காலம் தொட்டு பகுத்தறிவு பிரச்சாரத்திற்காக பேசியவையும் எழுதியவையும் பதிப்புரிமைக்கு உரியவைதான். பெரியார் தன்னுடைய பெயரிலான சொத்துகளை சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் பெயரில் எழுதி வைத்து விட்டு மறைந்ததால், அவருடைய வாரிசான சுயமரியாதை பிரச்சார நிறுவனத்திற்கே பதிப்புரிமை சட்டப்படி அவருடைய பேச்சுகளை எழுத்துகளை வெளியிடுவதற்கு உரிமை உள்ளது என்று திராவிடர் கழகம் கூறுகிறது. இதன்படி பார்த்தால் பெரியார் இறந்து 60 ஆண்டுகள் கழித்து அதாவது 2033-ல்தான் பெரியாரின் படைப்புகளை சுயமரியாதை நிறுவனம் தவிர்த்து வேறுயாரும் வெளியிட முடியும். அதற்குள் பெரியாரின் படைப்புகள் அரசுடைமை ஆக்கப்பட்டால்தான் அவரின் படைப்புகள் விடுதலை பெறும்.

பதிப்புரிமை சட்டப்படி முறையான ஒப்பந்தம் எதுவும் இல்லாதபோது பத்திரிகையில் எழுதியவைகளுக்கு அதன் ஆசிரியரே பதிப்புரிமை உரியவர். தற்போதைய நிலையில் பத்திரிகைகள் தங்கள் பத்திரிகையில் வெளியான அனைத்து படைப்புகளுக்குமான பதிப்புரிமையை தங்களிடமே வைத்துக் கொள்வதற்கான ஒப்பந்தங்களை செய்து கொள்கின்றன. குடியரசு இதழுக்கு இப்படி பதிப்புரிமைக்கான ஒப்பந்தங்கள் இல்லாதபோது குடியரசு இதழில் எழுதியவர்களே பதிப்புரிமைக்கு உரியவர்கள். அந்த வகையில் பெரியாரின் எழுத்துகளுக்கு பதிப்புரிமை பெற சுயமரியாதை பிரச்சார நிறுவனத்திற்கு உரிமை உண்டு.

1983ம் ஆண்டில் பகுத்தறிவாளர்கள் கழகத்தின் சார்பில் திருச்சி பெரியார் மணியம்மை

இல்லத்தில் சில அறிஞர்களால் தொகுக்கப்பட்ட பெரியார் கருத்துகளைத்தான் பெரியார் திராவிடர் கழகம் வெளியிடுவதாக கூறப்படுகிறது. அப்படி தொகுக்கப்பட்டவைக்கு எந்த ஒரு பதிப்புரிமை தொடர்பான ஒப்பந்தம் இல்லாதபோது அதற்கு பதிப்புரிமை பெற அந்த அறிஞர்களுக்கே உரிமை உண்டு. ஆனால் தொகுக்கப்பட்டவையில் கூடுதலாக பல ஆயிரம் பக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளது; எனவே இது புதிய படைப்பு என்று பெரியார் திராவிடர் கழகம் வாதிடுகிறது.

இப்படி சட்ட சிக்கல் பல உள்ள நிலையில் இந்த வழக்கின் தீர்ப்பை நீதிமன்றத்திடமே விட்டுவிட்டு அறிவு சொத்துரிமையின் அரசியல் என்ன? பெரியாரிய பார்வையில் அறிவுச் சொத்துரிமை யாருக்கானது? என்று பார்ப்போம்.

**அமெரிக்காவின் மிக பெரிய ஆயுதம் - அறிவுச் சொத்துரிமை**

1980 - களில் IBM, PFIZER, MICROSOFT, BRISTOL-MYERS, DU PONT, GENERAL ELECTRIC, GENERAL MOTORS, MONSANTO, ROCKWELL INTERNATIONAL, WARNER COMMUNICATION, JOHNSON & JOHNSON, MERCK, FMC CORPORATION போன்ற அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் ஒன்று கூடி ADVISORY COMMITTEE FOR TRADE NEGOTIATIONS (ACTN) என்ற குழுவை எற்படுத்தினர். உலகெங்கும் வலுவான அறிவுச் சொத்துரிமை சட்டங்களை நிறுவ இந்த குழு அலோசித்தது. 1981 இருந்து இக்குழுவுக்கு பில்ஸ்சர் (PFIZER) என்ற பன்னாட்டு நிறுவனத்தின் தலைமை நிர்வாகி எட் பிராட் (ED PRATT) தலைவர் பொறுப்பில் இருந்தார். இவருடைய நிறுவனத்தின் மருத்துவ பொருட்களை காப்பி அடித்து பல நிறுவனங்கள் மருந்துகள் செய்வதாக இவர்

எண்ணினார்.




...

MICROSOFT நிறுவனத்தின் கணினி மென் பொருள் (SOFTWARE PROGRAM)களை பலர் அனுமதி இல்லாமல் பயன்படுத்துவதை தடுக்க உலகெங்கும் பதிப்புரிமை சட்டம்

வலுப்படுத்த வேண்டும் என்று அந்த நிறுவனம் கருதியது. குறிப்பாக இந்தியா போன்ற ஏழை நாடுகள் இத்தகைய செயலில் ஈடுபடுவதாக கூறப்பட்டது. இவற்றை கட்டுப்படுத்த கடுமையான கட்டுப்பாடுகள் நிறைந்த அறிவுச் சொத்துரிமை சட்டம் அவசியம் என்று இந்த குழு எண்ணியது.




...

உலகெங்கும் இத்தகைய சட்டங்களை பரப்ப “காட்” (GATT) கூட்டத் தொடரில் அறிவுச் சொத்துரிமை குறித்தான ஒப்பந்தை முன்வைக்க வேண்டும் என்று USTR என்கிற அமெரிக்க வணிக துறையிடம், இவ்வமைப்பு ஆலோசனை வழங்கியது. அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்ட அமெரிக்க அரசு 1987 நடந்த GATT மாநாட்டில் வணிகம் தொடர்பான அறிவு சொத்துரிமைக்கான ஒப்பந்தம் (TRADE - RELATED INTELLECTUAL PROPERTY RIGHTS AGREEMENT) என்கிற புதிய ஒப்பந்தத்தை முன் வைத்தது.

1987ல் துவங்கிய இந்த உருகுவே சுற்று (URUGUAY ROUND) என்று அழைக்கப்படும் காட் ஒப்பந்த (GATT) பேச்சுவார்த்தையில் தான், சில மாற்றங்களுடன் அறிவு சொத்துரிமை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வது என 1994ல் முடிவானது. மேலும் இந்த காட் (GATT) கூட்டத்தொடரில் தான் WTO - உலக வர்த்தக நிறுவனம் என்னும் புதிய அமைப்பை ஏற்படுத்தவும் முடிவானது. இதன் பயனாக உலக வர்த்தக நிறுவனம் 1995ல் உதயமானது.

இவ்வாறு திட்டமிட்டு அறிவு சொத்துரிமை சட்டங்கள் ஏழை நாடுகள் மீது காட் மாநாட்டின் மூலமாக அமெரிக்காவால் திணிக்கப்பட்டது. அதோடு மட்டும் அல்லாமல் அமெரிக்காவில் வணிக சட்டம் 1974 (TRADE ACT 1974) என்று ஒரு சட்டம் உள்ளது. இச்சட்டத்தில் பிரிவு 301 அறிவு சொத்துரிமை சட்டங்களை சரியாக நடைமுறை படுத்தாத நாடுகளுடன் வர்த்தகம் செய்துக் கொள்ள தடை விதிக்கிறது. ஆக அறிவு சொத்துரிமை சட்டங்களை அமெரிக்க அளவுகோள்படி இயற்றியிருந்தால் மட்டும் அமெரிக்காவுடன் இந்திய வர்த்தக உறவு சாத்தியம். 90-களின் பின் மத்தியில் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ், பாரதிய ஜனதா இரண்டு தேசிய கட்சிகளுமே அமெரிக்காவுடனான நட்பை விரும்பின. அதன்படி அறிவு சொத்துரிமை சட்டத்தில் தொடர்ந்து பல மாற்றங்களை செய்தன.

**அறிவுச் சொத்துரிமை யாருக்கானது ?**




...

இப்படி பன்னாட்டு/இன்னாட்டு நிறுவனங்கள் அறிவு சொத்துரிமை ஆவசியத்தை வழியுறுத்துவதின் நோக்கம் என்ன? வர்த்தக நிறுவனங்களுக்கு அறிவுச் சொத்துரிமை என்ற பெயரில் ஏகபோக உரிமை தருவதுதான்.

TRIPS ஒப்பந்திற்கு பின் எல்லா துறை சார்ந்த கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை 20 ஆண்டுகளுக்கு கொடுக்கும் வகையில் இந்திய காப்புரிமை சட்டம் மாற்றப்பட்டது. இதன்படி மருந்து முதல் விவசாயிகளுக்கு தேவையான உரம், விதை, பூச்சி மருந்து வரை அனைத்திற்கும் காப்புரிமை கொடுக்கப்படுகின்றன.




...

இதனால் மருந்துக்கும், உணவுக்கும், அன்றாட அத்தியாவசிய பொருட்களுக்கும் நாம் பன்னாட்டு/இன்னாட்டு நிறுவனங்களை நம்பி இருக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டிருக்கிறோம்.

கணினி மென்பொருளுக்கான 90 சதவித பதிப்புரிமையை பெற்றுள்ள MICROSOFT நிறுவனம், தன்னுடைய அனுமதி இல்லாமல் உலகில் கணினி இயங்காது என்று கூறுகிறது. பல மென்பொருளுக்கு பதிப்புரிமை பெற்ற இந்நிறுவனத்தின் அனுமதி இல்லாமல் இந்த மென்பொருள்களை ஆய்வு செய்ய முடியாது. இதன்படி இந்நிறுவனத்தின் மென்பொருளை நாம் பயன்படுத்த முடியுமே தவிர அவற்றை மாற்றுவதையோ மேம்படுத்துவதையோ பதிப்புரிமை சட்டம் தடை செய்கிறது.



...

இதற்கு மாற்றாக COPYLEFT என்கிற அடிப்படையில் LINUX என்கிற பொது மக்களுக்கான மென்பொருள் இன்று பரவலாக அறிமுகமாகியுள்ளது. இந்த வகை மென்பொருள் பயன்படுத்துவோரே, தங்கள் தேவைக்கு ஏற்ப அவற்றை மாற்றிக்கொள்ளும் வகையில் இந்த மென்பொருட்கள் அமைக்கப்பட்டுள்ளது.

பெரியாரிய பார்வை கொண்ட யாரும் இதுபோன்ற COPYLEFT மக்கள் இயக்கத்தை தான் வலுப்படுத்த எண்ணுவர். கேரள அரசு கூட LINUX மென்பொருளை மட்டுமே அரசு அலுவலகத்தில் பயன்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

TRIPS ஒப்பந்திற்கு பின் இந்திய பதிப்புரிமை சட்டத்தில் தொலைக்காட்சி ஒளிப்பரப்புக்கும் பதிப்புரிமை சட்டப்படி ஒளிப்பரப்பு உரிமை (BROADCASTING RIGHT) கொடுக்கப்பட்டது. அதன் பயன் இன்று கிரிக்கெட் விளையாட்டை ஒளிபரப்பு செய்வதற்கு பல ஆயிரம் கோடிகள் விலை நிர்ணயிக்கப்படுவதை நாம் அறிவோம்.


COPYLEFT
COPYRIGHT
ASHLEY COOPER

...


COPYLEFT

...



...

இப்படி நம்மை சுற்றியுள்ள எல்லா கண்டுப்பிடிப்புகளுக்கு காப்புரிமையும், கலை சார்ந்த படைப்புகளுக்கு பதிப்புரிமையும் பெற்றுள்ள நிறுவனங்கள் தன் கட்டுப்பாட்டில் உலகத்தையே வைத்துள்ளன. தங்களுக்கு உரிமையான பொருட்களை வேறுயாரும் தயாரிப்பதை தடுக்க தங்கள் பொருட்களின் மீது வணிக குறியீடு இடுகின்றனர். இவ் வணிக குறியீடும் ஒரு அறிவு சொத்துரிமை தான், இதற்கான சட்டம் TRADE MARK ACT 1999 (TRIPS ஒப்பந்திற்கு பின் பலவாறு மாற்றப்பட்டது). இச்சட்டம் ஒரு நிறுவனத்தில் வணிக குறியீட்டை வேறுயாரும் பயன்படுத்த தடை விதிக்கிறது.

பன்னாட்டு/இன்னாட்டு நிறுவனங்கள் தங்களுடைய பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதைவிட அவற்றை விற்பனை செய்வதற்கான விளம்பரத்திற்கு பல ஆயிரம் கோடிகள் செலவு செய்கின்றன. மக்கள் மனதில் இந்நிறுவனங்களின் வணிக குறியீடு (TRADE MARK) பதிவு செய்யப்படுகிறது. இத்தகைய வணிக குறியீடுகளை கொண்டு அப்பொருளின் தரத்தை நாம் உயர்வானதாக கருதுகிறோம்.




தரத்தை நிர்ணயம் செய்வதற்கு இந்திய அரசு தரநிர்ணய சட்டத்தை இயற்றியுள்ளது. இந்த சட்டத்தில் உள்ள தரத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படும் வணிக பொருட்களுக்கு

ISI / BIS என்கிற முத்திரையை இட்டுக்கொள்ள இச்சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் எல்லா வணிகபொருட்களும் இந்த முத்திரையை அவசியம் பெற்றிருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இதனால்தான் பூச்சி மருந்துகள் உடைய பெப்சி - கோக் எவ்வித தடையும் இல்லாமல் விற்பனை செய்யப்படுகிறது. பெப்சி - கோக் நிறுவனங்களின் வணிக குறியீடு நம் மனதில் பதிய வைக்க பலநூறு ஆயிரம் கோடிகள் செலவு செய்யப்படுகின்றன. இதில் இவை பூச்சி மருந்தை கொண்டது என்பது யார் காதுக்கும் எட்டாமல் போய்விடுகிறது.

பெப்சி - கோக் மட்டும் அல்ல இந்தியாவில் விற்பனையாகும் எந்த பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களும் ISI முத்திரை இல்லாததைக் கொண்டு இந்திய தரநிர்ணய சட்டப்படி இவை தயாரிக்கப் படுவதில்லை என்பதை நாம் அறியலாம். தொடர் விளம்பரங்கள் மூலம் இந்நிறுவனங்களின் வணிக குறியீட்டை நம் மனதில் பதியவைப்பது மூலம், ஒருவித நுகர்வு கலாச்சாரம் வளர்க்கப்படுகிறது.

இதை தவிர உலக வர்த்தக நிறுவனத்திற்கு பின் இந்தியாவில் இயற்றப்பட்டுள்ள புதிய அறிவு சொத்துரிமை சட்டம்

- பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பாரம்பரிய பொருட்களை உற்பத்தி செய்ய அனுமதிக் கொடுக்கும் GEOGRAPHICAL INDICATIONS OF GOODS (REGISTRATION AND PROTECTION) ACT, 1999.
- பொருட்களின் வடிவமைப்புகளுக்கு பதிப்புரிமை வழங்கும் DESIGNS ACT, 2000.
- மின் பொருள் வடிவமைப்புகளுக்கு பதிப்புரிமை வழங்கும் SEMICONDUCTOR INTEGRATED CIRCUITS LAYOUT-DESIGN ACT, 2000.
- தாவரம், விதை, மரம் போன்றவற்றுக்கு காப்புரிமை கொடுக்கும் PROTECTION OF PLANT VARIETIES AND FARMERS RIGHTS ACT, 2001.

ஆக நம்மை சுற்றியுள்ள யாவும் அறிவு சொத்துரிமை சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப் படுகின்றன.

அக்கட்டுப்பாட்டை நிறுவனங்கள் பெற்றுள்ளன. ஆக நிறுவனமயமாவதற்கே இந்த அறிவு சொத்துரிமை பயன்படும்.

தன்னுடைய வாழ்நாள் முழுவதும் சமூக மேம்பாட்டிற்கு எதிராக இருந்த அனைத்து மதக்கோட்பாடுகளுக்கு மட்டுமல்லாமல், இந்திய அரசியல் அமைப்பு சட்டம் உள்பட பல சட்டங்களையும் எதிர்த்தவர் பெரியார். அத்தகைய பெரியாரை, மக்களை சுரண்டுவதற்கான அறிவு சொத்துரிமை சட்டத்தைக் கொண்டு நிறுவனமயமாக்குவது, பெரியாருக்கு இரண்டாவதாக கட்டப்படும் கல்லறை என்றே சொல்ல வேண்டும்.

-மு. வெற்றிச்செல்வன்

(vetri@lawyer.com)



...

# 23. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் அஞ்சல் வழி சித்த மருத்துவ கல்விக்கு நீதிமன்றம் தடை !

THURSDAY, OCTOBER 23, 2008

தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம், பத்தாம் வகுப்பு தேறியவர்களுக்கு அஞ்சல் வழியில் ஓராண்டில் சித்த மருத்துவம் கற்றுத்தந்து டிப்ளமோ வழங்குவதாக கடந்த ஆண்டு விளம்பரம் செய்தது.

இந்நிலையில்...




...

”மருத்துவ கல்லூரிகள் அல்லது பல்கலைக்கழகங்கள் மட்டும்தான் மருத்துவ பயிற்சி அளிக்க முடியும் என்கிறது இந்திய மருத்துவ கவுன்சில் (INDIAN MEDICAL COUNCIL).

சித்த மருத்துவ கல்வியை அங்கிகரிக்க இருக்கிறது இந்திய மருத்துவத்திற்கான மத்தியக் குழு (CENTRAL COUNCIL FOR INDIAN MEDICINE).

தமிழகத்தில் மருத்துவ கல்வியை அங்கிகரிக்க வேண்டியது டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகம் (DR. ).

தொலைநிலை கல்வியை அங்கிகரிக்க வேண்டியது மத்திய அரசின் தொலைநிலை கல்விக்குழு (DISTANCE EDUCATION COUNCIL).

இந்த அமைப்புகளின் அங்கீகாரம் இல்லாமல் தமிழ்ப் பல்கலைக்கழகம் மருத்துவ

கல்வியை “தொலைநிலை கல்வி”யில் வழங்குகிறது”

…என்றும், இந்த கல்வி தமிழ் மக்களின் மருத்துவ நலனில் பேராபத்தை விளைவிக்கும் என்றும் குறிப்பிட்டு, இந்த படிப்புக்கு தடைவிதிக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கின் இறுதி விசாரணை கடந்த 13-10-2008 அன்று தலைமை நீதிபதி ஏ.கே.கங்குலி, நீதிபதி இப்ராகிம் கலிபுல்லா ஆகியோர் அடங்கிய முதன்மை ஆயம் முன்பு விசாரணைக்கு வந்தது.



…

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், நமது மனுவில் உள்ள வாதங்களை ஏற்றுக்கொண்டு, தஞ்சாவூர் - தமிழ்ப் பல்கலைக் கழகம், சித்த மருத்துவ டிப்ளமோ படிப்பை நடத்த தடை விதித்து உத்தரவிட்டனர்.

இந்த வழக்கை தொடர்வதற்கு ஆலோசனை வழங்கிய சித்த மருத்துவர்கள், எதிர் வழக்காடிய தமிழ்ப் பல்கலைக் கழக நிர்வாகத்தினர், பல்கலைக் கழகத்திற்கு ஆதரவாக வாதாடிய பரம்பரை சித்த மருத்துவர்கள், செய்தி வெளியிட்ட செய்தியாளர்கள், தாமதமாக வழங்கினாலும் நல்ல தீர்ப்பை வழங்கிய நீதிபதிகள், ஆதரவும் வாழ்த்தும் தெரிவித்த வலைப்பூ வாசகர்கள் அனைவருக்கும் நன்றி.

இந்த வெற்றியை சமூக செயல்பாட்டுக்கான வலைப்பூவான **மக்கள்**

**சட்டம்** வாசகர்களுக்கு சமர்ப்பிக்கிறோம்.

சமூகத்தில் தீயவிளைவுகளை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகளை, சட்டத்தின் துணையுடன் எதிர்த்து நின்று தொடர்ந்து போராடவும், வெற்றி பெறவும் உங்கள் உதவியை நாடுகிறோம்.

-மக்கள் சட்டம் குழு

# 24. பொருந்தாத திருமண உறவிலிருந்து விலகுவது எப்படி?

THURSDAY, OCTOBER 23, 2008

இரு மனங்கள் ஒப்பி உடன் வாழ்வதே திருமணம். திருமணம் என்ற சடங்கு நடந்து விட்ட காரணத்தாலேயே இரு முரண்பட்ட மனங்கள் உடன் வாழ்வது தேவையில்லாதது.

‘திருமணம் என்பது ஒரு சமூக ஒப்பந்தம் மட்டுமே’ என்பதை புரிந்து கொண்டால், திருமணம் என்ற சடங்கில் எந்த தெய்வீகத்தன்மையோ, புனிதத்தன்மையோ இல்லை என்பதை புரிந்து கொண்டால் ‘மணவிலக்கு’ என்ற சொல் எந்த விதத்திலும் அச்சுறுத்தாது.




...

இரு மனங்கள் இணையும் திருமணத்தில், ஏதோ ஒரு மனம் உடன்பட முடியாவிட்டால் திருமணத்திற்கு முன்னரே பிரிவது அனைவருக்கும் நலம் பயக்கும். ஆனால் இந்திய திருமணச் சூழலில் திருமணத்திற்கு முன் மணம் செய்து கொள்ளவிருக்கும் இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வது அவ்வளவு எளிதல்ல.

உரிய காரணம் இன்றி பிரியும் துணையை மீண்டும் அழைக்க ‘மணவாழ்வுரிமை மீட்பு சட்டம்’ பயன்படுகிறது.

பொருந்தாத திருமணத்திற்குப்பின், பிரிவதைத்தவிர வேறு வழியில்லை என்று முடிவெடுப்பவர்களுக்கும் சட்டம் வழிகாட்டுகிறது.

சிறப்புத் திருமணச் சட்டத்தின் பிரிவு 27, இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13, (கிறிஸ்தவர்களுக்கான) இந்திய திருமண முறிவுச் சட்டம் ஆகியவை மத சடங்குகளில் ஈடுபாடு இல்லாதவர்கள் (Agnostics), நாத்திகர்கள் (Atheists), இந்துக்கள், கிறிஸ்தவர்கள் ஆகியவர்களுக்கான மணமுறிவு உரிமைகளை விளக்குகின்றன.

**சிறப்புத் திருமணச் சட்ட**த்தின்படி

1. வாழ்க்கைத் துணைவர் அல்லாத வேறொருவருடன் விரும்பி உடலுறவு கொள்ளுதல்,


Divorce Decree

…



…

2. மனுதாரரை உடல்ரீதியாகவோ, மனரீதியாகவோ கொடுமை செய்தல்,

3. மனுதாரரை இரண்டுக்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு கைவிட்டுச் செல்லுதல்,

4. தம்பதிகளில் ஒருவர் தீர்க்க முடியாத அளவில் மனநோய்க்கு ஆளாதல்,

5. தம்பதிகளில் ஒருவர் எளிதில் தொற்றக்கூடிய பால்வினை நோயால் பாதிக்கப்படுதல்,

6. தம்பதிகளில் ஒருவர் தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு மேலாக உயிருடன் உள்ளாரா? இல்லையா? என்பதை தெரியாதிருத்தல்,

7. திருமணமான கணவன் ஓரினப்புணர்ச்சி(Sodomy), விலங்குகளுடன் புணர்ச்சி (Bestial-ity) கொண்ட குற்றம் செய்தல்,

8. தம்பதிகளில் ஒருவர் இந்திய தண்டனை சட்டத்தில் கூறப்பட்டுள்ள குற்றம் ஒன்றிற்காக ஏழு ஆண்டுகளுக்கு குறையாத சிறைத்தண்டனை பெறுதல்

ஆகிய சூழ்நிலைகளின்போது பாதிக்கப்பட்டவர் உரிய நீதிமன்றத்தை அணுகி மணமுறிவு கேட்டு மனுச் செய்யலாம்.

**இந்து திருமணச் சட்டத்தின்படி** திருமணம் செய்தவர்கள், காரணம் 8 தவிர மேற்கண்ட காரணங்களுக்காகவோ, கணவரோ/மனைவியோ இல்லறத்திலிருந்து விலகி துறவறம் மேற்கொண்டாலோ, இந்து



...

மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறினாலோ அதைக்காரணமாக கூறி மணவிலக்கு கோரலாம்.

கிறிஸ்தவ திருமணச் சட்டத்தின்படி திருமணம் செய்த ஒரு ஆண், மனைவியை மணவிலக்கு செய்ய வேண்டுமெனில், திருமணத்திற்கு பின்னர் மனைவி மாற்றானுடன் உடலுறவு செய்தால் மட்டும் அதை நிரூபித்து மணவிலக்கு கோரலாம்.

**கிறிஸ்தவ திருமணச் சட்டப்படி** திருமணம் செய்த கணவன்,



...

1. திருமணத்திற்கு பின் கிறிஸ்தவ மதத்தொழிலை விட்டு விலகி வேறு மதம் சார்ந்த தொழிலை மேற்கொண்டாலோ,

2. உடலுறவு கொள்ளத் தடை செய்யப்பட்ட உறவு முறையில் உள்ள வேறு ஒரு பெண்ணோடு உடலுறவுக் குற்றம் (incestuous adultery) புரிந்தாலோ,

3. மற்றொரு பெண்ணை இரண்டாவதாக மணம் செய்து கொண்டு அவளுடன் பிறன்மனைப் புணர்ந்தாலோ (bigamy with adultery),

4. வன்முறைப்புணர்ச்சி, இயற்கைக்கு மாறான புணர்வு, விலங்குகளுடன் புணர்தல்,

5. நெறிகெட்ட வாழ்க்கை காரணமாக பெண்ணை கொடுமை செய்தாலோ,

6. இரண்டு ஆண்டுகளுக்கு மேல் மனைவியை துறந்து சென்று விட்டாலோ,

7.  ஆண்மையற்று இருந்தாலோ

… மனைவி மணவிலக்கு கோரி உரிய நீதிமன்றத்தில் மணவிலக்கு கோரலாம்.

இந்தியாவில் உள்ள **இஸ்லாமியர்களுக்கான சட்டமும்** மணவிலக்கு குறித்த அம்சங்களை விவரிக்கிறது.

இஸ்லாமிய ஆண்களுக்கு மணமுறிவு குறித்து அளிக்கப்படும் உரிமைகள் எல்லை அற்றதாக உள்ளது.



…

மனைவிக்கு காரணத்தை தெரிவிக்காமலே “தலாக்” எனப்படும் மணமுறிவை அறிவிக்க இஸ்லாமிய ஆண் உரிமை படைத்தவனாகிறான். மேலும் மனைவிக்கு தெரிவிக்காமலே கூட தலாக்கை செயல்படுத்தும் திறன் இஸ்லாமிய ஆண்களுக்கு இருக்கிறது. இதில் நீதிமன்றம்

தலையிடுவதில்லை.

இந்தியாவில் உள்ள இஸ்லாமிய பெண்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இஸ்லாமியர்கள் திருமண இழப்பு சட்டம், 1939ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்படி

1. நான்கு ஆண்டுகளுக்கு மேல் கணவன் காணாமல் போய்விட்டால்,
2. மனைவிக்கு தேவையான பராமரிப்பு செலவுத்தொகையை கணவன் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு கொடுக்கத்தவறினால்,
3. கணவனுக்கு ஏழு ஆண்டுகளோ, அதற்கு அதிகமாகவோ சிறைத்தண்டனை விதிக்கப்பட்டால்,
4. கணவனுக்கு விதிக்கப்பட்ட திருமணக்கடமைகளான மனைவியை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளுதல், குழந்தைகளை பராமரித்தல் ஆகியவற்றை கணவன் மூன்று ஆண்டுகளுக்கு புறக்கணித்தால்,
5. கணவன் ஆண்மையற்று இருந்தால், தொழுநோய் பீடிக்கப்பட்டிருந்தால், தொற்றக்கூடிய பால்வினை நோய் இருந்தால், திருமணத்திற்கு தேவையான மனவளர்ச்சி இல்லாமலிருந்தால் …



…

…பாதிக்கப்பட்ட இஸ்லாமியப் பெண் உரிய நீதிமன்றத்தை அணுகி மணமுறிவு பெறலாம்.

இத்தகைய வழக்கு விசாரணைகளை பொதுவில் நடத்தாமல், மூடிய அறைக்குள் நடத்தவும் (In Camera Proceedings), வழக்கு விவரங்களை செய்தியாளர்கள் வெளியிடாமல் தடுக்கவும் முடியும். வழக்கு தரப்பினர்கள் உடன்படும் நிலையில் வழக்கு விசாரணையை துரிதப்படுத்தி இசைவின் பேரில் மணமுறிவு (Divorce by Mutual Consent) பெறவும் இயலும்.

இத்தகைய மணமுறிவு கேட்கும் தரப்பினர் உரிய வருவாய் இன்றி அவதியுறும் நிலையில், எதிர் தரப்பினர் வருவாய் படைத்தவர் என்று நிரூபிக்க இயலும் நிலையில் மனுதாரருக்கு தற்காலிக அல்லது நிரந்தர பராமரிப்பு கோரவும் இயலும்.

எனவே, பொருந்தா மண உறவில் யாரும் விருப்பமின்றி நீடிக்கவேண்டிய தேவையில்லை. எனவே துணிந்து முடிவெடுங்கள்.



...

அதற்கு முன் **உங்கள் எதிர்காலம் குறித்தும், குழந்தைகள் (இருந்தால்) எதிர்காலம் குறித்தும் ஆழச் சிந்தித்துவிட்டு...!**

- சுந்தரராஜன் . பி

(sundararajan@lawyer.com)

**பிரிந்த காதல் மனைவியை/கணவரை மீட்க சட்டம் உதவுமா?**

## TUESDAY, OCTOBER 21, 2008

ஆண்களுக்கும், பெண்களுக்கும் கிடைக்கும் உயர்கல்வியும், வேலைவாய்ப்பும் அவர்களது வாழ்க்கைத்தரத்தை வெகு உயரத்திற்கு கொண்டு சென்றுவிடுகிறது. பெற்றோர்கள் வாழ்வின் இறுதியில் பெற்ற ஊதியத்தைவிட அதிகமான சம்பளத்தை பெறும் இளைஞர்கள், பணத்தின் மூலமாகவே அனைத்தையும் அடைந்துவிட முடியும் என்றும் நினைத்து விடுகின்றனர்.



...

பெரும்பாலான காதல் திருமணங்களை சாதியும், மதமும், மொழியும் தீர்மானிக்காவிட்டாலும், பணியாற்றும் நிறுவனமும், ஊதியமும் நிர்ணயிக்கிறது என்பதை மறுக்க முடியாது. காதலின்போது காதலரின் நல்ல குணங்களே கண்களில் தெரிய காதலில் கசிந்துருகிய மனங்கள் திருமணம் என்ற பந்தத்திற்குள் இணைய விரும்புகின்றன. காதலிக்கும்போது ஒரு நாளின் சில மணிநேரங்கள் மட்டுமே சேர்ந்திருக்கும்போது தெரியாத, பல விவ(கா)ரங்கள் திருமணத்திற்குபின் வாழ்க்கை முழுவதும் இணைந்து வாழ முற்படும்போது தெரிந்து விடுகிறது.

திருமணத்திற்குபின் ஏற்படும் ஏமாற்றங்கள் கோபமாக மாறும்போது, அதற்கு சுற்றத்தில் உள்ளவர்கள் மேலும் எரிபொருள் ஊற்றி எரியவைக்கும்போது, பாதிக்கப்பட்டுள்ளதாக உணருபவரின் பொருளீட்டும் திறன் மிக முக்கிய கிரியா ஊக்கியாக அமைந்து திருமண வாழ்வை கேள்விக்குறியாக்குகிறது.



...

கணவனோ, மனைவியோ திருமண வாழ்விலிருந்து பிரிந்து செல்லும் நிலை ஏற்படும்போது, அப்பிரிவை ஒரு முடிவுக்கு கொண்டுவந்து மணவாழ்வை மீண்டும் தொடர சட்டம் வழிகாட்டுகிறது.

மணவாழ்வுரிமை மீட்பு சட்டம் **(Restitution of Conjugal Rights)** எனப்படும் இந்த சட்டம், சிறப்புத் திருமணச்சட்டம், இந்துத் திருமணச்சட்டம், கிறிஸ்தவ திருமணச்சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் திருமணம் செய்தவர்களுக்கு பயனளிக்கிறது.

மணவாழ்வில் ஈடுபட்டுள்ள தம்பதிகளில் ஒருவர், ஏற்கக்கூடிய காரணம் இன்றி வாழ்க்கைத்துணையைவிட்டு பிரிந்து சென்றுவிட்டால், பாதிக்கப்பட்டவர் தமது தாம்பத்திய வாழ்க்கையை மீட்டுத்தருமாறு கோரி உரிய குடும்பநல நீதிமன்றத்தில் வழக்கு தொடரமுடியும்.

சிறப்புத் திருமணச்சட்டத்தின் பிரிவு 22, இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 9, இந்திய கிறிஸ்தவர்களுக்கான திருமண முறிவுச்சட்டம் ஆகியவை மணவாழ்வை மீட்பதற்கும், தாம்பத்திய வாழ்வை பெறுவதற்குமான உரிமைகளை வலியுறுத்துகின்றன.

இந்த சட்டங்களின் கீழ், பிரிந்து சென்ற வாழ்க்கைத்துணையுடன் மீண்டும் இணைந்து வாழவிரும்பும் ஒரு நபர் உரிய தகுதி வாய்ந்த நீதிமன்றத்தில், இதற்கான மனுவை பதிவு செய்ய வேண்டும்.

அந்த மனுவுடன் திருமணம் நடந்ததற்கான சான்றுகள், சேர்ந்து வாழ்ந்ததற்கான ஆதாரங்கள், குழந்தைகள் இருந்தால் அக்குழந்தைகளின் பிறப்பு சான்றிதழ்கள், பிரிவு ஏற்படுவதற்கான காரணங்கள் (தெரிந்திருந்தால்), மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் ஆகியவற்றை குறித்து தெளிவான வாக்குமூலங்களையும் பதிவு செய்ய வேண்டும்.

இவற்றைப் பரிசீலித்து பார்க்கும் நீதிமன்றம், பிரிந்து வாழும் எதிர்தரப்பினருக்கு இந்த வழக்கு குறித்து தகவல் தெரிவித்து, அவர்களுடைய தரப்பை எடுத்துக்கூறுமாறு



...



...

அழைப்பாணை (Summon) விடுக்கும். நிர்ணயிக்கப்பட்ட நாளில் எதிர்தரப்பினர் அந்த நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி, தங்கள் தரப்பை எடுத்துக்கூற உரிய வாய்ப்பு அளிக்கப்படும்.



...

மீண்டும் இணைந்து வாழ விரும்பாத நிலையில் எதிர்தரப்பினர் இருந்தால் அதற்கான காரணங்களை நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும். அந்த காரணங்கள் ஏற்கத் தகுந்ததாக இருந்தால், உரிய முறையில் மணவிலக்கு பெறுவதற்கான ஆலோசனையுடன் அந்த வழக்கு தீர்க்கப்படும். அதற்கான காரணங்களை உரிய சான்றாதாரங்களுடன் நிரூபிக்க வேண்டியது, பிரிந்து வாழும் எதிர்தரப்பினரின் கடமையாகவே கருதப்படும்.

பிரிந்து வாழ்வதற்கான காரணங்களை எதிர் தரப்பினர் உரிய முறையில் நிரூபிக்காவிட்டால், அவர் கூறும் காரணங்கள் ஏற்கத்தகுந்தது இல்லை என்று தீர்மானிக்கப்பட்டு, மனுதாரருடன் இணைந்து வாழுமாறு எதிர்தரப்பினருக்கு உத்தரவு வழங்கி வழக்கு தீர்க்கப்படும்.

சின்னஞ்சிறு அற்பக் காரணங்கள் காரணமாக வாழ்க்கைத்துணையை பிரிந்து தனிமையில் தவிக்கும் தம்பதிகளுக்கு தேவையான ஒரு சட்டமாகவே இந்த மணவாழ்வை மீட்டளிக்கும் இந்த சட்டம் செயல்படுகிறது. பிரிந்து சென்ற இணையர்கள் இருவரும் மீண்டும் சந்திக்கவும், மனம் விட்டு பேசி தங்கள் கருத்து வேறுபாடுகளை களைந்து கொள்ளவும் இந்த வழக்கின்போது தேவையான வாய்ப்புகள் உள்ளன.

சட்டரீதியாக மட்டுமல்லாமல், உளவியல் ரீதியாகவும் தம்பதிகள் இருவரும் மீண்டும் தங்கள் நிலையை சுயபரிசோதனை செய்து கொள்ளவும் எதிர்காலம் கருதி உரிய முடிவு மேற்கொள்ளவும் இந்த சட்டம் பயன்படுகிறது.

- சுந்தரராஜன் . பி



...

(sundar@LawyerSundar.net)

# 25. திருமணப்பதிவு ஏன்? எப்படி?

WEDNESDAY, OCTOBER 8, 2008

திருமணம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்கான ஒரு சமூக ஒப்பந்தம் என்ற கருத்து அண்மைக்காலத்தில்தான் உருவாகியுள்ளது. அதற்கு முன், திருமணம் என்பது மிகவும் புனிதமான ஒன்றாக கருதப்பட்டு வந்துள்ளது.

இருமனம் இணைந்தால் திருமணம் இல்லையா? என்ற கேள்விக்கு பழைய மதம் சார்ந்த சட்டங்கள் இல்லை என்ற பதிலையே கூறின. மதம் சார்ந்த சட்டங்கள் அனைத்தும் தொடக்கத்தில் மதம் கடந்த திருமணங்களை ஏற்கவில்லை என்பதே உண்மை. காலப்போக்கில் இந்த சட்டங்கள் பல மாறுதல்களை சந்தித்து ஓரளவிற்கு வளர்ந்துள்ளது. எனினும் **நடைமுறையில் மதங்களை புறக்கணிக்கும் திருமணங்களை நிறைவேற்றுவதற்கோ, அவற்றை அங்கீகரிப்பதற்கோ மதம் சார்ந்த யாரும் தயாராக இருப்பதில்லை. அவர்களுக்கான ஒரே தீர்வு “சிறப்பு திருமணச் சட்டமே” ஆகும்.**

எந்த சட்டத்தின்படி திருமணம் நடந்தாலும் அதைப்பதிவு செய்வது என்பது தற்போது காலத்தின் கட்டாயமாகிறது. ஏனெனில் சொத்துரிமை, வாரிசுரிமை, குழந்தையின் முறைபிறப்புத் தன்மை ஆகியவற்றை நிரூபிக்க திருமணச் சான்றிதழே முக்கிய சான்றாவணமாக பயன்படுகிறது.



...

மதம் சார்ந்த திருமணங்கள் முதலில் மதப்பழக்க வழக்கங்களின்படியே நடைபெறுகிறது. இதை பின்னர் திருமணப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்வதே நடைமுறையில் உள்ளது. ஆனால் திருமணம் நடக்கும் இடத்திற்கே பதிவுத்துறை அதிகாரிகளை வரவழைத்து

திருமணத்தை பதிவு செய்வதற்கும் வசதி உள்ளது.

**இந்து திருமணத்தை பதிவு செய்தல்.**

இந்து திருமணச் சட்டத்தின்கீழ் திருமணத்தை பதிவு செய்யவிருக்கும் மணமக்கள் இருவரும் இந்துக்களாக இருக்க வேண்டும். மணமக்கள் இருவரும் ஒரே சாதியை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற சட்டம் மாற்றப்பட்டுவிட்டது. எனவே சாதிகளை கடந்த மணமக்களும் இந்த சட்டத்தின்கீழ் திருமணம் செய்து அதை பதிவும் செய்யலாம்.



...

மணமகனுக்கு 21 வயதும், மணமகளுக்கு 18 வயதும் நிறைந்திருக்க வேண்டும். இந்து மதத்தின் எந்த ஒரு பிரிவு/சமூகத்தின் பழக்க வழக்கங்களின்படியோ, சுயமரியாதை திருமணமாகவோ இந்த திருமணம் நடக்கலாம்.

மணமக்களின் வயதை உறுதி செய்யும் சான்றிதழ்கள், திருமணம் நடந்ததற்கான சான்றுகளுடன் (திருமண அழைப்பிதழ், ஆலயங்களில் வழங்கப்படும் ரசீதுகள், பிற ஆவணங்கள்), அந்த திருமணப் பதிவாளரின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் மணமகன்/மணமகள் வசிப்பதற்கான சான்றிதழ் அல்லது திருமணம் நடைபெற்றதற்கான சான்று ஆகியவற்றுடன் திருமணப் பதிவாளருக்கு விண்ணப்பித்தால் திருமணம் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

**கிறிஸ்தவ திருமணத்தை பதிவு செய்தல்.**



...

கிறிஸ்தவ திருமணச் சட்டத்தின்படி கிறிஸ்தவர்களின் திருமணத்தை நடத்திவைக்கும் அதிகாரம் அரசு அங்கீகாரம் பெற்றுள்ள மதகுருமார்களுக்கும், திருமணப்பதிவாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மணமக்கள் இருவருமோ அல்லது மணமக்களில் எவராவது ஒருவர் கிறிஸ்தவராக இருக்கும் நிலையில் கிறிஸ்தவ திருமணச் சட்டத்தின்கீழ் திருமணம் செய்வதை சட்டம் அங்கீகரிக்கிறது.

உரிய வயதடைந்த மணமக்கள், தாங்கள் திருமணம் செய்துகொள்ள விரும்புவது குறித்து எழுத்துப்பூர்வமான அறிவிப்பை மாவட்ட திருமணப்பதிவாளரிடம் வழங்க வேண்டும்.

அந்த அறிவிப்பில் திருமணம் செய்துகொள்ளவிரும்பும் நபர்களின் பெயர், தொழில் அல்லது நிலை, வசிப்பிடம், அந்த இடத்தில் வசித்த காலம், திருமணம் நடத்தவேண்டிய இடம் ஆகியவற்றை குறிப்பிட வேண்டும்.

அதன் நகல் திருமணப்பதிவாளரின் அலுவலகத்தில் பொதுப்பார்வைக்கு வைக்கப்படும். இந்த திருமணத்திற்கு ஏற்கத்தகுந்த மறுப்புகள் இல்லாத நிலையில் இந்த திருமணத்தை நடத்துவற்கான சான்றிதழ் வழங்கப்படும்.

இதையடுத்து இந்த திருமணம் அங்கீகரிக்கப்பட்ட மதகுரு அல்லது



...

திருமணப்பதிவாளரால் நடத்தி வைக்கப்படும்.

இந்த திருமணத்திற்கான சான்றிதழ்கள் அங்கீகரிக்கப்பட்ட திருமண பதிவாளர்கள் அல்லது மதகுருக்களிடமிருந்து பெறப்பட்டு அதன் நகல்கள் பதிவுத்துறை அலுவலகத்தின் மூலமாக வழங்கப்படும்.

**இஸ்லாமியத் திருமணங்கள்**

இஸ்லாமியத் திருமணங்கள் முழுமையாக மதம் சார்ந்த நடவடிக்கைகளாகவே உள்ளன. மணப்பெண்களுக்கு மஹர் எனப்படும் மணக்கொடை கொடுத்து மணப்பெண்ணின் சம்மதம் பெற்ற பின்னரே திருமணம் நடைபெறுவதாக கூறப்படுகிறது.

இந்த திருமணங்கள் “நிக்காஹ் பதிவுப் புத்தக”த்தில் பதிவு செய்யப்படுகிறது.

இஸ்லாமியத் திருமணங்களை ஆண்கள் ரத்து செய்வதற்கு நீதிமன்றத்தின் ஒப்புதல் தேவையில்லை என்ற நிலை இருப்பதால் பதிவுத்துறை அலுவலகங்களில் திருமணப்பதிவு அவசியமாக்கப்படவில்லை. எனினும் இஸ்லாமிய பெண்கள் திருமணத்தை ரத்து செய்யும்படி கோரினால் திருமணம் நடந்தததாக நிக்காஹ் பதிவுப் புத்தகத்தில் உள்ள பதிவு சான்றாக ஏற்கப்படுகிறது.

(குறிப்பு: மிகவிரிவான ஒரு தலைப்பு, மிகச்சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. ஐயங்களை மறுமொழிப்பெட்டியில் இட்டால் உரிய பதில்களை **தேடி** வழங்குவதற்கு முயற்சிக்கிறேன்)

-பி. சுந்தரராஜன்



...

(sundararajan@lawyer.com)

**(சட்டப்படி) கல்யாணம்தான் கட்டிக்கிட்டு ஓடிப்போகலாமா...?**

**SUNDAY, OCTOBER 5, 2008**

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாக கூறப்பட்டாலும், திருமணம் செய்து கொண்டவர்கள் வாழ்வதென்னவோ இந்த பூவுலகில்தான். திருமண வாழ்வும் சொர்க்கமாகவோ, நரகமாகவோ மாறுவதும் அவரவர் கைகளிலும், சுற்றுப்புறத்தில் உள்ளவர்களின் கைககளிலும்தான் இருக்கிறது.



...

சமூகரீதியில் திருமணம் என்ற நிகழ்வு பல்வேறு பெயர்களில் புனிதமாக கருதப்பட்டாலும், உரிய வயதடைந்த இரு எதிர்பாலினர் இணைந்து வாழ்வதற்கான ஒரு ஒப்பந்தமாகவே திருமணம் விளங்குகிறது.

திருமணம் என்பது இருவேறு மனம் மற்றும் உடல்களில் சங்கமமாக மட்டும் அல்லாமல் இருவேறு சமூகங்களின் பிணைப்பாகவும் மாறுகிறது. மேலும் இந்த நிகழ்வு புதிய உயிர்களை, உறவுகளை, உடைமைகளை தோற்றுவித்தல் போன்ற வேறுபல நிகழ்வுகளுக்கும் காரணமாகிறது. எனவே திருமணம் என்ற நிகழ்வை சட்டரீதியாக புரிந்து கொள்வது அவசியம்.



...

திருமணத்தின் முக்கிய நிர்பந்தமாக மணம் செய்துகொள்ளும் இருவரின் வயது, மணவுறவுக்கான உடல்நிலை, ம**ன**நிலை, ம**ண**நிலை ஆகியவை முக்கிய இடம் வகிக்கின்றன.

திருமணம் செய்துகொள்ளும் நபர்கள் எந்த சமூகம் சார்ந்தவர்களாக இருப்பினும் அவர்களின் திருமணத்தை சட்டரீதியாக பதிவு செய்வது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. குடியுரிமை, சொத்துரிமை, குழந்தைகளின் வாரிசுரிமை போன்ற பல்வேறு சட்டம் தொடர்பான விவகாரங்களுக்கும் திருமணத்தை பதிவு செய்தல் என்பது அவசியமாகிறது.

இந்த திருமணப்பதிவு, மதப்பழக்க-வழக்கங்களுக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது.

மதநம்பிக்கை இல்லாதவர்கள், மதங்களைப் பற்றிய அக்கறை இல்லாதவர்களுக்கான திருமணப்பதிவு "**சிறப்பு திருமணச் சட்டம்**" (Special Marriages Act) என்ற பிரிவில் விளக்கப்பட்டுள்ளது.

சாதிகளாலும், மதங்களாலும் பிரிக்கப்பட்டிருந்தாலும், மனங்களால் ஒன்றுபட்டவர்களின் திருமணங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதே இந்த சிறப்புத் திருமண சட்டத்தின் நோக்கம். **இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சட்டங்கள் மதம் கடந்த திருமணங்களை ஏற்பதில்லை. குறிப்பாக (பழைய) இந்துச் சட்டம் சாதிகள் கடந்த திருமணங்களை ஏற்பதில்லை.** எனவே சாதிகளையும், மதத்தினையும் கடந்து திருமணம் செய்ய

விரும்புபவர்கள் இந்த சட்டத்தின்கீழ்தான் திருமணம் செய்ய முடியும்.



...

**திருமணம் செய்வதற்கான நிபந்தனைகள்/தகுதிகள்:**

1. திருமணம் ஆகாத ஆண்/பெண்களும், கணவனை/மனைவியை இழந்தோரும், சட்டரீதியான மணவிலக்கு செய்தோரும் இந்த சட்டத்தின்கீழ் திருமணம் செய்ய தகுதி படைத்தவர்கள். திருமணம் செய்யவிருக்கும் ஆணுக்கோ, பெண்ணுக்கோ உயிருடன் வாழும் வாழ்க்கைத்துணைவர் இருக்கக்கூடாது.
2. திருமணம் செய்து கொள்ளவிருக்கும் இரண்டு பேரும் மண வாழ்வுக்குத் தேவையான ஆரோக்கியமான மனநிலையோடு இருக்க வேண்டும். உரிய மூளை வளர்ச்சி அடையாதோரும், மனநிலை குன்றியவர்களும் திருமணம் செய்ய முடியாது.
3. திருமணம் செய்து கொள்ளவிருக்கும் இருவரும் திருமண வாழ்வுக்குத் தேவையான உடல்நிலையை பெற்றிருக்க வேண்டும். மகப்பேறுக்கான தகுதியும் அவர்களுக்கு இருக்க வேண்டும். இதற்கான தகுதி பெறாதவர்கள் திருமணம் செய்ய இயலாது.
4. திருமணம் செய்யவிருக்கும் மணமகனுக்கு குறைந்தது 21 வயதும், மணமகளுக்கு 18 வயதும் நிறைந்திருக்க வேண்டும்.
5. திருமணம் செய்யவிருக்கும் மணமக்கள் இருவரும் தடுக்கப்பட்ட உறவுமுறையினராக இருக்கக்கூடாது. எனினும், அவ்வாறான உறவுமுறை திருமணம் அவர்களின் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டால் சட்டமும் அங்கீகரித்ததாகவே கொள்ளப்படும்.

**திருமண அறிவிப்பு:**

திருமணம் செய்வதற்கான உரிய தகுதிகளை கொண்ட மணமக்கள், அவர்கள் சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்து கொள்ளவிருப்பது குறித்து அவர்களில் எவரேனும் ஒருவர் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள திருமணப் பதிவு அதிகாரிக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.



...

அதனைப் பெற்றுக் கொண்ட திருமண அதிகாரி, திருமணம் செய்துகொள்ள இருப்பவர்களின் தகுதிகள் குறித்த ஆய்வை மேற்கொண்டு அதில் திருப்தி அடைந்தால், அவர்களின் திருமண அறிவிப்பை உரிய பதிவேட்டில் எழுதுவார். மேலும் அந்த அறிவிப்பின் நகல் ஒன்று அந்த அலுவலகத்தில் அனைவரின் பார்வையிலும் இடம் ஒன்றிலும் வைக்கப்படும்.

இந்த திருமணத்திற்கு சட்டரீதியான மறுப்பு கொண்டுள்ள எவரும், இந்த அறிவிப்பு வெளியான 30 நாட்களில் மறுப்பை தெரிவிக்கலாம். அந்த மறுப்பு ஏற்கப்படாத நிலையிலும், மறுப்புகள் ஏதும் பதிவு செய்யப்படாத நிலையிலும், அறிவிப்பு வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குப்பின் அந்த திருமணம் பதிவு செய்யப்படும். தவறான காரணங்களுக்காக எவரேனும் மறுப்பு தெரிவிக்கப்பட்டு அது விசாரணையில் தெரியவந்தால், அந்த மறுப்பை தெரிவித்தவருக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத வகையில் அபராதம் விதித்து, அந்த தொகையை முழுமையாகவோ மணமக்களுக்கு திருமண அன்பளிப்பாக அளிக்க உத்தரவிடப்படும்.

**திருமண நிகழ்வு:**

திருமண அறிவிப்பு வெளியிடப்பட்டு 30 நாட்கள் நிறைவடைந்தபின் எந்த ஒரு நாளிலும் திருமணம் நடைபெறலாம். அன்றைய தினத்தில் மணமக்கள் விரும்பும் முறையில் திருமணத்தை நடத்திக்கொண்டு, திருமண பதிவு அலுவலகத்தில் அதற்காக வைக்கப்பட்டுள்ள படிவத்தில் கையெழுத்திட வேண்டும்.

இரு தரப்பிலும் சாட்சியங்கள் கையொப்பம் இட்டதும், திருமணப்பதிவாளர் அந்த திருமணத்தை அங்கீகரித்து கையொப்பம் இடுவார். இதையடுத்து அந்த திருமணம் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டதாக கருதப்படும். இதற்கான சான்றிதழும் வழங்கப்படும்.

இந்த சட்டத்தின் கீழ் திருமணம் செய்யாமல் மதம் சார்ந்த வேறு முறைகளில் திருமணம் செய்துகொண்டோரும், இந்த சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ் தங்கள் திருமணத்தைப்பதிவு செய்யலாம்.


...Надеюсь,
мы не
поспешили...

...



...

-பி. சுந்தரராஜன்

(sundararajan@lawyer.com)

# 26. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் சிக்கல்களும் தீர்வுகளும் - 8

MONDAY, NOVEMBER 24, 2008

கண்ணகி முருகேசன் ஆகியோரை விஷம் வைத்துக் கொன்ற கொடுமையை கேள்விப்பட்ட துரைசாமிக்கு எதிரான படையாச்சி சாதி மக்கள் சிலர், காவல் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தனர். காவல் நிலையத்திலிருந்து பிணம் எரிந்து கொண்டிருந்த இடத்திற்கு விருத்தாசலம் காவல் நிலையத்தைச் சேர்ந்த ஓர் உதவி ஆய்வாளரும், 7 காவலர்களும் வந்து பார்த்துச் சென்றனர். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த வன்கொடுமை குறித்து தகவல் அறிந்த விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் மண்ணின் மைந்தர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், சாமிக்கண்ணுவையும் மற்றவர்களையும் அணுகி விபரம் அறிந்தனர். விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் தொல். திருமாவளவன், சாமிக்கண்ணு குடும்பத்தினரை பத்திரிகையாளர் சந்திப்பில் முன்னிலைப்படுத்தி, இந்த இரட்டைக் கொலையை வெளிக்கொணர்ந்தார். பின்னர், “நக்கீரன்' பத்திரிகயில்”விஷம் தந்து காதலர்கள் எரிப்பு! தமிழக பயங்கரம்' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையால் காவல் துறையினர் மீது அழுத்தம் ஏற்பட்டது. எனினும், வன்கொடுமை வழக்கைத் தொடக்கத்திலிருந்தே வீணடிக்கும் தங்கள் ”கடமை'யை காவல் துறையினர் செவ்வனே செய்தனர்.

சாமிக்கண்ணுவின் தம்பி அய்யாசாமி, முருகேசனையும் கண்ணகியையும் 8.7.2003 அன்று அதிகாலை 5 மணியளவில் துரைசாமியிடம் அழைத்து வந்ததாகவும், குடும்பத்தை அவமானப்படுத்தி ஓடிவிட்டதால் - இனிமேல் உயிரோடு விட்டு வைக்கக்கூடாது என்று “நவக்ரான்' பாட்டிலிலிருந்த விஷத்தை எவர்சில்வர் டம்ளரில் ஊற்றிக் கொடுத்து, தன் மகன் மருதுபாண்டியன் மூலம் கொடுத்து,”அந்த நாயைக் குடிக்கச் சொல்லுடா’' என்று கூறியதோடு, கண்ணகியை மிரட்டி விஷத்தை குடிக்கச் செய்ததாகவும்; அதேபோல், சாமிக்கண்ணு அதே ‘நவக்ரான்' பாட்டிலிலிருந்த விஷத்தை மற்றொரு எவர் சில்வர் டம்ளரில் ஊற்றிக் கொடுத்து, “அந்தப் பெண்ணே செத்துடுச்சி. இனிமேல் நீ எதுக்குடா உயிரோடு இருக்கணும். இதை குடிச்சிட்டு நிம்மதியாக போய் சேருடா' என்று சொல்லி முருகேசனை விஷத்தை குடிக்கச் செய்ததாகவும், இருவரும் இறந்ததும் பக்கத்து பக்கத்திலேயே வைத்து எரித்து விட்டதாகவும், அதன்பிறகு இரு தரப்பினரும் கிராமத்தில் பஞ்சாயத்து பேசி,”செத்தவங்க செத்துட்டாங்க, அதனால கேஸ் எதுவும் வேண்டாம்' என முடிவு செய்ததாகவும், இருந்தாலும் மகளை நாமே கொண்ணுட்டோமே என்று மனசாட்சி உறுத்தியதால், கண்ணகியின் தந்தை முருகேசன் புதுக்கூரைப்பேட்டை கிராம நிர்வாக அலுவலரிடம் வாக்குமூலம் அளித்ததாகவும்,

அதனடிப்படையில் கண்ணகியின் உறவினர் நால்வர் மீதும், முருகேசனின் உறவினர் நால்வர் மீதும் வழக்குப் பதிவு செய்ததுபோல் முதல் தகவல் அறிக்கை பொய்யாகப் பதிவு செய்யப்பட்டு 8 பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட கண்ணகியின் தந்தை துரைசாமியும் மற்றவர்களும் தாக்கல் செய்த முதல் பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்டது. எனினும், மீண்டும் ஒரு பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், துரைசாமி ஊராட்சிமன்றத் தலைவராக இருப்பதாலும், ஏற்கனவே 23 நாட்கள் சிறையில் இருப்பதாலும், 30 நாட்களுக்குமேல் சிறையில் இருக்க நேர்ந்தால், அவர் தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டப்படி தகுதியிழப்புக்கு ஆளாக நேரிடும் என்றும், ஆகையால் அவரை உடனடியாகப் பிணையில் விடுவிக்க வேண்டுமென்றும் அவரது வழக்குரைஞர் வாதிட்டார். அரசுத்தரப்பு வழக்குரைஞர், இதற்கு அரசுத்தரப்பில் தீவிரமான எதிர்ப்பு ஏதும் இல்லை என்று தெரிவித்தார். இதனடிப்படையில், அவருக்கும் மற்றவர்களுக்கும் பிணை வழங்கியது கடலூர் மாவட்ட அமர்வு நீதிமன்றம்.

எந்தக் குற்றமும் செய்யாத சாமிக்கண்ணு தரப்பினரை, வழக்கை முழுமையாக வீணடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே குற்றவாளிகளாக வழக்கில் காவல் துறையினர் சேர்த்தனர். இவ்வன்கொடுமை, வழக்குரைஞர் பொ. ரத்தினத்தின் கவனத்திற்கு வந்தவுடன், அவரும் இக்கட்டுரையாளரும், வழக்கின் புலன் விசாரணையை சி.பி.அய்.க்கு மாற்றக்கோரியும், துரைசாமிக்கும் அவரது உறவினருக்கும் வழங்கப்பட்ட பிணையை ரத்துசெய்யக் கோரியும், சென்னை உயர் நீதிமன்றத்தில் சாமிக்கண்ணு சார்பில் இரு மனுக்களை தாக்கல் செய்தனர். நீண்ட விசாரணைக்குப் பிறகு, 23.4.2003 அன்று நீதிபதி திரு. எஸ்.அசோக்குமார், வழக்கின் புலன் விசாரணையை சி.பி.அய்.க்கு மாற்றியும், மாவட்ட அமர்வு நீதிமன்றம் துரைசாமியின் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியைக் காப்பாற்றும் நோக்கத்துடன், இரட்டைக் கொலை வன்கொடுமை வழக்கென்றும் பாராமல் பிணை வழங்கி உத்தரவிட்டது தவறு என்று கூறி, துரைசாமிக்கு வழங்கப்பட்ட பிணையை மட்டும் ரத்து செய்து உத்தரவிட்டார்.

இதில் கவனிக்க வேண்டிய அம்சம் என்னவெனில், ஒரு நீதிமன்றம் வழங்கிய பிணையை எந்தெந்த காரணங்களுக்காக / நேர்வுகளில் ரத்து செய்யலாம் என்று முன் தீர்ப்புகள் உள்ளன (அவற்றின் தொகுப்பு கீழே). அவற்றில் உட்படாத சில நேர்வுகளிலும் பிணை ரத்து செய்ய முடியும் என்பதற்காகவே இவ்வழக்கு இங்கு குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது.

ஒரு வழக்கின் பொருண்மைகளைப் (Fact) பொருத்தே அவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும். முன்தீர்ப்புநெறி (Law of Precedents) இந்திய நீதிமன்றங்களில் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டாலும், முன் தீர்ப்பு இல்லையென்பதாலேயே ஒரு வழக்கில் கோரப்படும் தீர்வு வழங்கப்பட முடியாது என்பதல்ல. இதை சமூக செயல்பாட்டாளர்கள் மனதில் நிறுத்தி செயல்பட வேண்டும்.

ஒரு குற்றவியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பிணையை ரத்து செய்ய வேண்டுமெனில், கீழ்க்கண்ட ஏதாவது ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட

காரணங்களின் அடிப்படையில் மனுதாக்கல் செய்து கோரலாம். இவை உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்புகளின்படி உள்ள காரணங்களாகும். இவை முழுமையானவை அல்ல. இவை தவிர மற்றெந்த நியாயமான, ஏற்கத்தக்க காரணங்களின் அடிப்படையிலும் பிணையை ரத்து செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

1. பிணையில் விடுவிக்கப்படும் நபர் பிணையில் இருக்கும்போது, எவ்வகையான குற்றத்திற்காக வழக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறாரோ, அதே வகையான குற்றச் செயலில் ஈடுபடும்போது அவர் பிணையில் தொடர்ந்து இருக்கும் தகுதியை இழந்தவராகிறார்.

2. புலன் விசாரணையின்போது கிடைக்கும் புதிய தகவலின் அடிப்படையில் அந்நபர் கூடுதல் தண்டனைக்குரிய குற்றம் புரிந்தவராகத் தெரிய வருமாயின், அந்நபரின் பிணை திரும்பப் பெறப்படலாம்.

3. பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள குற்றம் சாட்டப்பட்ட நபர், புலன்விசாரணைக்கு எவ்விதத்திலும் இடையூறு ஏற்படுத்துவாரானால், அந்நபரின் பிணை திரும்பப் பெறத்தக்கதாகிறது.

4. வழக்கில் தொடர்புடைய சாட்சிகளை எவ்வகையிலாவது மிரட்டுவதன் மூலம் சாட்சியத்தைக் கலைக்க முற்படுவாரானால், அச்சூழலில் அவர் பிணையில் இருக்கும் தகுதியை இழக்கிறார்.

5. பிணையில் உள்ள நபர் தலைமறைவாக முயன்றாலோ, தப்பித்துச் செல்ல முயன்றாலோ, வெளிநாட்டிற்கு தப்பிச்செல்ல முயன்றாலோ அல்லது வேறு வகையில் நீதிமன்றப் பார்வையிலிருந்து மறைந்து கொள்வாராயின், அந்நபரின் பிணை ரத்து செய்யப்படலாம்.

6. புலன் விசாரணை அதிகாரி மீதோ அல்லது வழக்கு சாட்சிகளின் மீதோ வன்முறை புரிதலும் பிணை திரும்பப் பெறலாகும்.

7. நீதிமன்றம் பிணை வழங்கும்போது, பிழையான அணுகுமுறையின் அடிப்படையில் பிணை வழங்கப்பட்டிருந்தால் அப்பிணை ரத்து செய்யப்படலாம்.

8. குற்றச்சாட்டின் தன்மை மாறுபடும் பட்சத்திலும், வேறு விதமான வழக்குச் சூழ்நிலை மாற்றங்களும்கூட பிணை ரத்து செய்யக் காரணமாக அமையலாம்.

9. நீதிமன்ற நிபந்தனைப்படி பிணையிலுள்ள நபர் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறினாலும் பிணை ரத்து செய்யப் படத்தக்கதே.

10. பிணையாளர்கள் (Sureties) குற்றம் சாட்டப்பட்ட நபர் பிணையில் வெளியே வர பத்திரம் முலம் நீதிமன்றத்திற்கு உறுதி வழங்கியவர்கள், தாங்கள் வழங்கிய பிணைப் பத்திரத்தை திரும்பப் பெறக் கோரி நீதிமன்றத்தில் மனு செய்தாலும் பிணை ரத்து செய்யப்படலாம்.

11. பிணைப் பத்திரம் தவறுதலாகவோ, மோசடியாகவோ அல்லது வேறு வகையிலோ நிர்ணயிக்கப்பட்டதைவிட குறைபாடாக இருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் பிணை ரத்து செய்யப்படலாம்.
12. பிணையப்பத்திரம் வேறு எவ்வகையிலாவது செல்லுபடியாகும் தன்மையை இழக்கும் போதும் பிணை ரத்து செய்யக் கூடியதாகிறது.

இவ்வகையில், வன்கொடுமை வழக்குகளில் பிணை திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கையை பாதிக்கப்பட்டோர் தரப்பு வலிமையுடன் எடுக்கும்போது, வழக்கு சிதைக்கப்படாமலும் வலுவிழக்காமலும் நீதிமன்றத்தில் நடத்தப் பெற முடியும். இதை ஓர் ஆயுதமாக சரியாகப் பயன்படுத்தினால், வன்கொடுமையாளர்கள் பாதிக்கப்பட்டோரையோ, மற்றவர்களையோ அச்சுறுத்துவதை முழுமையாகத் தடுக்க முடியும்.

- காயங்கள் தொடரும்

-சு. சத்தியசந்திரன்

(advsschandran@gmail.com)

# கணியம் அறக்கட்டளை

**தொலை நோக்கு – Vision**

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

**பணி இலக்கு – Mission**

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

**எமது பணிகள்**

- **கணியம் மின்னிதழ்** kaniyam.com
- கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.
- **கட்டற்ற தமிழ் நூல்கள்** FreeTamilEbooks.com
- இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் epub, mobi, A4 PDF, 6 inch PDF வடிவங்களில் வெளியிடுகிறோம்.
- தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்
- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்.

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**வெளிப்படைத்தன்மை**

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். https://github.com/KaniyamFoundation/Organization/issues இந்த இணைப்பில் செயல்களையும், https://github.com/KaniyamFoundation/Organization/wiki இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

**நன்கொடை**

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**Kaniyam Foundation**

**Account Number : 606 1010 100 502 79**

**Union Bank Of India**

**West Tambaram, Chennai**

**IFSC – UBIN0560618**

**Account Type : Current Account**